தரையில் இறங்கும் விமானங்கள்

இந்துமதி

தரையில் இறங்கும் விமானங்கள்

அந்த ஆபீஸின் வராந்தாவில் வெகு நேரமாய் நின்று கொண்டிருந்தான் விஸ்வம். கையில் ஒரு ஃபைல் இருந்தது. அதில் சில சர்டிபிகேட்களைத் தவிர, அப்பா கொடுத்தனுப்பின ஒரு கடிதமும் இருந்தது. அவன் உள்ளே போய், வரதராஜன் என்பவரைப் பார்க்க வேண்டும். ''ஐ'ம் ஜகன்னாதன்'ஸ் ஸன்!'' என்று அறிமுகப்படுத்திக் கொள்ள வேண்டும். ''எந்த ஜகன்னாதன்?'' என்று அவர் புருவத்தை உயர்த்தினாலும் உயர்த்துவார். ''ரெயில்வேயில் இருந்து ரிடையர் ஆன ஜகன்னாதன்; வி.ஜகன்னாதன்...'' என்று விளக்கம் கொடுத்தாக வேண்டும். எப்போதோ இரண்டு பேரும் ஒன்றாகப் படித்ததை ஞாபகப்படுத்தியாக வேண்டும்.

ஆனால் அவன் உள்ளே போகவில்லை. போகப் பிடிக்க வில்லை. வந்ததிலிருந்து அரைமணி நேரமாய்க் காரிடாரின் ஓர் ஓரத்தில் நின்றுகொண்டே இருந்தான். அங்கு நிற்பது அவனுக்குப்

பிடித்தமானதாய் இருந்தது. ஆபீஸில் அந்த வாசல் மிகவும் அழகாக இருந்தது. ரோட்டை ஒட்டின பெரிய கட்டிடமாக இல்லை. உள்ளே தள்ளி வரிசையாய் குட்டைத் தென்னை மரங்களும், மாமரங்களும் நிறைந்து ஓர் இளைப்பாறுகிற இடம் மாதிரி தோற்றம் அளித்தது. அணில்கள் ஒன்றையொன்று துரத்தி விளையாடிக் கொண்டிருந்தன. காக்கைகள் விடாமல் கத்திக்கொண்டே இருந்தன. ஒன்று நிறுத்தினால் மற்றொன்று. கறுப்பாய் ஓர் அண்டங்காக்காய் இவனைப் பார்த்துக்கொண்டே காரிடாரின் ஓரத்திலிருந்து தத்தித் தரையில் நடந்து வந்தது. இவனுக்குச் சிரிப்பு வந்தது. அந்தக் காக்காய் திடீரென்று நினைத்துக்கொண்ட மாதிரி பறந்து போய்விட்டது. இவன் ஏக்கமாய் ஒரு பெருமூச்சு விட்டான். பின், தூரத்தில் தனியாகப் போடப்பட்டிருந்த ஒரு சிமெண்ட் பெஞ்சைப் பார்த்தான். 'அது, 'இங்கே வந்து என்மேல் உட்கார்ந்து கொள்ளேன்' என்று கூப்பிடுகிற மாதிரி தோன்றியது. அதில் போய் உட்கார்ந்து கொள்ளலாம். மர இடுக்குகளின் வெளிச்சம் தரையில் காசு காசாய் இறைவதைப் பார்த்துக் கொண்டிருக்கலாம். விளையாடுகிற அணில்கள், அவை நிலை சமயம் மண்ணில் வால் பதிய உட்காருகிற அழகு, கத்துகிற காக்காய்கள், அவற்றின் திருட்டுத்தனமான தத்தி நடக்கிற நடைகள், எப்போதாவது வருகிற சிட்டுக் குருவிகள், தூரத்தில் வரிசையாய் நிறுத்தப்பட்டிருக்கிற கார்கள், பக்கத்தில் இருக்கும் சைக்கிள் ஸ்டாண்டின் சைக்கிள்கள், உள்ளே வருகிற மனிதர்கள், வெளியில் போகிற மனிதர்கள், கண்ணிவ் தட்டுப்பட்டுச் சட்டென்று மறைந்து விடுகிற புடவைகள்... இப்படிப் பார்த்துக் கொண்டே பொழுதைத் தள்ளிவிட்டு, சாயந்தரமானதும் எழுந்து வீட்டுக்குப் போய் விடலாம்.

வீடு — என் வீட்டுக்குப் போய்விட வேண்டும் என்று தோன்றுகிறது? இங்கேயே, இப்படியே இருந்து ராத்திரியில் இந்த அழகு எப்படி இருக்கிறது என்று பார்க்கலாம் என்று ஏன் நினைக்கத் தோன்றவில்லை? எங்கே கற்றினாலும் கடைசியில் வீட்டுக்குப் போய்ச் சேர்ந்துவிட வேண்டும் என்பது பழக்கமாகிவிட்டது. எத்தனை பாதுகாப்புத் தேவையாக இருக்கிறது.

தூரத்தில் சைக்கிள் ஸ்டாண்டின் பக்கத்தில் ஒரு சின்னஸ்டூல் போட்டுக் கொண்டு உட்கார்ந்திருக்கிற பையனைப் பார்த்தான். சாயந்திரம் ஐந்து மணி ஆனதும் அவனும் வீட்டுக்குத்தான் போவான். அதோ, அந்தக் கூர்க்கா. உள்ளே வருகிற இந்த மனிதர்கள், ஆபீஸில் வேலை செய்கிறவர்கள், தெருவில் போகிறவர்கள், வண்டிக்காரர்கள், ரிக்ஷாக்காரர்கள் எல்லோரும் வீட்டுக்குத்தான் போயாக வேண்டும். பகலில் பழக்கப்படாத எந்த இடத்துக்கும் போகலாம். எங்கேயும் சுற்றலாம். ஆனால், ராத்திரியில் மட்டும் வீடுதான் பழக்கம். இந்தப் பழக்கம் மட்டுந்தான் எல்லோருக்கும் ஒன்றாக இருக்கிறது.

நான்கூட வீட்டுக்குத்தான் போவேன். மன்னியோ, தங்கை அகிலாவோ சாதம் போடுவார்கள். அநேகமாய் அவனுக்கு மன்னி ருக்குமிணிதான் சாதம் போடுவாள். எத்தனை நேரமானாலும் காத்துக் கொண்டிருப்பாள். "எங்கே போயிருந்தே? ஏன இத்தனை நேரம்?" எதுவும் கேட்கமாட்டாள். "பசிக்கலையா, வில்வம்? நேரத்துக்குச் சாப்பாடு இல்லைன்னா உடம்பு என்னத்துக்கு ஆகும்?" என்று மட்டும் கேட்பாள். தரையில் உட்கார்ந்து சாதத்தை அவன் பிசைகிறபோது, புடவைக்குள்ளிருந்து எட்டிப்பார்க்கிற பாதங்களின் வெண்மை 'பளிச்'சென்று அவன் கண்களில் அடிக்கும். 'மென்மையாய் என்ன பாதங்கள் இவளுக்கு?' என்று நினைத்துக் கொள்வான். இனமும் அதே காட்சி அதே நினைப்பு வரும். அகிலா சாதம் போட்டும் பார்த்திருக்கிறாள். நரம்புகள் தூக்கிக்கொண்டு குட்டை குட்டையாய் விரல்களும், அரிக்மாய் வளர்ந்து கறுப்பாய் அழுக்கு ஒட்டிக் கொண்டிருக்கிற நகத்தின் ஓரங்களும்... முகத்தை அழகுபடுத்தத் இனமும் ஒரு மணி நேரத்துக்கு மேல் செலவழிக்கிற அகிலா, பாதங்களையும் கொஞ்சம் கவனித்துக் கொண்டால்தான் என்ன...? தன் பாதங்களைப் பார்க்கக் குனிந்தான் அவன். ஷூவால் மூடப்பட்டிருந்தது. ஷூவைக் கழற்றிப் பார்க்க வேண்டும்போல் இருந்தது. அந்த இடத்தில் அப்படிப் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. உடனே அம்மாவின் பாதம் எப்படி இருக்கும் என்பதை நினைவுபடுத்திப் பார்க்க முயன்றான். முடியவில்லை. அம்மாவின் முகம் மட்டும் நினைக்கிறபோதெல்லாம் மனசில்

பிடிபட்டு விடுகிறது. செத்துப் போகிறபோதுகூட அழகாய் இருந்த முகம் அது! சாவின் பயமோ வலியோ எட்டிப் பார்க்காத முகம். என்ன தெளிவு அதில்! அந்த வீட்டில் அவனுக்கு மட்டும்தான் அம்மாவின் நிறமும் சாயலும் உண்டு. கண்கள்கூட அம்மா மாதிரி பார்வையில் அடித்து நிறுத்துகிற கண்கள்தாம். மீதிப் பேர் எல்லாரும் அண்ணா பரசு, அகிலா, ராம்ஜி - எல்லோரும் அப்பாவைக் கொண்டு பிறந்தவர்கள்!

''யாரை சார் பார்க்கணும்?''

விஸ்வம் சட்டென்று நிமிர்ந்தான்.

''ரொம்ப நேரமா நிக்கறீங்களே, யாரைப் பார்க்கணும்?''

''வரதராஜன் என்பவரை...''

''எந்த வரதராஜன், சார்...?''

''எம்.வரதராஜன், எக்ஸிக்யூட்டிவ்...''

''இப்படி நேரே போய் இரண்டாவது மாடி ஏறி, வலப் பக்கம் திரும்பினா, மூணாவது ரூம் சார். வாசல்லே போர்டு கூட மாட்டியிருக்கும், பாருங்க.''

''சரி, ரொம்ப தாங்க்ஸ்பா.''

இனிமேலும் அங்கு நின்று கொண்டிருக்க முடியாது. உள்ளே போய்த்தான் ஆக வேண்டும். அவன் உள்ளே நுழைந்தவுடனேயே சட்டென்று ஒரு மாறுதல் தெரிந்தது. 'படபட'வென்று டைப்ரைட்டர்கள் அடிக்கப்படுகின்ற ஓசை, ஃபேன்களின் இலேசான முனகல், காகிதங்கள் புரட்டப்படுகிற சலசலப்பு, பேச்சு சத்தம், ''கிருஷ்ணமூர்த்தி...'' என்று யாரையோ யாரோ உரக்கக் கூப்பிடுகிற குரல். நாற்காலிகள் நகர்த்தப்படுகிற கிரீச்சிடல்கள், டெலிபோன் மணிகளின் ஒலிகள், நடந்து கொண்டிருக்கிற டவாலி ப்யூன்கள், அவர்களின் எரிச்சலைக் காட்டுகிற சிணுங்கின முகங்கள்... மாடிப்படி ஏறுகிறபோது, அவனுக்குத் தான் பார்த்த ஒரு பெங்காலி நிறைப்படம் ஞாபகத்துக்கு வந்தது. விஃப்ட் கெட்டுப்போய், ஏழாவது மாடிக்கு

ஏறி வருகிற கதாநாயகனின் களைப்பை அவனால் அப்படியே உணர முடிந்தது. ஆனால் அவன் போக வேண்டியது இரண்டாவது மாடிதான். நிதானமாய் ஒவ்வொரு படியாக ஏறினான். வரதராஜனின் அறைக்கு எதிரில் போய் நின்றபோது, இலேசாக மூச்சு வாங்கியது. தன்னைக் கொஞ்சம் ஆசுவாசப்படுத்திக் கொண்டான். கர்சீஃபால் முகத்தைத் துடைத்துக்கொண்டு, கதவில் ஆள்காட்டி விரலின் முட்டியால் மெதுவாக இரண்டு தரம் தட்டினான்.

''எஸ்!'' - கட்டையாய் ஒரு குரல் கேட்டது. அவன் கதவைத் தள்ளிக்கொண்டு உள்ளே போனான்.

''குட் மார்னிங், சார்!''

''எஸ்...''

''ஐ'ம் விஸ்வம், ஜகன்னாதனுடைய ஸன்.''

''ஜகன்னாதன்?'' — அவன் நினைத்த மாதிரியே அவர் புருவங்களை உயர்த்தினார். அவன் தன் அப்பாவை பற்றிச் சொன்னான்.

''ஓ...! அந்த ஜகன்னாதனா? ஹௌ ஈஸ் ஹி?''

''ஹி ஈஸ் ஃபைன்!''

அதற்குப் பின்பும் அவன் நின்று கொண்டுதான் இருந்தான். பக்கத்தில் இரண்டு நாற்காலிகள் காலியாகக் கிடந்தன. அதில் ஒன்றின் முதுகைப் பிடித்துக்கொண்டுதான் அவன் நின்றிருந்தான். 'நான் என்ன செய்ய வேண்டும்' என்கிறார்போல் அவனைப் பார்த்தார் அவர். அவன் ஃபைலைத் திறந்து, அப்பா எழுதித் தந்திருந்த அந்தக் கடிதத்தை எடுத்துக் கொடுத்தான். கடிதத்தைக் கொடுக்கிறபோது, தன் வீட்டுக்கு அடிக்கடி வருகிற ("An appeal') என்று அச்சடித்த கார்டை நீட்டுகிற அந்த ஊமைப் பையனின் ஞாபகம் வந்தது. அவன் உண்மையிலேயே ஊமைதானா என்பது தெரியாது. ஆனாலும் ஐந்து காசோ, பத்து காசோ கொடுத்து அனுப்புவான். அப்பாவும் அதே மாதிரி ஒரு கார்டை அச்சடித்துத் தன் கையில் கொடுத்து அனுப்பியிருக்கிற மாதிரி அவனுக்குப்

பட்டது. அந்த ஜமைப்பையனை அவன் உட்காரச் சொல்லுவதில்லை என்பதும் நினைவுக்கு வந்தது. அவன் இன்னொரு காலில் சாய்ந்து இத்தனை நேரம் உடற்பாரத்தைப் போட்டிருந்த காலை இலேசாக்கி நின்றுகொண்டான். திடீரென்று கால்கள் அதிகம் வலிக்கிற மாதிரியும் தோன்றியது. அவர் கடிதத்தைப் படித்து முடித்தார். மடித்துத் திருப்பி அவனிடமே கொடுத்தார். அவன் வாங்கி, ஃபைலில் வைத்துக்கொண்டு பேசாமல் இருந்தான்.

''அப்ளிகேஷன் போட்டிருக்கியா?''

அவன் தலையாட்டினான்.

''என்ன க்வாலிஃபிகேஷன்?''

அவன் சொல்ல வாயைத் திறக்கு முன், அவருக்கு ஒரு கப் டீ வந்தது. டீ வாசனை இவன் மூக்கை எட்டியது. அவர் மேஜை மேல் இருந்த சில காகிதங்களை நகர்த்திக் கோப்பையை வைக்க இடம் கொடுத்தார். ப்யூன் போனதும் விஸ்வம் பேச ஆரம்பித்தான்.

''பி.காம். ஃபர்ஸ்ட் க்ளாஸ்.''

சேண்டுமென்றே 'சார்'த் தவிர்த்தான். மறுபடியும் காலை மாற்றி நின்று கொண்டான்.

''அதனாலேதான் 'காம்'(Calm) ஆக இருக்கியா?''

அவர் சொல்லிவிட்டுப் பெரிசாய்ச் சிரித்தார்.

அவன் சிரிக்கவில்லை. பேசாமல் இருந்தான். அவர் சிரித்து முடித்ததும் டீ கோப்பையை எடுத்து உறிஞ்ச ஆரம்பித்தார்.

''எங்கே, சர்டிபிகேட்டுகளை எல்லாம் காட்டு பார்ப்போம்.''

அவன் ஃபைலைத் திறந்து அவரிடம் கொடுத்துவிட்டு, 'கேன் ஐ லிட்?' என்பதைக் கேட்டுவிடலாமா என்று நினைத்தான். 'இவனிடமா...?'

அவர் வலது கையால் டீ கோப்பையைப் பிடித்து நிறுத்தி நிறுத்தி உறிஞ்சிக் கொண்டே அந்த ஃபைலைப் பார்த்தார்.

விஸ்வம் அறையைப் பார்க்க ஆரம்பித்தான். அவரது தலைக்கு மேல் பழக்கப்பட்ட புன்னகையோடு காந்தி படம் ஒன்று தொங்கிக் கொண்டிருந்தது. எல்லா ஆபீஸிலும் இந்தப் படத்தை மாட்டத் தவறுவதில்லை. சில சீனியர் ஆபீஸர்களின் தலைக்கு மேல் இந்தக் குழந்தை சிரிப்பு நிச்சயமாய் இருக்கும். அவர்கள் எந்த அர்த்தத்துடனும் அதை மாட்டுவதில்லை. ஆபீஸில் இருக்கும் மேஜை, நாற்காலி, இரும்பு பீரோ, டெலிஃபோன் இதே மாதிரிதான் அந்தப் படமும் - ஒரு கன்வென்ஷன்...

அவர் ஃபைலை மூடிக் கொடுத்தார். திடீரென்று அவனோடு அதிக நேரம் செலவிட்டு விட்டதாக உணரத் தொடங்கி இருக்க வேண்டும். நிறைய வேலைகள் இதனால் பாதிக்கப்பட்டு விட்ட பாவனையில் பேசத் தொடங்கினார்.

''ஹ்ம், உனக்குத் தகுதியிருந்தால், கட்டாயம் கிடைக்கும். எங்களுக்கு மூவாயிரம் அப்ளிகேஷன்கள் வந்திருக்கு. உனக்கு இன்டர்வ்யூ கார்டு அனுப்பிடச் சொல்றேன். அதிலே உன் சாமர்த்தியத்தைப் பார்த்துண்டு மேலே யோசிக்கலாம்.''

''தாங்க் யூ!'' — விஸ்வம் அறையை விட்டு நகரத் தொடங்கினான்.

''ஜகன்னாதனைக் கேட்டதாகச் சொல்லு.''

தலையாட்டிவிட்டு வெளியே வந்தான். கொஞ்சம் வேகமாகப் படிகளில் இறங்கினான். வராந்தாவை அடைந்தவுடன், சில்லென்று காற்று முகத்தில் அடித்தது. சிறிது நிம்மதியை உணர்ந்தான். அவனுக்கு வழி காட்டின ப்யூன் அவனுக்காகக் காத்துக்கொண்டிருந்தவனாக எழுந்து வந்தான்.

''என்ன சார், பார்த்துட்டீங்களா?'' என்று கேட்டான்.

விஸ்வம் தலையாட்டினான்.

''எதுக்கு சார், வேலைக்கா?''

அதற்கும் தலையாட்டினான்.

''உங்களுக்கா சார்?''

''ஆமாம்'' என்றதும் 'இவனுக்கு எதற்காக இப்படிப் பதில் சொல்லிக் கொண்டிருக்கிறோம்?' என்பதை நினைத்துக் கொண்டான்.

''கெடைச்சுடும் சார், கட்டாயம் கெடைச்சுடும்.''

இவள் மெளனமாக அவனைப் பார்த்தான்; எந்த ஆர்வமும் இல்லாதவனாகத் தெரிந்தான்.

''ஆமாம், நான் சொல்லி தெறையப் பேருக்கு வேலை கெடைச்சிருக்கு சார். நீங்களும் உண்மையா இல்லையானு பாருங்களேன்...!''

''சரி, நான் வரேம்ப்பா.''

''சா...ர்...!''

விஸ்வம் நின்றான்.

''மக்கு ஏதாவது காசு கொடுத்துட்டுப் போங்களேன்!''

இவனுக்கு எரிச்சல் வந்தது. முதலில் எதுவும் கொடுக்கக் கூடாது என்று தோன்றியது. பின் கொடுக்க வேண்டுமென்று நினைத்தான். சட்டையில் கை விட்டான். பர்ஸில் தேடினான். சில்லறை இல்லை. ஓர் ஐந்து ரூபாய் நோட்டைத் தவிர எதுவும் இல்லை.

''சில்லறை இல்லையேப்பா...!''

கேட்டவனின் முகம் மாறியது.

ஆனாலும், ''சரி சார், பரவாயில்லை... போங்க. அடுத்த தரம் வாங்கிக்கறேன். இதோட வராம போமிடப் போறீங்களா, என்ன?''

விஸ்வம் மர நிழல்களை மிதித்தபடி தடந்துகொண்டே வந்தான். எதிரில் வருகிறவர்களையும், தன்னோடு வெளியேறுபவர்களையும் ஓர் ஆர்வத்தோடு கவனித்தான். இந்த மரங்களையோ, அதன் நிழல்களையோ யாரும் பார்ப்பதாகத் தெரியவில்லை. குதிக்கும் அணில்களும், கத்துகிற காக்கைகளும்

யாரையும் பரவசப்படுத்தவில்லை. வேகமான ஒரு நடை, எதையோ எதிர்பார்த்துக் கொண்டு போகிற முகங்கள், சலிப்போடு வெளிவருகிற முகங்கள், சிரிப்போடு வருகிற முகங்கள், பேச்சில் சுவாரஸ்யமாய் ஈடுபட்டிருக்கிற முகங்கள் - ஆனால் ஒரு முகங் கூட எதிரில் தெரிகிற நிஜமான அழகைப் பார்க்கவில்லை. இதையெல்லாம் கவனிக்க வேண்டும் என்று ஏன் யாருக்கும் தோன்றுவதில்லை?

அவனுக்கு சட்டென்று அண்ணா பரசுவின் நினைவு வந்தது.

2

பரசு — பரசுராமன் கூட ஆசைப்பட்டிருக்கிறான். வாயைத் திறந்து அதை வெளிப்படுத்தியும் இருக்கிறான். யாரோடும் எதுவும் பேசாமல், எதன் மீதும் ஒரு பிடிப்பு இல்லாமல் இப்போது இருக்கிற இந்தப் பரசு அப்போது இப்படி இல்லாமல் நிறையக் கனவுகள் கண்டிருக்க வேண்டும். ஒரு பெரிய உலகத்தைத் தனக்குள் உருவகப்படுத்தி இருக்க வேண்டும். விதம் விதமான பரசுராமன்கள் அதில் உலவி இருக்க வேண்டும். கையில் ஸ்டெதஸ்கோப்புடன் பூட்ஸ்கால்கள் சப்திக்க ஹாஸ்பிடலுக்குள் நுழைகிற பரசு, கருப்புக்கோட்டை கை மேல் போட்டுக்கொண்டு கோர்ட்டின் படிகளில் ஏறுகிற பரசு, வெள்ளை யூனிஃபாரம் அணிந்த டிரைவர் பணிவாகக் கார் கதவைத் திறக்க, பின்னால் உட்காருகிற பரசு, விமானத்தின் ஜன்னல் ஸீட்டில் சுகமாகச் சாய்ந்து பேப்பர் படிக்கிற பரசு, ஏர்கண்டிஷன் ரூமில் சுழல் நாற்காலியில் அரைவட்டமாய் நிதானமாகச் சுழலுகிற பரசு, டெலிஃபோனில் பேசுவதற்குச் சுலபமாகக் கிடைத்துவிடாத பரசு...!

சின்ன வயதில்கூட மற்றப் பையன்களோடு அவன் ஊஞ்சலை வீசி ஆட்டி, பஸ் டிரைவர் - கண்டக்டர் விளையாட்டு விளையாடினதில்லை. முன்னால் இருப்பவனின் சட்டையைப் பிடித்துக்கொண்டு ரெயில் வண்டியாக ஓடினதில்லை.

நாற்காலியைத் தரையில் தள்ளிக்கொண்டு போய் ஐஸ்கிரீம் விற்றதில்லை. விஸ்வத்தைப் படுக்க வைத்துப் போர்த்தின பின் கைகளைப் பின்னால் கட்டிக்கொண்டு கம்பீரமாக நடந்து வருவான். ''என்ன உடம்புக்கு?'' என்று குரலை மாற்றிக்கொண்டு கேட்பான். இரண்டு காதுகளிலும் குழாயைச் செருகிவிட்ட பாவனையோடு வலது கை விரல்கள் ஐந்தையும் குமிழ் மாதிரி ஆக்கிக்கொண்டு மார்பிலும், முதுகிலும் வைத்துப் பார்ப்பான். வயிற்றை அழுக்கிப் பார்ப்பான். ''ஒண்ணுமில்லே; சரியாயிடும். இந்த மருந்தைச் சாப்பிடு!'' என்று பற்பொடியைப் போட்டுக் கரைத்திருந்த ரோல் நிறத் தண்ணீரை ஒரு சின்னச் டீஸாவில் ஊற்றிக்கொண்டு வருவான்.

எஸ்.எஸ்.எல்.சி. ரிஸல்ட் வந்தது. அவன் கோவிலுக்குள் நின்றிருந்தபோது யாரோ பேசிக்கொண்டு போனார்கள். உடனே வெளியே வந்து தெருக்கோடி பெட்டிக் கடையிலிருந்து ஒரு பேப்பரை வாங்கிக்கொண்டு ஓடி வந்தான். வீட்டுக்குள் நுழைந்த அப்பாவிடம் தன் நம்பரைக் காட்டினபோது மூச்சு இரைத்தது. ஜகன்னாதன் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்.

''நான் மேலே படிக்கறேம்பா...'' அவன் கேட்டபோது அவர் மோரில் சாதத்தைப் பிசைந்துகொண்டிருந்தார். எலுமிச்சை ஊறுகாய் போடச் சொல்லிக் கேட்டார்.

''ஊறுகாய் இல்லியே; நேத்திக்கே ஆயிடுத்து.'' அம்மா மெதுவாகச் சொன்னாள்.

''சரி, இல்லும் கொஞ்சம் உப்புப் போடு.''

கலந்து ஒவ்வொரு பிடியாக வாயில் போட்டுக்கொண்டார். பரசுவின் கேள்விக்குப் பதில் சொல்லவில்லை. அவன் இன்னும் கெஞ்சுகிற குரலில் மறுபடியும் கேட்டான்.

''நான் மேலே படிக்கிறேனேப்பா.''

அம்மா சமைக்கிற மேடை மீது சாய்ந்து இரண்டு பேரையும் மாறி மாறிப் பார்த்துக்கொண்டிருந்தான். ஒன்றும் பேசவில்லை. அப்பா சாப்பிட்டு முடித்தார். டம்ளரிலிருந்து கையைக் குவித்து கொஞ்சம் நீர் ஊற்றி இலையைச் சுற்றினார். ''ராம ப்ரபோ...!'' என்று சொல்லிக்கொண்டே இடது கையைத் தரையில் ஊன்றி

எழுந்துகொண்டார். அம்மா தேய்த்துப் பளபளப்பாக்கப்பட்ட செப்புச் செம்பை நீட்டினாள். வாங்கிக் கொண்டு பின்பக்கம் போனார்.

பரசு அம்மாவைப் பார்த்தான். ''நீ சொல்லும்மா...'' என்று கெஞ்சினான்.

''சொல்றேண்டா. எதுக்கும் நீயும் இன்னொரு தரம் கேளு...''

அவன் அவள் சொன்னது காதில் விழாத மாதிரி எதிர்ச் சுவரைப் பார்த்துக்கொண்டிருந்தான். அதில் சங்கராசாரியாரின் படம் மாட்டியிருந்தது. தோளில் தொங்கிய துண்டில் கையைத் துடைத்தபடி ஜகன்னாதன் பின்பக்கத்திலிருந்து வந்தார். நடை முழுதும் தரையில் அவரது ஈரக் காலடிகள் கோலம் போட்டிருந்தன. பரசுவின் பார்வை உடனே அவர் முகத்துக்குத் திரும்பியது. அவன் மறுபடியும் கேட்குமுன் அவரே சொன்னார்.

''இப்ப டைப்ரைட்டிங் கத்துக்கோயேன். அப்புறமா பார்க்கலாம்...''

அதைக் கேட்டதும் பரசுவின் முகம் விழுந்துவிட்டது. மனசைக் குப்பென்று ஏதோ கலக்கியது. கண் கலங்கிப்போயிற்று.

''இல்லேப்பா..., நான் படிக்கறேம்பா...'' என்று அவன் உதட்டை கடித்துக்கொண்டான். குரல் வெகுவாகக் கீழே இறங்கி முனுமுனுப்பாக வந்தது.

மகை வாள அவளைப் பார்த்தார் ஜகன்னாதன். 'உம்' மென்றிருந்த அந்த முகமும், கலங்கிய கண்களும் அவரைக் கஷ்டப்படுத்தின. இதே மாதிரி எப்போதோ தன் அப்பாவின் எதிரில் தான் நின்றிருந்தது நினைவுக்கு வந்தது. பரசு தன் பிள்ளையைக் காலேஜில் சேர்த்தால் அப்போதும் இதை நினைத்துப் பார்ப்பான்... தம் அப்பாவைப் போல் தாமும் அவனுக்குப் பதில் சொல்ல நேருகிறதே என்று ஜகன்னாதன் சங்கடப்பட்டார்.

அவர் கனவுகளை நசுக்கி மிதிக்கப் போகிறவர் அவர். அவன் மனசில் முதன் முதலாகத் தோன்றி இருக்கிற பகமையைக் கலைக்கப் போகிறவர் அவர்.

அவன் இதற்காக அவரை என்றும் மன்னிக்கப் போவதில்லை. தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டு இந்த நாலடி இருட்டறையில் நின்று கெஞ்சுகிற காட்சியை மறக்கப் போவதில்லை. அவரைப் போலவே இது அவன் மனசிலும் அடிக்கடி தலையைத் தூக்கப் போகிற விஷயம். ஆனாலும் அவருக்கு வேறு வழியில்லை. பழகிப்போனால் சகஜமாகிவிடும்.

''பார்க்கலாம், பரசு! யாருக்கு எது கொடுத்து வச்சுருக்கோ, அது தானாக கெடைக்கும். முதல்லே இன்ஸ்டிட்யூட்ல சேர்ந்துடு...''

அதன் பின் அவன் முகத்தைப் பார்க்கும் தைரியம் அவரிடம் இல்லை. நகர்ந்து கொடியில் தொங்கிக் கொண்டிருந்த முழுக் கைச்சட்டையை எடுத்து ஒருதரம் உதறிப் போட்டுக்கொண்டார். ''ஈச்வரா...!'' என்று பெருமூச்சோடு சொல்லியபடி சட்டையின் கருக்கங்களை நீவிவிட்டார். கை தானாக வேலையைச் செய்து கொண்டிருந்தது. மனசின் துணை அதற்குத் தேவையாக இல்லை. கீழேகிடந்த துண்டை மடித்து வைத்தது. அலமாரி யிலிருந்து மூக்குக்கண்ணாடியை எடுத்துக்கொண்டது. அதற்குள் அம்மா டிஃபன் பாக்ஸுடன் வந்தாள். அதையும் வாங்கிக் கொண்டது கை. டிஃபன் பாக்ஸை அவள் கொடுத்துவிட்டு உடனே உள்ளே போய்விடாமல் கொஞ்சம் தயங்கின மாதிரி நிற்பதைப் பார்த்தபோதுதான் சட்டென்று விழித்துக்கொண்டார்.

''என்ன?''

''குழந்தை ஆசைப்படறானே! கொஞ்ச நாளாவது காலேஜில சேர்ந்து படிக்கட்டுமே...?''

அவர் மௌனமாய் ஒரு நிமிஷம் தரையைப் பார்த்துக்கொண்டு நின்றார். அதற்கான பதிலைத் தரையில் தேடுகிற மாதிரி இருந்தது. பின்...

''என்ன, ராஜம்... நீகூட இப்படிப் பேசறே...? எனக்கு மட்டும் ஆசை இருக்காதுன்னு நெனச்சியா? வெறும் ஆசை மட்டும் இருந்தாப் போதுமா? அவன் குழந்தை. குடும்பநெலமை தெரியாது. நீகூடக் குழந்தையா ராஜம்?''

மேலே எதுவும் கேட்க முடியாத பதில். அம்மா பேசாமல் திரும்பிப் போய்விட்டாள். அது பரசுவின் காதிலும் விழுந்தது. விழவேண்டுமென்று கொஞ்சம் உரக்கச் சொன்னதாகப் பட்டது. அவர் ஆபீசுக்குப் போனதும் அவன் மொட்டை மாடிக்குப் போனான். சுவர் ஓரம் வந்திருந்த பக்கத்து வீட்டு முருங்கை மரத்தின் இலைகளைப் பற்றி உருவிக் கீழே போட்டான். அவை பறந்து மண்ணில் சிதறுவதைப் பார்த்தான். பின் வெகுநேரம் வானத்தை வெறித்துக் கொண்டிருந்தான்.

கோடி வீட்டுப் பெண் இன்ஸ்டிட்யூட்டிற்குப் போவது தெரிந்தது. கையில் சுருட்டப்பட்ட வெள்ளைக் காகிதம். தலை நிமிராமல் அவள் போய்க் கொண்டிருந்தாள். அவள் தன் வீட்டைக் கடந்ததும் பரசு அங்கே அப்படியே தரையில் உட்கார்ந்து கொண் டான். நாளையிலிருந்து அவளும் இப்படித்தான் ஒரு பேப்பரைச் சுற்றி எடுத்துக்கொண்டு போவாக வேண்டும். 'படபட'வென்று டைப் அடித்தாக வேண்டும். அழுகை தொண்டையை அடைத்தது. முழங்காலில் முகத்தைப் புதைத்துக் கொண்டான்.

அவன் உருவகப்படுத்தின உலகத்தில் உலவின பரசுக்கள் அவனைப் பார்த்துச் சிரித்தார்கள். டாக்டர் பரசு தன் ஸ்டெதஸ் கோப்பை விசிறி எறிந்தான். வக்கீல் பரசு கருப்புக் கோட்டைக் கிழித்துப் போட்டான். விமானத்தில் போகிற பரசு, காரிலே உட் காருகிற பரசு என்று ஒவ்வொருவராக அவனை விட்டு விலகிப் போனார்கள். அவன் தனியான ஒரு பரசுவாக மாறிப்போனான். தீர்மானங்கள் எதுவும் இல்லாதவனாக, அப்பா சொல்வதை அப்படியே கேட்பவனாக...

அப்பா நாள் பார்த்து அவனை இன்ஸ்டிட்யூட்டில் சேர்த்து விட்டார். அங்கே போய் வருகிற நேரம் தவிர மீதிப் பொழுதெல்லாம் வீட்டிலேயே அடைந்து கிடந்தான். அவனுடன் படித்தவர்கள் யார் வந்து கேட்டாலும், 'வீட்டில் இல்லை' என்று சொல்லச் சொன்னான். வெகு நாட்கள் யாரோடும் பேசாமல், யாரையும் பார்க்காமல் இருந்தான். பார்க்க நேர்ந்த லெபோ கேட்ட, 'என்ன காலேஜ் சேரலையா?' என்ற கேள்வி அவனுக்குள் ஒரு தடுக் கத்தை, குற்ற உணர்ச்சியை, தாழ்வு மனப்பான்மையை ஏற்படுத்தி

இருக்க வேண்டும்; வீட்டில் முடங்கின அந்த நாட்களில்தான் அவன் ஒடுங்கிப் போயிருக்க வேண்டும்; எல்லாவற்றையும் மன கக்குள் அடைக்கிற கலையைக் கற்றுக்கொண்டிருக்க வேண்டும்...

அவனைப் பார்க்க நேருகிற போதெல்லாம் ''ஈஸ்வரா...'' என்று பெருமூச்சு விட்டார் ஜகன்னாதன். வானத்தை வெறித்துக்கொண்டு அவள் திறிகிறபோது சத்தப்படுத்தாமல் படியேறிப் போய் பார்த்துவிட்டுத் திரும்பிக் கொண்டிருந்தார். ''பரசு, ஏண்டா இப்படி?'' என்று எத்தனையோ தரம் அவனோடு பேச ஆரம்பித்து, முடியாமல் மனசுக்குள்ளேயே கேட்டுக் கொண்டு இறங்கி வந்திருக்கிறார். அவனை வேலையில் சேர்க்க அழைத்துக்கொண்டு போனபோதுதான் அவரால் மனம் விட்டு அவனோடு பேச முடிந்தது. சாதாரண கிளார்க் வேலை. அது கிடைக்க அவர் பட்ட கஷ்டங்களைப் பற்றிச் சொன்னார். அவரை அலைக்கழித்த மனிதர்களைப் பற்றிச் சொன்னார். மெது வாய் வீட்டின் நிலைமையைப் பற்றியும் சொன்னார்.

''எல்லாமே பிள்ளைகளா இருந்துட்டா கஷ்டமில்லேடா, பரசு. மூணுக்கு நடுவிலே ஒரு பொண்ணையும் பெத்து வச்சிருக்கேளே! இப்போ குருத்துத்தான்டா, பார்த்துண்டே இருக்கிறபோது வளர்ந்து நிக்குமே...!''

அவன் பதில் சொல்லாமல் கேட்டுக்கொண்டு வந்தான். அவனுடைய மௌனம் அவருக்கு என்னவோ போல் இருந்தது.

''உனக்கு என் மேலே கோபமாடா, பரசு?''

அவன் 'இல்லை' என்று தலையாட்டினான்.

''நான் நம்பலே. கோபந்தான்!''

''இல்லேப்பா. நிச்சயமா இல்லே. எதுக்குக் கோவிச்சுக்கணும்?''

''மேலே படிக்க வைக்கலையேன்னு...''

''எனக்கு இதுதான்னு தீர்மானிச்சு அனுப்பியிருக்கிற போது உங்க மேல எதுக்குக் கோபப்படணும்?''

''கோபமில்லேன்னா வருத்தம், இல்லியா?''

அவன் அதற்குப் பதில் சொல்லவில்லை. மணியடித்துக் கொண்டு போன சைக்கிள் ரிக்ஷாவை, பச்சையும், வெள்ளை யுமாகத் தன்னைக் கடந்துபோன யூனிஃபாரங்களை, எதிரில் வந்துகொண்டிருந்த மனிதர்களை, கவரின் சினிமா போஸ்டர்களை, எந்த நோக்கமும் இல்லாமல் பார்த்துக் கொண்டிருந்தான். ஜகன்னாதனும் பேசாமல் நடந்தார். எதிரே வந்த சிலரைப் பார்த்துச் சிரித்தார். வெறும் சிரிப்பு! மனசு எங்கோ இருந்தது. எதிர்ப்பக்கம் வந்து கொண்டிருந்த நாணு வாத்தியார் சைக்கிளை குறுக்காக ஒடித்து அவர்கள் பக்கத்தில் பிரேக் போட்டு நிறுத்தினார். கீழே இறங்கிக் கொண்டே, ''எங்கே போயாகிறது?'' என்று கேட்டார். பரசு அவர் சைக்கிளைப் பார்த்தான். புதுசாய்ப் பளபளவென்று இருந்தது. பின்னால் காரியரில் மடிக்கப்பட்ட பஞ்சாங்கமும், அதற்குள் கொஞ்சம் தர்ப்பையும் இருந்தன.

''பையனுக்கு ஒரு வேலை கிடைக்கும் போல இருக்கு, அழைச்சுண்டு போறேன்'' என்றார் ஜகன்னாதன்.

''எங்கே உங்க ஆபீஸிலேயோ?''

''இல்லே.'' — அப்பா ஒரு கம்பெனியின் பெயரைச் சொன்னார்.

''யாரு, கோபால்சாமியைப் பார்க்கப் போறேளா?''

அப்பா, 'ஆமாம்' என்று தலையாட்டினார்.

''நல்ல மனுஷன். செஞ்சு வைப்பார். போன மாசம் என் அக்கா பிள்ளையை அழைச்சுண்டு போனேன். 'கம்மாருக்கான். உங்க கம்பெனியில ஏதாவது வேலை பார்த்துக் கொடுங்கோண்ணா'ன்னேன். அதுல பாருங்கோ...''

''கொஞ்சம் சீக்கிரமாப் போகணும். ஏற்கெனவே தாமதி ஆயிடுச்சு.'' — அப்பா கைக்கடிகாரத்தைப் பார்த்தார்.

''ஓ! போங்களேன். ரொம்ப சந்தோஷம். எல்லாரும் நன்னா இருக்கணும், அவ்வளவுதானே. வரட்டுமா? வரேன்'' என்று

பரசுவைப் பார்த்துத் தலையாட்டிவிட்டுச் சைக்கிளில் ஏறி மிதித்தார். எதிர்ப்பக்கம் போனதும் வெயிலில் சைக்கிள் ஹாண்ட்-பாரின் பளபளப்பு அதிகமாகத் தெரிந்தது.

பரீட்சை எழுதுவதற்கு முன் அவர் தன் ஜாதகத்தைப் பார்த்து 'ஒஹோ' என்று சொல்லிக்கொண்டே போனது பரசுவுக்கு ஞாபகம் வந்தது. ''படிப்பு இவ்யமா இருக்கு. சரஸ்வதி நன்னா கடாக்ஷிப்பாள்! கலெக்டராகவோ, மந்திரியாகவோ ஆகிற ஜாதகம் இது. இந்த மாதிரி எல்லா யோகங்களும் கூடி வர்றது ரொம்ப கஷ்டம்!'' அதற்காக அப்பா தட்டில் வெற்றிலை, பழத்தோடு ஐந்து ரூபாயும் வைத்துக் கொடுத்தார். அப்போது நாணு வாத்தியார் நடந்துதான் வீட்டுக்கு வருவார். காலில் செருப்புக்கூட இருக்காது. இதற்குள் நிறைய ஜாதகம் இந்த மாதிரி பார்த்திருக்க வேண்டும். தன் மனசில் கனவுகள் காண்பதற்கு இந்த நாணு வாத்தியார்கூட ஒரு காரணம் என்று தோன்றியது அவனுக்கு.

''இங்கேயே ரோடை க்ராஸ் பண்ணிடலாம்'' என்று நின்றார் ஜகன்னாதன். நிறைய கார்களும், பூதமாய் சிவப்புநிற பஸ்களும் வண்டிகளும் போய்க் கொண்டிருந்த அந்த அகலமான தெருவைக் கடப்பது கஷ்டமாய் இருந்தது. அவர் அவன் கையைப் பிடித்துக்கொண்டார். ''பார்த்து வா'' என்று அழைத்துக்கொண்டு போனார். எதிர்ப்பக்கம் போனதும் கையை விட்டார். மறுபடியும் இரண்டு பேரும் பேசாமல் நடந்தார்கள்.

ஆபீஸ் நெருங்கியதும் திடீரென்று அவர் அவனிடம் கேட்டார்.

''இந்த வேலையில் சேர உனக்கு இஷ்டம்தானே?''

அவன் சட்டென்று திரும்பிப் பார்த்தான். அந்தப் பார்வை அவர் நெஞ்சில் விழுந்தது. இலேசாய் அவன் சிரித்த மாதிரியும் அவருக்குப் பட்டது. தலையைக் குனிந்துகொண்டார். தான் அந்தக் கேள்வியைக் கேட்டிருக்கவே வேண்டாம் என்று நினைத்துக்கொண்டார். பின் வீட்டுக்கு திரும்பி வருகிறவரை அவர்களிடம் எந்தப் பேச்சும் இல்லை.

பரசு வேலைக்குப் போக ஆரம்பித்தான்.

3

தோடி ஆலாபனை தெருவை நிறைத்தது. பக்கத்து வீட்டுப் பெண் பாடிக்கொண்டிருக்க வேண்டும். பரசுவுக்குச் சங்கீத ஞானம் எதுவும் கிடையாது. ஆனாலும் அந்தக் குரல் மனசைச் சுண்டியது. அவன் ஆபீசுக்குப் போக ஆரம்பித்த புதிதில் அந்த வீட்டிலிருந்து ஒருநாள் சாயந்திரம் ஆர்மோனிய சத்தம் வந்தது. 'லா.....பா...' என்று வாத்தியாரின் குரலுக்குப் பின்னால் இழுப்பது கேட்டது. தொடர்ந்து நினைக்கும் அவன் வீடு திரும்புகிற நேரத்தில் காதில் விழும். நடுவில் அவனால் அந்தக் குரலைக் கேட்க முடியவில்லை. வீட்டுக்கு வரவே நேரமாகிவிடும். மணி எட்டரை ஒன்பதுகூட ஆகிவிடும். சிலநாள் அம்மா வாசலில் வந்து நின்று கொண்டிருப்பாள். படியேறுகிறபோதே, ''என்டா இத்தனை நேரம்?'' என்று டிஃபன் பாக்ஸை வாங்கிக்கொண்டு கவலை விலிருந்து விடுபட்டவளாகக் கேட்பாள். அவன் பதில் சொல்ல மாட்டான். அம்மாவும் பதிலை எதிர்பார்க்கமாட்டாள். அதற்குள் அப்பா, அகிலா, ராம்ஜி எல்லோரும் தூங்கிவிட்டிருப்பார்கள். அவர்கள் காலை மிதித்து விடாமல் ஜாக்கிரதையாக நடந்து பின்பக்கம் போவான். தினமும் படித்துக்கொண்டோ, ஏதாவது நோட்ஸ் எழுதிக்கொண்டோ இருக்கிற வில்வம்கூடச் சில நாட்கள் தூங்கிவிடுவான். கைகால் அலம்பிக் கொண்டு சாப்பிட்டு முடித்ததும் பரசுவும் படுத்துக்கொண்டு விடுவான். அடுத்த நிமிஷத்துக்கெல்லாம் கூப்பிட்டுப் பார்த்தால் பதில் வராது. உடம்பு அடித்துப் போட்ட மாதிரி அசையாமல் கிடக்கும்.

பஸ்ஸில் ஆபீசுக்குப் போய் வருவது அலலுக்குச் சிரமமானதாக இருந்தது. வீட்டிலிருந்து வெகு தூரத்தில் ஆபீஸ். அவசரமாய்ச் சாப்பிட்டு ஏழு மணிக்கே ஓடினாலும் சில நாள் பஸ் தவறிவிடும். நேரம் கழித்துப் போனால் காரணத்தை எழுதியாக வேண்டும். இன்னும் பஸ் கிடைக்கவில்லை என்ற காரணத்தை எழுத முடியாது. அப்பாவிடம் செல்லித் தவணை முறையில் சைக்கிள் ஒன்று வாங்கிக்கொண்டான். மாசம் தவறாமல் கணிசமான ஒரு தொகை அதற்குப் போய்க் கொண்டிருந்தது. ஒரு

மாசம் கொஞ்சம் தாமதமாகிவிட்டால் கூட வீட்டுக்கு ஆள் வந்துவிடுவான். இதைத் தவிர்க்க ஓவர் டைம் வேலை அவனுக்கு உதவப்பட்டது. சைக்கிள் கடன் முடிந்ததும் அகிலா அவளிடம் ரேடியோ ஒன்று கேட்டாள். பக்கத்து வீட்டிலிருந்து அவளுக்குப் பிடித்த பாட்டு வரும்போதெல்லாம் சுவரில் காதைத் தேய்த்துக்கொண்டு நிற்பாள். அவன் இங்கே கேட்டுக்கொண்டிருப்பது தெரியாமல் லெசமயம் அவர்கள் பாதிப் பாட்டில் நிறுத்தி விடுவார்கள். அகிலா முணுமுணுப்பாள். ''நம்ம வீட்ல ஒரு ரேடியோ இருந்தால்...?'' என்று 'ச்சூ' கொட்டுவதைப் பரக நிறைய தரம் கேட்டிருக்கிறான். அவளுக்காக பிலிப்ஸ் டிரான் சிஸ்டர் ஒன்று வாங்கினான். அதன் தவணை இன்னும் முடிய வில்லை. இப்படி ஓவர் டைம் அவனால் தவிர்க்க முடியாததாக ஆகிவிட்டது. தினமும் குளிக்கிற மாதிரி, சாப்பிடுகிற மாதிரி, ஆபீசுக்கு வருகிற மாதிரி, ஓவர் டைம் செய்வதும் பழக்கமாகிவிட்டது. இன்று ஓவர் டைம் இல்லை.

வெகு நாளைக்குப் பின் மறுபடியும் அந்தப் பெண்ணின் குரலைக் கேட்கிறான். சரவி வரிசையில் இருந்தது இப்போது தோடி. ஆலாபனை பண்ணுகிறது! அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. நேற்றுத்தான் அப்பா வேலைக்காக கோபால்சாமியிடம் அழைத்துக்கொண்டு போன மாதிரி இருக்கிறது. எதிரில் நாணு வாத்தியார் சைக்கிளில் வந்தது, அப்பா அவரிடம் பேசினது, 'இந்த வேலையில் சேர உனக்கு இஷ்டம்தானேடா?' என்று கேட்டது - எல்லாம் அப்படியே ஞாபகம் இருந்தது. நாட்கள் வெகு சீக்கிரமாக ஓடுகிற மாதிரி அவனுக்குத் தோன்றியது. ஆம், சீக்கிரமாகத் தான் ஓடுகிறது. பாவாடையில் இருந்த அகிலா தாவணி போட்டுக் கொள்கிறாள்; ராம்ஜி, தினமும் ஷேவ் பண்ணிக் கொள்கிறான்; விஸ்வம், பி.காம் மூன்றாவது வருஷம் படிக்கிறான். அப்பா ரிடையர் ஆகப் போகிறார். அம்மா தலை நரைத்து உடம்பு தளர்ந்து போய்ச் சோர்ந்து சோர்ந்து மூலையில் படுத்துக் கொள்கிறாள். தான் மட்டும் அப்படியே இருக்கிற மாதிரி உணர்ந்தான்.

சைக்கிளைப் படிகளில் ஏற்றித் தாழ்வாரத்தில் ஸ்டாண்ட் போட்டு நிறுத்தினபோது உள்ளே யாரோ உட்கார்ந்து அப்பாவோடு பேசிக்கொண்டிருப்பது தெரிந்தது. அந்தப் புதிய

மனிதர் அவன் பக்கம் புறமுதுகைக் காட்டிக்கொண்டிருந்தார். அவனால் யார் என்று நிர்மாளிக்க முடியவில்லை.

''அதோ அவனே வந்துவிட்டான்'' என்றார் அப்பா. தொடர்ந்து, ''அதிசயமா இல்லிக்கு உங்களுக்காகவே சீக்கிரம் வந்தாப்பலே இருக்கு!'' என்றும் சொன்னார். அப்பாவின் முகம் சந்தோஷமாக இருப்பது அவனுக்குப் பட்டது. பேச்சு கலகலவென்று வந்தது. உண்மையாகவே அப்பா சிரித்துக் கொண்டிருந்தார். அவரை அப்படிப் பார்த்து வெகு நாட்களாகி விட்டிருந்தது. அவன் தயங்கிக்கொண்டே உள்ளே நுழைந்தான்.

''பரக, இங்க வாப்பா...!'' என்று கூப்பிட்டார் அப்பா. அவன் அவர்கள் எதிரில் போய் நின்றான். வந்திருந்த மனிதரைப் பார்த்தான். அப்பாவின் வயசு இருக்கலாம். ஒல்லிரண்டு கூடவே இருக்கலாம். வெள்ளை வெளேரென்று தல்ல ஆகிருநியுடன் பளிச்சென்றிருந்தார். தலை கண்ணாடி மாதிரி இருந்தது. நெற்றி நிறைய விபூதி. வீட்டில் தோய்த்த நாலு முழம் வேஷ்டி. தெளிவான சிரிப்பு.

''இவன்தான். பரகராமன்லு போர். பரகன்லு கூப்பிடறது.''

அவர் அவசரமாக எழுத்து நின்று கைகூப்பினார். அவ்வளவு பெரிய மனிதர் எழுந்து நின்று கைகூப்பியது பரகவுக்கு என்னவோ போல் இருந்தது.

''அடடே! நீங்கள் ஏன் எழுந்திருக்கணும்? உக்காந்துக் கோங்க! அவன் சின்னவன்தானே...!'' என்றார் அப்பா.

''பரவாயில்லே, அதனால் என்ன?'' என்று அவர் அவரை நன்றாகப் பார்த்தார். அப்பா அவரையும் அறிமுகப்படுத்தினார்.

''இவர் சாரங்கபாணி; என்கூட வேலை செய்யறார். திருவல்லிக்கேணியிலே இருக்கார்.''

பரக தலையாட்டினான். அவர் தன்னுடன் எந்த விதத்தில் சம்பந்தப்பட்டிருக்கிறார் என்பது புரியாமல் நின்றிருந்தான். அதற்குள் ராம்ஜி அவருக்குக் காபி கொண்டுவந்தான். அவர் டம்ளரை வாங்காமல் பரகவைப் பார்த்து, ''நீங்க எடுத்துக்கோங்க!'' என்றார்.

பரசு, ''இல்லே, நான் உள்ளே போய்ச் சாப்பிடறேன். நீங்க சாப்பிடுங்கோ'' என்று மறுத்துவிட்டுச் சமையல் அறைக்கு வந்தான். அம்மா வாசல்படியில் சாய்ந்து நின்று முன் அறையில் என்ன பேசிக் கொள்கிறார்கள் என்பதைக் கேட்பதில் கவனமாக இருந்தாள். பரசு அவள் கவனத்தைக் கலைக்காமல் ஒரு ஓரமாக நின்றான்.

வந்தவர் உட்கார்ந்து காபியைக் குடித்து முடித்ததும் மறுபடியும் எழுந்து நின்றார்.

''அப்போ, நல்லநாளா ஒண்ணு பார்த்துச் சொல்றேன். வந்து பொண்ணைப் பார்த்துட்டுப் போயிட்டேளானால் மீதியெல்லாம் அப்புறம் பேசிக்கலாம்...''

''ஓ! வந்துட்டாப் போறது. மீதியெல்லாம் என்ன பெரிய விஷயம். பொண் மனசுக்குப் பிடிக்கணும், அதுதான் முக்கியம்...''

''அது சரி; ஆனாலும் நீங்க மனசு வச்சாத்தான் எல்லாம் நல்லபடி முடியும்...''

''நான் என்ன மனசு வக்கிறது? எல்லாத்துக்கும் மேலே அவன் ஒருத்தன் இருக்கானே சார்! அவன் பார்க்கணும், நடக்கணும், நம்மகிட்டே என்ன சார் இருக்கு...?''

''வாஸ்தவம்தான். ஆனா அவனேவா வந்து நடத்தறான்? ஒருத்தர் ரூபத்திலே வந்துதானே நடத்தறான்? அவா மனசிலே புகுந்துண்டு ஆட்டி வைக்கிறான்.''

''எதுக்குக் கவலைப்படறேன்? எல்லாம் நல்லபடி நடக்கும். நான் பார்த்துச் சொல்லி அனுப்புங்கோ, வந்துடறோம்.''

அவர் உணர்ச்சி வசப்பட்டுப் பேச ஆரம்பித்தார்.

''இந்த வாக்கு போறும்; தெய்வவாக்கு மாதிரி காதுல ஒலிக்கிறது. நான் வரட்டுமா...? மறுபடியும் நானே வரேன்'' என்று பொதுவாகக் கைகூப்பினார். அப்பா அவர் குடையை எடுத்துக் கொடுத்தார். வாசல் வரை கூடப் போனார். அம்மா அவர் காபி சாப்பிட்ட டம்ளரையும், டபராவையும் எடுத்துக்கொண்டு

சமையலறைக்கு வந்தாள். பரசுவுக்கு ஏதோ கொஞ்சம் புரிகிற மாதிரி இருந்தது. அம்மா அவனுக்குக் காபி கலக்க ஸ்டவ்வில் பாலை வைத்தாள்.

''யாரும்மா இவர்?''

''ம்...?''

''இவர் யாருன்னு கேட்டேன்.''

பொங்கி வந்த பாலை இறக்கிக்கொண்டே, ''உனக்குப் பொண்ணு கொடுக்கறேன்னு வந்திருக்கார்!'' என்றாள். கை பரபரவென்று வேலை பார்த்தது. பாலை ஊற்றி டம்ளரில் விட்டு டிகாக்ஷனைக் கலந்தாள். அளவாகச் சர்க்கரை சேர்த்து இரண்டு தரம் ஆற்றி அவள் முன் வைத்தாள். காபி நுரையில் கொப்புளங்கள் வெடித்துக் கரைவதைப் பார்த்துக் கொண்டிருந்தான் பரசு.

''பொண்ணா...? எனக்கா...?''

''ஏண்டா உனக்கென்ன குறைச்சல்?''

இப்போது நிமிர்ந்து பார்த்தான்.

''இது ஒண்ணுதான் குறைச்சல்னு தேடிவச்சுடறயா?''

அதைக் கேட்டு அம்மா ஒன்றும் சொல்லாமல் நின்றாள். அவன் மௌனமாகக் காபியைக் குடித்தான். அதன் ருசி மனசில் பதியவில்லை. அப்பா உள்ளே வந்தார். பரசுவைப் பார்த்தார். பின் அம்மாவிடம் சொன்னார்.

''அந்தப் பெண்ணை நான் பார்த்திருக்கிறேன், ராஜம். எவ்வளவோ இருக்கா தெரியுமா?! இவரைவிட நிறம்; இவர் அளவுக்கு உசரம். மூக்கும், கண்ணும் வரைஞ்ச மாதிரி இருக்கும். நன்னா வீணை வாசிக்கும். எஸ்.எஸ்.எல்.சி. வரைக்கும் படிச்சிருக்கு.''

பரசு தலையை நிமிரவில்லை. ஒருதரம் ஏதோ சொல்ல அப்பாவைப் பார்த்தான். வார்த்தை வரவில்லை. பட்டென்று கவிழ்ந்துகொண்டு எழுந்துபோய்விட்டான். அவன் போவதைப் பார்த்துக்கொண்டே, ''அவன் என்ன சொல்றான்?'' என்று கேட்டார் அவர்.

''ம்...?''

''பரசு என்ன சொல்றான்?''

''அவன் என்ன சொல்றான்? எதைத்தான் வாயைத் திறந்து சொல்லியிருக்கான்? யாரும்மா அவர்னு கேட்டான்; உனக்குப் பொண்ணு தரேன்னு வந்திருக்கார்னேன். எனக்கான்னு அசந்து போன மாதிரி பார்த்தான். அதுக்குள்ள நீங்க வந்தேள். தலையைத் தொங்கப் போட்டுண்டு உட்கார்ந்திருந்தவன் இதோ எழுந்து போயிட்டான்.''

''பொண் ரொம்ப நன்னா இருக்கும். இது நடந்தா இவனுக்கு அதிர்ஷ்டம்.''

அம்மாவிடமிருந்து அதற்குப் பதிலில்லை.

ஒரு வாரத்துக்கெல்லாம் சாரங்கபாணி மறுபடியும் வந்தார். அப்போது பரசு வீட்டில் இல்லை.

''வருகிற வெள்ளிக்கிழமை நல்ல நாளா இருக்கு. ராகு காலம் கழிஞ்சதும் எப்போ வேணுமானாலும் வரலாம்.''

ஜகன்னாதன் உள்ளே வந்து கேட்டுக்கொண்டு போய், 'சரி' என்றார்.

''சர்யந்திரம் ஆறு மணிக்கு மேல வந்தால் சௌகரியப்படுமா?''

''இதுலே எல் சௌகரியம் என்ன இருக்கு? உங்க சௌகரியம்தான் எனக்கும் சௌகரியம். ஆறு மணிக்கு மேலேயே வாங்கோ. அவசியம் வந்துடுங்கோ'' என்று சொல்லிவிட்டு எழுந்து போனார்.

ராத்திரி பரசு வந்ததும் ஜகன்னாதனே கூப்பிட்டு விஷயத்தைச் சொன்னார். பரசு அப்போதும் சங்கடப்பட்டுக்கொண்டு நின்றான். எதையோ சொல்ல முடியாமல் தவிக்கிற மாதிரி பட்டது. அம்மாவும் அப்பாவும் அவன் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

''என்ன பரசு?'' என்று கேட்டார்.

அவன் பேசவில்லை. சுவரில் சாய்ந்துகொண்டான்.

''என்ன, சொல்லேன்...?''

''எனக்கு எதுக்குப்பா கல்யாணம்?''

ஜகன்னாதன் அசந்து போனார். அந்தக் குரலில் தெரிந்தது வெறுப்பா, விரக்தியா, பரிதாபமா, இல்லை எல்லாம் சேர்ந்த ஒன்றா...? பரசு, உனக்கு நான் பெரிய தப்பாகத்தான் பண்ணிட்டேன் போல இருக்கு...

''என்ன சொல்றே நீ?''

அவன் தலை நிமிரக்கூட இல்லை. ஸ்கூல் பையன் வாத்தியார் எதிரில் நிற்கிற மாதிரி நின்று கொண்டிருந்தான்.

ஜகன்னாதன் குரலைக் கலகலப்பாக ஆக்கிக்கொண்டு பேசினார்.

பரசு இன்னும் தயங்கி நின்றான்.

''அதைச் சொல்லலேப்பா... நான் வந்து...''

''நீ எதையும் சொல்ல வேணாம். வெள்ளிக்கிழமை சீக்கிரம் வந்து சேர்.''

அப்பா அத்தோடு கத்தரித்துக்கொண்டு இடத்தை விட்டு நகர்ந்தார். ஐபத்தில் உட்கார்ந்துவிட்டார்.

அவர்கள் பேச்சைக் கேட்டுக்கொண்டே படிக்கிற பாவனையில் இருந்த வில்வம் நிமிர்ந்து அண்ணாவைப் பார்த்தாள். பரசுவின் வேதனையான முகம் அவளுக்குப் பரிதாபமாக இருந்தது. ஆறுதலாக ஏதாவது சொல்ல வேண்டும் போல் இருந்தது. தோள் மீது கை போட்டுக்கொண்டு பேச வேண்டும் என்று தோன்றியது. ஆனால் பேசாமல் இருந்தாள். பரசுவிடம் அவனால் அப்படிப் பேச முடியாது. அவர்களுக்கிடையில் அந்த நெருக்கம் இல்லை. ராம்ஜியிடம் அவனால் அப்படிப் பேச முடியும். எதைப் பற்றியும் பேச முடியும். அப்பாவும் அம்மாவும் பரசுவுக்குத் தனியாக ஒரு மரியாதை கொடுத்து அவனைத் தங்களிடமிருந்து பிரித்து வைத்துவிட்டார்கள் என்று நினைத்தான். பரசுவுக்காகப்

பரிதாபப்பட்டாலும் சட்டென்று ஒரு கோபமும் ஏற்பட்டது. 'என்ன மனிதன் இவன்! பிடிக்காததைக்கூட வாயைத் திறந்து சொல்லாத மனிதன்!'

'பரசு, ஏன் இப்படி இருக்கிறாய்? ஒரு விஷயத்திலாவது உன் தீர்மானத்தை வெளிப்படுத்தேன். நீ நினைப்பதைச் சொல்லேன். ஆமாம், நீ ஏதாவது நினைக்கிறாயா இல்லையா? உலக்கென்று தனியாக ஒரு எண்ணம் உண்டா, கிடையாதா? பெண் பார்க்கப் போகிறாயா, பரசு? போய் நாற்காலியில் உட்கார்ந்து பஜ்ஜியும், சொஜ்ஜியும் சாப்பிட்டு விட்டு, பாடச் சொல்லிக் கேட்டுவிட்டு, அவளை முகம், கன்னம், கை கால், உயரம், நிறம், தலைமுடி எல்லாம் அளக்கிற மாதிரிப் பார்த்துவிட்டு திருப்தியாக இருந்தால் தலையாட்டி விட்டு - இல்லாவிட்டால், 'அப்புறம் தெரியப்படுத்தறோம்' என்று நாசூக்காக மறுத்துவிட்டு... ப்ளீஸ், வேண்டாம் பரசு. அப்பா சொல்கிற மீதி விஷயங்களுக்குத் தலையாட்டுகிற மாதிரி இதற்கும் ஆட்டிவிடாதே! இந்த அநாகரிகத்துக்குச் சம்மதித்துவிடாதே. பாவம், அந்தப் பெண். அவளைக் காட்சிப் பொருளாக்கிவிடாதே...!'

அவனுக்குக் கல்யாணமானால் எப்படி இருக்கும் என்று நினைத்துப் பார்த்தான் விஸ்வம். 'சமைக்க அம்மாவுக்கு ஒரு ஆள். பேச அண்ணாவுக்கு ஒரு துணை. பரசுவுக்கு...? அவன் இதே மாதிரி சாப்பிட்டுவிட்டு, இஸ்திரிகூட இல்லாத சட்டையை மாட்டிக்கொண்டு - டிஃபன் பாக்ஸைப் பையில் போட்டு எடுத்துக்கொண்டு - சைக்கிளை மிதித்து ஆபீஸ் போய், ஐந்து மணிக்கு மேல் உட்கார்ந்து ஓவர் டைம் பண்ணி - அது முடிந்ததும் ராத்திரி எட்டுக்கோ ஒன்பதுக்கோ திரும்பி வந்து ஒரு வாய் மோர்ச்சாதம் சாப்பிட்டுவிட்டு, படுத்துத் தூங்கி மறுபடியும் காலையில் எழுந்து... என்றைக்காவது அவள் நச்சரித்தால் ஒரு தமிழ் சினிமாவுக்குக் கூட்டிக்கொண்டு போய்... பாவம், அவள்...

விஸ்வம் தன்னையே பார்ப்பதை உணர்ந்தான் பரசு. சிரிக்கற மாதிரி ஒரு தரம் உதட்டை விரித்துவிட்டு அவசரமாக அந்த இடத்தை விட்டு நகர்ந்தான். விஸ்வத்துக்கு இரக்கமாக இருந்தது.

'பரசு, நீ ஏன் இப்படி இருக்கிறாய்?'

4

அந்தக் கூடத்தின் சிமெண்ட் தரையில் மாக்கோலம் பளிச்சிட்டது. தேர்ந்த ஒரு கைதான் அதைப் போட்டிருக்க வேண்டும். வெறும் கைத்திறன் மட்டுமில்லை, நல்ல கற்பனையும் சேர்ந்திருந்தது. நான்கு ஓரங்களிலும் பாம்பு நெளிகிறாற் போல் வளைவு வளைவாக மெலிதாய் இரட்டை இழைகள் இழுக்கப்பட்டிருந்தன. ஓரத்தில் பட்டை கட்டின செம்மண் பார்டர். மூலைகளில் ஜதை ஜதையாகக் கிளிகள் உட்கார்ந் திருந்தன. நடுவிலும் பெரிசாக ரதமோ, தாமரையோ போடப்பட்டிருக்க வேண்டும். அது தெரியாமல் கருப்பு பெட்ஷீட் விரித்திருந்தது.

கூடம் பொதிதாக இல்லாவிட்டாலும் கத்தமாக இருந்தது. கதவு இல்லாத கவரின் அலமாரியில் புத்தகங்கள் ஒழுங்காக அடுக்கப்பட்டிருந்தன. பெஞ்ச், மேஜை, டிரங்க் பெட்டி மீது சுருட்டி வைக்கப்பட்ட படுக்கைகள் என்று எதுவும் கண்ணில் படாமல் மறைந்து போயிருந்தது. எல்லாம் அந்த வீட்டின் மற்றோர் அறையான சமையல் உள்ளில் அடைப்பட்டிருக்க வேண்டும். சுவரில் சில குரூப் போட்டோக்கள். பக்கத்தில் பெரிசாக முருகன் காலண்டர். மீழே 1965 என்று எழுதியிருந்தது. அதை வாசலில் - சமையலறையும் கூடமும் பிரிகிற இடத்தில் - நீலமும் பச்சையும் கலந்த நூலில் இழை எடுத்துப் போடப்பட்ட தோகை விரித்த மயில். வெள்ளை மேட்டித் துணியின் பின்னணி வண்ணான் வெளுப்பில் இருந்தது. காற்றில் அந்தத் திரைச்சீலை அசைகிறபோது, அதிலிருந்த மயில் அழகாக நடனமாடியது. அடிக்கொரு தரம் நிரை விலகி உள்ளேயிருந்து ஒர்ளட்டு வயதுப் பையன் பரசுவைப் பார்த்துவிட்டு முகத்தை இழுத்துக்கொண்டான்.

''டேய் மணி, வாடா இங்கே...!'' என்று கூப்பிட்டார் சாரங்கபாணி. அவன் வெளியில் வந்து தயக்கமும் வெட்கமுமாகப் பரசுவைப் பார்த்துக்கொண்டே அவரிடம் போனான். அவர் அவன் தோளை வளைத்து அருகில் இழுத்தார். ''நகத்தைக் கடிக்காதேடா...!'' என்று வாயிலிருந்து விரலை எடுத்தார்.

''என்னோட லாஸ்ட் ஸன் சுப்ரமணியன்!'' என்று ஜகன்னாதனிடம் அறிமுகப்படுத்தினார். ஜகன்னாதன், ''இங்கே வா!'' என்று அவன் கையைப் பிடித்தபோது, பையன் இன்னும் லஜ்ஜை மிகுந்தவனாகத் தயங்கிக்கொண்டு அப்பாவின் மடியில் முகத்தைப் புதைத்துக்கொண்டான். ஓரக்கண்ணால் பரசுவைப் பார்ப்பதை மட்டும் தவிர்க்கவில்லை.

பரசுவும் அவனைப் பார்த்தான். ஆனால் மனசு அவனிடம் இல்லை. அந்த இடத்திலேயே இல்லை. அந்தச் சூழ்நிலை அவனுக்குப் புதுசாக இருந்தது. தகுதி இல்லாத ஓர் இடத்திற்கு வந்து உட்கார்ந்திருக்கிற மாதிரி தவித்தான். திரைச் சீலையில் தொங்கின மயிலை, சுவரில் மாட்டியிருந்த படங்களை, கீழே விரித்திருந்த ஜமுக்காளத்தை மாறி மாறிப் பார்த்துக்கொண்டிருந்தான். அகிலாவைப் பார்த்தான். அம்மாவைப் பார்த்தான். 'ஏன் என்னை இங்கே அழைத்துக்கொண்டு வந்தீர்கள்?' என்கிற மாதிரிப் பார்த்தான்.

அவர்கள் அவனைப் பார்க்கவில்லை. பெண்ணின் மாமி என்று அறிமுகப்படுத்தப்பட்ட ஒருத்தியுடன் பேசிக் கொண்டிருந்தார்கள். அவள் தங்கள் பெண்ணின் பெருமைகளைச் சொல்லிக்கொண்டிருந்தாள்; ''வீணை வாசிச்சால் இன்னைக்கெல்லாம் கேட்கலாம். சுறுசுறுன்னு அரை மணி நேரத்தில் ஒரு கல்யாணச் சாப்பாடே ஆயிடும். பூ வேலை, தையல் வேலை எல்லாம் நன்றாக வரும். அந்த மயில் அவள் போட்டதுதான். இந்த இழை கோலங்கூட அவளுடையதுதான்...'' - பேச்சை எங்கே இழுத்துக் கொண்டு போனாலும் அந்த மாமி கடைசியில் அவளிடமே வந்து நின்றாள். அதெல்லாம் பரசுவின் காதில் விழுந்தது.

அவன் அப்பாவைத் திரும்பிப் பார்த்தான். அவர், சாரங்கபாணியோடு தம் அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கொள்கைகளைப் பற்றிச் சுவாரியமாகப் பேசிக்கொண்டிருந்தார். மணி அவர்களுக்கு நடுவில் ஒன்றும் புரியாதவனாக நின்று கொண்டிருந்தான். அவனைக் கூப்பிட்டுப் பேசலாமா என்று பரசு நினைத்தபோது, நல்ல வாசனையோடு டிஃபனும் காப்பியும் வந்தன. சாரங்கபாணி எழுந்து வந்து ஸ்டூலை நகர்த்திப் போட்டார். ''சாப்பிடுங்கோ!'' என்று உபசரித்தார். அவனுக்குச்

சாப்பிடத் தோன்றவில்லை. ஏதோ பயத்தில் வயிற்றைக் குமட்டிக்கொண்டு வந்தது. உதட்டைக் கடித்துக் கொண்டான்.

''என்ன... சாப்பிடவே இல்லையே? எல்லாம் அப்படியே இருக்கே?'' என்று வருத்தப்பட்டுக்கொண்டாள் பெண்ணின் அம்மா. அவள் அவ்வளவு லட்சணமில்லை. மாநிறந்தான். கன்னத்தில் எலும்புகள் தூக்கிக்கொண்டு நின்றன. சிரிக்கும்போது மட்டும் சுமாராகத் தெரிந்தாள்.

பரசு போதும் என்று கையை மட்டும் காட்டித் தலையை அசைத்தான். பேசுவதற்கு வார்த்தை எதுவும் வரவில்லை. புன்சிரிப்பாகச் சிரித்து வைக்கலாம் என்றுகூடத் தோன்றவில்லை. ''அவள் சாப்பிடறது அவ்வளவுதான்!'' என்று சிரித்து அம்மாதான் சமாளித்தாள். அவன் மறுபடியும் தலையைக் குனிந்து ஜமுக்காளத்தையே வெறித்துக்கொண்டிருந்தபோது... பளிச் சென்று ஒரு பாதம் அதில் முளைத்தது. நீலத்தில் ஜரிகைப் புடவை தெரிந்தது. அவள் - ருக்மிணி - நமஸ்காரம் பண்ணினபோது மழமழவென்று வெள்ளையாக இரண்டு கைகள் தெரிந்தன. வளையல்கள் சப்தமிட்டன. நீளமாகப் புரண்ட பின்னல் தெரிந்தது. அவள் வீணையோடு உட்கார்ந்தபோது, அசப்பில் அந்த முகமும் கண்ணில் பட்டது.

'இவளையா...? இந்த அழகையா எனக்குக் கொடுக்கப் போகிறார்கள்?'

பரசு மீண்டும் அதிர்ந்தான்.

அங்கு அழைத்துக்கொண்டு வந்து, தன்னை நன்றாக அவமானப்படுத்துகிறாற்போல் உணர்ந்தான். அப்பாவை ஏறிட்டுப் பார்த்தான். அவர் முகத்தில் தெரிந்த மலர்ச்சி அவனுக்குப் பயத்தைக் கொடுத்தது. அம்மாவையும், அகிலாவையும் பார்த்தான். புன்சிரிப்பாய்ச் சிரித்துக் கொண்டிருந்தார்கள். அவன் மீண்டும் பார்த்த போது ஜமுக்காளத்தில் வீணை மட்டும் இருந்தது. அவள் வாசித்தது கூடக் காதில் விழவில்லை.

அப்பா எழுந்தார். அம்மாவும் அகிலாவும் வெற்றிலை, குங்குமம் எடுத்துக்கொண்டார்கள். மணி ஓடிப்போய் டாக்ஸி

கூட்டிக்கொண்டு வந்தான். அவர்கள் வீட்டிலிருந்து அவளைத் தவிர, மீதிப்பேர் எல்லோரும் வாசல்வரை வந்தார்கள். சாரங்கபாணி டாக்ஸிக் கதவை மரியாதையாகத் திறந்துவிட்டார். எல்லோரும் ஏறிக் கொண்டதும் சாத்திவிட்டு, ''அப்போ...'' என்று இழுத்தார்.

''எனக்கு ரொம்ப திருப்தியாக இருக்கு. எதுக்கும் அவனைக் கேட்டுச் சொல்றேனே...'' என்றார் அப்பா.

''என்ன சொல்றார் கேளுங்களேன்'' என்று அவசரப்பட்டாள் அவளுடைய அம்மா.

ஜகன்னாதன் பதில் சொல்லாமல் லேசாகச் சிரித்தார்.

''என்ன, பாக்கியம் இது?'' என்று சாரங்கபாணி, மனைவியைக் கடிந்து கொண்டார். அவருக்கும் அவர் மனைவிக்கும் நிறைய வித்தியாசம் இருந்தது. பெண் அப்படியே அப்பாவைக் கொண்டு பிறந்திருந்தாள்.

''நீங்க வீட்டுக்குப் போய் நிதானமாகக் கேட்டுச் சொல்லுங்கோ. ஒண்ணும் அவசரம் இல்லை. குக்மிணிக்கு அதிர்ஷ்டம் இருந்தா நடக்கிறது...'' என்றார்.

'அதிர்ஷ்டம் அவளுக்கா?' என்று சங்கடப்பட்டுக் கொண்டான் பரசு.

டாக்ஸியிலிருந்து இறங்கி வீட்டுக்குள் வந்ததுமே, ''என்னண்ணா அப்படி மலைக்கப் போயிட்டே?'' என்று கேலி பண்ணினாள் அகிலா.

'மன்னி என்ன அழகுப்பா!'' என்று மாய்ந்துபோனாள்.

''அதுக்குள்ளே மன்னியாயிட்டாளா?'' என்று சிரித்தாள் அம்மா.

''போம்மா அவளைப் பண்ணிக்க அண்ணாவுக்குக் கசக்குமா என்ன? சர்க்கரைப் பொங்கல் வேணாம்னு யாராவது சொல்லுவாளா?'' என்று பரசுவைப் பார்த்தாள். அவன் பதில் சொல்லவில்லை. தனக்குச் சம்பந்தம் இல்லாத ஒரு விஷயத்தைப் பற்றி அவர்கள் பேசுகிற மாதிரி நின்று கொண்டிருந்தான்.

''என்ன பரசு, உனக்கும் சம்மதம்தானே?'' என்று கேட்டார் அப்பா.

அவன் இல்லை என்று தலையாட்டினான். அப்பா அதிர்ந்து போனார்.

''இல்லையா?''

அம்மாவும் அகிலாவும் சிரிப்பு நின்றவர்களாக அவனைப் பார்த்தார்கள்.

''பஸ்ச்சினு வீணையும் கையுமா என்னமா இருக்கா! ஃப்ரேம் போட்டால் அப்படியே சரஸ்வதி பூஜைக்கு எடுத்து வச்சுடலாம் போல...''

''அதனால்தான் வேணாம்னு சொல்றேன்.''

அப்பா ஒரு நிமிஷம் பேசாமல் நின்றார். கூடம் அமைதியாக இருந்தது. ஸ்டாண்டில் இருந்த டைம்பீஸ் டிக்கிடும் சத்தம் தெளிவாகக் கேட்டது. ஜன்னலில் ஒரு குருவி வந்து உட்கார்ந்து கொண்டு 'கீச்கீச்' சென்று மூன்று நான்கு தரம் கத்தியது. பின்பு விர்ரென்று பறந்து போய்விட்டது. அதைப் பார்த்துக் கொண்டிருந்த அப்பா நிதானமாகக் கீழ்க்குரலில் பேச ஆரம்பித்தார்.

''அசடு மாதிரிப் பேசாதடா, பரசு. உனக்கு என்ன குறைச்சல்? மன்மதன் மாதிரி இருந்தாத்தான் அழகா? ஒரு ஆண்பிள்ளைக்கு இதைவிட என்ன அழகு வேணும்? என்னையே எடுத்துக்கோ... நான் என்ன அழகுன்னு உங்கம்மா என்னைப் பண்ணிண்டா?''

''நான் என் அழகைப் பத்திச் சொல்லல்லேப்பா...''

''போடா பைத்தியம்! உங்கம்மாவைப் பார்த்துவிட்டு வந்ததும், நான்கூட எங்கப்பாகிட்டே இந்த மாதிரிதான் சொன்னேன். அப்பா எனக்கு அரைமணி நேரம் புத்தி சொன்னார். அப்புறமா சரின்னேன். இப்போ எங்களுக்கு என்னடா குறை? நாங்க சந்தோஷமா இல்லையா?''

பரசுவிடமிருந்து பதில் இல்லை. சுவர் ஓரத்தில் வரிசை தவறாமல் போய்க் கொண்டிருந்த சிற்றெறும்புகளைப் பார்த்துக்கொண்டிருந்தாள்.

''திருப்தியான்னு கேட்டால் 'டக்'குன்னு தலை ஆட்றதை விட்டுட்டு இதெல்லாம் என்னடா பேச்சு?''

அப்பா, அவனுக்கு அவளைத் தேடிக் கொடுப்பதில் தீர்மானமாக இருந்தார். எதற்கோ எதையோ சுடு கட்டுற பரபரப்பில் பேசினார்.

''நாளைக்கு அவாளை மேலே ஆக வேண்டியதைப் பார்க்கச் சொல்லட்டுமா?''

''இல்லேப்பா... வேணாம்ப்பா...''

''பொண் ரொம்பப் பணிவா இருக்கு பரசு. உனக்கு ஒத்துப் போவான்னு தோணறது. அழகை விடு, பரசு. அதைப் பார்த்துப் பயந்து போயிடாதே. இது ஒண்ணும் மருட்டற அழகா இல்லே. ரம்பை, ஊர்வசின்னு சொல்றாளே அந்த அழகெல்லாம் இல்லை. லட்சுமி படத்திலே, சரஸ்வதி படத்திலே பார்க்கறோமே அந்த மாதிரி அடக்கமான அழகுதான். எனக்கென்னவோ நீ இவளைப் பண்ணிண்டா சந்தோஷமா இருப்பேன்னு படறது.''

அம்மா எதைப் பற்றியும் இவ்வளவு தூரம் பேசினது கிடையாது. அந்தப் பெண் அவளை மிகவும் வசீகரித்திருக்க வேண்டும். பரசுவால் பதில் சொல்ல முடியவில்லை.

''உங்கம்மாவே இவ்வளவு தூரம் சொல்றாளேடா... என்ன பதில் சொல்லட்டும் அவாளுக்கு?''

''சரின்னு சொல்லுங்கோ. அவளைப் போட்டு இப்படிக் கலக்கினேளானா என்ன பதிலைச் சொல்லுவான்! இது நல்லதுடான்னு எடுத்துச் சொன்னால் தலையாட்டப் போறான். மீறினா ஒரு பதிலை அவன் எப்போவாவது சொல்லியிருக்கானா?''

அப்பா நிம்மதி அடைந்தவராக அந்த இடத்தை விட்டு நகர்ந்தார். 'எல்லாத்துக்கும் மேல் ப்ராப்தம்னு ஒண்ணு இருக்கே...

ஈச்வரன் எப்பவோ முடி போட்டு வச்சிருக்கறதை நாம மாத்த முடியுமா என்ன...?' என்று முனகிக்கொண்டே போனார்.

பரசு சோர்ந்து போனவனாக ஒரு பத்திரிகையை வைத்துக் கொண்டு மூலையில் உட்கார்ந்தான். எழுத்துக்கள் ஓடின; மெது வாகப் படங்கள் மறைந்தன. மெத்தென்று ஒரு பாதம் தெரிந்தது. பளிச்சென்று வழவழப்பான கைகள். நீளமாய்ப் பின்னல், ஒரு பரு, சின்ன மரு. கருப்பாக புள்ளி எதுவும் இல்லாத துடைத்து வைத்த முகம். தீர்க்கமாய் மூக்கு. வலது பக்கத்தில் நட்சத்திரமாக ஜொலிக்கிற ஒற்றைக் கல் மூக்குத்தி. பரசு புத்தகத்தை மூடிவிட்டு வாசல் பக்கம் எழுந்து போனான்.

கல்யாணத்துக்கு முதல் நாள்தான் வில்வம் அவளைப் பார்த்தான். பந்தலின் ஒரு மூலையில் நின்று, வந்திருந்த மனிதர்களை ரசித்துக்கொண்டிருந்தான். காதில் விழுந்த பேச்சுக்களை ரசித்தான்.

''கௌரியோட அக்கா பொண்ணு இப்ப எங்கே இருக்கு?''

''அதுதான் யாரோட வோ ஓடிப் போயிடுத்தே...!''

''அடப்பாவமே! உண்மையாகவா?''

''நேத்திக்கு வைத்தீஸ்வரன் கோயிலுக்கு வந்திருந்தார், சார் பிள்ளையோட ஜாதகம் கேட்டிருக்கேன்.''

''புடவை நன்னா இருக்கு, மாமி. எங்கே வாங்கினேள்?''

''இங்கே இல்லேடிம்மா காஞ்சிபுரத்திலே ஸ்பெஷலா ஆர்டர் குடுத்தது. இப்போ இந்த ஜரிகையும், கனமும் புடவைலே எங்கே இருக்கு?''

''சாதாகூட இந்த மாதிரி ஒரு நெக்லஸ் பண்ணிவிட்டிருக்கா.''

''ம்... ஒரு பொம்மனாட்டி என்னமா நாட்டை ஆள்றா!''

''ஏமாளா, நீ மாப்பிள்ளை அழைப்பைப் பார்க்கப் போகலியா?''

''மாப்பிள்ளையைத்தான் பார்த்தாச்சே. அழைப்பை வேற பார்க்கணுமாக்கும்?''

''உஸ். கத்தாதேடி. பிள்ளை வீட்டுக்காரர் காதிலே விழப்போறது.''

விஸ்வம் சிரித்துக்கொண்டான். ஒரு கல்யாணத்தில் கல்யாணத்தைத் தவிர ரசிப்பதற்கு எத்தனை விஷயங்கள் இருக்கின்றன என்று நினைத்துக்கொண்டான். அடிக்கடி ஒரு பச்சைப் புடவை அவன் கண்களில் பட்டது. வந்திருந்தவர்களில் அவள்தான் கொஞ்சம் சுமார் என்று மதிப்பிட்டான். சிறிது நேரத்துக்கெல்லாம் ராம்ஜி அவளோடு ஏதோ பேசிக்கொண்டே பந்தலின் ஒரு கோடியில் நின்று கொண்டிருப்பதைப் பார்த்தான். அவள் சிரித்துக்கொண்டிருந்தாள். 'ராம்ஜி கெட்டிக்காரன்' என்று சொல்லிக்கொண்டான். தரையில் சிதறின பூக்களை, குறுக்கும் நெடுக்குமாய் நடந்த புடவைகளை, அழுகிற குழந்தைகளை, பந்தல் கால்களைச் சுற்றிச் சுற்றி விளையாடும் பெரிய குழந்தைகளை, மூலையில் படுத்துக் கொண்டிருக்கிற ஒரு கிழவரை, தாங்கள்தான் நிறைய வேலை செய்பவர்கள் என்ற நினைப்பில் அலைபவர்களை ஓர் ஆர்வத்தோடு கவனித்தான்.

மேளச் சத்தம் சத்திரத்து வாசலில் கேட்டது. ''ஆரத்தி... ஆரத்தி!'' என்று யாரோ கத்தினார்கள். பரசு காரிலிருந்து இறங்கினதைப் பார்த்தான் விஸ்வம். தன்னால் அந்த மாதிரி திறந்த காரில் உட்கார்ந்து ஊர்வலம் வரமுடியுமா என்று எண்ணிப் பார்த்தான். வாசலில் கொஞ்ச நேரம் நின்றிந்த பரசு உள்ளே வந்தான். பந்தலுக்குள் நிற்கச் சொன்னார்கள்; நின்றான்.

''பொண்ணை அழைச்சுண்டு வாங்கோ!'' என்று கத்தினார் நாணு வாத்தியார்.

விஸ்வம் பார்த்துக்கொண்டிருந்தபோது, நடந்துவந்த வலதுகால் பாதந்தான் முதலில் அவன் கண்ணில் பட்டது.

'என்ன அழகான பாதம்!' என்று நிமிர்ந்தபோது பிரமித்துப் போனான்.

'இது என்ன முகம்! எப்படி இவ்வளவு களை இந்த முகத்திற்கு வந்தது!'

பெண் பார்த்துவிட்டு வந்த அன்று, ''என்னமா, பஜ்ஜி சொஜ்ஜியெல்லாம் நன்றாக இருந்ததா?'' என்று கிண்டல் பண்ணினான் அவன். அம்மா அவன் கிண்டலைப் புரிந்து கொண்டு, ''பொண்ணுகூட நன்னா இருக்காடா!'' என்றாள்.

அதற்குள் அகிலா குறுக்கிட்டு, ''நீ அவளைப் பார்க்கணும்டா, விச்சு. அப்படியே மயக்கம் போட்டு விழுந்துடுவே!'' என்று சொல்லினாள்.

''என், மேலே மயக்க மருந்து ஏதாவது தடவிண்டு வந்து நின்னாளோ?''

அது இப்போது நினைவுக்கு வந்தது. அகிலாவின் ரசனை மீது கோபமும் ஏற்பட்டது. 'மயக்கம் போட்டு விழுகிற அழகா இது? இந்த அலாதியான அமைதி கண்ணில் படவில்லை.' அகிலாவைப் போன்ற ஒரு பெண்ணால் அதற்கு மேல் வேறு எப்படியும் சொல்லியிருக்க முடியாது என்று சமாதானப்படுத்திக் கொண்டான்.

அவள் லேசாகத் தலையை உயர்த்தின போது எதிரில் நின்றிருந்த விஸ்வத்தின் மீது பார்வை ஒரு தரம் ஒடி மறைந்தது. அவன் சிலிர்த்துப் போனான். அதற்கு மேல் அந்த முகத்தைப் பார்த்துக்கொண்டிருக்க முடியாதவனாகத் தலையைக் குனிந்துகொண்டான். பரசுவின் கையைப் பிடித்துக் கொண்டிருந்த அந்தக் கை கண்ணில் பட்டது. எவ்வளவு வித்தியாசம்!

'பரசு...! உனக்கு இவ்வளவு பெரிய அதிர்ஷ்டமா? இந்த அழகைப் பார்த்துவிட்டு வந்த பின்பும் கல்யாணம் பண்ணிக்கொள்கிற தைரியம் வந்ததா? எப்படி வந்தது பரசு?'

'அவள் எப்படிச் சம்மதித்தாள்? இஷ்டப்பட்டுத்தான் இவனைக் கல்யாணம் பண்ணிக்கொள்கிறாளா? இவள் சம்மதத்தை யாராவது கேட்டிருப்பார்களா? இவள் அன்று பரசுவைப் பார்த்தாளா, இல்லையா? இல்லாவிட்டால் இவனிடம் எந்தக் குறை யாவது...? அப்படி ஒன்றும் தெரியவில்லையே! உயரமும், வாளிப்புமாக ஆரோக்கியமாகத் தானே இருக்கிறான். லேசான புன்சிரிப்புடன்தானே நிற்கிறான். பூரண சம்மதத்தோடு கல்யாணம் பண்ணிக்கொள்கிற மாதிரி தானே முகம்

பளிச்சிடுகிறது? இந்த சிரிப்பும் பளிச்சிடலும் இவள் கூடவே பிறந்துவிட்ட ஒன்றாக இருக்குமோ?'

பரசு மீது அவனுக்குக் கோபம் வந்தது. தன் அம்மாவின் மீதும் அப்பாவின் மீதும் வந்தது. அவள் பெற்றோர்மேலும் கோபப்பட்டான். கடைசியில் அந்தக் கோபம் அவள் மேலும் திரும்பியது.

'இந்த அழகும் கண்களில் கடர்விடுகிற புத்திசாலித்தனமும் இதற்குத்தானா பயன்பட்டது? இவனிடம் என்ன பார்த்தாய் நீ? எப்படிச் சம்மதித்தாய்?'

அதன்பின் கல்யாணப் பந்தலுக்குள் இருக்கப் பிடிக்கவில்லை. பின்கட்டு - சத்திரத்தின் மொட்டை மாடி - சாமான்கள் போட்டிருந்த அறை என்று அலைந்தான். பின் ஒரு மூலையில் படுத்துத் தூங்கிப் போனான்.

மறுநாள் காலையில் வெகு சீக்கிரமே கெட்டிமேளச் சத்தம் கேட்டது.

5

லேசாய் மழை தூறிக் கொண்டிருந்தது. அதில் நனைந்துகொண்டு வந்தான். விஸ்வம் திடீரென்று அரை நிக்கர் போட்டுக்கொண்டிருப்பவனாக மாறுகிறான். தோளில் காக்கி நிறத்தில் புஸ்தகப் பை தொங்குகிறது. அதனுள் மூன்றாம் வகுப்பிற்கான முத்தமிழ் வாசகம், கணித நூல், ஒரு வாய்ப்பாடு எல்லாம் இருந்தன. மேல் சட்டையை இழுத்துப் பையை மூடிக்கொண்டு மழையில் நடக்கிறான். மழை வலுக்கிறது. தலையிலிருந்து நீர் முகத்தில் கொட்டிக் கழுத்தில் வழிகிறது. மற்றப் பையன்கள் எல்லாம் மரத்தடியில் ஒதுங்குகிறார்கள். அவனையும் வரச் சொல்லிக் கூப்பிடுகிறார்கள். அவன் சட்டை பண்ணாமல் போகிறான். 'தப்தப்' என்று தண்ணீரில் காலைச் சப்தப்படுத்தி நடக்கிறான். சேறு முழங்கால் வரை தெறிக்கிறது. அவனுக்குச் சந்தோஷமாக இருக்கிறது. உதட்டில் சிரிப்பு வந்துவிட்டுப் போகிறது.

'பளீர்' என்று ஒரு மின்னல் வெட்டுகிறது. உடனே பலமாக இடிக்கிறது. தெருக்கோடியில் வரும்போதே வாசலில் அம்மா நின்றுகொண்டிருப்பதைப் பார்க்கிறான். கொஞ்சம் பயமாக இருந்தது. வீட்டை நெருங்கினதும் அவள் முகம் பரபரப்பது தெரிந்தது. முதுகில் 'பளார்' என்று ஒன்று வைக்கிறாள். சுரத்தில் முதுகோடு கை ஒட்டிக்கொள்கிறது. அவன் முகத்தை இறுக்கிக் கொள்கிறான். அடிபட்ட இடத்தில் 'ஜிவ்' என்று ஓர் எரிச்சல்.

''இந்த மாதிரி மழையில நனைஞ்சுண்டு வராதேன்னு எத்தனை தரம் சொல்றது?'' என்று திட்டிக்கொண்டே தலையைத் துவட்டுகிறாள். சரசரட்டையாக் கழற்றினதும் முதுகில் கண் போகிறது. வெள்ளை வெளேரென்று முதுகில் திட்டாகச் சிவந்து போன இடத்தைத் தடவிக்கொடுக்கிறாள். அவன் 'ஸ்ஸ்...' என்று உடம்பை நெளிக்கிறான். ''உடம்புக்கு வந்தால் யார்ரா அவஸ்தைப்படறது?'' என்று குரல் தழுதழுக்கக் கேட்கிறாள். ''தலையை நன்னா துவட்டிக்கோடா...'' என்கிறாள். அவன் வேறு நிக்கர் போட்டுக்கொண்டு வாசலில் வந்து நின்றபோது மழை விட்டிருந்தது. தெருவில் குட்டை குட்டையாகத் தண்ணீர். உள்ளே எட்டிப் பார்த்தான். அம்மா அடுக்களையில் வேலையாக இருந்தாள். தன் நோட்டுப் புஸ்தகத்திலிருந்து நடுப்பக்கம் பார்த்து எழுதாத நாலு பக்கங்களைக் கிழித்துக் கொண்டு ஓடினான். அலை அலையாக அந்தத் தண்ணீரில் மிதந்தபோது திரும்பவும் முகம் பளிச்சிடுகிறது. சிரிப்பு எட்டிப் பார்க்கிறது.

இப்போதும் சிரித்துக் கொண்டான். மழையில் நனைவது எப்போதும் அலுக்காத ஓர் அநுபவம் என்று நினைத்துக் கொண்டான். சில்லென்று தூறல் உடம்பில் விழுகிறபோது ஏற்படுகிற சந்தோஷத்தை எப்படிப் புரிய வைக்க முடியும்? பிள்ளைக் குழந்தையை மெதுவாகத் தூக்கி நெஞ்சில் அணைத்துக் கொள்கிறபோது உண்டாகிற பரவசத்தைப் போல் இதுவும் ஒரு சந்தோஷம். அம்மாவுக்கு அது புரிந்ததே இல்லை. அம்மாவால் அதைப் புரிந்துகொண்டிருக்கவும் முடியாது என்று தோன்றியது. இப்போதும் அம்மா இருந்திருந்தால் அவன் நிச்சயம் இதற்காகத் திட்டுக் கேட்டுக் கொண்டிருப்பான். ''நீ என்ன இன்னும் குழந்தையாடா, விஸ்வம்? தலையைச் துடைச்சுக்கோயேன்டா...'' என்று அரற்றுவாள்.

அம்மாதான் எவ்வளவு நிம்மதியாகச் செத்துப் போனாள்! எப்படி அந்த மாதிரி செத்துப் போக முடிந்தது அவளால்! வேலைக்கு மாற்றாள் ஏற்பாடு பண்ணிவிட்டுப் போகிற மாதிரி அல்லவா போனாள். 'இதோ பாருங்கோ, என்னை விட இவ நன்னா கவனிச்சுப்பாள்' என்கிறாற்போல் ருக்மிணியை வீட்டுக்கு அழைத்துக்கொண்டு வந்த சில நாட்களுக்கெல்லாம் போய்விட்டாளே...'

''மாரை என்னவோ பண்றது...'' என்று சமையல் கட்டிலேயே கீழே உட்கார்ந்து சுவரில் சாய்ந்து கொண்டாள். முகமெல்லாம் வியர்த்திருந்தது. உடம்பு துவண்டது. மூச்சுவிடச் சிரமப்படுகிற மாதிரி இரைத்தது.

''என்னம்மா பண்றது?'' என்று மன்னி பதறிப்போய் மாரைத் தடவிவிட்டாள். புடவைத் தலைப்பால் முகத்தைத் துடைத்தாள். ரவிக்கை வியர்வையில் தெப்பமாக நனைந்திருப்பதைக் கவனித்தாள்.

''கொஞ்சம் சூடாக ஏதாவது சாப்பிடறேளா... காப்பி கலக்கட்டுமாம்மா?'' என்று கேட்டாள். அம்மா 'வேண்டாம்' என்று தலையை மட்டும் ஆட்டினாள்.

''டாக்டருக்குச் சொல்வியனுப்பறேனே...? இப்படி சிரமப்படறேளே...'' என்று சொல்லிக் கொண்டிருக்கிறபோதே அம்மாவின் கண்கள் மூடிக்கொண்டன. தலை ருக்மிணியின் தோளில் சரிந்தது.

''கொஞ்சம் இங்கே யாராவது வாங்களேன். அகிலா... விஸ்வம்... ஓடி வாங்களேன்...''

மன்னியின் குரல் உயர்ந்து அப்போதுதான் கேட்டாள் விஸ்வம். அவனைப் பெயர் சொல்லிக் கூப்பிடுகிறாள்! அவன் எழுந்து ஓடினபோது அம்மாவின் தலை தொய்ந்துபோய் விட்டது.

ஒரு வார்த்தை சொல்லவில்லை. யாரையும் பார்க்கவில்லை. ஒரு வாய் தண்ணீர்கூடக் குடிக்கவில்லை. நிமிஷத்தில் போய் விட்டாள். வாழ்க்கை இவ்வளவு அநித்யமானதுதான் என்கிற மாதிரி போய்விட்டாள். மன்னி அவளைக் கீழே படுக்க

வைத்தாள். ஒரு நிமிஷம் பார்த்துக்கொண்டே நின்றாள். பின்கட்டிலிருந்து வந்த அகிலா, அலற ஆரம்பித்ததும், அவளைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டாள். கண்ணீர் மட்டும் வழிந்துகொண்டே இருந்தது. அப்படியே விஸ்வந்தை நிமிர்ந்து பார்த்தாள்.

அப்பாவுக்கு ஆள் போயிற்று. அண்ணாவுக்குச் சொல்லி அலுப்பினார்கள். ராம்ஜி தானாக வந்து சேர்ந்தான். தந்தி ஆபீசுக்கு ஒருவர் ஓடினார். யார் யாரோ வந்தார்கள். என்னென்னவோ சொல்லினார்கள். அம்மாவின் நல்ல குணங்கள் ஒவ்வொன்றாக வெளிப்பட்டன. சொல்லிச் சொல்லி அழுதார்கள். அழுகை வராதவர்கள், முகத்தைத் தொங்கப் போட்டுக்கொண்டு உட்கார்ந்தார்கள். நாணு வாத்தியார் கைக்கிளிலிருந்து இறங்கினார். அகிலா மட்டும் நிலைத்து நிலைத்துக் கதறிக் கொண்டிருந்தாள். ''என்னை விட்டுட்டுப் போயிட்டியேம்மா...'' என்று அவள் உரத்த குரலில் அழுதபோது மனசை என்னவோ செய்தது. மன்னி அவளைச் சமாதானப்படுத்துவதும் பின் தானே அழுவதுமாக இருந்தாள். ராம்ஜி அழுதான். ''நான் என்ன பண்ணுவேன், ராஜம்?'' என்று அப்பா அரற்றிக்கொண்டே இருந்தார்.

விஸ்வம் அழவில்லை. எல்லாம் உள்ளுக்குள்ளேயே அடைத்துக்கொண்டுவிட்டது. சட்சட்டென்று எதிரில் வந்து நின்றாள் அம்மா. சிரிக்கிற அம்மா, பேசுகிற அம்மா, சாதம் போடுகிற அம்மா, கோபித்துக்கொள்கிற அம்மா, மடியாக அவளே ஒரு தெய்வம் மாதிரி ஸ்வாமி சந்நிதியில் உட்கார்ந்திருக்கிற அம்மா, கடைசியில் இப்போது ஓய்ந்துபோய்ப் படுத்திருக்கிற அம்மா. ''எழுந்திரும்மா!'' என்று உலுப்பி எழுப்பினால் எழுந்து உட்காரப் போகிறவளைப் போலவேதான் இருந்தாள். 'அப்படி எழுந்துவிடேன்...' விஸ்வம் என்று கூப்பிடேன்... 'போடா அரட்டை! எப்போ பார்த்தாலும் உனக்கு இடக்குப் பண்ணத்தான் தெரியும்' என்று போலியாகக் கோபித்துக் கொள்ளேன்... 'இப்படி இருக்கியேடி அகிலா, நாளைக்கே கல்யாணமானால் இன்னொருத்தர் வீட்டுக்குப் போய் வேலைவெட்டி செய்ய வேணாமா? அப்போது உனக்கு உடம்பு வணங்குமாடி? உன் வயசுக்கு எனக்குப் பரசு பிறந்துவிட்டான்' என்று வழக்கப்படி அகிலாவைக் கடிந்துகொள்ளேன்...

அவன் பக்கத்தில் உட்கார்ந்து அம்மாவின் முகத்தை வருடினான். கன்னங்களை, நெற்றியை, உதட்டை, கைகளை, கால் பாதங்களை வருடிக் கொடுத்தான். மழமழவென்று கை ஓடிற்று. 'இன்னமும் சிரித்துக் கொண்டிருக்கிற மாதிரி இது என்ன முகம்? நீயாம்மா செத்துப்போய் விட்டாய்?'

விஸ்வம் நெஞ்சைப் பிடித்துக் கொண்டான். கண் எரிந்தது. எதுவும் பார்வையில் தட்டவில்லை. இணற்று ராட்டினம் ஓயாமல் கழலுகிற சத்தம் கேட்டது. வாளி வாளியாக நீர் இறைப்பது கேட்டது. ஏதேதோ பேச்சு சத்தம் கேட்டது. யார் யாரோ எதிரே நடந்து போனார்கள். அவன் அப்படியே உட்கார்ந்திருந்தான். அதே நிலையில்தான் மயானத்துக்குப் போனான். திரும்பி வந்தான். குளித்தான். குடம் குடமாக நீர் இழுத்துத் தலையில் கொட்டிக் கொண்டான். வீடு கழுவப்பட்டதைப் பார்த்தான். உடனே உள்ளே அடுப்புப் பற்ற வைக்கப்பட்டதையும் பார்த்தான். பசி ஒன்றுதான் நிரந்தரமானது என்று தோன்றியது. மாடிக்குப் போய் வானத்தை வெறித்துக்கொண்டு நின்றிருந்தான். பின், அவனுக்கும் பசித்தது. இறங்கி வந்து அரிசி உப்புமா சாப்பிட்டான்.

ஒவ்வொரு நாளாக ஊரிலிருந்து பெரியம்மா, அத்தை, சித்தி என்று எல்லோரும் வந்தார்கள். அம்மாவின் ஒன்றுவிட்ட தம்பிகளும், தமைவன்மாரும் வந்து சேர்ந்தார்கள். அவரவர்களுக்குத் தெரிந்ததைச் சொல்லிச் சொல்லி அழுதார்கள். அகிலாவைக் கட்டிக்கொண்டு, ''உன்னை மாலையும் கழுத்துமா பார்க்கக் கொடுத்து வைக்காமல் போயிட்டாளேடி...'' என்று சித்தியும், பெரியம்மாவும் அழுதபோது அகிலாவும் அழ ஆரம்பித்தாள். ருக்மிணியிடம், ''இனிமே நீதான் இவளைக் கவனிச்சுக்கணும். ஆம்பிளைப் பசங்களைப் பத்திக் கவலை இல்லே. இந்தப் பொண்ணுக்கு ஒரு வழி ஏற்படற வரைக்கும் ராஜத்தின் ஸ்தானத்திலே இருந்து கவனிச்சுக்கணும்!'' என்றார்கள். அப்பா பணத்துக்கு அலைந்தார். கூடவே பரசுவும் அலைந்தான். மன்னியின் இரட்டை டர்ச்சங்கிலி மயிலாப்பூர் பண்டாபீசுக்குப் போய்ப் பணமாக மாறி வந்தது. காரியத்தை ராயபுரத்தில் இதற்காக இருக்கும் சத்திரத்தில் வைத்துக்கொண்டார்கள்.

பதினைந்து நாளுக்குள் வீடு திசப்தமாகிவிட்டது. ஒரு நபரை இழந்த அந்தச் சூழ்நிலைக்குப் பழக்கமாகிவிட்டது. அண்ணா ஆபீசுக்குப் போக ஆரம்பித்தான். அப்பாவும் ஆபீசுக்குப் போனார். ராம்ஜிக்குக் காலேஜ் இருந்தது. அகிலா தையல் வகுப்பிற்குத் தொடர்ந்து போகலானாள். வில்வத்திற்கு எதுவும் இல்லை. பி.காம். ரிஸல்ட்டை எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். மன்னி வெகு கலபமாக அம்மாவின் பொறுப்புக்களை ஏற்றுக் கொண்டு விட்டாள். ஒரு சிணுங்கல் இல்லை. இத்தனை நாட்களும் அவளே அந்தக் குடும்பத்தை திர்வகம் பண்ணிக் கொண்டிருந்த மாதிரி இருந்ததே தவிர, புதுசாகப் பண்ணுகிற மாதிரி இல்லை. எந்தத் தடுமாற்றமும் அவளுக்கு ஏற்பட வில்லை. 'எல்லாவற்றையும் இவள் எவ்வளவு இயல்பாக ஏற்றுக் கொள்கிறாள்!' என்று அதிசயப்பட்டான் விஸ்வம்.

அம்மா ஒரு தலை மாற்றாளாகத்தான் ஏற்பாடு பண்ணிவிட்டுப் போயிருந்தாள் ஒரு வேளை அம்மாவுக்கு இதெல்லாம் முன்னாலேயே தெரிந்திருக்குமோ...? அதனால்தான் இவளைக் கல்யாணம் பண்ணிக்கொள்ளச் சொல்லிப் பாஸுவிடம் சொன்னாளோ...? இவளது அதிகாத பேச்சு, வேலை பண்ணுகிற அமரிக்கை, எறும்பு மாதிரி சுறுசுறுப்பு எல்லாம் இவளைப் பெண் பார்க்கப் போன அன்றே அம்மாவின் கண்ணுக்கு மட்டும் ரகசியமாகப் பட்டிருக்குமோ? அதனால்தான் 'இவளைதான் என் மாட்டுப்பெண்' என்ற தீர்மானத்தில் இருந்தாளோ...?

ருக்மிணி வேலை செய்கிறபோது பார்த்துக்கொண்டே இருக்கலாமென்று தோன்றும். ஒரு சத்தம் கேட்காது. கரண்டி லகுகிற சத்தம், பாத்திரம் தவறி விழுகிற சத்தம், பருப்பு டப்பாலவதி நிறைந்து மூடுகிற சத்தம் எதுவும் கேட்காது. எப்போதாவது அரைக்கிற சத்தமும் அம்மியில் நசுக்குகிற சத்தமும் வரும். அதுகூட அவளிடம் பயந்துகொண்டு லோகாகத்தான் வரும். அவள் நடப்பதைப் பார்க்க வேண்டும். 'காற்றில் மிதக்கிற மாதிரி இப்படி ஒரு நடையா?' என்று ஆச்சரியப்பட்டிருக்கிறான் விஸ்வம்.

இந்த மாதிரி நிறைய ஆச்சரியங்கள் ருக்மிணியின் சூபத்தில் வீட்டுக்கு வந்திருந்தன. சுவரில் அழகான படங்கள், மேட்டித்

துணியில் பூப்போட்ட திரைச்சீலை, நான்கு மூலைகளிலும் தையல் வேலைப்பாடு செய்த ஒரு மேஜை விரிப்பு, சின்னச் சின்ன பிளாஸ்டிக் மணிகளில் செய்த பொம்மைகள், இன்ஜெக்ஷன் பாட்டில்களை அடுக்கி ஒட்ட வைத்த ஒரு தேர், வாசலில் விதம்விதமாகப் புள்ளி வைத்த மாக்கோலங்கள், ஸ்வாமி படங்களுக்கு எதிரில் கலர் குங்குமத்தில் தாமரைப் பூ...!

ஒருநாள் சாயந்திரம் எங்கோ சுற்றிவிட்டு விஸ்வம் வீட்டுக்கு வந்தபோது அவன் படிக்கிற முன் அறை 'பளிச்' சென்றிருந்தது. மூலைகளில், உத்திரத்தில் கருப்பு நூலிழைகளாக ஒட்டிக்கொண்டிருந்த ஒட்டடைகளைக் காணவில்லை. இறைத்து கிடக்கும் துணிகள் மடிக்கப்பட்டு அலமாரிக்குள் அடைபட்டிருந்தன. படித்து மேஜை மேல் போட்டு விட்டுப் போகிற சாத்ரேயும், எஸ்ரா பவுண்டும், காம்ப்காவும், பாரதியின் கவிதைத் தொகுதிகளும் ஒழுங்காக அடுக்கப்பட்டிருந்தன. புத்தக ஷெல்ஃபின் புத்தகங்களும் தூசு தட்டப்பட்டு வரிசையாக நின்றிருந்தன. காவிக்கலருக்கு மாறிக் கொண்டிருந்த மேஜை விரிப்பு, தன் சுயவெள்ளைக்கு வந்திருந்தது. எல்லாவற்றிலும் மல்லியின் நளினமான கை தெரிந்தது. அவனுக்கு முதலில் வெட்கமாக இருந்தது. பின் கோபமும் ஏற்பட்டது.

'இவள் ஏன் இதையெல்லாம் செய்ய வேண்டும்?'

அவள் சமையலறை வாசலுக்குப் போய் நின்றான். அரிசியில் கல் பொறுக்கிக் கொண்டிருந்த ருக்மிணி, நிழல் ஆடியதைக் கண்டு நிமிர்ந்து பார்த்தாள். சட்டென்று தலை உயர்ந்தபோது மூக்குத்தி ஒருதரம் பளிச்சிட்டது.

''இதெல்லாம் நீங்க ஏன் செய்யணும்?'' - அவனுக்கு அவளை மன்னி என்று கூப்பிடத் தோன்றியதே இல்லை. அதை நினைக்கிறபோது ஆச்சரியமாகக்கூட இருந்தது. அகிலாவும், ராம்ஜியும் ஒரு நாளைக்கு நூறு தரம் 'மன்னி, மன்னி' என்று கூப்பிடுகிறபோது, தன்னால் மட்டும் ஏன் முடியவில்லை என்று யோசித்துப் பார்த்தான். அவளுக்கும் தன் வயதுதான். நாள் கணக்கில் பார்த்தால் இரண்டு நாளோ, மூன்று நாளோ அவள் சின்னவள் என்பதால் இருக்குமோ...?

''எதெல்லாம்?'' - அவள் புரியாத மாதிரி திருப்பிக் கேட்டாள். முகம் அந்த நாற்பது வாட் பல்பின் மங்கல் வெளிச்சத்தில் கூடப் பளபளத்தது. கருப்புரவிக்கை போட்டுக்கொண்டிருந்தாள். அது அவள் கையின் வெளுப்பை அதிகமாக்கியது. அவள் பார்வையைத் திருப்பிக் கொண்டான். குரலும் தழைந்துபோய் விட்டது.

''என் புஸ்தகங்களையெல்லாம் ஏன் அடுக்கி வச்சீங்க? இப்போது எனக்குத் தடுமாறது. டக்குனு வேணுங்கிற புஸ்தகம் கிடைக்க மாட்டேங்கறது. ஒவ்வோர் புஸ்தகமா எடுத்துப் புரட்ட வேண்டியிருக்கு...''

''அவ்வளவுதானே...? நாளைக்கு எல்லாப் புஸ்தகத்துக்கும் பேரெழுதி ஓரத்திலே ஒட்டி வச்சுடறேன்.'' ருக்மிணி சிரித்தாள்.

'நீ சிரிக்காதேயேன்' என்று கத்த வேண்டும் போலிருந்தது விஸ்வத்துக்கு. 'இந்தச் சிரிப்புக்கு முன்னால் பரசு எப்படி நிற்கிறான்? யார்தாம் நிற்க முடியும்? பற்கள் கூடவா இப்படி வரிசையாக அழகாக அமையும்? எப்போதாவது வெளிச்சத்தில் இவளை - இந்த அழகைப் பார்த்திருக்கிறானா? அவன் நிதானமாய் நின்று நாலு வார்த்தை பேசியிருக்கிறானா? பரக்கப் பரக்க வருகிறான், சாப்பிடுகிறான், கையலம்பிக் கொண்டு பெட்ரூமிற்குப் போய் விடுகிறான். அதற்குப் பின் இவள் சாப்பிட்டு - இடத்தைத் துடைத்து - மீதியாளவற்றை மூடி வைத்து - சமையலறை விளக்கை அணைத்து - கதவைச் சாத்திக்கொண்டு போகிறபோது அவன் அநேகமாய்த் தூங்கிவிட்டிருக்கவும் கூடும். நான் சாப்பிட உட்காருகிறானே, அப்போது நிமிர்ந்து பார்த்து, 'நீ சாப்பிட்டாயா?' என்று ஒரு வார்த்தை கேட்கக்கூடாது? அது அவளை எவ்வளவு சந்தோஷப்படுத்தும்? சில சின்னச் சின்ன வாழ்க்கையின் ரசனைகள் மிகுந்துள்ள விஷயங்களைக்கூடத் தெரிந்து கொள்ளாமல் ஆபீசுக்குப் போவது ஒன்றுதான் வாழ்க்கை என்று எப்படி இருக்கிறான் பரசு? இவள் அவனோடு சந்தோஷமாக இருக்கிறாளா? எப்படிக் கேட்பது இவளிடம்...?'

''அவ்வளவுதானே...?'' - ருக்மிணி அவன் நினைவைக் கலைத்தாள். அவன் பதில் சொல்லவில்லை. பேசாமல் திரும்பி விட்டான்.

அன்றிலிருந்து அவன் மேஜை சுத்தமாக இருக்கும். புஸ்தகங்கள் அதன் மீது இறைக்கப்பட்டிராது. மூலைகளில் சிலந்தி வலைகள் பின்னப்பட்டிருக்காது. துணிகள் மடித்து வைக்கப்பட்டிருக்கும். சாயந்திரம் துவைக்கலாம் என்று அவன் குளித்துவிட்டுத் தன் பான்ட்டையும், ஷர்ட்டையும் சர்ஃபில் ஊற வைத்துவிட்டுப் போனால், சாயந்திரம் திரும்பி வரும்போது அவை கொடிகளில் காய்வது தெரியும். அவன் மிகவும் சங்கடப்படுவான். 'அவளுக்கென்ன, இது தலையெழுத்தா?' என்று தோன்றும். இதற்காக அவன் அம்மாவிடமே சண்டை போட்டிருக்கிறான்.

''நான்தானே துணியை ஊற வச்சேன்? நானே வந்து தோய்ச்சுக்கறேன். நீ ஏம்மா தோய்க்கணும்?''

''ஆமாண்டா. நீ வர வரைக்கும் அப்படி இருக்கணுமாக்கும்? இப்படி ஊறினா அந்தத் துணி எந்தனை நாளைக்கு வரும்?''

''போனால் போகிறது. இனிமே நீ தோச்சியானால் பாரு. எனக்கு ரொம்பக் கோபம் வரும்!'' என்று கத்திவிட்டுப் போவான்.

அந்த மாதிரி ருக்மிணியிடம் கத்த முடியவில்லை. ''நீங்க என் துணியெல்லாம் தோய்க்க வேண்டாம்!'' என்று சாதாரணமாகச் சொன்னான்.

''உங்களுடையதை மட்டும் தனியாகவா தோய்க்கிறேன்? எல்லாருடையதையும் தோய்க்கிறபோது அப்படியே அதையும் அலசிப் போடறேன்.''

''வேணாம்! நானே செஞ்சுக்கறேன். அதுதான் எனக்குப் பிடிக்கும்!'' என்றான்.

அவள் கேட்கவில்லை. இன்னொரு தரமும் அவளிடம் வந்து கெஞ்சுகிற மாதிரி சொன்னான்: ''தயவு செய்து வேண்டாம்!'' என்று கேட்டுக்கொண்டான். அப்போதும் அவள் கேட்கவில்லை. விஸ்வத்துக்குக் கோபம் வந்தது. கடைசியில் ஒருநாள் —

''நீங்க அநாவசியமா எனக்குக் கஷ்டம் கொடுக்கறீங்க. காலைல துணி தோய்ச்ச எனக்குப் பழக்கமில்லே. ஆனால் இனிமேல காலையிலேயே ஊற வைக்காமல் அப்படியே

தோய்க்கப் போட்டுட்டுத்தான் போகணும் போல இருக்கு...!'' என்றான் கொஞ்சம் கடுமையாக.

ருக்மிணி பதில் எதுவும் சொல்லவில்லை. அவனை நிதானமாக ஒரு தரம் பார்த்தாள். விஸ்வம் தன் பார்வையைத் திருப்பிக் கொண்டான்.

... உனக்குச் சொன்னால் ஏன் புரிவதில்லை? நீ இந்த மாதிரி வண்ணாத்தி வேலை செய்யப் பிறந்திருப்பதாக நான் நினைக்கவில்லை. தயவு செய்து என் நினைப்பிற்குக் கொஞ்சம் மரியாதை கொடேன்...

அவள் நினைத்துக் கொண்டது அவளுக்குத் தெரிந்ததோ என்னவோ? ''சரி, இனிமே நான் தோய்க்கலை!'' என்றாள் வாக்குக் கொடுக்கிற குரலில்.

அன்றிலிருந்து அவன் இரும்பு வாளியில் நனைத்து வைத்துவிட்டுப் போகிற துணி அப்படியே கொல்லையில் கிடக்கும். நிழலுக்குத் தருத்தாற்போல் இடம் மட்டும் மாறி இருக்கும். அவன் வந்துதான் துவைத்துப் போடுவான். சில நாள் அவன் வர ராத்திரி மணி பத்தாகும். நண்பர்களோடு சினிமா, பிளாட்பார ஓரத்தின் மதில் சுவரின் மேல் உட்கார்ந்து பேச்சு என்று நேரமாகிவிடும். அப்போதும் அவன் வந்துதான் துவைக்க வேண்டும். அது கொஞ்சம் சிரமமானதாக இருந்தது. சில நாட்கள் நேரமாவதைத் தவிர்க்க முடியவில்லை. காலையிலேயே துவைத்துவிட்டுப் போகலாம் என்றால் துவைக்கிற கல் கிடைக்காது. மற்றக் குடித்தனக்காரர்கள் அதற்காகச் சண்டை போட்டுக் கொண்டிருப்பார்கள். ஒரே பெண்கள் கூட்டமாக இருக்கும். அதனால் அவள் துவைக்கிற வேலையைச் சாயந்தரத்தில் வைத்துக் கொண்டிருந்தாள். நேரமாகிற நாட்களில் எல்லாரும் தூங்குகிற நிசப்தமான ராத்திரியில் 'டப்டப்' என்று அவன் துவைக்கிற சப்தம் மட்டும் பெரிசாகக் கேட்கும். எதிரொலிக்கக்கூடச் செய்யும்! ராட்டினம் வேறு கிரீச்சிடும். இருட்டின் நிசப்தத்தைத் தான் அவமதிப்பதாக உணர்ந்தான்.

அதனால் அகிலாவிடம் மெதுவாகக் கேட்டுப் பார்த்தான்:

''ராத்திரி நான் வர நாழியாளால் மட்டும் நீ கொஞ்சம் என் துணிகளைக் கசக்கிப் போட்டுடேன், அகிலா...''

''ஆமாம். மகாராஜா! நீ ஊர் சுத்திட்டுவா. நான் உனக்கு எல்லாத்தையும் செஞ்ச வைக்கிறேன்!''

''என்ன செய்யறே நீ? எப்பவும் பொம்மை, பேசும் படம்னு சினிமாப் பத்திரிகை இரவல் வாங்கிப் பார்த்துண்டு சும்மா தானே உட்கார்ந்திருக்கே...?''

''நீ மட்டும் என்ன செஞ்சுடறயாம்? நாலு ஃப்ரண்ட்ஸைச் சேர்த்து வச்சுண்டு 'பார்க்'குக்குப் பக்கத்திலே அந்தக் குட்டிச் சுவர் மேல வரிசையா உட்கார்ந்துண்டு வெட்டிப் பேச்சுத்தானே பேசறே...?''

வெட்டிப் பேச்சா அது? அகிலா மட்டுமில்லை. அப்பாவும் அப்படித்தான் நினைக்கிறார். அவள் அதில்தான் தன் உலகம் அடங்கியிருப்பதாக நினைத்தாள். அங்கேதான் உண்மையான விஸ்வமாக உட்கார்ந்திருப்பதாக நினைத்தாள். சாத்ரேயும் ஹக்ஸ்லியும் பற்றிப் பேசிக்கொண்டு, ஜானகிராமனையும், ஜெயகாந்தனையும் அலசிக்கொண்டு - பாரதியின் கண்ணம்மா பாட்டை லேசாய் முணுமுணுப்பாக வாய்விட்டுப் பாடிக்கொண்டு... இன்க்மார் பெர்க்மென் மாதிரி இங்கே யாராவது படமெடுக்க மாட்டார்களா என்று ஏங்கிக் கொண்டு...

'அதையா வெட்டிப் பேச்சு என்கிறார்கள்...?'

''சோம்பேறி...!'' என்று அவளைத் திட்டிக்கொண்டே நகர்ந்தான் அவன்.

''உன்னைவிடத் தேவலை'' என்று சுறுசுறுப்பாகப் பதில் மட்டும் வந்தது.

அடுத்த நாள் வீட்டுக்கு வரும்போதே முன்பு மாதிரி அவனுடைய துணிகள் துவைக்கப்பட்டுக் கொடியில் தொங்கிக் கொண்டிருப்பதைப் பார்த்தான். ''பாவம், அகிலா!'' என்று நினைத்துக்கொண்டே உள்ளே வந்தான். அவள் ஏதோ ஒரு துணியை மடித்துத் தரையில் போட்டு வெட்டிக்கொண்டிருந்தாள்.

''தாங்க் யூ அகிலா!'' என்றான்.

''எதுக்கு...?'' என்றபடி அவள் நிமிர்ந்து பார்த்தாள்.

''என் துணிகளைத் தோய்ச்சதுக்கு!''

''நான் எங்கே தோய்ச்சேன்...?''

அவன் சட்டென்று குக்மினியைத் திரும்பிப் பார்த்தான். அவள் கண்ணில் தெரிந்த அந்தச் சிரிப்பைப் பார்த்ததும் அவனால் ஒன்றும் பேச முடியவில்லை.

'இதைப் போல் ஏன் இப்பப் பெரிசு படுத்தணும்?' என்று கேட்கிற பாவனையில் அவள் முகம் இருந்தது. அவன் மௌனமாய்த் தன் அறைக்குத் திரும்பிவிட்டான்.

அதன்பின் நேரமாகிற நாட்களில் அவன் துணிகளையும் குக்மினி துவைப்பது பழக்கமாகிவிட்டது.

6

மத்தியான வெயில் பளீரென்று அடித்தது. அதற்குப் பயந்த மாதிரி எல்லாம் ஒடுங்கி போயிருந்தன. காற்று இல்லாமல் புழுக்கமாக இருந்தது. தெருவில் நடமாட்டங்கூடக் குறைந்திருந்தது. மொத்தமாகக் குறைந்து நிசப்தமாகி விடவில்லை. நிமிஷத்துக்கு ஒரு தரம் 'சரக் சரக்' என்று செருப்புச் சத்தம் கேட்டது. சைக்கிள் மணிகளின் மெல்லிய சத்தம் கேட்டது. 'டங், டங்' என்று சைக்கிள் ரிக்ஷாக்காரன் தட்டிக்கொண்டு போனான். பக்கத்துப் பெரிய தெருவின் கார் ஹார்ன்கள் கேட்டன. 'எவர் சில்வேர் பாத்ரே சாமான்' என்று தன் கட்டைத் தொண்டையில் ராகமிழுத்துக் கொண்டு போனான் ஒருவன். 'வாளப்பளம்' என்று குரலைக் குறுக்கி மெல்லிசாக விற்றாள் ஒரு பெண். வேப்ப மரத்துக் காக்கைகள் தங்கள் வறட்டுக் குரலில் ஓயாமல் கத்தின.

இந்த மத்தியானப் போதில் கம்பீரமான ஓர் அழகு இருப்பதாக நினைத்தான் விஸ்வம். இரைச்சல் முழுகும் அடங்காமல், ஒரே நிசப்தமாகவும் இல்லாமல் கள்ளக் குரலில் ராகமிழுக்கிற மாதிரி ஓர் அழகு. படிப்பு முடிந்து வீட்டில் இருக்கிற இந்த ஒரு

வருஷத்தில் - லைப்ரரிக்கோ, சினிமாவுக்கோ, நண்பர்களைப் பார்க்கவோ போகாத நாட்களில் பகல் நேரத்தை இப்படியே போக்கியிருக்கிறான். கையில் ஒரு புஸ்தகம் இருக்கும். சில சமயம் பார்வை அதில் பதியாது; எங்கோ பார்த்துக் கொண்டிருக்கும். ஏதோ மோனத்தில் இருக்கிற மாதிரி இருக்கும். காக்கைகளின் கத்தலும், சைக்கிள் மணியோசையும், பண்டம் விற்பவர்களின் விதம் விதமான குரலும் இனிமையான சங்கீதமாகக் காதில் விழும். 'ஜோட் ரிப்பேர் - 'கலாய் பூசலியோ' - 'சோசியம் பார்க்கலியோ, சோசியம்' - இப்படி எத்தனை ராகங்கள்! ஆரோகண அவரோகணங்கள், சுருதி பேதங்கள், ஆனாலும் எல்லாம் இனிமையானவையாகத்தான் காதில் விழுந்தன. கையில் இருந்த புத்தகத்தை மூடி மேஜை மேல் வைத்தான். இப்படிக் கேட்டுக் கொண்டே, ஜன்னல் வழியாகப் பார்த்துக்கொண்டே பேசாமல் உட்கார்ந்திருக்கலாம் போலத் தோன்றியது. ஜன்னல் விளிம்பில் வந்து உட்கார்ந்து கத்தின ஒரு குருவியைப் பார்த்தான். அரை நிமிஷம் அது தனியாகக் கத்திவிட்டு 'விர்'ரென்று பறந்து போய் விட்டது. பின் அவன் கொஞ்ச நேரம் எதிர்ச் சுவரை வெறித்துப் பார்த்தான்.

சுண்ணாம்பு உதிர்ந்த இடங்களில் விதம் விதமான உருவங்கள் கண்ணில் பட்டன. தினமும் பார்ப்பதைவிட இன்று வேறு சில உருவங்களும் தெரிந்தன. குள்ளமாய், தாடியோடு சாமியார் ஒருவர் நின்றார். மான் ஒன்று பாய்ந்தது. குழந்தையை இடுப்பில் வைத்துக்கொண்டு பெண் ஒருத்தி நின்றாள். இந்திய ராஜ்யத்தின் அமைப்புக்கூட இருந்தது. இதையெல்லாம்விடச் சமையலறையின் மூலையில் காரை பெயர்ந்த ஓர் இடத்தில் ஒரு பெண் நடனமாடுகிறாற்போல் தெரியும். அதை ஒருநாள் அம்மாவிடம் காட்டி, ''குமாரி கமலா டான்ஸ் ஆடற மாதிரி இல்லே...'' என்று கேட்டான்.

''காரை விழுந்த இந்த இடமா?'' என்று ஒரு சிரிப்போடு கேட்டாள் அம்மா. 'போடா பைத்தியம்' என்று பார்க்கிற அதே வழக்கமான பார்வையில் பார்த்தாள்.

''நீ மகா கிறுக்குடா விஸ்வம்!'' என்று வாய்விட்டுச் சொன்னாள் அகிலா.

''இவன் மனசுல, தான் ஒரு பெரிய கலிஞன்னு எண்ணமா? சுவத்தைப் பார்த்துக் கமலாங்கறான்; மேகத்தைப் பார்த்து யானை போறது பாருங்கறான்... எனக்கென்னவோ பயமா இருக்கும்மா; கீழ்ப்பாக்கத்துல கொண்டுபோய்ச் சேர்க்கும்படி ஆயிடப் போறதோன்னு?'' என்று ராம்ஜி சொன்னதும் எல்லோரும் சிரிக்கிறார்கள். விஸ்வத்துக்கும் சிரிப்பு வந்தது. சிரித்து விட்டுப் போய்விடுகிறான்.

கொஞ்ச நாளைக்கு முன் அவன் சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது திடீரென்று ருக்மிணி அவனிடம் அதைக் காட்டிச் சொன்னாள்.

''இதைப் பார்த்தா யாரோ டான்ஸ் ஆடற மாதிரி இல்லை...?''

அவனுக்கு ஒரு நிமிஷம் அதிர்ச்சியாக இருந்தது. 'இது எப்படி இவள் கண்ணில் பட்டது? ஏன் வேறு மாதிரி தெரியாமல் அதே டான்ஸ் ஆடுகிற பெண்ணாகத் தெரிகிறது? எப்படி அதே மாதிரியே தெரிய முடியும்? அம்மாவிடம் காட்டினபோது சிரித்தாளே... ராம்ஜியும் அகிலாவுங்கூட கேலி பண்ணினார்களே... இவளுக்கு மட்டும் இது ஏன் அதே தோற்றத்தில் கண்ணில் பட வேண்டும்...?'

''என்ன யோசிக்கிறீங்க, அந்த மாதிரி இல்லையா?''

ருக்மிணி மறுபடியும் கேட்டதும் அவன் 'ஆமாம்' என்று தலையாட்டினான்.

''நீங்க தலையாட்ற வேகத்தைப் பார்த்தால் அப்படி இல்லைன்னு சொல்ற மாதிரி இருக்கே...?'' என்று சிரித்தாள் அவள்.

வெளியே சைக்கிள் ரிக்ஷாக்காரன் ஒருவன் திடீரென்று பிரேக் போட்டு நிறுத்தின சத்தத்தில் இவன் கலைந்தான். தாய் ஒன்று பெரியதாகக் குரைத்தது; அது குறுக்கே ஓடியிருக்க வேண்டும் என்று நினைத்துக்கொண்டான். பார்வை திரும்பவும் ஜன்னலுக்குப் போயிற்று.

ஜன்னல் ஓரத்தில் தொட்டியில் வைத்திருந்த சூரியகாந்திச் செடியில் பெரிசாக ஒரு பூ பூத்திருந்தது. அது அப்போதுதான்

அவன் கண்ணில் பட்டது. 'இதைப் பார்க்காமல் எப்படி தவற விட்டோம்!' என்று நினைத்துக்கொண்டான். நல்ல மஞ்சளில் கை விரல்களை அகல விரித்த உள்ளங்கை மாதிரி அது காற்றில் ஆடியபோது அழகாக இருந்தது. அதுகூட ருக்மிணி வைத்த செடிதான். அவர்கள் அந்த வீட்டுக்கு வந்து கிட்டத்தட்ட இருபது வருஷமாகியிருக்கும். இத்தனை நாளும் அந்த ஜன்னல் நிஜ்ணை காலியாகத்தான் கிடந்தது. எப்போதாவது யாராவது பாதி உடம்பை அதில் சாய்த்து கம்பியைப் பிடித்துக்கொண்டு உட்கார்ந்து தெருவை வேடிக்கை பார்ப்பார்களே தவிர, இந்த மாதிரி ஒரு தொட்டி வைத்துச் செடி வளர்க்கலாம் என்று தோன்றியதே இல்லை. அவளுக்கு மட்டும் புதுசு புதுசாக எப்படி ஏதாவது தோன்றிக்கொண்டே இருக்கிறது...?

அதே மாதிரி எதிர்ப் பக்கத்தில் அவளுடைய அறையின் ஜன்னல் நிஜ்ணையில் இன்னொரு தொட்டி; அதில் ரோஜாச் செடி; சின்னதாக ஒரு மொட்டுக்கூட விட்டிருக்கிறது. அது பெரிசாகப் பூத்துக் காற்றில் ஆடுகிற போது இன்னும் அழகாக இருக்கும். சிவ்வக் குழந்தை ஒன்று வாசலில் நின்று தலையசைத்து வா என்று கூப்பிடுகிற மாதிரி இருக்கும். பிஞ்சுக் கையால் டாடா காட்டுகிற மாதிரி இருக்கும். செடிகளும், பூக்களும் இடத்தை எப்படி அழகு படுத்துகின்றன! அதில் மனசு எப்படிக் குளிர்ந்துபோகிறது! புதுசாக ஒரு துளிர் விடும்போது, மொட்டு அரும்புகிறமாதிரி, பூ மலர்கிறபோது எவ்வளவு அற்புதமானதாக இருக்கிறது! இப்படிச் செடி வளர்க்கலாம் என்று யோசனை நமக்குக்கூட ஏன் தோன்றாமல் போயிற்று! ருக்மிணி, உனக்கு மட்டும் எப்படித் தோன்றியது...?

அந்த இடத்தை அந்தப் பூ நிறைவாக்குகிற மாதிரி ருக்மிணி வீட்டை நிறைப்பது புரிந்தது. சிரித்துக்கொண்டே அவள் வாசலுக்கும், கூடத்துக்கும், சமையல் கட்டுக்கும் நடக்கிறபோது நல்ல இருட்டில் கையில் விளக்கை ஏற்றி எடுத்துக்கொண்டு நடமாடுகிறாற்போல் இருக்கும். அவளைப் பற்றி நினைக்கிறபோதெல்லாம் விஸ்வத்துக்குப் பிரமிப்பாகத்தான் இருந்தது. ஏதோ அந்த வீட்டில் பிறந்து அவர்களுடனேயே வளர்ந்த மாதிரி எத்தனை உரிமை! எவ்வளவு நெருக்கம்!

மற்றவர்களுக்கு ஏதாவது செய்கிறபோது அதில் எவ்வளவு சுவாதீனம்!

''என்னப்பா நீங்க... வர வர சரியா சாப்பிடறதே இல்லை. உடம்பு என்னத்துக்காகும்?'' என்று ஜகன்னாதன் குறுக்கில் கைநீட்டித் தடுக்கிறபோது இலையில் ஒரு கட்டி சாதம் அதிகம் விழும்!

''என்னைப் தெய்க்கண்டு தானாயிடுத்து போல இருக்கே. அதிலா. வரது கண் எப்படிச் சிவந்திருக்கு பாரு. வா, வந்து இப்படி உக்காரு...'' ஒரு நிஜ்ணம் நிறைய என்னை அலைவரின் தலையில் இறங்கும்.

''சாயந்தரம் சிக்கிரமா வந்துடேன் ராம்ஜி. டிபன்னுக்கு அடை பண்ணப் போறேன். உனக்குப் பிடிக்குமே... ரூடா சாப்பிடலாமே.''

''யு.எஸ்.ஐ.எல்.லில் இன்னிக்குத்தான் அந்த புரோகிராம். ரூபாகப்படுத்தச் சொன்னீங்களே விஸ்வம்?''

எப்படி இந்த மாதிரி ஒட்டிக்கொள்ள முடிந்தது அவளால்? எங்கேயோ பிறந்து, இருபது வருஷமாய் அவர்களோடு கூட வளர்ந்து, இப்போது இங்கு வந்து இங்கே இருக்கிற மனிதர்களிடம் எவ்வாறு இப்படி ஒரு பிரியத்தை செலுத்த முடிகிறது?

முதலில் கொஞ்ச நாள்தான் அவளிடம் ஒரு தயக்கம் இருந்தது. எது கேட்டாலும் சிரிப்பு மட்டுமே பதிலாக வரும். அம்மா போனதற்குப் பின் இதெல்லாம் அவளாக ஏடுத்துக்கொண்ட உரிமை. தானாக தெருங்கி வந்த நெருக்கம். மிகவும் இயல்பாக ஏற்பட்டுவிட்ட சுவாதீனம். ராம்ஜி, விஸ்வம் என்று பெயர் சொல்லிக் கூப்பிடுவதெல்லாம்கூட அதன் பின்புதான்.

சில சமயம் அவளை நினைக்கிறபோது விஸ்வத்துக்கு பரிதாபமாகவும் இருக்கும். ஒருவேளை இப்படிச் சிரித்து சிரித்து அவள் தன் மனசில் இருக்கிற இறுக்கங்களையெல்லாம் தளர்த்திக் கொள்கிறாளோ என்றுகூடத் தோன்றும். வேலை செய்ய மட்டுமே

அவள் இந்த வீட்டுக்கு வந்திருக்கிறானோ என்ற வருத்தம் வரும். இதற்காக ஒரு தரங்கூடச் சலித்துக்கொள்ளாமல், கொஞ்சங்கூட முணுமுணுக்காமல் இருக்கிறானே என்றும் ஆச்சரியப்படுவான்.

ஒருநாள்கூட பரசுவோடு அவள் வெளியில் போய் அவன் பார்த்ததில்லை. அவ்வளவு பெரிய மொட்டை மாடியில் காற்றாட நின்று பேசிப் பார்த்ததில்லை. சந்தோஷமாக அவனோடு சிரித்தும் பார்த்ததில்லை. ராத்திரி படுக்கிற போதாவது அவள் அவளோடு, ஏதாவது மனசைக் குளிர்விக்கிற மாதிரி பேசுவானா என்பதும் சந்தேகந்தான். அவன் மனசில் என்ன இருக்கும்! இந்த ருக்மிணிக்குள் இருக்கிற ருக்மிணி யார்? அவள் ஆசைகள் என்னவாக இருக்கும்? இதையெல்லாம் தெரிந்துகொள்ளாமல் வெறும் வீட்டு வேலைக்காக - தன் பக்கத்தில் படுத்துக் கொள்வதற்காக மட்டுமே - ஒருவன் ஒருத்தியைக் கல்யாணம் பண்ணிக்கொண்டு வருவானா? அவள் மனசைப் புரிந்துகொள்ள முயற்சி செய்தால் என்ன? இந்த மாதிரி கணவன் - சமையல், சாப்பாடு, தூக்கம் இதில் மட்டும் திருப்திப்படுகிற சாதாரணப் பெண்ணாகத் தெரியவில்லையே, இந்த ருக்மிணியைப் பார்த்தால்? பரசு, ப்ளீஸ்... அவளைக் கொஞ்சம் புரிந்துகொள்ள முயற்சி பண்ணேன்... மாட்டான். அவனிடம் அப்படி சொல்லக்கூட முடியாது. மடையா! இப்படி ஆபீஸ் - வீடு - சாப்பாடு - தூக்கம் - வீடு என்று மட்டுமே எப்படி இருக்க முடிகிறது! என்ன கயநலம்?

அவன் ஒரு ஞாயிற்றுக்கிழமை அவளையும் பரசுவையும் எங்கேயாவது வெளியில் அனுப்ப வேண்டும் என்று நினைத்தான். அவள் எப்போதாவது அகிலாவின் துணைக்காக தமிழ்ச் சினிமாவுக்குப் போய் வருவாள். அது அவளுக்குப் பிடிக்கிறதா என்பதுகூடத் தெரியாது. அகிலாவோடு போவது தன் கடமைகளில் ஒன்று என்கிற மாதிரி இருக்கும். அப்படியும் சொல்லிவிட முடியாது; கடலே என்று போகிற மாதிரியும் தெரியாது. முகம் எப்போதும் போலச் சந்தோஷமாகவும், சிரிப்பாகவும்தான் இருக்கும். ஒரு சிணுக்கங்கூடச் சிணுங்காது. அவள் முகத்திலிருந்து எதைத் தெரிந்து கொள்வதும் கஷ்டம்தான். அன்று அவளைப் பரசுவோடு வெளியில் போகச் செய்யவேண்டும் என்ற முடிவோடு அவன் எதிரில் வந்து நின்றான் விஸ்வம்.

அவள் 'என்ன' என்கிறாற்போல் நிமிர்ந்து பார்த்தாள்.

''இன்னிக்குப் பரசுவுக்கு லீவுதானே?''

அவள் 'ஆமாம்' என்று தலையாட்டினாள். கை, கொதுமை மாவைப் பிசைந்துகொண்டிருந்தது. கொஞ்சம் அழுத்தமாக இருந்திருக்க வேண்டும். ஒரு டம்ளரில் தண்ணீர் எடுத்து ஊற்றி மறுபடியும் பிசைந்தாள்.

''என்ன பண்றான் இப்போ...''

''என்னைய தேய்ச்சுண்டாரே கார்த்தாலே, அசதியா இருக்கும். தூங்கறான். ஏன் கேக்கறீங்க?''

''ம்... ஒண்ணுமில்லே. சாயந்திரம் எங்கேயாவது வெளியிலே அழைச்சுண்டு போயிட்டு வாங்களேன்...''

ருக்மிணி மாவு பிசைவதை நிறுத்திவிட்டு நிமிர்ந்து பார்த்தாள்.

''வெளியிலயா? நானா?''

''நீங்கதான். ஏன் அப்படிக் கேக்கறீங்க?''

அவள் முகம் சட்டென்று மாறியது. புன்சிரிப்பாகச் சிரித்தது.

''ஒண்ணுமில்லே. எங்க போறது...?''

''எங்கேயாவது... ஏதாவது சினிமாவுக்கு...''

''சினிமாவா...? பார்க்கிற மாதிரி என்ன சினிமா இருக்கு! அதுவுமில்லாம அவருக்குச் சினிமாள்ளா பிடிக்காது.''

''சரி, வேற எங்கேயாவது போங்களேன்... லிஃப்டின் சுருள் கெஞ்சுகிற மாதிரி ஒலித்தது. ருக்மிணி மறுபடியும் சிரித்து விட்டுப் பேசாமல் இருந்துவிட்டாள். அந்தச் சிரிப்பின் அர்த்தத்தை அவனால் புரிந்துகொள்ள முடியவில்லை. மௌனமாகத் திரும்பி விட்டான்.

பரசு எழுந்தபோது மணி ஐந்திருக்கும். ருக்மிணி பூரி பொரிக்கிற வேலையில் இருந்தாள்.

பரசு முகத்தைக் கழுவிக்கொண்டு வந்தான். பூரி செப்பிட்டான். காபியைக் குடித்தான். பின்பு கூடத்துக்கு வந்து ஏதோ ஒரு ஃபைலைப் பிரித்துக்கொண்டு சுவரில் சாய்ந்து தரையில் உட்கார்ந்தான்.

விஸ்வம் ருக்மிணியைப் பார்த்தான். உதட்டில் அதே லேசான சிரிப்பு ஒட. அவளைத் திரும்பிப் பார்த்தாள் அவள்.

7

ருக்மிணியின் கை விரல்கள் வீணையோடு அற்புதமாக இழைந்தன. இத்தனை வேகமும், அழுத்தமும், அந்த விரல்களுக்கு எப்படி வந்தன என்ற ஆச்சரியம் ஏற்பட்டது. வீணை தந்திகள் அவள் சொன்னபடியெல்லாம் கேட்கும்போல் இருந்தன. மென்மையாய், அதிர்வு இல்லாமல் இனிமையை மட்டுமே அவள் வெளிப்படுத்துகிறபோது பிரமித்துப் போனான் விஸ்வம். இந்த லாவகத்திற்கு அவள் அசுர சாதகம் பண்ணியிருக்க வேண்டும் என்று தோன்றியது. அவள் 'ஸ்வர ராக ஸுதா'வை முடித்துவிட்டு அமிர்தவர்ஷினியில் 'ஸுதாமயி'யை ஆரம்பித்தபோது அவனுக்குள் ஒரு சிலிர்ப்பு ஓடியது.

திறந்தவெளி மைதானத்தில் விடியற்காலை மூன்று மணி வரை அசையாமல் உட்கார்ந்து மாலியின் புல்லாங்குழலைக் கேட்டது நினைவுக்கு வந்தது. நண்பன் ஒருவனோடு நகரத்தின் ஒரு மூலையில் நடந்த அந்தக் கச்சேரிக்குப் போயிருந்தான். டிசம்பரின் அந்தக் குளிரோ, பனியோ ஒன்றும் தெரியவில்லை. கச்சேரி மாலை ஆறுமணிக்கு என்றுதான் போட்டிருந்தார்கள். ஆனால் வழக்கப்படி மாலி வரும்போது நேரமாகிவிட்டது. ராத்திரி மணி பத்தாகிவிட்டது. ஒன்பது மணி வாக்கில் சலசலக்க ஆரம்பித்த கூட்டம் மாலியைப் பார்த்ததும் சட்டென்று அடங்கிப்போய்விட்டது. வாசிக்க ஆரம்பித்ததும், பின்னணியாய் ஒரே நிசப்தம். மூன்று மணி வரை எல்லாரையும் கட்டிப்போட்ட மாதிரி வைத்திருந்தது. 'என்ன வாசிப்பு இது!' என்று மனசுக்குள் அரற்றிக்கொண்டே உட்கார்ந்திருந்தான் விஸ்வம். எலும்புகள் எல்லாம் உருகுகிற மாதிரி, உடம்பு ஒடுங்கிக்கொண்டே வருகிற மாதிரி உணர்ந்தான். வாசிப்பு உச்சத்தை எட்டியபோது தாங்க முடியாதவனாக 'இங்கே, இப்படியே, இப்போதே செத்துப் போய்விடக்கூடாதா?' என்றும் நினைத்துக்கொண்டான்.

பின்பு, கச்சேரி முடித்து நண்பனும் அவனும் வீடுவரை நடந்தே வந்தார்கள். நாலு மைலோ, ஐந்து மைலோ நடந்து வந்திருக்கிறார்கள். வழி முழுவதும் ஒரு பேச்சு இல்லை. நண்பனாவது இரண்டு மூன்று தரம் இருமினான். இவனிடமிருந்து அந்தச் சந்தங்கூட இல்லை. வீடு வந்ததும் வெறும் தலையை மட்டும் ஆட்டி விடை பெற்றான். இரண்டு மூன்று நாட்கள் வரை மனசு அந்த மாதிரியே கிடந்தது. பெரிசாக எதையோ இழந்த மாதிரி இருந்தது. மறுபடியும் அந்தத் திறந்தவெளி மைதானத்திற்குப் போய் அந்த மாதிரி ஒரு வாசிப்பைக் கேட்க வேண்டும் போல் இருந்தது! என்ன வாசிப்பு அது!

அதன் பின் அந்த மாதிரி லயிப்பையும், சிலிர்ப்பையும் இரண்டு மூன்று தரம் அடைந்திருக்கிறான். ரவிசங்கரின் சிதாரைக் கேட்டபோது - பார்வீன் சுல்தானாவின் ஹிந்துஸ்தானியில் கரைந்தபோது - சிட்டிபாபுவின் வீணைக் கச்சேரிக்குப் போயிருந்த போது... ஆனாலும் மாலியின் புல்லாங்குழலைக் கேட்ட போது ஏற்பட்ட மாதிரி 'செத்துப் போய்விட்டால் என்ன!' என்ற எண்ணம் வேறு எப்போதும் ஏற்பட்டதே இல்லை. அந்தக் குளிர், திறந்தவெளி, நிசப்தம், பத்து மணிவரை நம்பிக்கை இழக்காமல் காத்திருந்த கூட்டம், மனசை உருக்கின அந்த வாசிப்பு... அது ஓர் அற்புதமான அனுபவம்; மறக்கவே முடியாத அனுபவம்!

ருக்மிணி வாசிக்கிறபோதெல்லாம் அவனுக்கு மாலியின் அந்தக் கச்சேரிதான் நினைவுக்கு வரும். ஏதோ மலைமேல் ஏறுகிற மாதிரி, நீர் வீழ்ச்சியில் நனைகிற மாதிரி, பளிச்சிடும் நட்சத்திரங்களைப் பார்க்கிற மாதிரி ஒரு சந்தோஷத்தை இந்தச் சங்கீதத்தால் எப்படி ஏற்படுத்த முடிகிறது? ருக்மிணியைப் போல் எத்தனை ருக்மிணிகளின் திறமை வீட்டுக்குள்ளேயே அடங்கிப் போய் விடுகிறது? இது நாலு பேரின் காதுகளை எட்டினால்தான் என்ன? நான்கு பேரைச் சந்தோஷப்படுத்தினால் என்ன? வீட்டில் இருக்கிறவர்கள்கூட இந்த அற்புதமான வாசிப்பை ரசிக்காமல்... இது என்ன சாபம்? யார் ஏற்படுத்தின சாபம்?

ஸுதாமயியை முடித்துவிட்டுத் தலைநிமிர்ந்த ருக்மிணி கலரில் சாய்ந்து நின்ற விஸ்வத்தைப் பார்த்தாள். வழக்கமான அந்தச் சிரிப்பு சுபாவமாக ஒரு தரம் பளிச்சிட்டாலும், உடனே

முகத்தில் ஒரு சிணுக்கமும் ஏற்பட்டது. அது அந்த முகத்தின் இயல்பான தன்மை இல்லை என்பது தெரிந்தது. சில சமயம் மழை பெய்துகொண்டிருக்கும்போது பளீரென்று வெயிலும் காயுமே, அந்த மாதிரி இந்தச் சிணுக்கம் அபூர்வமானதாய் இருந்தது. வீணையை மடியிலிருந்து இறக்கிப் பெட்டிக்குள் வைத்து மூடிவிட்டு வந்தாள் அவள்.

''ஏன் நிறுத்திட்டீங்க? 'சின்னஞ்சிறு கிளியே' வாசிச்சிருக்கலாமே?'' என்றான் விஸ்வம்.

அவளிடமிருந்து பதில் இல்லை. அவனுக்கு அது வியப்பாக இருந்தது. அந்த மாதிரி அவள் இருந்ததே இல்லை. அவனுக்கு ஒன்றும் புரியவில்லை.

''ஏன் பேச மாட்டேங்கறீங்க?'' என்று மறுபடியும் கேட்டான்.

அப்போதும் அவள் பேசாமல் இருந்தாள். ஏதோ கோபம் என்பது மட்டும் புரிந்தது. அவளுக்குக் கோபங்கூட வரும் என்று தெரிந்தபோது ஆச்சரியமாக இருந்தது. அது நிஜக் கோபந்தானா என்ற சந்தேகமும் ஏற்பட்டது.

''கோபமா உங்களுக்கு?'' என்பதைக் கேட்டுவிட்டான். அவள் 'ஆமாம்' என்று தலையாட்டின வேகத்தைப் பார்த்ததும், சட்டென்று சிரிப்பு வந்தது. சிரித்துக்கொண்டே, ''என்ன கோபம்?'' என்று கேட்டான்.

ருக்மிணி சிரிக்கவில்லை. முகத்தை இன்னும் தீவிரமாய் ஆக்கிக்கொண்டு, ''சிரிக்காதீங்க!'' என்றாள்.

விஸ்வம் கையால் வாயை மூடிக்கொண்டான்.

''சரி, சிரிக்கலை. என்ன கோபம் சொல்லுங்க?''

''நான் வீணை வாசிச்சா அதை ரசிக்கணும்; சமைச்சா நன்னா இருக்குன்னு சர்டிஃபிகேட் கொடுக்கணும். ஆனால் நான் மட்டும் மீதிப் பேர்கிட்ட எது இருந்தாலும் தெரிஞ்சுக்கக் கூடாது, ரசிக்கக் கூடாது?''

''என்ன சொல்றீங்க? ப்ளீஸ், கொஞ்சம் புரியும்படியா சொல்லிடுங்களேன்.''

''சரி சொல்லிடறேன். நீங்க கதையெல்லாம் எழுதறீங்களாமே...? ஏன் இத்தனை நாளா என்கிட்ட சொல்லலை?''

விஸ்வம் நிம்மதியாக மூச்சுவிட்டான். ''இவ்வளவுதானா? இதற்கா இத்தனை கோபம்? நான் என்னவோன்னு நெனைச்சுட்டேன்.''

''இவ்வளவுதானாவா! இது என்ன சின்ன விஷயமா? எவ்வளவு பெரிய விஷயம்! இதை என்கிட்டச் சொல்லக்கூடாதா?'' அவள் முகத்தில் சிணுக்கம் விலகிக் கொஞ்சம் கொஞ்சமாக மலர்ந்துகொண்டே வந்தது.

''பெரிய விஷயமா? இதுவா? அப்பாக்கிட்டக் கேட்டுப் பாருங்க. எவ்வளவு சின்ன விஷயம்னு தெரியும். உருப்படியா ஏதாவது பண்ணேன்டாம்பார்!''

''அவர் பெரியவர்; வயசானவர். இப்படித்தான் ஏதாவது சொல்லுவார். நான்கூட அப்படித்தான்னு எப்படி முடிவு பண்ணினீங்க?''

''நான் அப்படிச் சொல்லலையே... அதுவுமில்லாமல நான் எழுதற கதையெல்லாம் நீங்க படிக்கிற பத்திரிகையிலே வராது.''

''நான் படிக்கிற பத்திரிகை எதுன்னு உங்களுக்கு எப்படித் தெரிஞ்சுது?'' ருக்மிணி சிரித்துக்கொண்டே கேட்டாள். கண்கள்கூடச் சிரிப்பில் மினுங்கின.

அந்தக் கேள்வியில் அசந்துபோனான் விஸ்வம். 'என்ன மாய்ப் பேசுகிறாள்!' என்று நினைத்துக்கொண்டான். உண்மையிலேயே அவள் எந்த மாதிரி புஸ்தகங்களைப் படிப்பாள் என்பது தெரியாது. ஆனால் அவன் அலமாரியிலிருந்து நிமர்ந்து நிமர்ந்து வ.ச.ரா., மௌனி, அசோகமித்திரன் இவர்களது புஸ்தகங்கள் எல்லாம் காணாமற் போகும். மீண்டும் இரண்டு நாளைக்குப் பின் அலமாரிக்குள் வந்து அடைப்பட்டிருக்கும். அகிலா அந்தப் புஸ்தகங்களையெல்லாம் தொடக்கூட மாட்டாள் என்பது அவனுக்குத் தெரியும். ஆனால் தன் சிநேகிதிகள் யாருக்காவது படிக்கக்கொடுப்பாள். அவர்கள் திருப்பிக்கொண்டு வந்து

கொடுக்கிறபோது, ''இந்த மாதிரி இல்லாமல் பைண்ட் பண்ணின தொடர்கதை ஏதாவது இருந்தால் கொடேன், அகிலா!'' என்று கேட்பதை விஸ்வமும் கேட்டிருக்கிறான். அதற்கு அகிலா சொல்லும் பதிலும் காதில் விழும்.

''எங்கண்ணா அதெல்லாம் படிக்க மாட்டான். மனசிலே பெரிய கொம்பன்னு எண்ணம். எல்லாம் இந்த மாதிரி புஸ்தகமாத்தான் வச்சிருப்பான்!'' என்பாள்.

தன் அலமாரியிலிருந்து புஸ்தகங்கள் காணாமற்போகிற போது அகிலாதான் யாருக்காவது எடுத்துக் கொடுத்திருப்பாள் என்று நினைத்துக்கொண்டிருந்தான் அவன். 'ஒருவேளை அதையெல்லாம் இவள் படித்திருப்பானோ?' என்று நினைக்கத் தோன்றியது இப்போது.

அவள் இரண்டு மூன்று இலக்கியப் பத்திரிகைகளின் பெயரைச் சொல்லி, ''இதிலெல்லாம் எழுதுகிறீர்களா?'' என்று கேட்டாள்.

விஸ்வம் ஆச்சரியப்பட்டவனாகத் தலையை ஆட்டினான். பின், ''அதெல்லாம் நீங்க படிக்கிறதுண்டா?'' என்று திருப்பிக் கேட்டான்.

''உம்... அங்கே இருந்தவரை அப்பா எல்லாம் வர வழைத்தார். நீங்க எழுதற விஷயமோ - அந்தப் பத்திரிகையெல்லாம் வாங்கற விஷயமோ - எனக்குத் தெரியவே தெரியாது. அதனால்தான் இத்தனை நாள் பேசாமல் இருந்தேன். இன்னிக்கு எதேச்சையா அகிலா சொல்லித்தான் தெரிஞ்சது. சொந்தப் பேர்லியா எழுதறீங்க?''

அவன் 'இல்லை' என்று தலையாட்டிவிட்டுத் தன் புனை பெயரைச் சொன்னான். அவள் அந்தப் பெயரில் தான் படித்த கதைகளை ஞாபகம் வைத்துக்கொண்டு குறிப்பிட்டாள். வேலை கிடைக்காத இளைஞன் ஒருவனை பற்றிக் கடைசியாக அவள் படித்த அந்தக் கதை மிகவும் பிடித்திருந்ததாகச் சொன்னாள். பிடித்ததற்கான காரணங்களையும் சொன்னாள். கவிதைகளில் மேகங்களைப் பற்றி எழுதின ஒரு கவிதை மட்டுமே நினைவில் இருப்பதாகச் சொன்னாள். அவற்றை எழுதினது அவன்தான் என்பது தெரிந்ததும், எல்லாவற்றையும் மீண்டும் ஒரு தரம் படிக்க வேண்டும் என்று தோன்றியது. அவள் பூட்டியிருந்த மேஜை டிராயரைத் திறந்து ஃபைல் பண்ணி வைத்திருந்ததை எடுத்துக் கொடுத்தான். வாங்கி ஒரு தரம் புரட்டிப் பார்த்தாள்.

''ஆமாம் எதற்காக இத்தப் புனைப்பெயர் எல்லாம்? போர்லையா?'' என்று கேட்டு லேசாகச் சிரித்துக்கொண்டு போனாள்.

அவள் போவதையே பார்த்துக்கொண்டு நின்றான் விஸ்வம்.

8

சாப்பிட்டு முடிந்ததும் வாசலுக்கு வந்தான் விஸ்வம். நடையின் ஓர் ஓரமாகப் படிகளில் காலைத் தொங்கப் போட்டுக்கொண்டு உட்கார்ந்து, தெருவைப் பார்க்க ஆரம்பித்தான். இரவு எட்டு மணிக்கெல்லாம் அடங்கி விடுகிற தெரு அது, வெகு சீக்கிரத்தில் நிசப்தமாகிவிடும். எல்லா வீடுகளிலும் விளக்குகள் அணைந்து இருட்டாகிவிடும். சிக்கனத்தில் ஏற்படுத்தப்படுகிற இருட்டு அது. அவன் வீட்டில் மட்டுந்தான் ராத்திரி பதினோரு மணி வரை விளக்கு எரியும். ஜன்னல் வழியாகப் பட்டையாய் வெள்ளைத் துணியைக் கிழித்துப் போட்ட மாதிரி தார்ரோட்டில் அந்த வெளிச்சம் மட்டும் தனியாக அடிக்கும். இன்று அவன் வீட்டிலும் விளக்குகள் அணைக்கப்பட்டுவிட்டன. சமையலறையில் நாற்பது வாட் மட்டும் பூனையின் கண் மாதிரி எரிந்துகொண்டிருந்தது. ருக்மிணி தரையை அலம்பி விடுகிற துடைப்பச் சத்தம் கேட்டது. இந்த வேலையை அவள் இனம் பத்து மணிக்குக் குறைந்து செய்ததே இல்லை. இன்று எட்டரைக்கெல்லாம் முடிந்துவிட்டது. வீட்டில் யாரும் இல்லை என்றால் சீக்கிரம் வேலைகள் முடிந்து விடுகின்றன. ஓர் அமைதி வந்து சூழ்ந்துகொண்டுவிடுகிறது. வீடே புதுசாகத் தெரிகிறது. யாரும் இல்லாத மாதிரி வெறிச்சென்று இருக்கின்றது.

இத்தனைக்கும் அவன், ராம்ஜி, ருக்மிணி மூன்று பேர்கள் இருக்கிறார்கள். அப்பாவும், அகிலாவும், பரகவுத்தான் இல்லை. பரசு ஆபீஸ் விஷயமாய் தெல்லூர் வரை போயிருந்தான். ஏதோ பணம் வசூல் பண்ணிக்கொண்டு வர வேண்டுமாம். மொத்தப் பணமும் கைக்கு வந்த பின்னால் தான் திரும்பவும் முடியும் என்று சொல்லிவிட்டுப் போயிருந்தான். அதனால் அவன் என்று வருவான் என்பது தெரியாது. அப்பாவும் அகிலாவும் நாளைக்கு வந்துவிடுவார்கள். மாயவரத்தில் உறவுக்காரர்கள் கல்யாணத்திற்குப் போய் இருந்தார்கள். அப்பா இல்லாத தைரியத்தில் ராம்ஜி நைட் ஷோவிற்குப் போய்விட்டான். திடீரென்று மூன்று பேர் குறைந்ததில் வீடு ஒரே நிசப்தமாகிவிட்டது.

அந்த நிசப்தமும் விஸ்வத்திற்குப் பிடித்துத்தான் இருந்தது. மனசு ரொம்பவும் சந்தோஷமாக இருந்தது. சில நாட்களில் இந்த மாதிரி ஒரு சந்தோஷம் குதித்துக்கொண்டு வருகிற வழக்கந்தான். எதனால் இந்த சந்தோஷம் என்று அவன் யோசித்துப் பார்த்திருக்கிறான். காரணம் எதுவும் தெரிந்ததில்லை. திடீரென்று அலையடிக்கிற மாதிரி வரும். அதில் அவன் மிதந்துகொண்டே கிடப்பான். முணுமுணுப்பாகப் பாட்டுப் பாடுவான். கவிதை எழுதுவான். இல்லாவிட்டால் மாடியில் போய் நின்றுகொண்டு வானத்தைப் பார்ப்பான். பரிச்சயமான சில நட்சத்திரங்களைத் தேடுவான். தனியாய், பிரகாசமாய் நிற்கிற தன் ஒற்றை நட்சத்திரத்தைப் பார்த்துக்கொண்டே உட்கார்ந்திருப்பான். அப்போது வானத்தைக் கிழிக்கிற மாதிரி சரேலென்று ஒரு நட்சத்திரம் விழும். அவன் பார்க்கிற போதெல்லாம் ஏதாவது ஒரு நட்சத்திரம் விழுந்துகொண்டுதான் இருக்கிறது. உடனே அவன் மனசில் சோகமாக ஒரு நினைவு தோன்றும். நட்சத்திரம் விழுவதில் பெரிசாக எதையோ இழக்கிற வருத்தம் வரும். சட்டென்று தன் ஒற்றை நட்சத்திரம் இருக்கிறதா என்று அண்ணாந்து பார்ப்பான். அந்தப் பாதுகாப்பை நினைத்தால் சிரிப்பு வரும். சிரித்துக்கொள்வான். அப்போதும் அந்த ஒற்றை நட்சத்திரம் தெரிகிறதா என்று நிமிர்ந்து பார்த்தான். தலைக்கு மேல் கண்ணில் அடிக்கிற மாதிரி பளிச்சிட்டது. அதை ஒரு நிமிஷம் பார்த்துக்கொண்டே இருந்தான்.

பக்கத்தில் தொப்பென்று ஏதோ விழுகிற சத்தம் கேட்டது. திடுக்கிட்ட மாதிரி திரும்பிப் பார்த்தான். எதிர்வீட்டுப் பாட்டி வெளியில் வந்து எச்சில் இலையை எறிந்துவிட்டுத் திரும்பிப் போய்க்கொண்டிருந்தாள். எதிர்ப்பக்கத்திலிருந்து இந்தப் பக்கம் வந்து அவன் வீட்டு வாசலுக்கு நேராக இலையைப் போட்டிருந்தாள். இன்னும் இரண்டடி தள்ளிப் போனால் குப்பைத் தொட்டி ஒன்று இருந்தது. அதன் பக்கத்தில் படுத்துக்கொண்டிருந்த நாய் ஒன்று லிருட்டென்று எழுந்து தொண்டியபடி ஓடி வந்தது. காலால் அழுந்தி வாயில் கவ்வி இலையைப் பிரித்தது. உள்ளே ஒன்றும் இல்லை! யாரோ நுனைத்த மாதிரி காப்பிட்டிருந்தார்கள். ஆவாலும், அது இலையை இரண்டு தரம் நக்கியது. பின், நாக்கைத் தொங்கப் போட்டுக்கொண்டு அதே தொண்டையுடன் நேராக ஓடிப்போயிற்று.

அது போவதையே பார்த்தான் விஸ்வம். தெருக்கோடியில் ஐஸ்க்ரீம்காரன் வருவது கண்ணில் பட்டது. மணி அடித்துக்கொண்டே தள் பெட்ரோமாக்ஸ் விளக்கெரிய வண்டியைத் தள்ளிக்கொண்டு வந்தான். சின்னப் புள்ளியாகத் தெரிந்த அதன் வெளிச்சம், வரவரப் பிரகாசமாகித் தெருவை நிறைத்தது. மீண்டும் சிரித்துக்கொண்டே போய்ச் சின்னப் புள்ளியாகித் திருப்பத்தில் மறைந்தது. நிமிஷ நேரத்திற்கு, தெருவிற்குப் பாலாபிஷேகம் பண்ணின மாதிரி பிரகாசமாக்கி விட்டுப் போன ஐஸ்க்ரீம்காரனை நினைத்துக்கொண்டான். அவன் தன்னை மிகவும் சந்தோஷப்படுத்திவிட்டுப் போயிருப்பதை உணர்ந்தான். ஒரு நிமிஷத்தில் பளிரிட்ட அந்த பெட்ரோமாக்ஸ் வெளிச்சம் அவன் மனதையும் நிறைத்துவிட்டுப் போயிருந்தது.

கட்டை விரலால் தரையில் ஏதேதோ வரைந்தான். பின், திடீரென்று பாட்டுப்பாட வேண்டுமென்று தோன்றியது. மனசுக்குப் பிடித்ததை எல்லாம் வரிசையாகப் பாட வேண்டும் என்று நினைத்துக்கொண்டான். நிலவும் குளிக்கும்போதும், தலைவாரிக்கொள்கிறபோதும் முணுமுணுக்கிற ஒரு சினிமாப் பாட்டு வாயில் வந்தது. அந்தப் படத்தை அவன் பார்க்கவில்லை. அது அவனுக்கு வசதியாக இருந்தது. இனிமையான சில

பாடல்களை ரேடியோவில் கேட்டுப் பின் படத்தில் பார்க்கிறபோது அபிப்பிராயமே மாறிப்போகும். மனசில் உருவாகி இருந்த கற்பனைகள் எல்லாம் கலைந்துபோகும். அப்படி இல்லாமல் அந்தப் படத்தை அவன் பார்க்காததால் அந்தப் பாட்டுக்கு ஏற்ற ஒரு காட்சியை அவனுக்குப் பிடித்தமான வகையில் உருவாக்கிக் கொண்டிருந்தான். அந்தப் பாடலைப் பாடுகிற போதெல்லாம் அதே காட்சி மனசில் விரியும். இப்பொழுது அந்தக் காட்சி மனசில் தோன்ற, பக்கத்தில் யாராவது இருந்தால் நன்றாகக் கேட்கிற குரலில், மெதுவாகப் பாட ஆரம்பித்தான்.

''நான் உன்னை அழைக்கவில்லை! என் உயிரை அழைக்கிறேன். கண்ணை மறைத்துக்கொண்டால் - மனதில் எண்ணம் மறைவதில்லை!''

பாடிக்கொண்டிருந்தபோது வளையல் சத்தம் கேட்கிற மாதிரி தோன்றவே, சட்டென்று நிறுத்திவிட்டுத் திரும்பிப் பார்த்தான். ஈரக் கைகளைப் புடவைத் தலைப்பில் துடைத்துக்கொண்டே புன்சிரிப்புடன் ருக்மிணி நின்றிருந்தாள்.

''என்ன இன்னிக்குப் பாட்டெல்லாம் பலமா இருக்கு?'' என்று கேட்டாள்.

அவன் ஒரு நிமிஷம் தயங்கின மாதிரி இருந்துவிட்டுப் பின் பதில் சொன்னான்.

''இன்னிக்கு ரொம்ப சந்தோஷமா இருக்கு.''

''அப்படியா? என்ன காரணம்னு நானும் தெரிஞ்சுக்கலாமா?''

ருக்மிணி கொஞ்சம் தள்ளி, கம்பிக் கதவில் சாய்ந்து உட்கார்ந்துகொண்டாள். அவளுக்கு நேராக இருந்த தெருவிளக்கின் பிரதிபலிப்பு லேசாக அவள் முகத்தில் விழுந்தது. மூக்குத்தி பளிச்சிட்டது.

விஸ்வத்திடமிருந்து பதில் இல்லை. அவள் முகத்தையே பார்த்துக்கொண்டிருந்தான்.

''என்ன, பதிலே வரலை? பாடின பாட்டுக்கும் உங்களுக்கும் எதுனா சம்பந்தம் இருந்தா, என்கிட்ட சொல்லலாம்னா சொல்லுங்களேன்...''

அவனுக்கு உடனே ஜமுனாவின் ஞாபகம் வந்தது. அவள் ஞாபகம் ஏன் வரவேண்டும் என்று கேட்டுக்கொண்டான். 'அவளை நினைத்தா இந்தப் பாட்டைப் பாடினோம்? இல்லையே! பின், ருக்மிணி கேட்டதும் அவள் நினைவு ஏன் வந்தது? Am I in love with Jamuna!' அப்படியே இருந்தாலும் இந்த மாதிரியெல்லாம் உருகுமுடியுமா தன்னால்...?'

''என்ன யோசனை? பர்சனல்லு நினைச்சால் சொல்ல வேணாம்.''

விஸ்வம் நிமிர்ந்து அவளைப் பார்த்து லேசாக சிரித்தான்.

''அப்படி ஒண்ணும் இல்லை. எனக்கு ஜமுனான்னு ஒரு ஃப்ரெண்டு. என் கதைகளைப் படிச்சுக் கடிதம் எழுதற ரசிகையாயிருந்து இப்ப ஃப்ரெண்டா மாறினவ. நீங்க கேட்டதும் எனக்கு அவ ஞாபம் வந்தது...!''

''அப்படின்னா இப்ப பாடிண்டிருந்த பாட்டுக்கும் அந்த ஜமுனாவுக்கும் ஏதாவது சம்பந்தமிருக்கா?''

''தெரியலை...''

''தெரியலைன்னா?''

''தெரியலைதான். சில சமயத்திலே அவளோடு கூட இருக்கிறது சந்தோஷமா இருக்கு. நிறையச் சமயங்கள்லே அவ பேசறதைக் கேட்டா எரிச்சல் வர்றது!''

''அப்படி என்ன பேசறா?''

''அபத்தமா பேசறா?''

ருக்மிணி அதைக் கேட்டுப் புன்சிரிப்பாகச் சிரித்தாள். அந்த சிரிப்பு அவனைக் கோபப்படுத்தியது.

''எதுக்குச் சிரிக்கறீங்க?'' என்று கேட்டான்.

''நான் சிரிக்கக் கூடாதா?''

''தாராளமாகச் சிரிக்கலாம்; யாரு கூடாதுன்னு சொன்னது? நீங்க என்னைப் புரிஞ்சுப்பீங்கன்னு நினைச்சுத்தான் சொன்னேன். இப்படிச் சிரிப்பீங்கன்னு நினைக்கலை.'' — அவன் குரல் தணிந்து போயிற்று.

அதைக் கேட்டதும் ருக்மிணியின் சிரிப்பு நின்றது. ஒரு சாந்தமான பார்வையில் அவனைப் பார்த்தாள்.

''நான் சிரிச்சது உங்க மனசைக் கஷ்டப்படுத்தி இருந்தா ரொம்ப ஸாரி! ஆனா நான் புரிஞ்சுக்கலைன்னு சொன்னீங்களே, அது தப்பு. புரிஞ்சுண்டதால்தான் சிரிப்பு வந்தது!''

''இல்லை. உங்களுக்குப் புரியலை. புரிஞ்சிருந்தா சிரிச்சிருக்க மாட்டீங்க. அவளோடு பழகினால்தான் நான் சொல்றது புரியும். ஒரு தரம் பேசினாலே உங்களால புரிஞ்சுக்க முடியும். அவளால் என் கதைகளை எப்படி ரசிக்க முடியாதுன்னு தெரியலை. இப்போதெல்லாம் எப்பவும் கல்யாணத்தைப் பத்தியே பேசறா. எனக்கு என்ன பதில் சொல்றதுன்னு தெரியலை! என்னால அவகூட சந்தோஷமா இருக்க முடியாதுன்னு தோண்றது. அப்படி இருக்கணும்னா நிறைய 'காம்ப்ரமைஸ்' பண்ணிக்கணும். என்னால எதோடயும் காம்ப்ரமைஸ் பண்ணிக்க முடியாது. அதனாலதான் வேலைக்குப் போகக்கூடப் பிடிக்கலை. மனசுக்குப் பிடிச்ச மாதிரி இருந்துடணும்னு தோணறது. அப்பா வற்புறுத்தறதால அப்ளிகேஷன் போடறேன். இதுவும் ஓர் அநுபவம்னு இன்டர்வ்யூவுக்குப் போறேன். நானா எதற்கும் ட்ரை பண்ணலை. இன்ஃபாக்ட், வேலை கிடைக்காததே நிம்மதியாக இருக்கு. நிறையப் படிக்க முடியறது. யோசிக்கிறதுக்கு டைம் கிடைக்கிறது. நன்றாக எழுத முடியறது. இதை விட்டு எதிலேயும் என்னால அடைபட முடியாது. எனக்கும் அப்பாவுக்கும் இதனால் தான் மனசு கஷ்டம் ஏற்படறது. நான் நானாகத்தான் இருப்பேனே தவிர, எதற்காகவும் என்னை மாத்திக்க முடியாது. அதனால்தான் ஜமுனாவைப் பத்தி தெரிஞ்சதும் என்னால ஒரு முடிவுக்கு வர முடியலை. வெறும் அழகு மட்டும் இருந்தாப் போதுமா? புத்திசாலியாக இருக்க வேணாமா?'' — அதிகம் பேசிவிட்டதை உணர்ந்த மாதிரி சட்டென்று நிறுத்திக்கொண்டான்.

அவன் பேசின வேகத்தைப் பார்த்துப் பிரமித்துப் போனாள் ருக்மிணி. நாலைந்து விநாடிகள் ஒன்றும் கேட்கத் தோன்ற வில்லை; அலை அலையாக ஏதேதோ நினைவு வந்துவிட்டுப் போயிற்று. அவன் சொன்ன ஜமுனாவை நினைத்துப் பார்த்தாள். ஏதோ ஓர் உருவம் தோன்றி மறைகிறாற்போல் இருந்தது. பின் அவனைப் பார்த்தாள். பரிதாபமாக இருந்தது. எது எதையோ இழுத்துப் போட்டுக்கொண்டு பாறாங்கல்லைக் கட்டிக் காலில் தொங்கவிட்ட மாதிரி இது என்ன அவஸ்தை?

''நீங்க சொல்லறதெல்லாம் சரின்னே வச்சுக்கலாம். புத்திசாலித்தனந்தான் முக்கியங்கறதை நானும் ஒத்துக்கறேன். ஒருத்தி நல்ல புத்திசாலியா இருந்து, பார்க்க லட்சணமா இல்லாம சாதாரணமாக இருந்தால்...?'' என்று கேட்டுவிட்டு அவன் சொல்லப் போகிற பதிலுக்காகக் காத்துக்கொண்டிருந்தாள்.

விஸ்வம் அவள் முகத்தையே பார்த்தபடி யோசித்தான். அவள் தன்னைக் கேலி செய்கிறாளோ என்றுகூட நினைத்தான். மனம் மெல்லச் சிணுக்கம் கண்டது. ஒரு கோபங்கூட எட்டிப் பார்த்தது. ஆனாலும் நிதானமாகவே பதில் சொன்னான்.

''அதுவும் கஷ்டந்தான். இரண்டுந்தான் இருக்கணும்.'' ருக்மிணி அதைக் கேட்டுப் புன்னகை செய்தாள்.

''அப்படி எல்லாம் ஒண்ணாச் சேர்ந்து யார் இருப்பார்?''

''ஏன், நீங்க இல்லையா?'' என்ற பதில் அவளையும் மீறிக்கொண்டு வந்துவிட்டது.

ருக்மிணி கண் அகல அவனைப் பார்த்தாள். எதுவும் பேசவில்லை. பேசத் தோன்றவில்லை. அவனும் மௌனமாக இருந்தான். தெருவின் நிசப்தம் திடீரென்று அதிகமாவது போல் தெரிந்தது. எந்த ஓசையும் இல்லை. காற்றுக்கூட அவர்களைத் தாண்டிக்கொண்டு போகவில்லை.

நாலைந்து விநாடிகள் கழித்துத் தூரத்தில் மெல்லமாகச் சலங்கைச் சப்தம் கேட்டது. விஸ்வமும் ருக்மிணியும் ஒன்றாகத் திரும்பிப் பார்த்தார்கள். சின்னதாக மெழுகுவர்த்தியை ஏற்றின மாதிரி தெருக்கோடியில் ஒரு வெளிச்சம் மட்டும் அசைந்து வந்தது. கூடவே, அந்தச் சலங்கை சப்தமும் வந்தது.

9

வரிசையாக ஐந்தாறு கட்டை வண்டிகள் வந்துகொண்டிருந்தன. அந்த நிசப்தத்தில் மாட்டு மணிகளின் சப்தம் இனிமையாகக் கேட்டது. வண்டிகளுக்கு அடியில் தொங்க விடப்பட்டிருந்த லாந்தரின் சின்ன வெளிச்சம் நிதானமாக அசைந்தது. ரோடின் மணலைப் பொடி பண்ணிக் கொண்டு வருகிற சக்கரங்களின் ஓசை ஒரு நல்ல 'ரிதம்' மில் தொடர்ந்தது. ஒவ்வொரு வண்டியிலும் வண்டி ஓட்டுபவனும், உடன் இருந்த இன்னொரு ஆளும் தூங்கி வழிந்தார்கள். பழக்கப்பட்ட பாதை ஆனதால் மாடுகள் தாமாகவே நடந்து கொண்டிருந்தன. திவமும் இந்த வண்டிகளைத் தவறாமல் பார்ப்பான் விஸ்வம். அவை எதை ஏற்றிக்கொண்டு எங்கே போய்விட்டுத் திரும்புகின்றன என்பது தெரியாது. இரவில் பதினொரு மணிவாக்கில் அவை அந்தத் தெருவைக் கடந்து போகும். அவற்றைப் பார்ப்பதற்கென்றே சில நாட்கள் தூங்காமல் விழித்துக் கொண்டிருப்பதும் உண்டு. அந்த இருட்டில் மெல்ல அசைகிற லாந்தர் வெளிச்சமும், மாடுகளின் கழுத்து மணி ஓசையும், சக்கரங்களின் சப்தமும் நிஜமென்று இருக்கிற சூழ்நிலையை மாற்றிவிடுகிற மாதிரி தோன்றும். சட்டென்று எதிர்க்கட்டடங்கள் அவன் கண்களிலிருந்து மறையும். தார் ரோடும் மறைந்து போகும். எலெக்ட்ரிக் விளக்குகள் மறையும். கிராமத்தில் வண்டிப் பாதையும், இரண்டு பக்கங்களின் விதம் விதமான பச்சையில் வயல் வெளியும் குடியானவர்களின் சில குடிசைகளும் தெரியும். சில்வண்டு இரையும். தவளைகளின் கத்தல் கேட்கும். மின்மினிப் பூச்சி பறக்கும். நிசப்தத்தைக் கிழித்துக் கொண்டு ஓர் ஆந்தை அலறும். நகரத்தின் எந்தப் பாதிப்பும் இல்லாத ஓர் அசல் கிராமத்தின் சூழ்நிலைக்கு மாறிப் போவான் அவன். அந்த வண்டிகள் வரிசையாக முடிவே இல்லாமல் போய்க் கொண்டிராதா என்ற ஏக்கம் தோன்றும். நாலு கட்டை வண்டிகள் என்பதாய் இந்த மாதிரி ஒரு கற்பனையைக் கொடுக்கின்றன என்று அதிசயித்துப் போவான்!

அப்போதும் அதே அதிசயத்தோடுதான் பார்த்துக் கொண்டிருந்தான். இடையில் ஒரு தரம் ருக்மிணியையும் திரும்பிப் பார்த்தான். கண்கள் ஜொலிக்க முகத்தில் ஒரு சந்தோஷம் படர - சப்பணமிட்டு உட்கார்ந்திருந்தாள் அவள். குழந்தை கிறுக்கிற மாதிரி உதட்டில் ஒரு புன்னகை தவழ்ந்து கொண்டிருந்தது. அந்த முகத்தின் பரவசம் விஸ்வத்தை மேலும் பரவசப்படுத்தியது. இதை ரசிக்க நம்மோடு இன்னும் ஒருத்தி என்ற ஆதங்கம் ஏற்பட்டது. கடைசி வண்டி பார்வையை விட்டு மறைகிறவரை ருக்மிணி அந்த மாதிரியே இருந்தாள். ஒரு விநாடி நேரத்திற்குப் பின் மெதுவான குரலில் நிதானமாகப் பேச ஆரம்பித்தான், வார்த்தைகளிலும் அதே பரவசம் குடித்துக் கொண்டு வந்தது.

''இந்த வண்டிகளைப் பத்தி உங்க கதையில படிச்சதிலேருந்து இதைப் பார்க்கணும்னு நினைச்சுண்டேயிருந்தேன். இன்னிக்குந்தான் முடிஞ்சுது. இப்படி லாந்தர் விளக்கு அசைய வரிசையாப் போறது எத்தனை அழகாயிருக்கு?''

கொஞ்ச நேரத்துக்கு முன் அவன் பேசினதைக் கேட்டுத் நிலைகுத்திப் போன மாதிரி மௌனமாக உட்கார்ந்திருந்த அதே ருக்மிணியா இவள்? எப்படி இவ்வாறு மாறிப் போகிறான்! எல்லாவற்றுக்கும் எல்லாரை கலபமாகத் தன்னைப் பொருத்திக் கொள்கிறாள்! மனதில் ஏற்பட்ட வியப்பை மறைத்துக் கொண்டு பதில் சொல்லாமல் உட்கார்ந்திருந்தான் விஸ்வம்.

''உங்க கதையில இது நன்னா வந்திருக்கு. நேரிலே பார்க்கறப்பவே அப்படியே இருக்கு. அந்த மாதிரி எப்படி எழுத முடிஞ்சுது?''

அவன் ஒன்றும் பதில் சொல்லாமல் சிரித்தான். அவளது பரவசத்தையும் அதைப் பேச்சில் வெளிப்படுத்தின விதத்தையும் மௌனமாகப் பார்த்துக் கொண்டிருந்தான். ருக்மிணி அவனது பதிலை எதிர்பார்க்காமல் பேசிக் கொண்டு போனாள்.

''அந்த வண்டி போற வரைக்கும் ஏதோ கிராமத்திலே இருக்க மாதிரி இல்லே? எனக்கு எங்க ஊர் ஞாபகம் வந்தது.''

அதைக் கேட்டதும் விஸ்வத்துக்குத் தூக்கி வாரிப் போட்டது- 'என்ன இது?' என்று முணுமுணுத்துக் கொண்டான். பார்வை அவளை நோக்கி வியப்பில் விரிந்தது.

''என்ன பார்க்கிறீங்க?''

''இல்லை. இந்த மாதிரியே எனக்கும் தோணும். சன்னா இந்த அட்மாஸ்ஃபியரே மாறிப் போல மாதிரி இருக்கும். கிராமத்து வயல்கள் வரும். குடிசைகள் வரும். முனுக் முனுக்குனு கை விளக்குள் எரியும். சில் வண்டுகள் இரையும். இந்த வண்டிகள் இரண்டு பக்கமும் வயல் விரிந்த ஒரு பாட்டையில் தன்பாட்டுக்குப் போய்க் கொண்டிருக்கும்; அதே மாதிரி உங்களுக்கும் எப்படித் தோணித்துன்னு ஆச்சரியமா இருக்கு?''

அதற்கு ருக்மிணி பதில் சொல்லவில்லை. புன்னகை படரப் பேசாமல் இருந்தாள். விஸ்வம் கை விரல்களை ஒவ்வொன்றாகச் சொடுக்கினான். சிட்டிகை போடுகிற மாதிரி இரண்டு மூன்று விரல்கள் சொடுக்கில. அவன் நிறுத்தினதும் ஏதோ யோசனையில் இருந்த ருக்மிணி திடீரென்று நினைத்துக் கொண்டவளாகக் கேட்டாள்.

''நீங்க ஏதோ பத்திரிகை ஆரம்பிக்கப் போறதா சொன்னீங்களே, என்ன ஆச்சு?''

''ஆரம்பிக்கிறதா முடிவு பண்ணியாச்சு. எல்லாம் ஓர்க் அவுட் பண்ணிட்டோம். கொஞ்சம் பணம் தேவைப்படறது. எங்க க்ருப்பிலே வேலையில் இருக்கிறவங்களைத் தான் அதுக்கு நம்பி இருக்கோம். இன்னும் நாலு நாளைக்குள்ளே எல்லாரும் தரேன்னு சொல்லியிருக்காங்க. பணம் கிடைச்சதும் வேலையை ஆரம்பிக்க வேண்டியது தான்.''

'மாசப் பத்திரிகையா, இல்லே வாரப் பத்திரிகையா, அது?''

''இரண்டும் இல்லே. மாசம், வாரம்னு டைம் எதுவும் ஃபிக்ஸ் பண்ணப் போறதில்லே. எங்க செளகரியப்படி பத்திரிகை வரும். இந்த ரெகுலாரிட்டியை உடைக்கணும்னுதான் இப்படி ஓர் ஏற்பாடு பண்ணியிருக்கோம். இது ஒண்ணும் கமர்ஷியல் மாகசின் இல்லையே...? இலக்கியப் பத்திரிகைதானே?''

''பேர் வச்சாச்சா?'' என்று கேட்டாள் ருக்மிணி.

''ஓ எஸ்!'' என்று தலையாட்டினான். விஸ்வம். பின்பு பத்திரிகையின் பெயரைச் சொன்னான். அதை ஒருதரம் உச்சரித்துப்

பார்த்தாள் ருக்மிணி. அந்தப் பெயர் தனக்கு மிகவும் பிடித்திருப்பதாகச் சொன்னாள். புதிதாக இருப்பதாகவும் சொன்னாள்.

''ஆமாம். அதிலே என்னென்ன மேட்டர் எல்லாம் வரப்போறது?'' என்று மேலும் ஆர்வமாகக் கேட்டதும், விஸ்வம் இன்னும் உற்சாகமானான்.

''ஒவ்வொரு இஷ்யூவிலேயும் இரண்டு சிறுகதைகள் வரும். முடிந்தால் இரண்டு கட்டுரைகள் வெளியிடுவதாக உத்தேசம். கவிதைகளுக்காக நான்கு பக்கங்கள். எங்களுக்குப் பிடிச்சது; அதாவது எங்களைப் பாதிச்ச விஷயம் அல்லது பாதிக்கத் தவறின விஷயம். இவற்றைப் பற்றி எழுத ரெண்டு பக்கம். இதை ஒவ்வொரு தரமும் ஒவ்வொருத்தரா எழுதறதுன்னு வச்சுண்டு இருக்கோம். சினிமா ரிவ்யூகூடப் பண்ணப் போறோம். ஒரு படம் எப்படி இருக்கணுங்கிறதை விட எப்படியெல்லாம் இருக்கக் கூடாதுங்கிறதை முதல்ல சொல்லப் போறோம்.''

''இத்தனை சொல்றீங்களே, கிட்டத்தட்ட எத்தனை பக்கத்துக்கு வரும்?''

''உம்... கிட்டத்தட்ட இருபத்தஞ்சு, முப்பது பக்கத்துக்கு வரலாம்.''

''சைஸ் எல்லாம் தீர்மானிச்சாச்சா?''

''ஓ எஸ். கல்கியைவிடக் கொஞ்சம் சின்ன சைஸ். ஆனந்த விகடன், குமுதத்தைவிடக் கொஞ்சம் பெரிசு. முதல் இஷ்யூ மேட்டர் எல்லாம் ரெடியா இருக்கு. அநேகமா அடுத்த மாசம் முதல் வாரத்திலே வந்துடும்'' - என்றவன், ''இதுல உங்களுக்குக் கூட ஒரு வேலை இருக்கு!'' என்றான்.

''என்ன?'' என்று சந்தோஷமாகக் கேட்டாள் ருக்மிணி.

''அத்தனை காப்பியையும் கொண்டு வந்து கொடுத்துடறேன். அட்ரஸ் லிஸ்டும், ஸ்டாம்பும் தந்துடறேன். எல்லாத்தையும் போஸ்ட் பண்றது உங்க பொறுப்பு.''

''அவ்வளவுதானே? தாராளமாக செய்யறேனே! ராமர் காரியத்துக்கு அணில் செஞ்ச உதவி மாதிரி இருக்கட்டுமே...?'' என்றாள் சிரித்துக் கொண்டே; விஸ்வமும் சிரித்தான்.

அதன் பின் சிறிது நேரத்திற்குப் பேச்சு எதுவும் இல்லை. எங்கோ கூர்க்கா தட்டிக் கொண்டு போவது கேட்டது. சர்ச் மணி அடிப்பது கேட்டது. தொடர்ந்து யார் வீட்டுக் கடிகாரமோ அடிக்க ஆரம்பித்தது. விஸ்வம் எண்ணிக் கொண்டே வந்தான். பன்னிரண்டு. ''மணி பன்னிரண்டாகி விட்டதா?'' என்று சொல்லிக் கொண்டான். பின் போர்ஷனில் குழந்தை அழ ஆரம்பித்தது. சிணுங்கலாகத் தொடங்கி ஐந்து நிமிஷத்துக்கு நிறுத்தாமல் வீரிட்டுப் பின் அடங்கியது. அதற்குள் அதன் வாயில் பால் பாட்டில் வைக்கப்பட்டிருக்க வேண்டும். தினமும் அந்தக் குழந்தை அந்த நேரத்திற்கு அழுகிற வழக்கந்தான். முன்பெல்லாம் படிக்கிற போது அது அழுகிற சத்தம் கேட்டு மணி பன்னிரண்டு என்று புஸ்தகத்தை மூடிவைத்து விட்டுப் படுத்துக் கொள்வான். அவ்வளவு சரியாக அழும் அது! அது எழுந்திருப்பதற்கு முன் பாலைக் கரைத்து வைத்துக் கொண்டால்தான் என்ன என்று நினைத்துக் கொண்டான் விஸ்வம்.

10

முன்பு தெரிந்த நட்சத்திரங்கள் எல்லாம் கொஞ்சம் தள்ளிப் போய்த் தலைக்கு மேல் வேறு சில நட்சத்திரங்கள் முளைத்திருந்தன. அவற்றை அண்ணாந்து பார்த்துக் கொண்டிருந்தான் விஸ்வம். அவனுடைய ஒற்றை நட்சத்திரம் கண்ணில்பட வில்லை. அதற்குப் பதில் காற்றாடி பறக்கிற மாதிரி, ஆங்கில 'வி' எழுத்து மாதிரி, சிலுவை மாதிரி . குவியலாகக் கொட்டின மாதிரி ஏதேதோ இருந்தன. வெள்ளை வெளேரென்று மேகக் கூட்டம் நகர்ந்து அவற்றை மறைத்து விட்டு மீண்டும் விலகிக் கொண்டிருந்தது. சின்னப் பிறை மாதிரி ஓர் அறை வட்டக் கீறலாக நிலவு ஒட்டிக் கொண்டிருந்தது. லேசாகக் காற்று வீசியது. எதிர் வேப்ப மரம் அசைவது தெரிந்தது. அதிலிருந்து பறவை ஒன்று நேரம் தவறி ஒரு தரம் அலறி விட்டுப் பின் ஓய்ந்தது.

ருக்மிணி கொட்டாவி விடுவது கண்ணில்பட்டது.

''ரொம்ப நேரமாயிடுத்தே. நீங்க வேணும்னா போய்ப் படுத்துக்கங்களேன்? காலைலேயும் சீக்கிரம் எழுந்துட வேணுமே...?'' என்றான் விஸ்வம்.

''இல்லே, எனக்குத் தூக்கம் வரலே. இப்படியே பார்த்துண்டு இந்த நிசப்தத்தைக் கேட்டுண்டு உட்கார்ந்துண்டே இருக்கலாம் போல இருக்கு...!''

''நான் கூடச் சில நாள் இப்படித்தான். இந்த அமைதியைப் பார்த்தா தூங்க மனசு வராது. 'என்னோட வந்து இப்படிக் கொஞ்சம் உட்காரேன்...' என்று அது கூப்பிடுகிற மாதிரி இருக்கும். பேசாமல் உட்கார்ந்து கொண்டே இருப்பேன். அப்பா எழுந்து வந்து திட்டுவார்: 'ராத்திரி முழுக்க இப்படியே உட்கார்ந்திண்டு இருக்கப் போறியா? எழுந்து உள்ளே வாடா. இந்த மாதிரி கண் முழிச்சா உடம்புக்கு ஆகாது' என்பார். நான் வரலைன்னா அவர் தூங்க மாட்டார். அவருக்காக மனசே வராமல் எழுந்துபோய்ப் படுத்துப்பேன்.''

ருக்மிணி மௌனமாக அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். விஸ்வம் தன் அப்பாவை நினைத்துப் பார்த்தான். அவர் தன்னைக் கட்டுப்படுத்துகிற விதங்களை நினைத்தான். கடுமையாக ஒன்றும் சொல்லாமலே கட்டுப்படுத்தி விடுவார் அவர். நேரம் கழித்து வருகிற ராத்திரிகளில் மட்டுந்தான் அவருக்குக் கோபம் வரும். அப்போதுங்கூட இந்தக் கோபம் பேச்சில் வராது. மெதுவாக எலி பிறாண்டுகிற மாதிரி நகத்தால் கம்பிக் கதவைத் தட்டுவான் அவன். அவர் விழித்துக் கொண்டு விடுவார். ஒருவேளை விழித்துக் கொண்டேதான் படுத்திருந்தாரோ என்று தோன்றும். உடனே அம்மாவை நினைத்துக் கொள்வான். அப்பாவைப் பார்த்தால் பரிதாபமாக இருக்கும்.

துண்டை உதறித் தோளில் போட்டுக் கொண்டு ''என்னப்பா சர்வேச்வரா!'' என்று சொல்லிக் கொண்டு கதவைத் திறப்பார். கதவு கொஞ்சம் கிரீச்சிடும்.

''எங்கடா இத்தனை நாழி கத்தினே?'' என்று கேட்பார்.

''எங்கேயும் இல்லேப்பா. இங்கேதான். 'பார்க்'குக்குப் பக்கத்துலே சுவர் மேலே உட்கார்ந்துண்டு பேசிண்டிருந்தேன்...''

''இத்தனை நாழி வரைக்குமா...! என்னடா எப்பப் பார்த்தாலும் வெட்டிப் பேச்சு! உருப்படியாகத்தான் ஒண்ணும்

இல்லேயே? நேரத்துக்கு வந்து சாப்பிட்டுட்டுப் போகக் கூடாதா? உனக்காக அவ தூக்கத்தை விட்டுட்டு எழுந்து வந்து சாதம் போடணுமாக்கும்?''

''இல்லேப்பா. நானே சாப்பிட்டுக்கறேன்!'' என்பான்.

ஆனால் ருக்மிணி விடமாட்டாள். நடையின் கதவு திறக்கிற சத்தத்திலே விழித்துக் கொண்டு விடுவாள் போல் இருக்கிறது. இல்லாவிட்டால் விழித்தபடி படுத்திக்க வேண்டும். அவள் வருவதைப் பார்த்தால் தூங்கி எழுந்து வருகிற மாதிரி தெரியாது. தலைக் கலையோ புடவைக் கசங்களோ இராது. ராத்திரி எல்லா வேலைகளையும் முடித்து விட்டு ஒரு தரம் முகம், கை, கால் கழுவித் தலையை லேசாக வாரி அவள் பொட்டு வைத்துக் கொள்வதைப் பார்த்திருக்கிறான் விஸ்வம். அப்போது தான் ஒரு நிமிஷத்துக்கு முன்னால் கழுவின முகம் மாதிரி பளிச்சென்று இருக்கும். அழகாக, சின்ன வட்டமாகப் பொட்டுக் கலையாமல் அப்படியே இருக்கும். விடியற் காலையில் எழுந்து வருகிறபோதும் அப்படித்தான் இருப்பாள் அவள். அதைப் பார்த்து வியந்து கொள்வான்.

தனக்காகத் தூங்காமல் விழித்திருந்து அல்லது தூக்கத்தைக் கலைத்துக் கொண்டு சாதம் போடுவதற்காக அவள் எழுந்து வருவது அவனுக்குப் பிடிக்காது. அதற்காக அவனால் சீக்கிரம் வரவும் முடிவதில்லை.

''நீங்க படுத்துக்குங்க. நான் எடுத்து வச்சுண்டு சாப்பிட்டுக்கறேன்'' என்பான்.

அவள் கேட்க மாட்டாள்.

''பரவாயில்ல. நான் போட்டுட்டே போறேன்!'' என்ற பதில் வரும்.

அவன் தலை திமிராமல் வெறும் மோர்ச் சாதத்தை மட்டும் சாப்பிட்டு விட்டு எழுந்து போவான். அவளைச் சிரமப்படுத்தி வேறு எது சாப்பிடவும் பிடிக்காது. அதன்பின் அவள் அந்த இடத்தைத் துடைத்துக் கை கழுவிக் கொண்டு படுக்கப் போவதைப் பார்த்தால் அவனுக்குக் கஷ்டமாக இருக்கும். 'இவள் ஏன் தன்னை இப்படிச் சிரமப்படுத்திக் கொள்கிறாள்!' என்று மனசுக்குள் கோபப்பட்டுக் கொண்டே படுக்கையை உதறி விரித்துப் போட்டுக் கொள்வான்.

அதைப்பற்றி வெகு நாட்களாக அவளிடம் பேச வேண்டும் என்று நினைத்துக் கொண்டிருந்தான். அப்போது பேசி விடுவது என்று தீர்மானித்தான். இதுவரை பேசிக்கொண்டிருந்ததற்கு எந்தச் சம்பந்தமும் இல்லாமல் திடீரென்று எப்படி ஆரம்பிப்பது என்று தயங்கினான். கொஞ்சம் யோசித்துப் பின் மெதுவாகச் சொன்னான்.

''இனிமேல் நீ முழுசா ராத்திரி நாலு வா இல்லேன்னா நாழி ஆயிடும்னு நினைக்கிறேன்.''

''அதனால என்ன, வாங்கோளேன்... அப்பா உங்களுக்காகக் கதவைத் திறக்கிற சத்தத்தில் எனக்கு முழிப்புக் கொடுத்துடறது. நான் எழுந்து வந்து சாதம் போட்டுட்டுப் போறேன்!''

''அது வேண்டாம்னு சொல்லத்தான் இந்தப் பேச்சையே எடுத்தேன். எனக்காக நீங்க சிரமப்படறது எனக்குக் கொஞ்சங்கூடப் பிடிக்கலை.''

''இதிலே என்ன சிரமம் இருக்கு?''

''இல்லை, வேண்டாம். எனக்குக்கஷ்டமாக இருக்கு. ஏதோ தப்பு பண்ற மாதிரி இருக்கு. ஒரு நிம்மதியே மோர் சாதம் கலந்து ஒரு ஊறுகாய் போட்டு மூடி வச்சுட்டாப் போறும். நான் வந்து சாப்பிட்டுக்கறேன்.''

''ஏன் வெறும் மோர்சாதம் மட்டும் சாப்பிடணும்? நான் முழிச்சுண்டுதானே இருப்பேன்! எழுந்து வந்து போடறேன்.''

''தயவு செய்து வேணாம். நான்தான் சொல்லினேனே... உங்களைக் கஷ்டப்படுத்தறதுன்னா ஏதோ தப்பு பண்ற மாதிரி இருக்குன்னு. நீங்க தூக்கத்தை விட்டு எழுந்து வர்றது என்னைச் சங்கடப்படுத்தறது. அதைத் தவிர்க்கணும்னா நான் சீக்கிரம் வந்து சாப்பிட்டுட்டுப் போகணும். அது என்னால முடியாது. பாதிப் பேச்சிலேயோ, வேலையிலேயோ எழுந்து வர முடியாது. சாப்பாடு எனக்குப் பெரிய விஷயம் இல்லை. ஒருவேளை தவறினால் எதுவும் கெட்டுப் போய்விடாது. நீங்க இந்த மாதிரி பண்ணினால்

அது என்னை ரொம்பக் கட்டுப்படுத்தறது. இப்படியெல்லாம் கட்டுப்பட எனக்குப் பிடிக்காது. என்னை என் வழியில போக விடுங்க. எனக்குப் பிடிச்சபோது முடியறபோது வந்து சாப்பிட்டுக்கறேன். அதனால் கொஞ்சம் மோர் சாதம் பிசைஞ்சு மூடி வச்சுட்டாப் போறும்.''

அவன் நிறுத்தினான். ருக்மிணி சிறிதுநேரம் யோசித்தாள். பின்பு, ''சரி, நாளைலேர்ந்து இண்ணத்துல மோர் சாதம் கலந்து ஒரு எலுமிச்சங்காய் ஊறுகாயைப் போட்டு மூடி வச்சுடறேன்!''

''ரொம்ப தாங்க்ஸ்!'' என்றான் விஸ்வம் நிம்மதியான குரலில். ஒரு பெரிய விஷயத்துக்குத் தீர்வு கண்ட மாதிரி இருந்தான்.

''ஆனா மறக்காம சாப்பிட்டுடணும்!'' என்பதைக் கேட்டுக் கொண்டாள் அவள். அவன் புன்சிரிப்புடன் 'சாப்பிடறேன்' என்று தலையாட்டினான்.

தெருவில் ஆள் நடமாட்டம் ஆரம்பமாயிற்று. இரண்டு பேர் உரக்கப் பேசிக் கொண்டு போனார்கள். ஓர் அரசியல் நடிகரின் பெயர் அவர்கள் பேச்சில் அடிபட்டது. ஏதோ சினிமா பார்த்து விட்டுத் திரும்புகிறவர்களாக இருக்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டான் விஸ்வம். ''ராம்ஜிகூட வந்துடுவான்!'' என்பதைச் சொல்லிக் கொண்டிருந்த போதே, தனியாக ஒற்றைச் செருப்புச் சத்தம் கேட்டது. ராம்ஜி காலைத் தேய்த்தபடி நடந்து வந்து கொண்டிருந்தான். காலைத் தேய்க்காமல் மெத்தென்று அடி வைத்து அவனால் நடக்க முடியாது. அவன் செருப்பு மட்டும் வெகு சீக்கிரத்தில் அடி தேய்ந்து சிறிதாய் போகும்.

படி ஏறினதும், ''அப்பாடா!'' என்று சொல்லிக் கொண்டே விஸ்வத்தின் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டான். மூச்சு இரைப்பது கேட்பது.

''தியேட்டர்லேருந்து நடந்தே வரேன்!'' என்றான்.

''ஏன், வண்டி எதுவும் கிடைக்கலியா?'' என்று கேட்டாள் ருக்மிணி.

''ரிக்ஷாதான் நாலைஞ்சு இருந்தது. அதிலே ஏறுவானேன் என்று நடந்தே வந்தேன். ஆமாம், நீங்க இன்னும் தூங்கலியா? எனக்காகவா காத்துண்டு இருக்கீங்க?'' என்று கேட்டான்.

''இல்லை. ஏதோ பேசிண்டே இருந்தோம். நேரம் போனதே தெரியலை!'' என்று பதில் சொன்னாள் ருக்மிணி.

''அதானே பார்த்தேன். இல்லைன்னா இன்டலெக்ட் சாரா எனக்காகக் காத்துண்டிருக்கப் போறார்? என்ன சார் நான் சொல்றது...?'' என்று விஸ்வத்தை வம்புக்கு இழுத்தான். விஸ்வத்துக்குச் சிரிப்பு வந்தது. பதில் சொல்லாமல் சிரித்தான். ராம்ஜியும் சிரிப்போடு ருக்மிணியைப் பார்த்தான். ''வாங்க, மன்னி. நாம உள்ள போகலாம். சார் இப்ப வர மாட்டார். ஏதோ யோசனையில் இருக்கார். இன்னும் வான ஆராய்ச்சி எல்லாம் பாக்கி இருக்கும்!'' என்றான்.

ருக்மிணியும் மெதுவாகச் சிரித்தாள். பின் விஸ்வத்தைப் பார்த்து, ''உள்ளே வரீங்களா?'' என்று கேட்டாள். ''ம்...'' என்று எழுந்து கொண்டான் அவன்.

கம்பிக் கதவை இழுத்து மூடினார்கள். மரக்கதவைத் தாழ்ப்பாள் போட்டு விட்டுப் படுத்துக் கொண்டபோது கடிகாரம் இரண்டடித்தது!

அதன் பின்பும் விஸ்வத்துக்குத் தூக்கம் வரவில்லை. ஜமுனாவைப் பற்றிச் சிறிது நேரம், ருக்மிணியோடு பேசியதைப் பற்றிச் சிறிது நேரம் என்று நினைத்துக் கொண்டே கண்களை மெதுவாகக் கண்களை மூடினான்.

11

யு.எஸ்.ஐ. எஸ்.லைவிட்டு வெளியில் வந்தான் விஸ்வம். வெயில் அதிகமாகத் தெரிந்தது. வெகுநேரம் படித்துக் கொண்டு இருந்ததால் தலையை வலிக்கிற மாதிரி தோன்றியது. டிரைவ்-இன்னிற்குப் போய்ச் சூடாக ஒரு கப் காபி சாப்பிடலாம் என்று தினைத்துக் கொண்டான். பாக்கெட்டிலிருந்து பர்சை எடுத்துப் பார்த்தான். கடைசி ஐந்து ரூபாய் நோட்டு ஒன்று செலவழியாமல் இருந்தது. இதற்குப்பில் என்ன பண்ணுவது என்று யோசித்தான். அதை அப்புறம் பார்த்துக் கொள்ளலாம் என்ற

முடிவில் ரோட்டைக் கடந்து எதிர்ப்பக்கம் போனான். டிரைவ்-இன்னிற்குள் நுழைந்த போது, பக்கத்துக் கல்லூரி மாணவிகள் நாலைந்து பேர் பெல்பாட்டத்தில், தோளில் தீனமான ஒரு பையை மாட்டிக் கொண்டு போய்க் கொண்டிருந்தார்கள். மீச்சுக் குரலில், அமெரிக்க ஆங்கிலம் பேசினார்கள். சத்தம் போட்டுச் சிரித்தார்கள். இவனைப் பார்த்ததும் கோகோ கொளாஸ் போட்டுக் கொண்டிருந்த ஒருத்தி தன் சிநேகிதிகளிடம், 'லுக் அட் அமிதாப் பச்சன்!' என்றாள். அவன் காதில்விழ வேண்டும் என்பதற்காகவே கொஞ்சம் உரக்கச் சொன்னதாகப்பட்டது. விஸ்வம் திரும்பிப் பார்த்தான். உதீட்டில் லேசான புன்னகை தவழ்ந்தது.

''வாட் மை டியர், ஜெயபாதுரி?'' என்று திருப்பிக் கேட்டான்.

அவர்கள் முகம் மாறிப் போயிற்று. அதை எதிர்பார்க்கவில்லை என்பது தெரிந்தது. அவன் தனியாகவும் - தாங்கள் கூட்டமாகவும் வருகிற தைரியத்தில்தான் அப்படிச் சொல்லி இருக்கவேண்டும். அவன் பதிலுக்கு இப்படிக் கேட்கக் கூடும் என்று யோசிக்காததால் மேலே என்ன சொல்வது என்று புரியாமல் திகைத்தார்கள். சட்டென்று தலையைக் குனிந்து கொண்டு வேகமாக நடக்க ஆரம்பித்தார்கள். சிரிப்பு வந்தது விஸ்வத்திற்கு. 'இவ்வளவுதானா உங்க தைரியமெல்லாம்?' என்று நினைத்துக் கொண்டான். நிதானமாக நடந்து போய் செல்ஃப் சர்வீஸ் கௌண்டரில் ஒரு கப் காபிக்கு 'பில்' வாங்கினபோது, அவர்கள் அங்கே உட்கார்ந்து கொண்டிருப்பதைப் பார்த்தான். தன் கோப்பையை எடுத்துக் கொண்டு வேண்டுமென்றே அவர்களுக்கு எதிர் மேஜையில் போய் உட்கார்ந்து கொண்டான். நேராக அவர்களைப் பார்த்தவாறு காபியை உறிஞ்ச ஆரம்பித்தான்.

அவர்கள் ரகசியமான குரலில் ஏதோ பேசிக் கொண்டார்கள். தன்னைப் பற்றித்தான் என்பது தெரிந்ததும் அதனால் பாதிக்கப்படாதவனாக இருந்தான். தூரத்தில் விளையாடிக் கொண்டிருந்த ஒரு குழந்தையின் பக்கம் பார்வையைத் திருப்பினான். பின்பு மேஜை மேல் வைத்த புஸ்தகத்தில் ஒன்றை

எடுத்துப் புரட்டினான். சாலிங்கரின் Catcher in the Rye. அவள் வெகு நாட்களாகத் தேடிக் கொண்டிருந்த புஸ்தகம் அது. கிடைக்காமற் போகவே ரிஸர்வேஷன் கார்டில் எழுதிக் கொடுத்து விட்டு, வந்ததும், அதற்காகக் கிளம்பி வந்திருந்தான். முதல் வரி அழகாக ஆரம்பித்திருந்தது. மேலே படித்துக் கொண்டு போனான். கிட்டத்தட்ட இருபது பக்கங்கள் படித்ததும் திடீரென்று காபி ஞாபகம் வந்தது. நிமிர்ந்து பார்த்தான். அந்தப் பெண்கள் எழுந்து போய் விட்டிருந்தார்கள். கௌன்ட்டர் முழுசும் யாரும் இல்லை. நாற்காலிகளைத் தூக்கி மேஜை மேல் படுக்கப் போட்டிருந்தார்கள். சர்வீஸ் முடிந்து போய்விட்டது. ஆனாலும் அவளை யாரும் தொந்தரவு செய்யவில்லை. 'சார் எழுந்திருங்கள்' என்று விரட்டவில்லை. கோப்பைகூட அப்படியே இருந்தது. காபி ஆறி, வெள்ளை ஆடை படிந்து கிடந்தது. ஈ ஒன்று கோப்பையின் நுனியில் உட்கார்ந்திருந்தது. புஸ்தகத்தை மூடி எடுத்துக் கொண்டு வெளியில் நடந்தான்.

இடது பக்கம் முழுதும் மரங்களும் கீழே தரை தெரியாமல் சருகுகளும் விரிந்து கிடந்தன. பார்க்க அழகாக இருந்தது. மாத்தடியில் கிடந்த சிமெண்ட் பெஞ்சியில் யாரோ படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தார்கள். விஸ்வத்துக்கு அவன் போன அந்த ஆபீஸ் நினைவுக்கு வந்தது. மற்ற ஓட்டல் சூழ்நிலையிலிருந்து அது விலகி இருப்பது அவனுக்குப் பிடித்திருந்தது.

ரோட்டிற்கு வந்ததும் லீடுவரை நடக்க வேண்டும் என்று தோன்றியது. கூட யாராவது இருந்தால் பேசிக் கொண்டே போகலாம் என்று நினைத்தான். தனியாக நடப்பதும் பிடித்துத்தான் இருந்தது. விசாலமான அந்த ரோடில் நடப்பது அவனை மிகவும் சந்தோஷப்படுத்தும். அந்த மாலை நேரத்தில் வர்ணங்கள் 'பளிச் பளிச்' சென்று கண்ணில் அடிக்கும். கல்லூரி முடிந்து கூட்டங்களாகப் போவார்கள். பட்டாம் பூச்சிகள் மாதிரி பல் ஸ்டாப் நிறைந்து கிடக்கும். ஒவ்வொரு முகமாகப் பார்வையில் படும். தெருவில் போகிற கார்கள் - கம்பீரமான கட்டடங்கள் - பெரிய பெரிய ஹோட்டல்கள் - தோட்டத்து மரங்கள் - செடிகள் என்று பார்த்துக் கொண்டே நடப்பான்.

லஸ் கார்னர் திரும்பி விட்டை அடைந்தபோது வெயில் நன்றாகத் தாழ்ந்து போய் விட்டது. அப்பா ஈஸி சேரில் சாய்ந்து கொண்டிருந்தார். வீடு அமைதியாக இருந்தது. கண்ணை மூடிக் கொண்டிருந்தவர் காலடிச் சத்தம் கேட்டுத் திறந்து பார்த்தார். முகத்தில் ஒரு பிரகாசம் வர, ''வரதராஜன் உனக்கு இன்டர்வ்யூ கார்டு அனுப்பிச்சிருக்கான்'' என்று சொன்னார்.

அவள் பேசாமல் இருந்தாள். பத்து நாளைக்கு முன் அப்பாவே மறுபடியும் போய் அந்த வரதராஜனைப் பார்த்துப் பேசி விட்டு வந்தது அவனுக்குத் தெரியும். ராத்திரி சாப்பிடுகிறபோது, அவரே அதை அவனிடம் சொன்னார்.

''நியாயமா இன்டர்வ்யூ கார்டு அனுப்பிடறேன்னான். உன் பிள்ளையை, தன் சாமர்த்தியத்தை அதிலே காட்டச் சொல்லு. மீதி விஷயத்தை நான் பார்த்துக்கறேன்னு சொல்லியிருக்கான்டா!'' என்றார்.

விஸ்வம் பதில் சொல்லாமல் இருக்கவே அவரும் மேலே ஒன்றும் பேசவில்லை. 'கார்டு வரட்டும், பார்த்துக்கலாம்' என்று இருந்திருப்பார் என்று நினைத்துக் கொண்டான் அவன்.

இப்போது கார்டு வந்திருக்கிறது. அப்பா எழுந்து போய் 'டைம் பீஸ்' வைத்திருந்த ஸ்டாண்டிலிருந்து இன்டர்வ்யூ கார்டைக் கொண்டு வந்து நீட்டினார். எந்த ஆர்வமும் இல்லாதவனாக வாங்கிப் பார்த்தான் விஸ்வம். நாளைய மறுநாள் இன்டர்வ்யூ. மறுபடியும் அந்த ஆபீசுக்குப் போக வேண்டும். வராந்தாவில் கால் கடுக்க நிற்க வேண்டும். போகிறவர்களையும் வருகிறவர்களையும் வெறித்து கொண்டிருக்க வேண்டும். மேஜை 'பெல்' அடிக்கிற சத்தம் கேட்கும். ப்யூன், வரிசையாக உள்ளே அனுப்புவான். தலை வழுக்கையான அந்த ஃபீப் எக்ஸிக்யூட்டிவ் முன்னால் போய் நிற்க வேண்டும். அவன் அபத்தமாய் ஏதாவது ஜோக் அடிப்பான். அதற்குச் சிரிக்க வேண்டும் என்றும் எதிர்பார்ப்பான். நிதானமாய் ருசித்து ருசித்து டீ குடிப்பான். ஆனால் இப்போது உட்கார வைத்துத்தான் அவன் கேள்விகள் கேட்டாக வேண்டும். முன்பு மாதிரி நிற்க வைத்துச் சந்தோஷப் பட்டுக் கொள்ள முடியாது.

அடி மனசில் ஒரு சந்தோஷமும் கூடவே தலை காட்டியது. அந்த மரங்களையும், தரையில் விழுகிற நிழல்களையும், விளையாடுகிற அணில்களையும், கத்துகிற காக்கைகளையும் மீண்டும் ஒரு தரம் பார்க்கிற சந்தர்ப்பம் கிடைக்கப் போகிறது.

''என்ன, அந்தக் கார்டை அப்படிப் பார்த்துண்டு நிக்கறே?'' - அப்பாவின் குரல் கேட்டதும் நிமிர்ந்து பார்த்தான்.

''ஒண்ணுமில்லே'' என்றான்.

''இந்தத் தரமாவது ஒழுங்கா பதில் சொல்லிட்டு வா. நன்னா டிரஸ் பண்ணிண்டு போ. அதுக்கு நான் சொல்ல வேணாம். உனக்கே தெரியும். மறக்காமெ டை கட்டிண்டு போ. போன தரம் மாதிரி முதல் இரண்டு பட்டனை அவிழ்த்து விட்டுண்டு போகாதே. முதல்ல முடியை வெட்டிண்டு வா. இந்தப் போகவதர் கிராப்பைப் பார்த்தாலே எவனும் வேலை கொடுக்கமாட்டான்!''

''வேலை என் திறமைக்கா இல்ல கிராப்புக்கா?'' என்று எரிச்சலை மறைத்துச் சிரிப்பை வரவழைத்துக் கொண்டு கேட்டான் விஸ்வம்.

''ஆமாண்டா, எடுத்த எடுப்பில் உன் திறமை அவாளுக்குத் தெரிஞ்சு போயிடும் பாரு. பர்சனாலிட்டியையும், சர்டிஃபி கேட்டையும், பிஹேவியரையும் நம்பித்தானே வேலைல சேர்த்துக்கறான்!'' என்றார் அவர். அதற்கு நல்ல பதிலாகச் சொல்ல வேண்டும் போல தோன்றியது. ஆனால், ஒன்றும் பேசாமல் கார்டைப் புஸ்தகத்தினுள் செருகிக் கொண்டு தன் அறைக்குத் திரும்பினான். கூடத்திலிருந்து ''கார்டைப் பத்திரமா எடு. எதுனா புஸ்தகத்துலே வச்சுத் தொலைச்சுடப் போறே...'' என்ற குரல் கேட்டது. இந்த வேலையாவது கிடைக்க வேண்டும் என்கிற அவரது தவிப்பு அவனுக்குப் புரிந்தது. எப்படியாவது அவருக்கு ஒரு வேலை வாங்கிக் கொடுத்து விடவேண்டும் என்பதில் தீவிரமாக இருந்தார். காலையில் எழுந்ததும் பேப்பரில் 'வான்டெட் கால்'த்திற்குத்தான் முதலில் அவனது கண் போகும். ஒவ்வொன்றாகக் குறித்துக் கொள்வார். பின், வெள்ளைக் காகிதங்களை எடுத்து, 'Regarding your advertisement in the Hindu dated..' என்று எழுதுவார். நிறுத்தி நிதானமாக எழுதுவார். அவர் கையெழுத்து

அழகாக இருக்கும். அதைச் சொன்னால் 'தலையெழுத்துதான் தன்னா இல்லையே?' என்று முனகிக் கொள்வார். எழுதினதை எடுத்துக் கொண்டு அவனிடம் கையெழுத்து வாங்க வருவார். பின்பு தாமே போய் போஸ்ட் பண்ணுவார். அதைப் பார்க்கும் போது, விஸ்வத்திற்குப் பரிதாபமாக இருக்கும். அவர் மீது இரக்கம் வரும். 'ஏன் இப்படி அலைய வேண்டும்' என்றும் தோன்றும்.

அந்த மாதிரி அவர் அப்ளிகேஷன் போட்ட நிறைய இன்டர்வ்யூவிற்குப் போய் வந்து விட்டான் அவன். சலித்துக் கூடப் போய் விட்டது.

ஒரு தரம் போகமாட்டேன் என்று சொல்லிப் பார்த்தான். அவருடைய தொந்தரவு பொறுக்க முடியாமல் இளம்பி அந்த ஆபீஸ் பக்கங்கூடப் போகாமல் ஃப்ளுடைமண்டில் போய் உட்கார்ந்து சாயந்தரம் ஐந்து மணி வரை லாரன்ஸ் ஆஃப் அரேபியா பார்த்தான். வீட்டுக்கு வந்ததும் அப்பா கேட்ட கேள்விகளுக்கு ஏதேதோ சொல்லிச் சமாளித்தான்.

இப்போது அந்த மாதிரி ஏதாவது செய்யலாமா என்று தோன்றியது. ஆனால் அது முடியாது. இன்டர்வ்யூ முடிந்ததும் அப்பா மறுபடியும் அந்த வரதராஜனைப் பார்க்கப் போவார். அப்போது அவன் இன்டர்வ்யூவிற்கு வராத விஷயம் தெரிந்து போகும். வீட்டிற்கு வந்து அவனிடம் கத்துவார்; கோபப்படுவார். இப்போதெல்லாம் அம்மா போனதிலிருந்து அவருக்கு நிறையக் கோபம் வருகிறது.

அப்பாவின் முக்கால்வாசி பலமும் அம்மாவிடமிருந்து வந்திருக்க வேண்டும். அம்மா அவருக்குத் திடமான ஒரு நம்பிக்கையையும், தெம்பையும் தந்திருக்க வேண்டும். எதையும் அவனிடம் சொல்லி ஆறுதல் தேடிக் கொண்டிருக்க வேண்டும். அவர் தளர்ச்சியடைந்து போன சமயங்களில் ஒய்வு தரும் கேந்திரமாகயிருந்து வேலைகளிலிருந்து விடுபட வைத்திருக்க வேண்டும். அம்மா போனதனால் இவை எல்லாவற்றையும் இழந்து போன காரணத்தினால் தான் அவர் இப்படி ஆகியிருக்கக் கூடும் என்று நினைத்தான். அவரால் தன்னை வேறு யாரோடும்

பகிர்ந்து கொள்ள முடிவதில்லை. அம்மாவின் பலத்தில் ஒரு நிச்சயத்தோடு இருக்க முடிந்தது. அந்த நிச்சயம் இப்போது வேறு யாரிடமும் இடைப்படுவதில்லை. வடிகால் இல்லாமற் போகிற காரணத்தால்தான் அவருக்குக் கோபம் வருகிறது. கோபப்பட்டால் இப்போதெல்லாம் மார்வலி வந்து விடுகிறது.

பேசாமல் இன்டர்வ்யூவிற்கே போய்த் தொலைக்கலாம் என்று சொல்லிக் கொண்டான். இந்த வேலையும் கிடைக்கப் போவதில்லை என்ற நிச்சயத்தில் இருந்தான். போகும் போது மறக்காமல் படிக்க ஏதாவது புஸ்தகம் கொண்டுபோக வேண்டும் என்று நினைத்துக் கொண்டான்.

உடை மாற்றி லுங்கியைச் சுற்றிக்கொண்டு நாற்காலியில் உட்கார்ந்த போது, அகிலா சூடாகக் காபி கொண்டு வந்தாள்.

"இன்டர்வ்யூ கார்டு வந்திருக்காமே?" என்று கேட்டாள்.

விஸ்வம் பேசாமலிருந்தான். துக்கம் விசாரிக்கிற மாதிரி பட்டது அவனுக்கு!

"இந்த வேலையாவது கிடைக்குமா?"

"தெரியாது!" என்று எரிச்சலோடு சொல்வான். அகிலா உதட்டைச் சுழித்து அழகு காட்டி விட்டுப் போவாள்.

காபியை ஆற்றிச் சூடாகக் குடித்தபோது ஏற்பட்ட உணர்வு இதமானதாக இருந்தது.

12

அன்று காலையில் சிக்கிரமே எழுந்துவிட்டார் ஜகன்னாதன். விஸ்வத்தையும் எழுப்பி விட்டார். உடனே எழுந்து விடவில்லை அவன். ஒரு தரம் புரண்டு படுத்துக் கொண்டான்.

"எழுந்திருடா. இன்னிக்கு இன்டர்வ்யூடா..." என்று உலுப்பினார்.

கார்டு வந்ததிலிருந்து அதே ஞாபகமாக இருந்திருக்க வேண்டும் அவர். வரதராஜன் தன்னை ஏமாற்ற மாட்டான் என்று

நம்பியிருக்க வேண்டும். சோம்பல் முறித்தபடி விஸ்வம் எழுந்து உட்கார்ந்ததும் அவர் நகர்ந்து அப்பால் போனார். அன்று குளியல், சாப்பாடு எல்லாம் வழக்கமான நேரத்திற்கு முன்னாலேயே நடத்துவிட்டது. சிக்கிரம் எழுந்து குளித்ததில் கறுகறுப்பாக உணர்ந்தான் விஸ்வம். உற்சாகமாக இருந்தான். தனக்குப் பிடித்தமான நீலநிற முழுக்கை சட்டையை அணிந்து கொண்டான். அந்தச் சட்டையில் இருக்கிற போதெல்லாம் அவனுக்குள் எப்போதும் இருக்கிற தன்னம்பிக்கை அதிகமாகிறாற்போல் தோன்றும்.

அப்பா ராகுகாலம் பார்த்தார். சகுனம் பார்த்தார். பத்து மணி இன்டர்வ்யூவிற்கு எட்டரைக்கெல்லாம் வீட்டை விட்டுக் கிளம்பச் சொன்னார்.

''ஸ்வாமிக்கு நமஸ்காரம் பண்ணிவிட்டுப் போடா...'' என்றார். பின்பு, வாசல் வரை வந்து வழியனுப்பினார்.

அவர் பண்ணின அமர்க்களத்தை நினைத்துச் சிரித்துக் கொண்டான் விஸ்வம். 'பாவம்' என்றும் சொல்லிக் கொண்டான். பஸ் ஸ்டாப்பை அடைந்த போது மணி எட்டே முக்கால்தான் ஆகி இருந்தது. ஒரு பெரிய 'க்யூ' காத்துக் கொண்டிருந்தது. அவனும் அதில் சேர்ந்து கொண்டான். முன்னால் இருந்த நண்பன் ஒருவன் இவனைப் பார்த்ததும் க்யூவை விட்டு விலகி இவனுக்குப் பக்கத்தில் வந்து நின்று கொண்டு. ''ஹலோ...'' என்றான்.

திரும்பிப் பார்த்த விஸ்வம் பதிலுக்கு 'ஹலோ' சொன்னான். விஸ்வத்தின் டையையும், கையிலிருந்த ஃபைலையும் பார்த்து, ''வேலை கிடைச்சாச்சா?'' என்ற கேட்டான்.

இவன், 'இல்லை' என்று தலை ஆட்டினான்.

''பின்னே இதெல்லாம் என்ன?'' என்று கேட்டான்.

''இன்டர்வ்யூ!'' என்று பதில் சொன்னான் விஸ்வம்.

''ஓ...'' என்று புன்னகை செய்தான் அவன். பின், ''சிகரெட்?'' என்று பாக்கெட்டை விஸ்வத்திடம் நீட்டினான்.

''நோ, தாங்ஸ்!'' என்று மறுத்தான் விஸ்வம்.

''நான் சிகரெட் பிடிக்கறதில்லை.''

''குட்...'' என்று சிரித்துக் கொண்டே சொல்லி விட்டு, அவன் தன் சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டான்.

அவனுடைய பாராட்டு விஸ்வத்தை எரிச்சல்படுத்தியது. எப்படியாவது அவனைவிட்டு விலகிப் போனால் தேவலை யென்று தோன்றியது. அவன் புகையை ஊதியவாறே, ''முன்பெல்லாம் ஏதோ எழுதுவியே...? இப்பவும் எழுதறியா?'' என்று கேட்டான்.

''ம்...''

''எதுல எழுதறே?''

''அதே பத்திரிகைகளிலேதான்.''

அப்போது பஸ் ஒன்று வந்தது. ஏற்கெனவே ஃபுட் போர்டில் தொங்கிக் கொண்டிருந்தார்கள். முன் பக்கத்திலிருந்து கீழே இறங்கின கண்டக்டர், ''உள்ள நகர்ந்து போங்க சார். இன்னும் இடமிருக்கு பாருங்க'' என்று கத்தினார். கூட்டம் ஒரே அலை இன்னும் அலைந்தது. கீழே இரண்டு பேர் புதிதாகத் தொங்க, பஸ் கிளம்பி விட்டது. அதைப் பார்த்த அந்த நண்பன் சொன்னான்:

''முன்பெல்லாம் ஸ்டாப்பிங்கிலேயே நிறுத்த மாட்டாங்க. ஒரு ஃபர்லாங் தள்ளித்தான் நிறுத்துவாங்க. இல்லாவிட்டால டபிள் விசில் குடுப்பாங்க. இப்பப் பாரு புளி அடைக்கிற மாதிரி அடைச்சு ஏத்திக்கறாங்க...!'' என்றான்.

விஸ்வம் தலையாட்டி விட்டுக் கைக்கடிகாரத்தைப் பார்த்தான்.

''பஸ்லை நம்பினால் எனக்கு நேரமாயிடும் போல இருக்கு. நடந்தே போயிடலாம்னு நினைக்கிறேன்; வரட்டுமா?'' என்று கேட்டான்.

''எதுவரை போறே?''

''மௌண்ட் ரோடு.''

''நானும் அங்கேதான் போகணும். வா போகலாம்.''

விஸ்வத்தின் புருவம் ஒரு தடவை சுருங்கி மீண்டது. சரி என்று தலையாட்டினான். இரண்டு பேரும் நடக்க ஆரம்பித்தார்கள். வழி முழுவதும் அந்த நண்பன் ஏதேதோ பேசினான். தன் வேலையைப் பற்றிச் சொன்னான். தான் பார்த்த ஒரு தமிழ்ப்படம் நன்றாக இருப்பதாகச் சொன்னான். சில இடங்களில் டைரக்ஷன் பிரமாதம் என்றான். அந்த ஹீரோயின் மாதிரி நிஜ வாழ்க்கையிலும் மத்தியதரக் குடும்பங்களில் நிறையப் பேர் இருப்பதாகச் சொன்னான். ''நீ இன்னும் அந்தப் படத்தைப் பார்க்கவில்லையா?'' என்று கேட்டான். தான் விலை மலிவாக வாங்கின பொருள்களைப் பற்றிப் பேசினான். எல்லாவற்றிற்கும் விஸ்வத்திடமிருந்து, 'ம். ஆமாம், இல்லை' என்ற பதில் மட்டுமே வந்தது. அவனுக்கு எதுவோ புரிந்திருக்க வேண்டும். டவர்கிளாக் அருகில் போய்க் கொண்டிருந்தபோது சட்டென்று நின்றான்.

''இங்க ஒருத்தரைப் பார்க்கணும். இப்பவே பார்த்துட்டுப் போகலாம்னு நினைக்கிறேன்; வரட்டுமா?'' என்று கேட்டான்.

''ஓ. கே! ஸீ யு தென்!'' என்று கையாட்டினான் விஸ்வம். அவன் போனதும், ''மடையன்!'' என்று முணுமுணுத்துக் கொண்டான். நிம்மதியாகவே மேலே நடக்க ஆரம்பித்தான்.

வெயில் சுள்ளென்று உறைத்தது. முகத்தில் வியர்வை வழிந்தது. கைக்குட்டையை எடுத்து ஒரு தரம் அழுத்தி முகத்தைத் துடைத்துக் கொண்டான். கழுத்தை இறுக்கின 'டை'யில் மிகவும் சங்கடமாக உணர்ந்தான். இது வேண்டாம் என்று அப்பாவிடம் சொன்னான். அவர் கேட்கவில்லை. பரசுவும், ''கட்டிண்டு போடா'' என்றதும் மீறமுடியவில்லை. எல்லாம் ஒரு வேஷமாகப்பட்டது. வெறுப்பாக இருந்தது. அந்த வெறுப்பு அப்பாவின் மேல் திரும்பியது.

''அப்பா உங்களுக்காகத்தான் இவ்வளவும்!'' என்று சொல்லிக்கொண்டான். 'என்ன எதிர்பார்ப்பு அவரிடம்!' என்று நினைத்துக் கொண்டான்.

அவனைப் படிக்க வைத்த படிப்பு அசல் மாதிரி. அதைக் கடனாகக் கொடுத்திருக்கிறார் அப்பா. அதற்கு அவன் வட்டி கட்டியாக வேண்டும், அதை மாசச் சம்பளமாகக் கட்ட வேண்டும். அந்த எதிர்பார்ப்பில்தான் அவனைப் படிக்க வைத்தது. அவர் கூடப் படிக்க வைக்கவில்லை; பரசுதான் படிக்க வைத்தான். பிடிவாதமாகக் காலேஜில் சேர்த்தான். அவனுக்குத் தேவையான பாடப் புத்தகங்களை வாங்கிக் கொடுத்துவிட வேண்டும் என்று அலைந்தான்.

''நான்தான் படிக்கலை. நீயாவது படிடா, விஸ்வம். உனக்குப் போறும்னு தோணற வரைக்கும் படி. எதைப் பத்தியும் கவலைப்படாதே! நான் பார்த்துக்கறேன்'' என்றான்.

ஆனால், பி.காமோடு நிறுத்திக்கொண்டான் விஸ்வம். அதுவே போதும் என்று தோன்றி விட்டது. ரிஸல்ட் வந்த அன்று பரசு அவனிடம் வந்து மறுபடியும் பேசினான்.

''மேலே ஐ.ஏ.வேணும்னா சேர்றியா?''

''இல்லேண்ணா, நான் படிக்கப் போறதில்லை.''

''ஃபர்ஸ்ட் இளாஸ் வாங்கியிருக்கியேடா. எதுக்காக நிறுத்தணும்? மேல படியேன்.''

''இல்ல. வேணாம். படிக்கணும்னு தோணலை.''

''பணத்துக்காகக் கவலைப்படாதே. நம்ம குடும்பத்துல யாராவது ஒருத்தராவது நன்னா படிக்கணும்னு எனக்கு ஆசை. ஒரு டாக்டர், ஒரு வக்கீல், ஒரு என்ஜினியர் இப்படி. நீ ஐ.ஏ. படியேன். ராம்ஜியை டாக்டருக்குப் படிக்கச் சொல்லலாம்.''

விஸ்வத்தால் பேச முடியவில்லை. அதெல்லாம் பரசுவின் ஆசைகளாக இருந்திருக்க வேண்டும். இத்தனை விதங்களிலும் அவன் தன்னை நினைத்துப் பார்த்து ஏமாந்து போயிருக்க வேண்டும். அந்த கனவுகளையெல்லாம் திரட்டி மறுபடியும் நம்பிகள் மீது ஏற்றி நிறைவேற்றிக் கொள்ளப் பார்க்கிறான். இதில் தன்னைச் சந்தோஷப்படுத்திக் கொள்ள நினைக்கிறான். அதற்கு எத்தனை பரந்த மனசு இருக்க வேண்டும்! எவ்வளவு கயதலம்

இல்லாத சிந்தனைகள்! இப்படியே தனக்கென்னு தனியாக எதன் மீதும் ஒரு பிடிப்பு இல்லாமல்-பரக்கப் பரக்க ஆபீசுக்குப் போய், 'ஓவர் டைம்' செய்து, இராத்திரி நேரம் கழித்து வந்து, உடல் அலுப்பில் மரக்கட்டை மாதிரி படுத்துத் தூங்கி... தனக்கென்று அவன் செய்து கொண்டது கல்யாணம் ஒன்றுதான். அதைக்கூட வற்புறுத்தி அப்பாவும் அம்மாவுந்தான் பண்ணி வைத்தார்கள். அவனாக இஷ்டப்பட்டுப் பண்ணிக் கொள்ளவில்லை. 'பரசு! எத்தனை விசாலமான மனசு உனக்கு!'

விஸ்வத்தால் ஒரு நிமிஷம் பேச முடியவில்லை. மனசை என்னவோ செய்தது. குரல் கரகரத்தது.

''இல்லேண்ணா. இதுவே போறும்னு தோணறது. மேலே படிக்க வேண்டியது அவசியமில்லைன்னு நினைக்கிறேன்...''

பரசு சில விநாடிகளுக்கு யோசித்துக் கொண்டே நின்றான். விஸ்வத்தின் முகத்தைப் பார்த்தான்.

''சரி உனக்கு இஷ்டமில்லைன்னா நான் வற்புறுத்த விரும்பல்லே...'' என்று சொல்லிவிட்டு, கொடியில் இருந்து துண்டை உருவிக் கொண்டு குளிக்கப் போனான்.

அத்தனையும் கேட்டுக் கொண்டு ஈஸிசேரில் சாய்ந்திருந்த அப்பா எழுந்து வந்தார்.

''மேலேதான் படிக்கப் போறதில்லேன்னு நிர்மானம் பண்ணிட்டே, அப்போ என்ன செய்றதா உத்தேசம்?''

அவன் பேசாமல் நின்றான். சுவரில் தொங்கின ஜீனத் அமன் காலண்டரைப் பார்த்துக் கொண்டிருந்தான். ராம்ஜி மாட்டினது அது. அதில் ஜீனத், புடவையில் இருந்தது, அழகாக இருந்தது.

''வேலைக்குப் போற எண்ணமாவது இருக்கா, இல்லையா?''

''இல்லை!'' என்று தலையாட்டினான்.

''இல்லையா?'' அதிர்ந்து போனார் அவர்.

''ஆமாம்ப்பா. நானும் பரசு மாதிரி மெஷினா ஆயிட விரும்பலே. படிப்பு, உடனே வேலை, வேலை கிடைச்சதும் கல்யாணம். அப்புறம் குழந்தைன்னு-இது என்ன சார்ட் ஸ்கூல்லேயும், காலேஜிலேயும் டைம் டேபிள் எழுதி ஒட்டிக்கிற மாதிரி இந்த டைம் டேபிளை யார் எழுதி நம் மீது ஒட்டினது? நான் நிம்மதியா இருக்க ஆசைப்பட றேன். இந்த டைம் டேபிளில் அடைபடாமல் இருக்கணும்னு நினைக்கிறேன். ப்ளீஸ்! லெட் மி கோ இன் மை ஒன் வே...''

அப்பா பேச்சு வராமல் தவித்தார்.

''என்னடா உளர்றே?'' என்று மட்டும் கேட்டார்.

''நான் உளறலை!'' என்று பதில் சொன்னான் விஸ்வம்.

அவன் பேசினதைக் கேட்டுக் கொண்டே வந்த பரசு, ''அப்பா!'' என்று கூப்பிட்டான். அவர் திரும்பிப் பார்த்தார்.

''கொஞ்ச நாள் அவன் இஷ்டப்படிதான் நடக்கட்டுமே! இப்போலேர்ந்து சம்பாதிக்க என்ன பண்ணப் போறான்? அப்புறம் அவன் சொல்ற மாதிரி மெஷினாகத் தான் மாறிடுவான்!'' என்றாள்.

அப்பா மௌனமாகி விட்டார்.

அதன் பின் பரசு அடிக்கடி வந்து விஸ்வத்திடம் ''பணம் ஏதாவது வேணுமா? செலவுக்கு என்ன பண்ணுவே? இந்தா வச்சுக்கோ...'' என்று இரண்டு, மூன்று பத்து ரூபாய் நோட்டுகளைக் கொடுத்து விட்டுப் போவாள்.

''வேண்டாம்; என்கிட்ட இருக்கு!'' என்று மறுப்பான் விஸ்வம். கேட்கமாட்டாள் பரசு.

எத்தனை சுகமாக சாய்ந்து கொள்ள முடிகிறது பரசுவின் மீது. நிம்மதியாக... கவலை எதுவும் இல்லாமல்... ராம்ஜிக்குத் தன்னால் அந்த மாதிரி ஒரு நல்ல சாய்மானமாக இருக்க முடியுமா என்று யோசித்துப் பார்ப்பான். 'முடியாது' என்றே தோன்றும். தடும்பம் என்ற இயந்திரத்திற்குத் தன்னைத் தீனியாகப் போட்டுக்

கொண்டு அரை பட்டுச் சாகத் தன்னால் முடியாது. பரசுவால் மட்டும் அது எப்படி முடிகிறது என்று பிரமித்துப் போவான்.

அந்தக் கோணத்திலிருந்து பரசுவைப் பார்க்கிறபோது அவன் விஸ்வரூபம் எடுத்துத் தன் மனசை நிறைப்பது புரியும்.

13

விஸ்வம் அந்த ஆபீசுக்குப் போனபோது மணி ஒன்பதே முக்கால் ஆகியிருந்தது. வாசலில் நின்றிருந்த கூர்க்கா சிகரெட் பிடித்துக் கொண்டிருந்தான். இவன் உள்ளே நுழைந்தபோது ஏதோ நினைத்து இவனுக்கு 'ஸல்யூட்' அடித்தான். விஸ்வம் சிரித்துக் கொண்டான். அந்த மரங்களையும், நிழல்களையும் பார்த்துக் கொண்டே நடந்தான். அணில்கள் விளையாடிக் கொண்டிருந்தன. காக்கைகள் கத்தின. சைக்கிள் ஸ்டாண்டில் நிறையச் சைக்கிள்கள் நிறுத்தப்பட்டிருந்தன. மூன்று, நான்கு கார்கள் மட்டுமே காணப்பட்டன. இப்போதும் அந்த சிமெண்ட் பெஞ்ச் காலியாகத்தான் கிடந்தது. அதில் போய் உட்கார வேண்டும் என்று தோன்றியது.

ஆனால் நேராகக் கட்டடத்துக்குள் நுழைந்தான். யாரும் இன்னும் வேலையை ஆரம்பிக்கவில்லை. கும்பல் கும்பலாக உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள்.

யாரோ உரக்கச் சிரிக்கிற சத்தம் கேட்டது. முன்பு தன்னிடம் காசு கேட்ட அந்த ப்யூனை நினைத்துக் கொண்டான் விஸ்வம்.

காரிடாரின் இடது கோடியில் இருந்த ரிசப்ஷன் அறைக்குப் போனான். அங்கே வெள்ளை வெளேரென்று ஒருத்தி உயரமாய் ஆரஞ்சு நிறப் புடவையோடு உட்கார்ந்திருந்தாள். தீயைச் சுற்றிக் கொண்டு வந்த மாதிரி இருந்தது. அவள் உடம்பின் வெள்ளையில் அந்தச் செவப்பு அழகாக இருந்தது. இவன் அருகில் போனபோது யாருடனோ டெலிஃபோனில் பேசிக் கொண்டிருந்தாள். இவனைப் பார்த்ததும், ''ஜஸ்ட் எ மினிட்!'' என்று சொல்லிவிட்டு வாய்ப் பக்கத்தைக் கையால் மூடிக் கொண்டு, ''எஸ்?'' என்றாள்.

அந்த விரல்களில் அரை அங்குல நீளத்திற்கு வளர்த்து அழகாக வெட்டப்பட்டிருந்த நகங்களில் வெளிர் வர்ணம் பூசப்பட்டிருந்ததைப் பார்த்துக்கொண்டே, ''ஐ ஹேவ் கம் ஃபார் தி இண்டர்வ்யூ!'' என்றான் விஸ்வம்.

''ப்ளீஸ் கோ டு தி ஃபர்ஸ்ட் ஃப்ளோர்'' என்றாள். குரல் நல்ல இனிமையில் ஒலித்தது.

''தாங்க் யூ!'' என்று சொல்லிவிட்டு வெளியில் வந்தான். போவதற்கு வந்தபோது ரிசப்ஷன் அறையில் பக்கமே போகாததை நினைத்து வருத்தப்பட்டான்.

படிகளில் ஏறினபோது அந்த பெங்காலித் திரைப்படம் மீண்டும் நினைவுக்கு வந்தது. எங்கே, எப்போது படிகளில் ஏறினாலும் அது நினைவுக்கு வரத் தவறுவதில்லை. அந்தக் காட்சி ஏதோ ஒரு வகையில் தன்னை மிகவும் பாதித்திருப்பதைப் புரிந்து கொண்டான். எதனால் இந்தப் பாதிப்பு என்பது தெரியவில்லை. அவன் எட்டாவது மாடியில் குடியிருப்பவன் இல்லை. லிஃப்ட் கெட்டுப் போய் ஏழு மாடிப் படிகளை ஏறிக் கடந்ததும் இல்லை. பின் ஏன் அந்த நினைவு அடிக்கடி வருகிறது? அவனுக்குப் புரியவில்லை.

அவன் போனபோது ஏற்கனவே பத்துப் பன்னிரண்டு பேர் காத்துக் கொண்டிருந்தார்கள். அதில் சிலர் மட்டும் நீளமான ஒரு பெஞ்சில் உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். இவன் நிற்க வேண்டியதாக ஆயிற்று. ஒரு கோடிக்குப் போய்ச் சுவரில் சாய்ந்து நின்று கொண்டு படிக்கக் கொண்டு வந்திருந்த புஸ்தகத்தைப் பிரித்தான். யாரையும் பார்க்கவில்லை. யாரோடும் பேசவில்லை. அலுங்குது வாசல் மரங்கள் தெரியவில்லை. பார்க்கும்படி வேறு எதுவும் இல்லாததால் படிப்பதில் தடை ஒன்றும் ஏற்படவில்லை.

ஒவ்வொருத்தராகக் கூப்பிட்டபோது மட்டும் போவது யார் என்று ஒரு தரம் தலையை உயர்த்திப் பார்த்தான். பின், மீண்டும் படிக்க ஆரம்பித்தான். பன்னிரண்டு மணி அளவில் இவன் பெயர் கூப்பிடப்பட்டது. இரண்டாவது முறையாக அழைக்கப்பட்டதுந்தான் இவன் சட்டென்று நிமிர்ந்து புஸ்தகத்தை மூடி எடுத்துக் கொண்டு உள்ளே போனான்.

அரை மணி நேரத்தில் இண்டர்வ்யூ முடிந்து விட்டது. அநாவசியமாகக் கேள்விகள் எதுவும் கேட்கவில்லை. ஜோக்ஸ் ஒன்றும் அடிக்கவில்லை. வரதராஜனும் உள்ளே இருந்தார். அவரைத் தவிர இன்னும் மூன்று பேர் இருந்தார்கள். மாற்றி மாற்றிக் கேள்விகள் கேட்டார்கள்.

காமர்ஸில் இரண்டு கேள்விகள்.

கணக்கில் இரண்டு.

முன் அனுபவம் ஏதாவது உண்டா?

டைப் அடிக்கத் தெரியுமா?

எந்த பிராஞ்சில் போட்டாலும் வேலை செய்ய முடியுமா?

எவ்வளவு சம்பளம் எதிர் பார்க்கிறாய்?

எஸ்.யு கேன் கோ.

விஸ்வம் எழுந்து வந்து விட்டான். வெளியில் வருகிற போது அந்தப் ப்யூன் கண்ணில் படவில்லை. அன்று லீவில் இருந்திருக்க வேண்டும் என்று நினைத்துக்கொண்டான். ரோட்டை அடைந்ததும் என்ன செய்வதென்று புரியாதவனாக ஒரு நிமிஷம் நின்றான். மணி பார்த்தான். ஒன்றடிக்கப் போகிறது. எதிரில் வந்து கொண்டிருந்த சாப்பாட்டுக் கூடைகளைப் பார்த்ததும் பசிக்கிற மாதிரி இருந்தது.

பக்கத்தில் எந்த ஹோட்டல் இருக்கிறது என்று யோசிக்க ஆரம்பித்தான். பஸ் பிடித்து 'டிரைவ் இன்' விற்கே போகலாமா என்று நினைத்தான். அதுவும் பிடிக்கவில்லை. எதற்கும் பஸ் ஸ்டாப்பிற்குப் போய் விடலாம் என்று வந்து நின்றபோது பின்னாலிருந்து, ''என்ன, சௌக்கியமா?'' என்ற குரல் கேட்டது.

திரும்பிப் பார்த்தான். குள்ளமாய் மா நிறத்தில் ஒருவர் சிரித்தபடி நின்றிருந்தார். கண்ணாடி போட்டுக் கொண்டிருந்தார். அப்பாவோடு அவரைப் பார்த்திருக்கிற ஞாபகம் வந்தது. வீட்டுக்குக்கூட இரண்டு மூன்று தரம் வந்திருக்கிறார். என்ன பெயர் என்பது மறந்து போய்விட்டது. நரசிம்மனோ, சீதாராமனோ என்று சொன்னதாக ஞாபகம்...

''சௌக்கியந்தான்!'' என்று தலையாட்டினான்.

''அப்பா இப்ப எப்படி இருக்கார்?''

''சௌக்கியமா யிருக்கார்.''

''ரிடையர் ஆயிட்டாப்பலே இருக்கே?''

''ஆமாம்.''

''உங்கண்ணாவுக்குக் கல்யாணமாயிடுத்தாமே...?''

''ஆமாம்.''

''குழந்தை ஏதாவது இருக்கா?''

''இல்லை; இப்பத்தான் கல்யாணமாச்சு. ஏழெட்டு மாசம் இருக்கும்.''

ஒரு வருஷத்துக்கு மேல் ஆகிவிட்டது என்பது நினைவில் இருந்தும் அப்படிச் சொன்னான்.

''உனக்குத் தங்கை ஒருத்தி இருக்கா, இல்லியா?''

''இருக்கா.''

''என்ன பண்றா?''

''கும்மாந்தான் இருக்கா?''

''என்ன வயசு இருக்கும்?''

விஸ்வம் கொஞ்சம் யோசிக்கிற மாதிரி நின்றுவிட்டு, ''பதினெட்டு, பத்தொன்பது இருக்கும்!'' என்றான்.

''என்ன படிச்சிருக்கா?''

''எஸ்.எஸ்.எல்.ஸி.''

''வரன் ஏதாவது பார்க்கறேளா?''

''தெரியலை.''

''அப்படியா? ராமரத்தினத்தைப் பார்த்தேன்னு அப்பாகிட்ட சொல்லு. ஒரு நாள் ஆத்தாண்ட வரேன். நல்ல ஜாதகமெல்லாம் இருக்கு. தங்கைக்கு வேணும்னா பார்க்கலாம்.''

இவர் கல்யாணத் தரகர் என்பது சட்டென்று நினைவுக்கு வந்தது பரசுவிற்கு மூன்று, நான்கு ஜாதகங்கள் கொண்டு வந்து கொடுத்தார்.

''சொல்றேன்.''

''ஆமாம், நீ என்ன பண்றே இப்போ?''

''சும்மாத்தான் இருக்கேன்.''

''சும்மா இருக்கியா? ஏன்? வேலை எதுவும் பார்க்கலியா?''

அவள் பதில் சொல்ல வாயெடுக்கு முன் ஒரு பஸ் வந்தது. நம்பரைக்கூடப் பார்க்காமல், ''நான் வரேன். என் பஸ் வந்தாச்சு!'' என்று ஓடிப் போய் ஏறிக் கொண்டான். பஸ்ஸில் ஏறினதும் நிம்மதியாக ஒரு தரம் மூச்சு விட்டான். டிக்கெட் வாங்கிக் கொண்டு ஜன்னல் ஸீட்டில் உட்கார்ந்தபோது ஏற்பட்ட எரிச்சல் சற்று அடங்கியது.

'இவர்கள் எல்லாம் ஏன் நான் ஏதாவது செய்பவனாகத்தான் இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள்? அப்பா ஏன் தினமும் நான் ஒன்றும் செய்யாமல் இருப்பதைச் சுட்டிக் காட்டுகிறார்?' அவன் வீட்டுச் சூழ்நிலையில் அவன் சம்பாதித்தே ஆகவேண்டும். அந்த எதிர்பார்ப்புடன்தான் அவன் படிக்க வைக்கப்பட்டான்; அவர் மட்டுமில்லை. அவன் மாதிரி இருப்பவர்கள் எல்லோரும் அப்படித்தான் படிக்க வைக்கப் படுகிறார்கள். படிப்பு, சம்பாதிப்பதற்காகவே ஏற்பட்ட ஒன்று.

பரகு கேட்ட போது மேலே படிக்கச் சம்மதித்திருக்கலாம் என்று இப்போது தோன்றியது. அவன் படிப்பவனாக இருந்திருந்தால் இந்தக் கஷ்டங்கள் இல்லை. இரண்டு தோட்டுப் புஸ்தகங்களைத் தூக்கிக்கொண்டு அலைந்திருக்கலாம். இந்த மாதிரியான எதிர்பார்ப்புகளைத் தள்ளிப் போட்டிருக்கலாம். ஒரு நல்ல வேலை. முதல் தேதியானால் சம்பளம். அதை அப்படியே கொண்டு வந்து கொடுத்தல்... வேலை கிடைத்ததும் மறுபடியும் எதிர்பார்ப்புகள் தொடரும். அவன் கலயாணம் பண்ணிக்கொள்ள வேண்டும். ராமரத்தினம் மாதிரி நிறையப் போர் ஜாதகத்தோடு அலைவார்கள். அப்பா அதில் பொருத்தத்தைத் தேடுவார். பின்பு, பெண் பார்க்கப் போக வேண்டும். பஜ்ஜி சொஜ்ஜி சாப்பிட வேண்டும். பெண்ணிற்கு விலை குறிக்கப்படும். பேசப்படுகிற 'ரேட்' ஒப்புக் கொள்ளப்பட்டால் அடுத்த முகூர்த்தத்தில் நாள் குறிக்கப்படும். அதன் பின் ஒரு வருஷத்துக்கெல்லாம் அப்பாவாக

வேண்டும். பின் ஆபீஸ், வீடு; வீடு ஆபீஸ். இதற்கெல்லாம் விமோசனமே கிடையாது என்று தோன்றியது.

அவன் மிகவும் களைத்துப் போனான். சுற்றி ஒரு தரம் பார்த்தான். பின், பஸ்ஸுக்கு வெளியில் பார்த்தான். வேகமாக நடக்கிற மனிதர்கள், போகிற கார்கள், ஸ்கூட்டர்கள், பெரிய கட்டடங்களில் கடைகள், கூடைக்காரர்கள், கை வண்டி இழுப்பவர்கள் எல்லோரும் ஏதாவது செய்பவர்களாகத்தான் இருக்கிறார்கள். எதற்காவது அல்லப்பவர்களாகத்தான் இருக்கிறார்கள். தன்னைப் போல எதுவும் செய்யாமல் இல்லை. செய்யக் கூடாது என்று நினைப்பவர்களாக இல்லை; எதையாவது செய்துதான் ஆகவேண்டும். அதிலிருந்து மீள முடியாது.

இப்போது என்ன செய்வது? எங்கே போவது? வீட்டுக்குப் போகலாமா? போய்ப் படித்துக் கொண்டிருக்கிற புஸ்தகத்தைத் தொடர்ந்து படிக்கலாமா...? ஆனால் வீட்டுக்குப் போகக் கூடாது என்று முடிவு செய்தான். போனால் புஸ்தகம் படிக்க முடியாது. அப்பா இண்டர்வ்யூ என்ன ஆயிற்று என்று கேட்பார். அவருக்கு எல்லாவற்றையும் சொல்லியாக வேண்டும். அவர்கள் கேட்ட கேள்விகள்- அவன் சொன்ன பதில்கள்-சொன்னபோது இருந்த அவர்களின் முகபாவங்கள்-பின் வெளியில் வந்தது-பஸ்ஸுக்கு நின்றது-பஸ் கிடைத்து வந்து இறங்கினது எல்லாம் ஒன்றுவிடாமல் சொல்லியாக வேண்டும். இடையில் கேள்விகளாகக் கேட்பார். கடைசியில், ''உனக்கு என்ன தோணறது? இந்த வேலை கெடச்சிடும்மா?'' என்று கேட்டு நிறுத்துவார். அதற்குப் பதில் சொல்ல வேண்டிய தர்ம சங்கடமான நிலையில் அவனை வைப்பார். அதையே திரும்பவும் அகிலாவும் கேட்பாள். ருக்மிணி...? அவள் கேட்கமாட்டாள். இதுவரை வேலையைப் பற்றி அவள் ஒன்றும் பேசினதில்லை.

உடனே அவனுக்கு ஜமுனாவின் ஞாபகம் வந்தது. இப்பொழுது ஜமுனாவின் ஆபீசுக்குப் போய் அவளைப் பார்த்தால் என்ன என்று தோன்றியது. போனால் அவளும் வேலையைப் பற்றித்தான் முதலில் கேட்பாள். அவனுக்குக் கோபம் வரும். பின், சுமுகமாக எதுவும் பேச முடியாது. ஜமுனா இப்படித்தான் அடிக்கடி அவனைக் கோபப்படுத்துவாள். பின்,

ஐந்து நாட்களுக்கு அவளைப் பார்க்கப் போகாமலே இருப்பான். அவள் அவளைச் சந்திக்க முயற்சி செய்து அவளுடைய நண்பன் பத்ரியின் வீட்டுக்குப் ஃபோன் பண்ணிச் சொல்லுவாள். அன்று மாலை மறுபடியும் அவளைப் போய்ப் பார்ப்பான். ஜமுனா அவனுக்கு அறிமுகமான இந்த ஒரு வருஷத்தில் நிறையத் தரம் அப்படிச் சண்டைகள் போட்டாகி விட்டது. ஜமுனாவுடன் எப்படிப் பழக முடிகிறது தன்னால் என்று நினைத்துப் பார்ப்பான். சந்தித்த அந்த நண்பனைக் கத்தரித்த மாதிரி எல்லோரையும் மிகவும் நாசூக்காகக் கத்தரிக்கிற தன்னால், ஜமுனாவை மட்டும் ஏன் அப்படிக் கத்தரிக்க முடியவில்லை? அவள் பெண் என்பதாலா? ஆம்; அப்படித்தான் இருக்க வேண்டும். அவள் அழகான ஒரு பெண் என்பதுதான் காரணம். என்ன உண்மைகள்-சுடுகிற உண்மைகள்.

ஜமுனாவின் ஆபீசுக்கு முந்தின ஸ்டாப்பிங்கிலேயே இறங்கி நடக்க ஆரம்பித்தான்.

14

நடந்து வந்தபோது ஒரு நர்ஸரி ஸ்கூல் கண்ணில் பட்டது. அதன் வாசலில் ஓர் ஓரமாய் நின்றான் விஸ்வம். அந்தப் பக்கம் வருகிற போதெல்லாம் அப்படி நிற்பது வழக்கமாகிவிட்டது. ஐந்து நிமிஷமாவது நின்று பார்க்கத் தவறினது இல்லை. யூனிஃபாரம் அணிந்த சின்னஞ்சிறு உருவங்கள் அவளை எப்போதும் பரவசப்படுத்தும். அன்றும் அதே பரவசத்துடன் நின்று பார்த்தான்.

பெரிய காம்பவுண்டினுள் நிறையப் பேர் விளையாடிக் கொண்டிருந்தார்கள். அலுமினியப் பெட்டியைத் தூக்கிக்கொண்டு சிலர் வெளியில் வந்து கொண்டிருந்தார்கள். வாத்து மேய்க்கிற மாதிரி ஓர் ஆயா பத்துப் பதினைந்து குழந்தைகளை முன்னால் போகவிட்டுப் பின்னாலேயே நடந்தாள். சளசளவென்று பேச்சுச் சட்டம். ரிரிப்புச்சத்தம் வெளியில்வருகிறகார்ஹார்ன்களின்சத்தம். தோளில் கை போட்டுக் கொண்டு இரண்டு பேர் கிரிக்கெட் பற்றிப்

பேசிக் கொண்டு போனார்கள். வாசல்வரை ஒன்றாக நான்கு சிறுவர்கள் 'பை' சொல்லிப் பிரிந்தார்கள். மழலை கவர்ந்த அந்தக் கொச்சை ஆங்கிலம் விஸ்வத்தைச் சிரிக்க வைத்தது. புன்சிரிப்பாய்ச் சிரித்துக் கொண்டான். உடனே ஒரு வருத்தமும் ஏற்பட்டது.

நாளைய கவலைகளுக்காக இன்று இவர்கள் பள்ளிக் கூடத்திற்கு அனுப்பப்படுகிறார்கள். இந்தச் சிரிப்பு, இந்தச் சந்தோஷம், இந்த உற்சாகம் எல்லாம் கொஞ்சம் கொஞ்சமாக மாறிக் கொண்டே வரும். இவர்கள் பரீட்சை எழுதுவார்கள். மேல் வகுப்பிற்கு அனுப்பப்படுவார்கள். ஹைஸ்கூலுக்குப் போவார்கள். பின், காலேஜிற்குப் போவார்கள். அப்போது இவர்கள் பேச்சு கிரிக்கெட் பற்றினதாக இல்லாமல் பெண்கள் பற்றினதாக இருக்கும். ''யஸ்டர்டே ஐ ஸா தட் டேம் யா!'' (Yesterday I saw that dame ya!)என்பார்கள். பேசும்போது கண்கள் பளபளக்கும்; குரல் மாறிப் போகும். குரல் மட்டுந்தானா...?

தான் ஜாக் அண்ட் ஜில் சொன்ன நாட்களை நினைத்துப் பார்த்தான். பாட்டியிடம் போய் 'ஐ வான்ட் வாட்டர்' என்று, தான் புதுசாகக் கற்றுக் கொண்ட ஆங்கிலம் பேசின நாட்கள். அவள், 'இதப் பாருடா ஜகல்னாதா, உன் பிள்ளை என்னை ஏதோ வையறான்!' என்று சொன்னதைக் கேட்டு விழுந்து விழுந்து சிரித்த நாட்கள்; ராத்திரியில் அப்பாவின் மடியில் உட்கார்ந்து நர்ஸரி ரைம் ஒவ்வொன்றாகச் சொல்லிக் காட்டின நாட்கள் - அப்போது முகம் பெருமையில் மலர்ந்திருக்கும்! ஆங்கிலம் பேசுகிற பெருமை; தன் மிஸ்ஸைப் பற்றின பெருமை; கூடப் படிக்கிற பையன்களைப் பற்றின பெருமை; தான் இனாஸ் வீடராக இருக்கிற பெருமை; வகுப்பில் பண்ணுகிற அட்டகாசங்களைப் பற்றின பெருமை; உதட்டைக் குவித்து அவற்றைச் சொல்லுகிற விதத்திலேயே ஒரு பெருமை. 'எவ்வாவ்தான் இந்த மாதிரி அழகாகச் சொல்ல முடியும்!' என்கிற மாதிரி... இவர்களும் வீட்டிற்குப் போய் பாட்டியிடம் இங்கிலீஷ் பேசுவார்கள். தங்களைப் பற்றிப் பெருமை யடித்துக் கொள்வார்கள். நர்ஸரி ரைம் சொல்லுவார்கள். பின் இதே மாதிரி ஒரு நாள் ஒரு ஸ்கூல் வாசலில் நின்று ஏக்கமாகப் பார்ப்பார்கள்...!

ஒரு பெருமூச்சோடு மேலே நகர்ந்தான் விஸ்வம். சிறிது தூரம் போனதும் எதிர் பக்கத்தில் கொஞ்சம் தள்ளி ஜமுனாவின் ஆபீஸ் கட்டடம் தெரிந்தது. சிவப்பு நிறத்தில் செங்கற்களை அடுக்கி வைத்த மாதிரி இருந்தது. அதைப் பார்க்கிற போதெல்லாம் விஸ்வத்தின் மனசு சிணுங்கும். சற்று முன் அனுபவித்த பரவசம் மறைந்து போகும். போலீஸ் ஸ்டேஷனின் நினைவு வரும். வாசலில் நிற்கிற கூர்க்கா நுப்பாக்கி பிடித்த கான்ஸ்டபிளாகக் கண்ணுக்குப்படுவான். உள்ளே வேலை செய்கிறவர்கள் எல்லாம் கைதிகளாகத் தெரிவார்கள். ஒரு விதத்தில் அவர்கள் கைதிகள் தாம் என்றும் தோன்றும். ஒரு செக்ஷன்- மேற்பார்வைக்கு ஒரு சூப்பர்வைஸர்-ஒரு இரும்பு மேஜை அதன் மீது ஒரு டைப் ரைட்டர்-சில காகிதங்கள்-ஃபைல்கள்-லெட்ஜர்கள்-மூளையைக் குடையும் எண்கள், எண்கள், எண்கள்! 'மை குட்நெஸ்!' என்று முணுமுணுத்துக் கொண்டான். தான் இன்னும் அந்த மாதிரி ஒரு கைதியாக மாறாததை நினைத்துச் சந்தோஷப்பட்டுக் கொண்டான்.

தன்னுடைய இந்த நிலையில் கிடைக்கிற சில சௌகரியங்களை நினைத்துக் கொண்டான். நினைத்தால் லைப்ரரியில் போய் உட்கார முடிகிறது, பார்க்க முடிகிறது. ப்ளே டயமண்டில் சினிமா பார்க்க முடிகிறது. 'டிரைவ் இன்'னில் வருகிற பெல்பாட்டம்'ங்களைப் பார்த்துக் கொண்டே காபி குடிக்க முடிகிறது. மௌண்ட் ரோடில் சுற்ற முடிகிறது. இந்த மாதிரி ஜமுனாவின் ஆபீசுக்கு வர முடிகிறது...!

சாலையைக் கடக்க வெள்ளைக் கோடு போடப்பட்டிருந்த இடத்திற்கு வந்து நின்று கொண்டான். குறுக்கில் வண்டிகள் போய்க் கொண்டிருந்தன. நடுவில் பீடத்தில் நின்றிருந்த போலீஸ்காரரின் கை நீட்டலுக்குப் பணிந்து கொண்டிருந்தன. அவர் போகச் சொல்லிக் கை காட்டினால் போயாக வேண்டும். நிற்கும்படி சைகை செய்தால், நின்றாக வேண்டும். விஸ்வம் தான் நின்று கொண்டிருந்த பக்கத்தைப் பார்த்தான். வரிசையாக வண்டிகள். ஒரு பஸ், ஒரு அம்பாஸடர், ஒரு ஃபியட். மறுபடியும் நீல நிறத்தில் ஒரு அம்பாஸடர், ஒரு சாம்பல் நிற ஹெரால்ட், ஒரு வெள்ளை ஒக்ஸ்வாகன், ஒரு பச்சை பிளிமத், ஒரு அசோக் லேலண்ட் பஸ்... வரிசையாக உறுமும் எஞ்சினுடன் காத்துக் கிடந்தன. இதைப் பார்த்தபோது விஸ்வத்துக்குச் சந்தோஷமாக இருந்தது. இவை அத்தனையும் அந்தப் போலீஸ்காரர் கட்டுப்படுத்துகிறார். தம் கையசைப்பில் இத்தனை பேர்களைக் கட்டுப் படுத்துகிற அவர் அப்போது ஒரு ராஜா மாதிரி உணரக்கூடும் என்று நினைத்தான். ஆனால் அந்தப் போலீஸ்காரர் களைத்துத் தெரிந்தார். ஓர் ஆர்வமோ, சந்தோஷமோ இல்லாமல்தான் அத்தனை கார்களையும், பஸ்களையும், மனிதர்களையும் கட்டுப்படுத்துவதை நினைத்துப் பெருமைப் படாதவராகத் தெரிந்தார். சலித்துப் போன மாதிரிகூடக் காணப்பட்டார். அருகில் போய்ப் பேசினால், ''என்ன சார் வேலை இது? பேஜார் புடிச்ச வேலை!'' என்று நிச்சயமாய்க் குறைபட்டுக் கொள்வார்கள். குறுக்கில் போய்க் கொண்டிருந்த வண்டிகளின் எண்ணிக்கை குறைந்ததும் இவர்களுக்குப் போக வழி விட்டார். விஸ்வம் அவசரப்படாமல் நிதானமாக நடந்து எதிர்ப் பக்கம் போய் ப்ளாட்ஃபாரத்தில் ஏறி, மறுபடியும் நடக்க ஆரம்பித்தான்.

நாலடிகள் போனதும் ஒரு ஹிப்பி இளைஞன் அவனை நிறுத்தினான். அமெரிக்கக் கொச்சையில், ''ஜெமினி எங்கே இருக்கிறது?'' என்று கேட்டான். வழி சொன்னதும் ''தாங்க்ஸ்?'' சொல்லிவிட்டு அவள் போவதைப் பார்த்துக் கொண்டு நின்றான் விஸ்வம். மனசில் ஏக்கம் வழிந்தது. நர்ஸரி பையன்களைப் பார்த்த அதே பார்வை; தோளில் ஒரு பையைத் தொங்கவிட்டுக் கொண்டு அந்த மாதிரி அலைவதில் இருக்கும் சந்தோஷத்தை இழக்கிற வருத்தம் தெரிந்தது. அதுபோல் இருந்தால் காலையில் ஆறு மணிக்கெல்லாம் எழுந்திருக்கிற அவசரம் இல்லை. உடனே பல்தேய்க்கிற அவசியம் இல்லை. குளிக்க வேண்டும் என்கிற நிர்ப்பந்தம் இல்லை. உடைகளைப் பற்றின கவனம் எதுவும் தேவை இல்லை. முக்கியமாக, வேலைக்காக ஒவ்வோர் இன்டர்வ்யூவாகப் போய்க் கொண்டிருக்கிற கிரமம் இல்லை. எத்தனை நிம்மதியான வாழ்க்கை! எவ்வளவு சுதந்திரம்! கமைகள் எதுவும் இல்லாமல், பாதுகாப்பு எதுவும் இல்லாமல்... பெரிசாய் ஒரு தாம் மூச்சுவிட்ட விஸ்வம், கைக் கடிகாரத்தைப் பார்த்தான். நாலரை.

நாலரைக்கெல்லாம் போனால் ஜமுனாவைப் பார்க்க முடியாது. அவள் ஆபீஸ் வாசலில் அரை மணி நேரத்திற்கு மேல் தவம் கிடக்க வேண்டும். நேராக உள்ளே போய்த் தன்னைப் பார்ப்பதை விரும்பாதவள் அவள். அந்த மாதிரி அடிக்கடி அவன் வந்தால் தான் நிறைய பேரின் கேள்விகளுக்குப் பதில் சொல்ல நேரிடுமாம். அதனால் அவனை ஆபீஸ் வாசலில் ஓர் ஓரமாக நிற்கச் சொல்வாள். எதேச்சையாகச் சந்திக்கிற மாதிரி 'ஹலோ!' சொல்வாள். உடனே சட்டென்று ஓர் ஆட்டோ பிடிக்கச் சொல்வாள். இரண்டு பேரும் ஏறிக் கொள்வார்கள். பின் பீச்சுக்கோ, ஏதாவது கூட்டம் இல்லாத ரெஸ்டாரெண்டுக்கோ போவார்கள். ரெஸ்டாரெண்டைத் தேர்ந்தெடுப்பதில் கூட மிகவும் கவனமாக இருப்பாள் அவள். ''அந்த ஓட்டல் வேணாம். அங்கே நிறையத் தெரிஞ்சவர்கள் வருவார்கள்!'' என்பாள். விஸ்வம் இன்னோர் ஓட்டலின் பெயரைச் சொல்வான். ''ஹூம்! அங்கேயும் வேணாம். ஆபீஸ்ல வேலை செய்யற பாதிப் பேரும் காப்பி குடிக்க இப்ப அங்கேதான் போயிருப்பார்கள்!''

''சரி, எங்க போகலாம்னு நீயே சொல்லு.''

''பீச்சுக்குப் போகலாம். ஏ.ஐ.ஆர். எதிர்ல கூட்டம் இருக்காது.''

''ஓ.எஸ்!'' என்று உற்சாகமாகத் தலையாட்டுவான் விஸ்வம். எத்தனை தரம் போனாலும் அலுக்காத இடம் அது. எப்போது பார்த்தாலும் புதிதாகத் தெரிகிற இடம். அந்த நீல நிற வானம், உடலைத் தழுவும் காற்று, நகரும் மேகங்கள் இவற்றுக்கிடையில் அவளோடு அலையில் காலை நனைத்துக் கொண்டு நிற்க அவனுக்குப் பிடிக்கும். பேசிக் கொண்டே மணிக்கணக்கில் கூட நிற்பான்.

''போறும் புடவையெல்லாம் நனையறது; அப்புறமா அம்மா கண்டுபிடிச்சுடுவா. ஏண்டி புடவைலாம் நனைஞ்சிருக்கு? எங்க போனேன்னு கேட்பா...?'' என்று அவள் மனலுக்குத் திரும்பினதும் அவனும் திரும்புவான். அற்புதமான ஒரு கனவு கலைந்த மாதிரி உணருவான். ஆனாலும், அவளுடன் பேசுவதில் மறுபடியும் அந்தக் கனவைத் தொடர முயற்சி செய்வான்-

அன்றும் பீச்சுக்கே போகலாம் என்று முடிவு செய்தான். ஐந்து மணிவரை என்ன செய்வது என்று யோசித்தான். பக்கத்தில் ஏதோ ஒரு சின்ன ஹோட்டலின் பெயர் கண்ணில் பட்டது. உள்ளே நுழைந்து மூலையில் தனியாகக் கிடந்த மேஜை ஒன்றில் போய் உட்கார்ந்து கொண்டான். ஸ்டாண்டில் வைத்திருந்த ரேடியோ விலிருந்து அபத்தமாய் ஒரு சினிமாப் பாட்டு வந்து கொண்டிருந்தது. கீச்சுக் குரலில், யாரோ, 'நீ, நான், நிலவு, உறவு' எல்லாம் கத்தினார்கள். அந்தப் பாட்டுக்கான படத்தின் காட்சி எப்படி இருக்கும் என்று கற்பனை பண்ணிப் பார்த்தான். இறுக்கமான உடையில் ஒருத்தி கை காலை ஆட்டுவாள். வசீகரமாகச் சிரிக்க முயற்சி செய்வாள். ஹீரோவையோ அல்லது வில்லனையோ மயக்க வேண்டும் என்பது அவளது தோக்கமாக இருக்கும். நைட் கிளப் மாதிரி ஓர் இடம் உருவாக்கப்பட்டிருக்கும். ஒவ்வொரு மேஜையிலும் இரண்டிரண்டு பேர்களாக உட்கார்ந்திருப்பார்கள். அவள் ஆடிக் கொண்டே அந்த ஹீரோவையோ வில்லனையோ நெருங்குவாள்...!

டக்கென்று தண்ணீர் நிறைந்த டம்ளர் மேஜை மேல் வைக்கப்படுகிற சத்தம் கேட்டது.

''என்ன சார் வேணும்?''

''சூடா என்ன இருக்கு?''

''பஜ்ஜி, போண்டா, வடை, தோசை எதுவும் சூடு இல்ல சார். அஞ்சு மணிக்கு மேலதான் சூடாகக் கெடைக்கும்.''

இவள் தன் முதலாளிக்குத் துரோகம் செய்கிறாள் என்று நினைத்துக் கொண்டான் விஸ்வம். சிரித்துக் கொண்டே, ''ஒரு கப் காப்பி. ஆனா மெதுவாகக் கொண்டு வாப்பா!'' என்றான். அந்த சர்வர் தோழமையாய்ச் சிரித்துக் கொண்டு போனான். அவன் போனதும் நாற்காலியின் பின்னால் வசதியாகச் சரிந்து கொண்டு கண்களை மூடினான்.

இப்போது கீச்சுக் குரல் நீ-நான்-நிலவு-உறவு எல்லாம் முடிந்து சோகமாக ஓர் ஆண் குரல் அழுதது. காதல் தோல்விக்காக அழுதது! காதலுக்காக மட்டுமில்லை-எதற்கெடுத்தாலும் கண்ணீர்விட நம் தமிழ்ப் படக் கதாநாயகர்களுக்குத் தான்

முடிகிறது என்று நினைத்து விரல்களால் காதை மூடிக் கொண்டான் வில்வம். பாட்டுச் சத்தம்-கண்ணாடி டம்ளர் சத்தம்-அலுமினியத் தட்டுகள் இடிபடுகிற ஓசை-பேச்சுக் குரல்கள் எல்லாம் மெல்ல மறைந்தன. மெதுவாக நிசப்தமாயிற்று. தூங்குறெ நிலையில் இருந்தான் அவன். கனவுகளாக வந்து போயின. கனவுகள் இல்லை; எல்லாம் கற்பனைகள். அவள் அந்த மாதிரியெல்லாம் இருக்க நினைக்கிற நிஜங்கள். இப்போது அவற்றின் நிழல்கள்... அதில் தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டான்.

தன் தோளில் ஒரு கேன்வாஸ் பையை மாட்டிக் கொண்டு தன்னந் தனியாய் ஒரு மலை மீது ஏறுகிறான். உயரத்திலிருந்து விழுகிற நீர் வீழ்ச்சியில் கை நீட்டி உள்ளங்கை நிறையத் தண்ணீர் பிடித்துக் குடிக்கிறான். முகத்திலும் வாரித் தெளித்துக் கொள்கிறான். பின், சுற்றிப் பார்த்துக் கொண்டே மெதுவாகக் கீழே இறங்கி வருகிறான். ஒரு மத்தியானப் போதில் கடற்கரைக்குப் போய் அலையில் காலை நனைத்துக் கொண்டு நிற்கிறான். ஒரு மலைப்புறத்து விடியற்காலைப் பனியில் நடந்து கொண்டே போகிறான். ஏதோ ஒரு கிராமத்தின் பாழ் மண்டபத்தில் உட்கார்ந்து எதிரில் இருக்கிற பாசி பிடித்த குளத்தில் கல்லெறிந்து கொண்டிருக்கிறான். 'களுக்.களுக்' என்ற சத்தத்தில் கற்கள் அமிழுகின்றன. பாசி கொஞ்சம் விலகுகிறது. பசுமையான ஒரு வயல் வெளியில் வரப்புகளில் கதிர்களைத் தடவிக் கொண்டே போகிறான். மேலே வானத்தில் சின்னச் சின்ன விளக்குகளாக ஏற்றிக் கொண்டிருந்த நட்சத்திரங்களைப் பார்த்தபடி நிற்கிறான். லேசான தூறலில் நனைகிறான். ஒரு சின்ன கிராமத்தின் தெப்பத் திருவிழாவில் சுற்றுகிறான். பலூன் ஊதல் வாங்கி ஊதுகிறான். நாலைந்து ஆடைகளற்ற சிறுவர்கள் அவன் பின்னாலேயே சுற்றுகிறார்கள். அவர்களுக்கும் பலூன், ஊதல் வாங்கித் தருகிறான். எல்லோரும் ஊதுகிறார்கள். பலூன் பெரிதாகிறது. 'ஙொய்ய்' என்ற சத்தத்துடன் சுருங்குகிறது. மறுபடியும் ஊதுகிறார்கள். மறுபடியும் 'ஙொய்ய்ய்!'

கோப்பை மேஜை மேல் வைக்கப்படுகிற சத்தத்தில் அவன் கலைந்தான். சட்டென்று கண்களைத் திறந்தான். எதிரில் அந்த

சர்வர் சிரித்துக் கொண்டு பில்லை நீட்டினான். ரேடியோ அலறியது. கண்ணாடி டம்ளர்கள் இடிபட்டன. தட்டுகள் மோதின. பேச்சுக் குரல்கள் கேட்டன. கற்பனையில் ஏற்பட்ட ஆசுவாசம் மறைந்து போய் இப்போது களைப்பாக உணரத் தொடங்கினான்.

காபியை எடுத்துக் குடிக்க ஆரம்பித்தான். மோசமான சர்க்கரை இல்லாத அந்தக் காபிகூட அப்போது இதத்தை அளித்தது.

15

கர்ச்சீப்பால் முகத்தை அழுத்தித் துடைத்துக் கொண்டே அந்த ஓட்டலை விட்டு வெளியே வந்தான் வில்வம். ரேடியோவிலிருந்து வந்த அபத்தமான இரைச்சல் காதில் விழாதது நிம்மதியாக இருந்தது. தெருவில் இப்போது கார்களும், நடமாட்டமும் அதிகமாகி இருந்தன. வெயில் நன்றாகத் தாழ்ந்து போய்விட்டது. லேசாய்க் காற்றுக்கூட வீச ஆரம்பித்திருந்தது. அதில் கொஞ்சம் கறுகறுப்பாய் உணர்ந்தான். நிமிர்ந்து ஒரு தரம் வானத்தைப் பார்த்தான். நல்ல நீலத்தில் ஒரு மேகங்கூட இல்லாமல் பெருக்கித் துடைத்த மாதிரி இருந்தது. இவனுக்குப் பிடித்தமான வெளிர் நீலம். கண்ணுக்குக் குளிர்ச்சியாகத் தெரிந்தது. இந்த மாதிரி இருக்கிற வானத்தைப் பார்க்கிற போதெல்லாம் சந்தோஷமாக உணருவான். அந்தச் சந்தோஷத்தை அநுபவித்தபடி மெதுவாக நடந்து ஜமுனாவின் ஆபீசை நெருங்கினான். 'கேட்டு'க்குப் பக்கத்தில் வருகிறவர்களைப் பார்த்துக் கொண்டே ஓர் ஓரமாக நின்றான். ஒவ்வொரு பேச்சாகக் காதில் விழுந்தது. ஓர் ஆபீசில் வேலை செய்கிற அநுபவத்தை அவனுக்குள் ஏற்படுத்தியது.

''இன்னிக்கு மட்டும் பதினைஞ்சு லெட்டர்டா, மூர்த்தி! கை ஒடிஞ்சு போச்சு!''

''அதுசரி, கார்த்தால நம்ம சுப்பிரமணி, திடுமுஞ்சிகிட்ட ஏதோ அர்ச்சனை வாங்கிக் கட்டிண்டான் போல இருக்கே?''

''ஆமாம். ஏதோ பில் பாஸாகலையாம்.''

''நாளைக்கு எங்க ஹஸ்பண்ட் ஓ.ஏ.டி. டூர்ல போறார். வர பதினைஞ்சு நாளாகும்.''

''அப்படின்னா இப்ப சீக்கிரமாய்ப் போங்க, ஜயலட்சுமி. பாவம், காத்துண்டு இருக்கப் போறார்!'' - ஒரு சிரிப்புச் சத்தம்.

''ஆமாம், எங்கே போறார்?'' என்ற கேள்வி.

''ஸைதராபாத்.''

''அப்படின்னா நிறையப் புடவை வாங்கிண்டு வரச்சொல்லுங்க, அங்கே தன்னா கிடைக்கும்...!''

இவர்களின் உலகமெல்லாம் புடவையில் அடங்கிப் போய்விடுகிற அதிசயத்தை நினைத்துக் கொண்டான் விஸ்வம். தன்னைக் கடந்து போன எல்லாப் பெண்களும் வயதானவர்களாக இருப்பதைக் கவனித்தான். இவர்களுக்கிடையில் ஜமுனா தனியாகத் தான் உணருவாள் என்று நினைத்தான். பேசத் துணையாக யாரும் இருக்க மாட்டார்கள். மனசைப் பகிர்ந்து கொள்ள ஒருவரும் கிடைக்க மாட்டார்கள்.

''எங்க ஆபீஸ்ல நான் ஒருத்திதான் கல்யாணமாகாதவள்...!'' என்று எப்போதோ அவள் சொன்னது நினைவுக்கு வந்தது. இப்போதெல்லாம் இதை அடிக்கடி சொல்கிறாள் அவள். சொல்கிறபோது வெளிவருகிற வார்த்தைகளின் அழுத்தத்தை நினைத்துச் சிரித்துக் கொண்டான். அவளும் சில சமயங்களில் புத்திசாலித்தனமாகத்தான் பேசுகிறாள்! அதற்கும் தான்தான் காரணம் என்று தோன்றியது. தனக்குள் வளர்ந்து போயிருந்த 'ஈகோ'வை நினைத்துக் கொண்டான். உடனே அன்றிரவு ருக்மிணியிடம் பேசியது ஞாபகத்துக்கு வந்தது.

''இந்தப் பாட்டுக்கும் அந்த ஜமுனாவுக்கும் ஏதாவது சம்பந்தமிருக்கா?''

''தெரியலை....''

''தெரியலைன்னா...?''

''தெரியலைதான்.''

''தெரியலையா?'' என்று இப்போது தன்னையே கேட்டுக் கொண்டான். நிஜமாகவே தெரியலையா? அப்படியானால்

எதற்காக இப்படிக் கால் மணி நேரமாய் அவள் ஆபீஸ் வாசலில் காத்துக் கொண்டிருக்க வேண்டும்? ஏதோ, ஒரு மட்டமான ஓட்டலில் காபி குடித்து நேரத்தை ஓட்ட வேண்டும்? இதற்கெல்லாம் உண்மையாகவே 'தெரியலை' தான் பதிலா...?

சட்டென்று அவன் நிமிர்ந்தபோது ஜமுனா யாருடனோ பேசிக் கொண்டு வெளியில் வந்தாள். இவனைப் பார்த்ததும் ஆச்சரியத்தில் புருவம் ஒரு தரம் சுருங்கி விரிந்தது. முகம் சந்தோஷமாயிற்று. கூட இருந்தவளிடம் ஏதோ சொல்லி விடை பெற்றாள். அவள் இவன் முதுகில் தட்டிக் கொடுத்தாள். அவன் சிரித்துக் கொண்டே நேராக அவனிடம் வந்தாள். அவன் புன்னகையுடன், ''ஹலோ!'' என்றான்.

''இன்னிக்கு வரப்போறதா சொல்லவே இல்லியே?''

''வர்றதா இல்லை. திடீர்னு நினைச்சுண்டு வந்தேன்.''

''முன்னாலேயே ஆபீசுக்கு ஒரு ஃபோன் பண்ணி இருக்கலாமே?''

''ஏன், ஃபோன் பண்ணாததாலே உனக்கு ஏதாவது கஷ்டமா?''

''அதெல்லாம் ஒண்ணுமில்லை. நேத்திக்கே தெரிஞ்சிருந்தா உங்களுக்குப் பிடிச்ச நீலப் புடவை கட்டிண்டு வந்திருப்பேன்!''

விஸ்வம் சிரித்தான். ''பரவாயில்லை. இந்தப் புடவையில் கூட நீ அழகாகத்தான் இருக்கே!'' - உடனே தனக்குக் கூட இந்த மாதிரியெல்லாம் பேச வருகிறது என்பதை நினைத்து ஆச்சரியப்பட்டுக் கொண்டான். 'உண்மையைத் தானே சொன்னோம்!' என்ற சமாதானமும் ஏற்பட்டது.

அதைக் கேட்டு உதட்டைக் குவித்துச் சந்தோஷமாகச் சிரித்தாள் ஜமுனா. பின்பு, ''இங்க நின்னு பேச வேணாம். ஒரு ஆட்டோ பிடிக்கலாம்!'' என்றாள்.

''எங்கே போறாம்?''

''நம்ம இடத்துக்கு.''

''எது நம்ம இடம்?''- வேண்டுமென்றே தெரியாத மாதிரி கேட்டான்.

''மீச்தான் வேற எது?''

''ஓ.கே.''

எதிரில் போய்க் கொண்டிருந்த ஆட்டோவைக் கை தட்டி நிறுத்தினாள். அது அரைவட்டம் அடித்துப் பக்கத்தில் வந்து நின்றது. இரண்டு பேரும் ஏறிக் கொண்டார்கள். வழியில் ஏதோ பேச ஆரம்பித்தாள் ஜமுனா. ஆட்டோ சத்தத்தில் காதில் விழாததால் குவிந்து அவளருகில் போனான் விஸ்வம். அவள் சட்டென்று நகர்ந்து கொண்டாள். ''அப்புறம் சொல்றேன்'' என்று கத்தினாள். அவளது ஜாக்கிரதை விஸ்வத்தைச் சிரிக்க வைத்தது. எப்போதுமே அவள் இப்படித்தான் நடந்து கொள்கிறாள். தள்ளி உட்கார்ந்து, நக நுனிகூட மேலே படாமல் அவ்வளவு பாதுகாப்பாக... அது அவனை அவமதிக்கிற மாதிரிகூட இருக்கும்; சில சமயம் கோபமும் வரும். ஆனாலும் ஒன்றும் சொல்லாமல் இருந்து விடுவான். அப்போது எதுவும் பேசாமல் வெளியில் பார்க்க ஆரம்பித்தான். அயர்ன் பிரிட்ஜைத் தாண்டி, அண்ணா சமாதியைக் கடந்து, காந்தி சிலைக்கப்புறம் நொச்சிக் குப்பத்தின் பக்கத்தில் வந்து நின்றது ஆட்டோ. மீட்டரைப் பார்த்துப் பணத்தைக் கொடுத்தான். பின்பு இருவரும் இறங்கி நடக்க ஆரம்பித்தார்கள்.

''நாளைக்கு நான் இங்கே வரணும்!'' என்றான் ஆல் இண்டியா ரேடியோவைக் காட்டி.

''எதுக்கு?'' என்று கேட்டாள் அவள்.

''ஒரு புரோகிராம் இருக்கு. இளைய பாரதத்துல நான் என் கவிதை எல்லாம் படிக்கிறேன். நாளைக்கு அதல் ரெகார்டிங்...''

''அப்படியா...'' என்று நிறுத்திக் கொண்டாள் அவள். அது அவனை ஏமாற்றியது. 'எப்போது ஒலிபரப்பாகிறது? என்னென்ன கவிதைகள் படிக்கப் போகிறீர்கள்? - இப்படி ஏதாவது கேட்பாள் என்று எதிர்பார்த்தான். ஒன்றும் வராமற் போகவே அவனும் மௌனமாய் மணலில் இறங்கி நடந்தான்.

நீலத்தில் விரிந்து கிடந்த கடலைப் பார்த்ததும் மனசு சந்தோஷமாயிற்று. எல்லாம் அடித்துக் கொண்டு போன மாதிரி இலேசாயிற்று. தூரத்தில் தொடுவானத்திற்கு அருகில் போய்க்

கொண்டிருந்த இரண்டு கட்டு மரங்கள் சின்னப் பட்சிகளாகத் தெரிந்தன. இதை அப்படியே வரைய முடியுமானால் அற்புதமானதாய் இருக்கும் என்று நினைத்துக் கொண்டான். நாலைந்து மீனவச் சிறுவர்கள் சடுகுடு விளையாடிக் கொண்டிருந்தார்கள். ஒரு பட்டம் தனியாகப் பறந்து கொண்டிருந்தது. ஹார்பருக்கு வெளியில் ஐந்தாறு கப்பல்கள் வரிசையாக நின்று கொண்டிருந்தன; காற்று தலை முடியைக் கலைத்தது. கையால் அதை அடிக்கடி சரி பண்ணிக் கொண்டான். நுரையாகப் புரளுகிற அலையைப் பார்த்ததும் அதில் காலை நனைத்துக் கொண்டு நிற்க வேண்டும் போல் தோன்றியது.

''அலையில் போய் நிற்கலாமா, ஜமுனா?'' என்று உற்சாகமாகக் கேட்டான்.

''வேணாம். இங்கேயே உட்கார்ந்துக்கலாம்.''

''சரி?'' என்று கையில் இருந்த பையை மணலில் போட்டுவிட்டு உட்கார்ந்தான் அவன். இத்தனை நேரமாய்க் கழுத்தை இறுக்கின டையைக் கழற்றி ஃபைலின் மீது போட்டு விட்டான். சட்டையின் முதல் இரண்டு பட்டன்களை அவிழ்த்து விட்டான். மெம்பலும் திம்மதியாக உணர ஆரம்பித்தான். காற்று நன்றாக வீசியது. கொஞ்சம் தள்ளி எதிரில் உட்கார்ந்திருந்த ஜமுனா, அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

ஒரு பெரியவர் டப்பாவைத் தூக்கிக் கொண்டு அருகில் வந்தார்.

''சுண்டல், முறுக்கு, மிளகு வடை சார்...?''

''ஏதாவது சாப்பிடறியா?'' என்று கேட்டான். 'வேண்டாம்' என்று தலையாட்டினாள் ஜமுனா. ஆனாலும் அவன் மிளகு வடையும், முறுக்கும் வாங்கினான். அவளிடமும் கொடுத்தான். அவள் ஒன்றும் சொல்லாமல் வாங்கிக் கொண்டாள். சாப்பிட்டுக் கொண்டே, 'ஆட்டோவில் வர்றபோது என்னவோ சொல்லியே-?' என்று ஞாபகப்படுத்தினாள்.

அவள், ''ம்...?'' என்று இழுத்தவாறு கடலைப் பார்த்தபடி பேசாமல் இருந்தான். முகம் மாறிப் போயிற்று. கண்களில் ஒரு சுமை வந்து இறங்கின மாதிரி தோன்றியது.

''என்ன, ஜமுனா?'' என்று மறுபடியும் கேட்டான்.

''ம்... ஒண்ணுமில்ல. மிஸஸ் தாஸ் என்னைச் சீக்கிரம் கல்யாணம் பண்ணிக்கச் சொல்றா...!''

அதைக் கேட்டதும் அடக்க முடியாமல் அவன் பெரிதாய்ச் சிரித்தான்.

அவள் முகம் சிணுங்கியது.

''என்ன விஸ்வம் சிரிக்கிறீங்க?'' என்று கோபத்தோடு கேட்டாள்.

அவன் சிரிப்பு நின்றவனாக அவளைப் பார்த்தான். அப்போதும் உதட்டில் ஒரு புன்னகை தவழ்ந்து கொண்டுதான் இருந்தது.

''ஒண்ணுமில்லே, ஜமுனா. மிஸஸ் தாஸுக்கு உன்னைப் பார்த்தால் பொறாமையாக இருக்கும்!''

''அதெல்லாம் ஒண்ணுமில்லை. அவளுக்கு என்னை ரொம்பப் பிடிக்கும். என் நல்லதுக்குத்தான் சொல்லுவாள். ஷி ஈஸ் எ நைஸ் வுமன்...!''

அவன் அதற்குப் பதில் சொல்லவில்லை. ஐ.ஜி.ஆபீஸின் பின்னால் சூரியன் மறைகிற அழகைப் பார்த்துக் கொண்டிருந்தான். ஒரு பெரிய சிவப்புக் கோளம் கொஞ்சம் கொஞ்சமாகக் கீழே இறங்கிக் கொண்டிருந்தது. வானத்தில் தூரிகையால் கோடிழுத்த மாதிரி பட்டை பட்டையாக அது தீட்டின நெருப்பு வர்ணம். இந்த மாதிரி ஓர் ஓவியத்தை எங்கோ பார்த்த ஞாபகம் வந்தது. எங்கே என்று யோசித்துப் பார்த்தான். யு.எஸ்.ஐ.எஸ்.லில் பின்னால் ரெஃபரென்ஸ் பகுதியில் மாட்டியிருப்பது நினைவுக்கு வந்தது.

''என்ன யோசனை?'' என்று அவன் கவனத்தைக் கலைத்தாள் ஜமுனா. தான் சொன்னதைப் பற்றித்தான் அவன் யோசித்துக் கொண்டிருக்க வேண்டும் என்று நினைத்தாள்.

''ஒண்ணுமில்லை ஜமுனா!'' என்று அவளைத் திரும்பிப் பார்த்தான் அவன்.

''இன்னிக்கு ஆபீஸில ஒரு இன்சிடென்ட் நடந்தது.''

''என்ன?''

''அந்த ராமகிருஷ்ணனைப் பத்திச் சொல்லலை... எப்பவும் என்னையே முறைச்சிப் பார்த்துண்டு இருக்கான். என் மேஜைக்கிட்ட வரபோதெல்லாம் 'ஐ லவ் யு!' னு பாட்டுப் பாடறான்...''

''ம்...''

''அவன் இன்னிக்கு ஒரு லவ் லெட்டர் எழுதி ஃபைல்லே வச்சு என்கிட்ட கொடுத்தான்.''

''இன்டரெஸ்டிங்!'' என்று கையில் இருந்த மணலைத் தட்டிக் கொண்டே நிமிர்ந்து உட்கார்ந்தான் விஸ்வம்.

''என்ன...!'' என்று எரிச்சலுடன் அவனை முறைத்தாள் ஜமுனா.

16

ஜமுனாவின் கோபத்தையும் கண்களின் பளபளப்பையும் பார்த்துப் புன்சிரிப்பாகச் சிரித்துக் கொண்டே, ''ம்...மேலே சொல்லு!'' என்றான்.

''என்னத்தைச் சொல்றது?'' என்று எரிந்து விழுந்தாள் அவள்.

''சரி, வேணாம்...'' என்று நிதானமாகச் சொல்லிவிட்டு அமைதியாக இருந்தான். மௌனமாய்க் கடலைப் பார்க்க ஆரம்பித்தான். ஓர் இடத்தில் சிறிது நுரையாக ஆரம்பித்து, விட்டு விட்டு, சுருள் சுருளாகப் புரண்டு, பின் நேராகக் கோடிழுத்த மாதிரி ஒன்றாய்ச் சேர்ந்து ஓடிவருகிற அலைகளின் அழகைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

அவன் பேசுவான் என்று எதிர்பார்த்த ஜமுனா அந்த மௌனத்தைத் தாங்க முடியாதவளாகத் தானே பேச்சை ஆரம்பித்தாள்.

''அந்த லெட்டரைப் படிச்சதும் நான் என்ன பண்ணினேன் தெரியுமா?'' என்று கேட்டாள்.

'என்ன?' என்கிறாற்போல் அவளைத் திருப்பிப் பார்த்தான்.

''லெட்டரை எடுத்துண்டு நேரே போய் மானேஜர் கிட்ட கொடுத்துட்டேன். மானேஜர் அவனைக் கூப்பிட்டு நல்ல 'டோஸ்' விட்டார். இரண்டு நாளைக்கு சஸ்பெண்ட் பண்ணி வச்சிருக்கார்...!''

உடனே பதில் எதுவும் சொல்லவில்லை அவன். அவள் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தான். அந்த ராமகிருஷ்ணனை நினைத்துக் கொண்டான். பரிதாபமாக இருந்தது. யாரையும் பார்க்காமல் தலையைக் குனிந்து கொண்டு வெளியேறுகிற ஓர் உருவம் தெரிந்தது.

''என்ன பதிலே இல்லை?''

''என்ன சொல்லணும்?''

''மனசிலே நினைக்கிறதைச் சொல்றது.''

''சொன்னால் உனக்குக் கோபம் வரும்.''

''இல்லை, சொல்லுங்க...''

''ஸில்லி!'' என்று ஒரு வார்த்தையில் சொன்னான்.

''எது?''

''நீ பண்ணினது.''

''என்ன?''

''ஆமாம், ஒரு பெண்ணுக்கு ஒருத்தன் லவ் லெட்டர் எழுதறது மகா பெரிய குற்றம் இல்லை. இதெல்லாம் ரொம்ப சாதாரண விஷயம். இதை நீ இவ்வளவு பெரிய விஷயமா ஆக்கி இருக்க வேணாம். அது உனக்குப் பிடிக்கலைன்னா அவனை கூப்பிட்டுப் பேசி இருக்கலாம். கடிதத்தை அவனிடம் திருப்பிக் கொடுத்திருக்கலாம். 'ஸாரி'ன்னு ஒரு வார்த்தை சொல்லி புத்திசாலித்தனமா தவிர்த்திருக்கலாம். அதுக்கு உனக்குத் தைரியமில்லை. உன் தைரியமில்லாத்தனத்துக்கு மானேஜரைத் துணைக்குக் கூப்பிட்டிண்டிருக்க வேணாம்...!''

அவள் அவனையே ஒரு நிமிஷம் பார்த்துவிட்டுத் தலையைக் குனிந்து கொண்டாள், கை மணலில் அளைந்தது.

என்ன சொல்லலாம் என்று யோசிக்கிற மாதிரி சிறிது நேரம் இருந்தாள். பின், பேச ஆரம்பித்தபோது குரல் தழைந்து மெதுவாக வந்தது.

''நான் பண்ணினது ஸில்லியாகவே இருக்கட்டும். எனக்குத் தைரியமில்லைன்னே வச்சுக்கோங்க, ஆனா மிஸஸ் தாஸ் சொல்றதுதான் சரியாப் படறது.''

''ஏது?''

''கல்யாணம் பண்ணிக்கறது.''

அதைக் கேட்டுக் கைகளை மணலில் ஊன்றிப் பின்னால் சரிந்து சிரிக்க ஆரம்பித்தான் விஸ்வம். முகம் சிவந்து போயிற்று. கண்களில் நீர் கட்டி விட்டது. ஒய ஒரு நிமிஷ நேரமாயிற்று. அதுவரை அவன் சிரிப்பதையே பார்த்துக் கொண்டிருந்த ஜமுனா, ''சிரிக்க முடிச்சாச்சா?'' என்று கேட்டாள்.

மறுபடியும் அவனுக்குச் சிரிப்பு வந்தது. அடக்கிப் புன்சிரிப்பாக மாற்றிக் கொண்டு, 'ஆயிற்று' என்று தலையாட்டினான். அது அவளை மேலும் கோபப்படுத்தியது.

''எதுக்கு சிரிச்சிங்க.''

''ஒண்ணுமில்லே...''

''எதுக்குன்னு நான் தெரிஞ்சுக்கக் கூடாதா?''

''இல்லே, ஒரு லவ் லெட்டருக்கு பயந்து, கல்யாணம் பண்ணிண்டுடறதானா இப்போ உன் வயசுலே இருக்கிற முக்கால்வாசிப் பேருக்குக் கல்யாணமாகி இருக்கும்.''

''அதுக்கு மட்டும் பயந்துண்டு சொல்லலை, விஸ்வம், எனக்குமே அதுதான் சரின்னு தோணறது.''

அவனிடமிருந்து பதில் இல்லை. மணலில் கோடுகள் வரைந்து கொண்டிருந்தான். ஒவ்வொரு கோடாகச் சேர்ந்து ஒரு பெண்ணின் முகமாயிற்று. மூக்கின் வலது பக்கத்தில் சின்னக் கிளிஞ்சல் துண்டை வைத்து மூக்குத்தியாக்கினான். ருக்மிணியின் முகமாகத் தெரிந்தது. அதையே பார்த்துக் கொண்டிருந்தான்.

''எத்தனை நாளைக்குத்தான் இப்படியே இருக்கிறது?''

சட்டென்று நிமிர்ந்து, ''எப்படியே?'' என்று கேட்டான்.

''இந்த மாதிரி யாருக்கும் தெரியாம பீச்சிலே சந்திச்சுண்டு...''

'''சரி நாளைலேர்ந்து பீச்சுல வேண்டாம். பார்க்கில சந்திக்கலாம்.''

அவள் முகம் சிணுங்கியது. கண்களில் 'கள்'ளென்று ஒரு கோபம் எட்டிப் பார்த்தது. ''விளையாடாதீங்க, விஸ்வம்!'' என்றாள் அழுத்தமான குரலில்.

அவள் உதட்டோரத்தில் தங்கிவிருக்கும் புன்னகை சட்டென்று மறைந்தது. என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் தலையைக் குனிந்துகொண்டான். ஆள்காட்டி விரல் மறுபடியும் மணலில் கிறுக்க ஆரம்பித்தது. சின்னக் குடிசை, அது மாறி ஒரு வீணை - பின், ஒரு தென்னை மரம், அது அழிந்து யானையாவ தற்குள் மீண்டும் ஜமுனாவின் குரல் கேட்டது. இப்பொழுது அழுத்தம் குறைந்து தாழ்ந்த ஒரு குரலில் மெதுவாகப் பேசினாள்!

''எங்க வீட்ல எனக்கு ஜாதகம் பார்க்க ஆரம்பிச்சுட்டா...!''

அவன் யானையைப் பாதியில் நிறுத்திக் கொண்டு கை மணலை உதறிவிட்டு, அவளை நிமிர்ந்து பார்த்தான்.

''ஆமாம், விஸ்வம். கல்கத்தாவில் யாரோ டாக்டராம். அம்மா சொன்னா. எனக்கு இப்போ கல்யாணம் வேணாம்னு பிடிவாதம் பிடிச்சு நிறுத்திட்டேன். அதனால் அம்மாவுக்கு என் மேல் ஒரே கோபம்!''

அதற்கும் அவள் பேசாமல் இருந்தான்.

''என் நிலைமை உங்களுக்குப் புரியலையே, விஸ்வம். எதையும் சீக்கிரமாப் புரிஞ்சுக்கற நீங்க, இதை மட்டும் ஏன் புரிஞ்சிக்கமாட்டேங்கறீங்க? ஒருநாள் லேட்டாப் போனால் கூட அம்மா ஆயிரம் கேள்விகள் கேட்கறா. நிறையப் பொய் சொல்ல வேண்டியிருக்கு. எனக்கு இந்த ஆபீஸ் வேலை எதுவும் பிடிக்கலை. எல்லாரையும் மாதிரி வீடு, குடும்பம்னு நிம்மதியா இருக்கமாட்டோமான்னு இருக்கு.''

அந்தக் குரலில் தொனித்த வருத்தம் அவளைக் கஷ்டப் படுத்தியது. அவளை நிமிர்ந்து பார்த்தான். கண்களும் முகமும் கெஞ்சுகிற மாதிரி இருந்தன. தான் அவளுக்குத் தவறு செய்துவிட் டதாகத் தோன்றியது. அவள் தன்னைச் சந்திக்காமல் இருந்திருந் தால் சந்தோஷமாக இருந்திருப்பாள். அம்மா சொல்கிற டாக்டர் பையனைக் கல்யாணம் பண்ணிக்கொண்டு - அவன் ஹாஸ்பிட லில் இருந்து திரும்புவதற்காகக் காத்திருந்து - அவனுக்குப் பிடித்தமானதைச் சமைத்துப் போட்டு - அவன் குழந்தைகளைச் சுமந்து கொண்டு...

இதில் அவள் நிச்சயமாகத் திருப்தி அடைந்துவிடுவாள். இது மட்டும் போதும் அவளுக்கு. தன்னைப் புரிந்துகொண்டவள் இல்லை அவள். தன் எண்ணங்களைப் பிரதிபலிப்பவள் இல்லை. அவள் ஒரு பெண். தாள் ஆணாக இருப்பது மட்டும் போதும். கொஞ்சம் அழகாக இருப்பதில் ஒரு திருப்தி. இன்னும் ஒரு வேலை தேடிக் கொண்டுவிட்டால்... ஜமுனா, நான் உனக்கு ரொம்பவும் திருப்தியானவனாய் ஆகிவிடுவேன் இல்லையா...?

வேலை இல்லாததை மறுபடியும் வசதியாக உணர ஆரம்பித்தான். ஆனாலும், அவள் மனசைப் புண்படுத்தாமல் நிதானமாகப் பேச முடிவு செய்தான். ஆறுதலாக அவள் ஏற்றுக் கொள்ளுகிறாற் போல் ஏதாவது சொல்ல வேண்டும்...

''என்ன யோசனை?''

''ஒண்ணுமில்ல, ஜமுனா. நீ சொன்னதைப்பத்தித்தான் யோசிச்சேன். என்னால்தான் நீ கஷ்டப்படறியோன்னு தோணறது. என்னைச் சந்திக்காம இருந்திருந்தா சந்தோஷமா இருந்திருப்பேன்னு நினைக்கறேன்...''

''நான் அப்படி சொல்லவியே...?'' என்று குறுக்கிட்டாள் அவள்.

''நீ சொல்லலை. நானாகத்தான் சொல்றேன். 'என் நிலைமை உங்களுக்கு ஏன் புரியலை'ன்னு கேட்டியே...? புரியாமே இல்லை, ஜமுனா. நன்னாப் புரியறது. ஆனா நீதான் என்னைப் பத்திக் கொஞ்சங்கூட யோசிச்சுப் பார்க்க மாட்டேங்கறே!''

''யோசிக்காம இல்லை. யோசிச்சுப் பார்த்துட்டுத்தான் சொல்றேன், சீக்கிரமா ஒரு வேலை தேடிக்கோங்கன்னு...''

''எங்கே கிடைக்கிறது?'' - அவன் ஓர் ஏளிச்சலுடன் கேட்டான்.

''உண்மையாய்த் தேடினால் கிடைக்கும்.''

''அப்போ நான் பொய்யாத் தேடறேன்னு சொல்றியா?''

''நான் சொல்ல வேணாம். உங்களுக்கே தெரியும்.''

அவன் அதிர்ந்து போய் அவளைப் பார்த்தான். அவள் மௌனமாய் இருந்தாள். சில நிமிஷங்களுக்குப் பேச்சு எதுவும் இல்லை. இரண்டு பேரும் அலையைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். தூரத்தில் லைட் ஹவுஸ் வெளிச்சம் பளிச்சிட்டு மறைந்தது. கப்பல்கள் விளக்கேற்றிக்கொண்டு கடலில் கட்டப்பட்ட அரண்மனைகளாக நின்றன. பானி பூரிக்காரரின் பெட்ரோமாக்ஸ் எரிய ஆரம்பித்துவிட்டது. விளையாடிக் கொண்டிருந்த மீனவச் சிறுவர்களைக் காணவில்லை. பட்டம் விட்டுக் கொண்டிருந்த பையனும் இல்லை. தங்களைச் சுற்றி யாரும் இல்லாததை அப்போதுதான் கவனித்தான் அவன். வானத்தில் தன் நட்சத்திரம் வந்துவிட்டதா என்று பார்க்க நிமிர்ந்தான்.

''அதோ!'' என்று கை காட்டினாள் அவள்.

தூரத்தில் தனியாக மிகவும் பிரகாசமாய்ப் பளிச்சிட்டது. அதையே பார்த்துக் கொண்டிருந்தான்.

''உங்களை மாதிரி அதுவும் தனியா முறைச்சுண்டு நிக்கறது!''

''ஆனா எவ்வளவு பளிச்சின்னு இருக்கு பார்த்தியா?''

''இந்தத் தற்பெருமைக்கு ஒண்ணும் குறைச்சல் இல்லை!'' என்று சொல்லிவிட்டுப் புடவையை உதறிக் கொண்டு எழுந்தாள்.

''என்ன எழுந்துட்டே?''

''என்ன பண்றது? எத்தன நாழி கேட்டாலும் உங்கிட்டேயிருந்து சரியான ஒரு பதில் வரப்போறதில்லை. இப்படித்தான் எதுக்கும் பேசாம இருக்கப் போறிங்க. இங்க உட்கார்ந்து பதிலுக்காகத் தவம் கிடக்கிறதைவிட, வீட்டுக்காவது சீக்கிரம் போகலாம். ஏற்கனவே நாழி ஆயிடுத்து. நாளைக்கு வேற எல்லாரும் ஊருக்குப் போறா...''

அவனும் எழுந்தான். சாப்பலையும், டையையும் எடுத்துக்கொண்டு நடந்தவாறு, ''எங்கே போறா எல்லாரும்?'' என்று கேட்டான்.

''மதுரைக்கு. சித்தி பொண்ணுக்குக் கல்யாணம். அதுக்குப் போறா.''

''நீ போகலியா?''

''ஊஹூம். எல்லாரும் போயிட்டா எப்படி? நான் தான் வீட்டுக்குக் காவல். நாலு நாளைக்கு நான் மட்டுந்தான் வீட்டில். ஆபீசுக்குக்கூட லீவு போட்டிருக்கேன்.''

''இவ்வளவு பயப்படற நீ, தனியாகவா இருக்கப் போறே...?''

''ராத்திரியிலே பக்கத்து வீட்டுப் பாட்டி வந்து துணைக்குப் படுத்துப்பா. மத்தியான வேளைல என்ன பயம்?''

அதன் பின் அவன் ஒன்றும் கேட்கவில்லை. பேசாமல் நடந்து பஸ் ஸ்டாப் வரை வந்தார்கள். உடனே பஸ் வந்துவிட்டது. அவளை ஏறிக் கொள்ளச் சொன்னான்.

''ஏன், நீங்க வரலையா?''

''இல்லை, இன்னும் கொஞ்சநேரம் இங்கேயே இருந்துட்டு வரேன்.''

அவள் ஒன்றும் சொல்லாமல் ஏறி, ஜன்னல் பக்கத்தில் உட்கார்ந்து கை அசைத்தாள். அவனும் பதிலுக்குக் கை ஆட்டினான். பஸ் கிளம்பினதும் சிறிது நேரம் அங்கேயே நின்றான். ஜமுனாவை நினைத்தபோது கஷ்டமாக இருந்தது. ''பாவம்!'' என்று சொல்லிக் கொண்டே, மணலுக்குத் திரும்பினான். பின், அலைக்குப் போய்க் காலை நனைத்துக் கொண்டு வெகு நேரம் நின்றிருந்தான்.

17

உச்சி வெயில். வானொலி நிலையக் கட்டடத்தை விட்டு வெளியில் வந்தான் விஸ்வம். ஒரு மணி நேரத்திற்கும் அதிகமாய் ஏர்கண்டிஷன் அறையில் இருந்துவிட்டு வந்ததில் வெளி வெயில் அதிகமாய்த் தெரிந்தது. முகத்தில் வியர்வையாய் வழிந்தது.

கர்ச்சீப்பை எடுத்துத் துடைத்துக் கொண்டு பஸ் ஸ்டாப்பில் வந்து நின்றான். தூரத்துக் காளவில் தார்ரோடு பளபளத்தது. நீலத் தகடாக அலைகளே இல்லாதது போல் கடல் சலனமற்றுத் தெரிந்தது. புதிதாகக் கட்டிக் கொண்டிருந்த லைட் ஹவுஸ் கட்டடத்தில் நிறையப் பேர் வேலை செய்து கொண்டிருந்தார்கள். கலவை இயந்திரம் ஒன்று சத்தப்படுத்திக் கொண்டிருந்தது. மிகவும் புழுக்கமாய் உணர்ந்தான் அவன். முகத்தில் குளிர்ச்சியாய் வந்து மோதி தலை மயிரைக் கலைத்துப் போகும் காற்று இன்று இல்லை. மரங்கள் எவ்வாம் எதற்கோ கோபமாய் முகத்தைத் திருப்பிக் கொண்டிருக்கிற மாதிரி அசைவில்லாமல் நின்றன.

தம்பூரா, மிருதங்கம் இவற்றோடு வித்வான் ஒருவர் டாக்ஸியில், நிலையக் கட்டடத்தினுள் நுழைவது தெரிந்தது. விஸ்வத்திற்குப் பரிதாபமாக இருந்தது. பின்னால் திரும்பி அந்த வெளிறிப் போன சாம்பலில் நின்று கொண்டிருக்கும் உயரமான காம்பவுண்டைப் பார்த்தான். வித்தியாசமான எதையும் உள்ளே விடமாட்டோம் என்று சொல்லிக் கொண்டு அது நிற்கிற மாதிரி அவனுக்குத் தோன்றியது. தனக்குப் பிடித்தமான சில கவிதைகளை எடுத்துக்கொண்டு இன்று காலையில் தான் போன உற்சாகத்தையும், இப்போது வெளியில் வந்து வெறுப்போடு நின்று கொண்டிருப்பதையும் நினைத்துப் பார்த்தான்.

அங்கே இருந்தவர்கள் புதுக் கவிதைகளை ஒப்புக் கொள்ளவில்லை. இவனுடைய கவிதைகளைப் படித்துப் பார்த்துவிட்டு உதட்டைப் பிதுக்கினார்கள்.

''என்ன சார், இது? எதுகை, மோனை எதுவும் இல்லையே...?'' என்று கேட்டார்கள்.

விஸ்வம் பதில் சொல்லாமல் சிரித்தான்.

''இப்படி ஸிம்பாலிக்காகவும், இமேஜ்களாகவும் சொல்லிக் கொண்டு போனால், எப்படி சார்? கேட்கிறவர்களுக்குப் புரிய வேண்டாமா?''

''புரியாது என்று எப்படி நீங்களே முடிவு செய்துவிட்டீர்கள்? அப்படியானால் உங்க புரோக்ராம் கேட்கிற யாரும் புத்திசாலிகள் இல்லை என்பது உங்கள் அபிப்பிராயமா?'' என்று திரும்பிக் கேட்டான்.

அது அவர்களை எரிச்சல்படுத்தி இருக்க வேண்டும். அவன் தன் கவிதைகள் எல்லாவற்றையும் எளிதாய்ப் புரியும்படி மறுமுறை எழுதி, பின்பு படிக்க வேண்டும் என்றார்கள். ஒவ்வொரு கவிதைக்கும் உரைநடை விளக்கமும் தர வேண்டும். மேலைடையாய்ப் பேச வேண்டும். கேட்பவர்களுக்குப் போர் அடிக்காமல் இருக்க வேண்டும்.

எல்லாவற்றையும் மறுத்தான் இவன். 'கவிதை என்பது வெறும் இலக்கணம் மட்டும் இல்லை' என்று சொன்னான். வளர்ச்சியடைகிற எல்லா மொழிகளிலும் கவிதை எப்படி மாறி வந்திருக்கிறது என்று விளக்கினான்.

''சேரன் செங்குட்டுவனின் வாளை எடுத்துக் கொண்டு இப்போது நம்மால் யுத்தத்துக்குப் போக முடியுமா, சார்? பாட்டன் டாங்கிகளும் போர் விமானங்களுந்தானே தேவையாக இருக்கிறது?'' என்று கேட்டான்.

அவர்கள் பேசாமல் இருந்தார்கள். தாங்கள் சொன்னதில் பிடிவாதமாய் நிற்பது தெரிந்தது.

விஸ்வத்துக்குக் கோபம் வந்தது.

''கவிதை எனக்கு ஒரு லீரியலான ஆர்ட்! பொழுது போக்கோ உத்தியோகமோ இல்லை. ஏற்கனவே கவிதையாகிவிட்ட ஒன்றை மறுபடியும் கலைத்து எழுத முடியாது'' என்று 'ஸாரி' சொல்லிவிட்டு வெளியில் வந்து விட்டான். காலையில் வந்தபோது இந்த நிகழ்ச்சியைப் பற்றி நிறைய நினைத்துக் கொண்டு வந்திருந்தான். வழக்கப்படி இல்லாமல் புது மாதிரியாகச் செய்ய வேண்டும். விதார் பிட்டுகிற மாதிரி தனிமனாய் இருக்க வேண்டும்... அதையெல்லாம் இந்தக் கோபம் உடைத்து நொறுக்கி விட்டது...

பஸ் வருகிறதா என்று கவனிப்பதை நிறுத்திவிட்டுத் திரும்பினான். கட்டட வேலையில் ஈடுபட்டிருந்த சிற்றாட்கள் செங்கற்களை அடுக்கி எடுத்துக் கொண்டு லாவகமாய்ச் சாரத்தில் ஏறுவதைச் சிறிது நேரம் பார்த்துக் கொண்டிருந்தான். இதே லாவகந்தான் வாழ்க்கைக்கும் தேவைப்படுகிறது என்று நினைத்துக் கொண்டான். பின்பு எதிரில் தெரிந்த கடலின் பக்கம்

பார்வை திரும்பியபோது இறங்கிப் போய் அலைகளில் காலை நனைத்துக் கொள்ள வேண்டும் போல் இருந்தது. நிதானமாகச் சாலையைக் கடந்து மணலில் இறங்கினான். கால்கள் புதைந்த போது மணலின் சூடு உறைத்தது. சின்னசின்ன சூலங்களாகக் காகங்களின் பாதங்கள் இறைந்து கிடந்தன. சிறிது தூரத்தில் ஒரு செம்படவச் சிறுவனை இன்னொருவன் துரத்திக் கொண்டு வந்து கீழே தள்ளி மணலில் புரட்டினான். இந்தக் கோபந்தான் எப்படி எப்படி இயற்கையாய்ப் பீறிட்டுக் கொண்டு வருகிறது! தனக்கு எவ்வளவு அதிகமாய்க் கோபம் வந்தாலும் யாரையும் இப்படிக் கீழே தள்ளி புரட்ட முடியாது என்று நினைத்துக் கொண்டான். இரண்டடிகள் போனதும் நேற்று உட்கார்ந்திருந்த இடம் என்பது நினைவுக்கு வந்தது. உடனே ஜமுனாவும் நினைவில் வந்தாள். அவள் பேசின பேச்சுகள், கல்யாணத்திற்காகக் கெஞ்சியது. ஆபீஸுக்கு லீவு போட்டு இருப்பது. வீட்டில் தான் மட்டும் தனியாக இருக்கப் போவதாய்ச் சொன்னது. இப்போது போய் அவளைப் பார்த்தால் என்ன... தன்னைப் பார்த்ததும் அவளுக்கு ஆச்சரியமாக இருக்கும்! கண்கள் சந்தோஷத்தில் விரியும். உதட்டில் அழகாக ஒரு சிரிப்பு எட்டிப் பார்க்கும். அவன் கடலுக்குப் போகாமல் திரும்பி நடந்தான். பஸ் ஸ்டாப்பை அடைந்து தன் பஸ்களையெல்லாம் தவறவிட்டுவிட்டு, பெரம்பூர் பஸ்ஸுக்காகக் காத்திருந்தான்.

தலை நிமிர்ந்து பார்த்தது ஓணான். மஞ்சளும் கறுப்புமாக ஒரு பட்டாம்பூச்சி அவன் கண்ணெதிரில் சுற்றிச் சுற்றி வந்தது. எங்கோ உட்கார்ந்து அணில்பிள்ளை தொண தொணத்தது. 'யார் நீ?' என்று கேட்கிற மாதிரி ஆவலாய்க் குருத்திலிருந்து எட்டிப் பார்த்தது ஒரு வாழைப்பூ. 'இந்த வீடுதான் வா! வா!' என்று கொம்பில் தொற்றிக் கொண்டிருந்த புடலைக்கொடி தலை அசைத்தது. சதுரத் தொட்டியில் இருந்த தண்ணீர், சூரியன் ஒளிப்பந்தை இழை இழையாகப் பிரித்து ஒரு வலை பின்னிச் சுவரில் விரித்திருந்தது. ஒரு வீட்டின் பின்புறம் மாதிரி அந்த வீடு துவங்கி இருந்தது. அது விஸ்வத்தை மிகவும் கவர்ந்தது. நிதானமாய் நடந்து கதவை நெருங்கினவன் ஒரு நிமிஷம் தயங்கிவிட்டுப் பின் மெதுவாய்த் தட்டினான். இரண்டாம் முறை

தட்ட கையைத் தூக்கினபோது ஜன்னல் கதவு திறந்து கொண்டது. கம்பிகளின் பின்னாலிருந்து எட்டிப்பார்த்தாள் ஜமுனா. அவனைப் பார்த்த அதிர்ச்சி கண்களில் விரிந்து புருவம் சுருங்கியது.

''நீங்களா...!''

அவன் சிரித்துக் கொண்டே ஜன்னல் பக்கம் நகர்ந்தான்.

''நான்தான், ஜமுனா! என்னை நீ எதிர்பார்க்கலை, இல்லையா?''

'இல்லை' என்று தலையாட்டினாள் அவள். புருவங்களின் சுருக்கம் நீங்காமல் தங்கியது. அதைப் பார்த்ததும் அவனுடைய உற்சாகமும் கொஞ்சம் தணிந்தது. தன்னைப் பார்த்ததும் சூரியகாந்தியாக மலருகிற ஜமுனாவா இவள்!

''என்ன இப்படி ஒரு அதிர்ச்சி, ஜமுனா? நான் வரக்கூடாதா?''

''இதுக்கு முன்னால எப்பவும் வந்தது இல்லையே...!''

''அதனாலதான் இன்னிக்கு வந்திருக்கேன்.'' - அவன் சிரிப்பு மாறாமல் பதில் சொன்னான்.

''எதுக்கு?'' -பட்டென்று கேட்டாள் அவள்.

அந்தக் கேள்வியில் அதிர்ந்து போனான் அவன். சிரிப்பு மெல்ல மறைந்தது. இந்தக் கேள்விக்கு என்ன அர்த்தம்? இதற்கு என்ன பதில்? இப்படிக் கதவைத் திறக்காமல் வெளியில் நிற்க வைத்துப் பேசுவதல் காரணம்...? அவனுக்குப் புரிந்து போயிற்று. மனதில் பலமாய் ஓர் அடி விழுந்தது. ஆனாலும் நிதானமாய் நிமிர்ந்து அவளைப் பார்த்தான்.

''ஸாரி, ஜமுனா?'' என்று ஒரு வார்த்தையில் சொல்லி, விட்டுப் பதிலுக்குக் காத்திராமல் திரும்பினான். காலில் இடறிய பின்னக் கல்லை உதைத்துத் தள்ளினான். கேட்டை வேகமாய் இழுத்து மூடினான். நிசப்தமான அந்தத் தெருவில் தனியாய் நடந்தபோது தகிப்பாய் அவனுக்குள் ஏதோ இறங்கியது. நாக்கு வறண்டு தாகம் எடுத்தது. அவள் வீட்டில் தண்ணீர் குடித்திருக்கலாம் என்று தோன்றியது. 'அவள் வீட்டிலா?' என்று நினைத்துக் கொண்டான். 'எதுக்கு?' என்று அவள் கேட்ட அந்தக்

கேள்வி, சந்தேகமாகப் பார்த்த அந்தப் பார்வை... 'நீ இவ்வளவுதானா ஜமுனா? என்னை, என் கம்பீரத்தைப் புரிந்து கொண்டது இவ்வளவுதானா? இந்த அளவிற்குத் தாழ்ந்து போக எப்படி முடிந்தது உன்னால்? என்ன பெண் நீ? என்னை, என் உயரத்தை இப்படிக் குறுக்கிப் பார்க்கவேண்டும் என்று ஏன் தோன்றியது?'

''மணி என்ன, சார்?''

எதிரில் வந்த ஒருவர் நிறுத்திக் கேட்டார். இவன் கைக்கடிகாரத்தைப் பார்த்துச் சொன்னான். ''மூணு மணிக்கு இன்னும் வெயில் குறையலை பாருங்களேன்...?'' என்று இவன் ஆமோதிப்பை எதிர்பார்த்தார். இவன் லேசாய்ச் சிரித்துவிட்டு நகர்ந்தான். இடது பக்கம் திரும்பினதும் மெயின்ரோடு வந்தது. சந்தடியாக இருந்தது. லாரியும், பஸ்களும், சைக்கிள்களும் விரைந்தன. நிறையக் கடைகள் இருந்தன. இப்போது நாக்கு இன்னும் வறண்டு தாகம் அதிகமாய்த் தெரியவே ஒரு பெட்டிக் கடையில் நின்று ஐஸ் பெட்டியில் வைத்த பானம் ஒன்றைக் குடித்தான். அதன் குளிர்ச்சியில் மனசில் ஏதோ அடங்கின மாதிரி இருந்தது. பஸ்ஸில் உட்கார்ந்ததும் காற்று லேசாய் உடம்பை வருடியது. கொஞ்சங் கொஞ்சமாய்த் தன்னை லேசாக்கிக் கொள்ள முயன்றான். நிதானமாய் யோசித்த போது ஜமுனாவால் அப்படித் தான் நடந்து கொள்ளமுடியும் என்று தோன்றியது. அவள் இயல்புக்கு அதுதான் சரி என்று பட்டது. மாறுபட்டு நடந்திருந்தால்தான் அவனுக்கு ஆச்சரியமாக இருந்திருக்கும்.

இருந்தாலும் அடி மனசில் அவள் ஏற்படுத்தி விட்ட சுரப்பு குறையவில்லை. எதிரில் தெரிந்த எல்லாப் பெண்களின் மீதும் அது பரவியது. பார்க்கிற ஒவ்வொரு பெண்ணும் ஜமுனாவாகத் தெரிந்தாள்.

ஜன்னல் பக்கத்தில் மஞ்சள் புடவையில் உட்கார்ந்திருக்கிற ஜமுனா-கூலிங் கிளாஸால் கண்ணை மறைத்துக் கொண்டு வருகிற ஜமுனா 'பெல்பாட்ட'த்தில் உரத்துச் சிரிக்கிற ஜமுனா- அழகாய் ஆங்கிலம் பேசிக்கொண்டு 'பை' சொல்லிப் பிரிகிற ஜமுனா- எல்லாம் வெறும் அழகுகள்! அலங்காரங்கள்! உடனே ருக்மிணியின் ஞாபகம் வந்தது. 'ருக்மிணி! நீகூட ஜமுனாதானா?

இல்லை, நிச்சயமாய் இல்லை!... அவளால் எப்போதும் ஜமுனாவாக முடியாது. அவள் வித்தியாசமானவள். எதிலும் தெளிவாய் இருப்பவள். எதையும் சுலபமாய்ப் புரிந்துகொள்ளத் தெரிந்தவள். அன்பாய் ஆறுதலாய் இருக்கிற இடத்தை நிறைவாக்குகிற சாமர்த்தியம் இதெல்லாம் எத்தனை பேருக்கு வரும்? அந்த மாதிரி உலகத்தில் எத்தனை பிறவிகள் இருக்கும்? பத்து-நூறு-ஆயிரம்...? இல்லை. ஒன்றுதான், ஒன்றே ஒன்றுதான்! அது ருக்மிணி மட்டுந்தான். அவனுக்குத் தெரிந்தது அவள் ஒருத்திதான்...!

''சார், டிக்கெட்...''

சட்டென்று எண்ணம் கலைந்து சில்லறைக்காகப் பாக்கெட்டினுள் கைவிட்டு, ''மைலாப்பூர் ஒண்ணு!'' என்றான்.

18

பஸ்ஸை விட்டு இறங்கி நேராக ராமகிருஷ்ணன் வீட்டுக்குப் போனான். ஏதோ படித்துக் கொண்டிருந்த ராம கிருஷ்ணன் இவனைப் பார்த்ததும் புத்தகத்தை மூடி மேஜை மீது வைத்தான். அறையின் மூலையில் இருந்த மண் ஜாடியிலிருந்து இரண்டு டம்ளர் தண்ணீர் ஊற்றிக் குடித்தான் விஸ்வம். பின் ''ஸ்...அப்பாடா!'' என்று சொல்லிக் கொண்டே வந்து கட்டிலின் விளிம்பில் உட்கார்ந்தான். கால், செருப்பிலிருந்து கழன்றது. கை மித்தாளைக் கழற்றிச் சட்டையின் காலரைப் பின்னுக்குத் தள்ளியது. ராமகிருஷ்ணன் எழுந்து போய் ஃபானைச் சுழலவிட்டு வந்து அவன் பக்கத்தில் கட்டிலில் உட்கார்ந்து கொண்டான்.

''ரிகார்டிங் முடிய இத்தனை நேரமா ஆச்சு?'' என்று கேட்டான்.

''ரிகார்ட் பண்ணவே இல்லை!''

''பண்ணலையா? ஏன்?''

எல்லாவற்றையும் சொன்னான் விஸ்வம். கேட்டுக் கொண்டு வந்த ராமகிருஷ்ணனின் முகத்தில் கோபம் நுறுநுறுத்தது.

''இன்னும் நிலவையும் - பெண்களின் முகத்தையும் - பண்டிகைகளையும் வைத்து நர்ஸரி ரைம் மாதிரி எழுதற கவிதைகள்தான் தேவையாக இருக்கும் போல் இருக்கு! நீ இப்படி ஸ்கிரிப்டை வாங்கிண்டு பேசாமல் வந்திருக்கக் கூடாது விஸ்வம்.''

''என்ன பண்ணச் சொல்றே? சண்டை போடச் சொல்றியா?'' என்று கசந்து போய்க் கேட்டான் விஸ்வம்.

''என்ன இப்படி அலுத்துப் போய்ப் பேசறே?''

''காலைலேர்ந்து எல்லாம் ஒரே அலுப்பாகத்தான் இருக்கு-'' என்று சொல்லிவிட்டு தலையைக் குனிந்து கொண்டான் விஸ்வம்.

''எதுக்கு?'' என்ற ஜமுனாவின் கேள்வி மறுபடியும் மனசை அறைகிற மாதிரி இருந்தது. கொஞ்ச நேரம் பேசாமல் இருந்தான். ராமகிருஷ்ணனும் மேலே எதுவும் கேட்கவில்லை. மௌனமாய்க் காலின் கட்டை விரல் நகத்தைக் கிள்ளிக் கொண்டிருந்தான். சிவ விநாடிகளுக்கு 'விர் விர்' என்று ஃபான் சுற்றுகிற சத்தம் மட்டும் கேட்டது. கடைசியில் விஸ்வந்தான் பேசினான்.

''இன்னிக்கு என்ன தபால் வந்தது?'' என்று கேட்டான்.

ராமகிருஷ்ணன் எழுந்து போய் மேஜை மீதிருந்து நாலைந்து கதைகளை எடுத்துக் கொடுத்தான். கவிதை எதுவும் வராததைத் தெரிவித்தான். திருநெல்வேலியிலிருந்து நண்பன் ஒருவன் எழுதியிருந்த கடிதத்தைப் படித்துக் காட்டினான். பத்திரிகைக்கு உபயோகமான சில விஷயங்களைச் சொல்லியிருந்தான் அந்த நண்பன். பின், காலையில் தான் அச்சாபீசுக்குப் போய் வந்த விபரத்தைத் தெரிவித்தான்.

''ப்ரூஃப் எல்லாம் சரி பார்த்தாச்சு, விஸ்வம். இன்னும் நாலு நாள்லே பத்திரிகையைக் கொடுத்துடறேன்னான். ரேப்பர் ரொம்ப நன்னா வந்திருக்கு. முதல்ல ஐந்நூறு காப்பி போடச் சொல்லியிருக்கிறேன். அது போகட்டும், பின்னால் பார்த்துக்கலாம்.''

''சரி, பத்திரிகையை எப்போ, எப்படி வெளியிடறதுன்னு இன்னும் நீர்மானம் பண்ணலையே?''

''எல்லாரையும் மாதிரி நாமும் வெளியிட்டு விழா நடத்தணுமா என்ன?''

''நான் அதை 'மீன்' பண்ணிச் சொல்லலே. நம்ம பத்திரிகை வர்ற விஷயம் எல்லோருக்கும் தெரிய வேணாமா?''

''தெரியணுந்தான்...!'' என்று இழுத்துவிட்டுப் பேசாமல் இருந்தான் ராமகிருஷ்ணன்.

''ஒண்ணு செய்யலாம்னு எனக்குத் தோணறது-''

''என்ன?''

''இன்னும் நாலு நாள்லே பத்திரிகை வர்றதானா, வர ஞாயிற்றுக்கிழமை நடக்கப் போற இலக்கியக் கூட்டத்துலே எல்லாருக்கும் டிஸ்ட்ரிப்யூட் பண்ணினால் என்ன?''

ஒரு நிமிஷம் யோசித்துப் பின், ''தட்'ஸ் எ குட் ஐடியா!'' என்றான் ராமகிருஷ்ணன். ''நாளைக்கு மத்தவங்களை யெல்லாம் வரவழைக்க இதைப்பத்தி டிஸ்கஸ் பண்ணிடலாம்!''

''சரி, ராஜாராம்கிட்டேயும், மூர்த்திக்கும் போன் பண்ணிச் சொல்லிடு. பத்திரிகையைப் பார்த்து நான் சொல்லிடறேன். அப்புறம் வேற என்ன இருக்கு?''

''வேற ஒண்ணுமில்ல. இந்த கதைகளை நீ இன்னிக்கு படிக்கக் கொண்டு போ. ஒண்ணாவது அடுத்த இஷ்யூவுக்குத் தேறுமா பாரு.''

அவற்றை வாங்கிக் கொண்டு எழுந்து நின்றான் விஸ்வம். செருப்பில் கால் நுழைந்து கொண்டது.

''அப்ப நான் கிளம்பட்டுமா?'' என்று கேட்டான்.

''ஓ.கே. நாளை சாயந்தரம் இங்க வந்துடு. நான் கிளாஸை முடிச்சுண்டு நேரே வரேன்.''

''சரி.''

படி இறங்கினபோது ராமகிருஷ்ணன் மாதிரி ஒரு நல்ல நண்பன் இருக்க முடியாது என்று நினைத்துக் கொண்டான். இந்தப் பத்திரிகைக்கான முக்கால்வாசிப் பணமும் அவனுடையதுதான். ஒரு 'லிட்டில் மாகஸீன்' ஆரம்பிக்க வேண்டும் என்று ஆசைப்பட்டது இவன்தான். உடனே அதைச் செயல் படுத்தத்

துணிந்தான் ராமகிருஷ்ணன். இதற்காகத் தன் கைச் செலவை அநாவசியத் தேவைகளைக் குறைத்துக் கொண்டு, வீட்டிலும் திட்டுக் கேட்டுக் கொண்டு ஒரு தரம் இவன் போனபோது அவளுடைய அம்மா நேரிலேயே சொல்லிவிட்டாள்.

''இப்ப எதுக்குக் கதையும் பத்திரிகையும்? முதல்ல அவன் படிச்சு பாஸாகட்டுமே? சொந்தமா சம்பாதிக்க ஆரம்பிச்சு நன்னா காலை ஊனி நிற்கத் தெரிஞ்சுண்டப்புறம் என்ன வேணும்னா செய்யுங்களேன். அப்ப யாரு கேட்கப் போறா?''

ராமகிருஷ்ணன் கேட்கவில்லை. வீட்டில் உள்ள அத்தனை பேர் விருப்பத்தையும் மீறி இதில் பிரவேசித்திருக்கிறான்.

''நீ என்ன வேணும்னாலும் செய். ஆனா படிப்பை மறந்துடாதே! அதுதான் முக்கியம். பாஸாகத் தவறிடக்கூடாது!'' என்றார்கள் அவனுடைய அப்பா. பாஸ் ஆகிக் காட்டுவதாக வாக்குக் கொடுத்திருக்கிறான். அவன் பாலாகி விடவேண்டும் என்று நினைத்துக் கொண்டே நடந்தான் விஸ்வம்.

டி.யூ.ஸி.எஸ்ஸையும், மாவு மெஷினின் இரைச்சலையும் கடந்து திரும்பின உடலே சட்டென்று ஒரு மாறுதல் தெரிந்தது. இருபது வருஷமாய்ப் பார்க்கிற தெருதான். ஆனாலும் ஒவ்வொரு நாளும் புதுசாய்த் தெரிந்தது. பூவரசும் முருங்கையும் சலசலத்தன. பாண்டிக் கட்டம் கீறிச் சின்னப் பெண்களாக நாலைந்து குதித்துக் கொண்டிருந்தன. பாவாடை தடுக்கக் கண்ணை மூடிக் கொண்டு ஒன்று தலையில் ஓட்டுச் சில்லுடன் கட்டத்தைக் கடந்து, ''ரைட்டா? ரைட்டா?'' என்று கேட்டுக் கொண்டிருந்தது. ஒரு பக்கத்தில் பையன்கள் கில்லி விளையாடுகிற சத்தம் காதைப் பிளந்தது. அதை மீறிக் 'கிணிங் கிணிங்' என்று தெருக் கோடிப் பிள்ளையார் கோவிலின் மணிச் சத்தம் கேட்டது.

படியேறினதும் தாழ்வாரத்தில் ஸ்டாண்ட் போட்டு நிறுத்தியிருந்த சைக்கிளைப் பார்த்தான் விஸ்வம். 'பரசு இவ்வளவு சீக்கிரம் வந்துவிட்டானா!' என்று நினைத்துக் கொண்டான். நடையில் செருப்பைக் கழற்றிவிட்டு உள்ளே நுழைந்தபோது வீடு அமைதியாக இருந்தது. அந்த அமைதியில் ஓர் அசாதாரணத் தன்மை இருப்பதாகப் பட்டது. கூடத்தில் அப்பா ஈஸிசேரில்

சாய்ந்து கொண்டிருந்தார். பரசு எதிரில் தரையில் உட்கார்ந்திருந்தான். அகிலாவும் ருக்மிணியும் சமையலறை வாசலில் சுவரில் உடம்பைச் சரித்து நின்று கொண்டிருந்தார்கள். அவன் போனபோது யாரும் எதுவும் பேசவில்லை. நீவிரமாக எதையோ யோசிக்கிற நிலையில் இருந்தார்கள். கனமான ஒன்று அவர்களை அழுத்திக் கொண்டிருப்பதாக உணர்ந்தான் விஸ்வம். ஆனாலும், எதுவும் கேட்கவில்லை. முற்றத்தில் கால் அலம்பிக் கொண்டு, அறைக்குப் போகத் திரும்பின போது அப்பா அவனைக் கூப்பிட்டார்.

''இப்படித்தான் வந்து உட்காரோன்.''

''இதோ, இதை உள்ளே வச்சுட்டு வந்துட றேன்.''

''என்ன அதெல்லாம்?''

கொஞ்சம் தயங்கிவிட்டு, ''கதைகள்!'' என்றான்.

அப்பாவின் நெற்றி சுருங்குவதைக் கவனித்துக் கொண்டே உள்ளே போனான். கதைகளை மேஜை மேல் வைத்து விட்டு உடை மாற்றிக் கொண்டான். அகிலா காபி கொண்டுவந்தாள். அவளிடம் என்ன விஷயம் என்பதைக் கேட்கலாமா என்று நினைத்தான். ஆனால் கேட்கவில்லை. அவளும் ஒன்றும் சொல்லாமல் காலி டம்ளரையும் டபராவையும் எடுத்துக் கொண்டு போனாள். தலையை வாரிக் கொண்டு அவள் பின்னாலேயே கூடத்துக்கு வந்தான்.

அப்பா உட்காரச் சொல்லி சைகை காட்டினார். பரசுவுக்குப் பக்கத்திலேயே சுவரில் சாய்ந்து வசதியாக உட்கார்ந்து கொண்டான். அப்போதும் யாரும் எதுவும் பேசவில்லை. முற்றத்தின் வழியாக அறைக்குள் இன்னும் வெளிச்சம் விழுந்து கொண்டிருந்து. ஸ்வாமி அலமாரியில் ஏற்றி வைத்த தீபத்தின் கடர் அசைவதைப் பார்த்துக் கொண்டு விஸ்வமும் பேசாமல் இருந்தான். சில நிமிஷங்களுக்குப் பின், தேடிக் கொண்டிருந்த 'ஆரம்பம்' கிடைத்துவிட்ட மாதிரி அப்பாதான் பேச்சைத் துவக்கினார்.

''இனிமேலயும் இந்த மாதிரி நீ கதை கவிதைன்னு அலைஞ்சுண்டு இருக்க முடியாது விஸ்வம். பொறுப்பை ஏத்துக்க, பயத்துண்டு ஓதுங்கிப் போயிண்டிருக்க முடியாது!''

''அப்பா...!'' என்று குறுக்கிட்டான் அவன். என்ன என்கிறாற்போல் பார்த்தார் அவர்.

''எனக்கு எந்தப் பயமும் இல்லை'' என்றான் உறுதியான குரலில்.

''பயந்தான்!'' என்று மறுத்தார் அவர். ''வேலை செய்யப் பயம். வாழ்க்கையை அதன் போக்குல அனுசரிக்கப் பயம். குடும்ப பாரத்தை ஏத்துக்கப் பயம். அதனாலதான் இப்படியெல்லாம் பேசிண்டு, சுத்திண்டிருக்கே. இதையெல்லாம் ஒரு பந்தயம் மாதிரி எடுத்துக்க உன்னால முடியல. எல்லாத்தையும் விட்டுத் தள்ளி நிற்கப் பார்க்கறே. அது வசதியானதுதான் விஸ்வம். ஆனா எத்தனை நாளைக்குத் தான் இப்படித் தப்பிச்சுக்க முடியும்?''

''இல்லை. நான் எதிலிருந்தும் தப்பிச்சுக்கப் பார்க்கலை. இதெல்லாம் எஸ்கேப்பிஸம்னு நீங்க நினைச்சா அது சரி இல்லை.''

''சரி. உன் பாஷைல இது ஃபிப்பியஸம். அப்படியே வச்சுக்கோ. அது எதனால வந்தது? எதையும் எதிர் நோக்கற சக்தி இல்லாம எல்லாத்தையும் விட்டுட்டுத் தப்பிச்சுக்கப் பார்க்கறதனாலேதானே வந்தது?''

''அதற்கு அப்படி அர்த்தம் இல்லை; அப்பா, நீங்க சொல்றது தப்பு.''

''சரி; தப்புன்னே இருக்கட்டும். இப்ப இதைப் பத்தியெல்லாம் ஆர்க்யூ பண்ற சக்தி என்கிட்ட இல்லை. நான் சொல்ல வந்த விஷயமே வேற. அதை விட்டுட்டு இதெல்லாம் என்னத்துக்கு?''

விஸ்வத்தின் குரலும் இறங்கி வந்தது. ''சொல்லுங்கள்'' என்றான் நிதானமாக.

''பரசுக்கு டிரான்ஸ்ஃபர் ஆர்டர் வந்திருக்கு!''

விஸ்வம் பட்டென்று திரும்பிப் பரசுவைப் பார்த்தான். உண்மையா என்று கேட்கிற மாதிரி கண் அகன்றது. பரசு, 'ஆமாம்' என்று தலையாட்டிய போது விஸ்வத்தின் முகம் வேதனையில் நனைந்தது. ஒரு நிமிஷம் பேச முடியாமல் ஏன் இப்படிக் கஷ்டப்படுத்துகிறது? படிப்படியாகச் சரிந்து விழுகிற மாதிரி

ஒன்றன்மேல் ஒன்றாக, என்ன இது? இதையெல்லாம் எப்படித் தாங்குவது? பரசு, 'எங்கே போகப் போகிறாய் நீ?'

சிறிது நேரம் கழித்து, ''எங்கே?'' என்று கேட்டான்.

''பரோடா.''

''எப்போ போகணும்?''

''இல்லும் பத்து நாளுக்குள்ள 'ஜாயின்' பண்ணியாகணும்.''

''பத்து நாளைக்குள்ளேயா?''

பரசுவின் தலை ஆடியது.

அதன் பின் மௌனமாகிவிட்டான் விஸ்வம். மனசைப் பாரமாக ஏதோ அழுத்திக் கொண்டிருந்தது. சொல்லத் தெரியாமல் ஒரு வேதனை. பரசுவிடம் அதிகம் பேசாமற் போனாலும் மௌனமாகவே மனசை நெருங்கி விட்டவன் அவன். கதவைத் தட்டி உள்ளே நுழைகிறமாதிரி நுழைந்து கொண்டு விட்டான். ரிஸல்ட் வந்த அன்று, மேலே படிக்கிறாயா என்று அவன் வந்து கேட்டதிலிருந்து இரண்டு பேருக்கும் இடையே ஒரு பாலம் ஏற்பட்டிருந்தது. அதன் வழியாக விஸ்வம் அடிக்கடி அவளிடம் நடந்து போக ஆரம்பித்திருந்தான். அவளைப் பற்றி நிறைய நினைத்துப் பார்த்திருக்கிறான். குடும்பம் என்ற இயந்திரத்திற்கு ஏன் இப்படித் தீவியாய் அடைபட்டுச் சாகிறான் என்று பரிதாபப்பட்டிருக்கிறான். அந்தப் பரிதாபத்திற்கிடையில் அவளிடம் ஒரு மரியாதையும் உருவாகி இருந்தது. இப்போது பத்து நாளில் அவன் பிரிந்து போகப் போவதாய்ச் சொன்னதும் ஏதோ ஒன்று கழன்று விழுகிற மாதிரி இருந்தது.

முற்றத்து வழியாக வானத்தில் தெரிந்த நட்சத்திரங்களை வெறித்துக் கொண்டிருந்தான். எந்தச் சத்தமும் காதில் விழாத மாதிரி இருந்தது. திடீரென்று ருக்மிணியின் ஞாபகம் வந்தது. அவளும் போய் விடுவாள் என்ற உண்மை நாக்கினபோது இன்னும் அதிர்ந்து போனான்.

'ருக்மிணி, நீயுமா போகப் போகிறாய்...?'

அதன் பின் அந்த வீடு எப்படி இருக்கும் என்று நினைத்துப் பார்த்தான். சரேலென்று விளக்கை அணைத்த மாதிரி இருண்டு

போகும். உதட்டில் நிரிப்போடு அவளே ஒரு சின்ன விளக்காகத்தான் நடமாடிக் கொண்டிருந்தாள். பரசு அந்த விளக்கையும் எடுத்துக் கொண்டு போய்விடுவான். அவள் வீணை வாசிப்பது- அதிராமல் நடப்பது- நிதானமாய்ச் சாதம் போடுவது- கதைகளைப் படித்து விமரிசிப்பது- காரை பெயர்த்த சுவரை, வாசலில் போகிற வண்டிகளை ரசிப்பது...

''பரசு, ப்ளீஸ்! போகாதேயேன்...!'' என்று கெஞ்ச வேண்டும் போலிருந்தது. ஆனால், வாய் இறுக மூடிக் கொண்டு விட்டது.

19

சாப்பாடு அமைதியாக நடந்து கொண்டிருந்தது. 'வேண்டாம்.' 'போறும்.' எல்லாவற்றிற்கும் சைகைகள் தான் உதவிப்பட்டன. வழக்கப்படி குக்மினிதான் பரிமாறினாள். 'பளிச் பளிச்' சென்று அவள் பாதம் மின்னி மின்னி நகர்ந்தது. தலை நிமிராமல் சாப்பிட்டு முடித்தான் விஸ்வம். கை கழுவிக் கொண்டிருந்தபோது, ''வெளியில் எங்கேயாவது போகப் போறியா?'' என்ற பரசுவின் குரல் கேட்டது.

இல்லை என்று தலையாட்டினான்.

''அப்ப கொஞ்ச நேரம் மாடிக்குப் போகலாமா?''

அவன் தன்னிடம் ஏதோ பேச விரும்புகிறான் என்பதைப் புரிந்து கொண்ட விஸ்வம், ''சரி'' என்றான்.

அவனும் கை கழுவிக் கொண்டு வந்ததும், இரண்டு பேரும் மாடிக்குப் போனார்கள். கைப்பிடிச் சுவரின் மீது உட்கார்ந்து கொண்டார்கள். வானத்தில் நட்சத்திரங்களாகப் பூத்திருந்தது. ரிலுரிலுவென்று காற்று வீசியது. தென்னை ஓலைகளின் நுனி படபடத்தது. இருவரும் பேசாமல் சிறிது நேரம் உட்கார்ந்திருந்தார்கள். பின்பு, பரசுதான் மெதுவாகப் பேச்சை ஆரம்பித்தான்.

''திடீர்னு இப்படி ஒரு ஆர்டர் வரும்னு நான் நினைக்கலை. உங்களையெல்லாம் விட்டுட்டுப் போறதுன்னா கஷ்டமா இருக்கு...''

விஸ்வம் அவன் முகத்தைப் பார்த்தான். அரை இருட்டில் அவன் கண்கள் பளிச்சிட்டன. குரல் கரகரவென்று வந்தது. தன்னைப் போலவே அவனும் மிகவும் பாதிக்கப்பட்டிருப்பதைப் புரிந்து கொண்டான். 'அமைதியாய் இரு' என்று அவன் கையைப் பற்றி அழுத்த வேண்டும் போலிருந்தது. ஆனால் மௌனமாக இருந்தான். அவன் ஒன்றும் பேசாமற் போகவே பரசு மறுபடியும் தானே பேசத் தொடங்கினான்.

''விஷயத்தைக் கேட்டதும் அப்பா ரொம்ப ஆடிப் போயிட்டார். இதை மாத்த முடியாதா, தள்ளிப் போட முடியாதான்னு ஏதேதோ கேட்டார். முடிஞ்சிருந்தா நான் செய்யாம இருந்திருப்பேனா?''

விஸ்வம் லேசாய்ப் புன்னகை செய்தான். ''எங்களை விட அப்பாவுக்கு உன் மேல் நம்பிக்கை அதிகம், பரசு. அம்மாவுக்குப் பின்னால் எல்லாப் பாரத்தையும் உன் மேல போட்டுட்டு ஈஸியா இருந்துண்டிருக்கார். நானோ, ராம்ஜியோ அத்தனை பொறுப்பு இல்லாதவர்கள்னு அவர் அபிப்பிராயம். அதுல தப்பு ஒண்ணும் இல்லை-''

''அப்படி இல்ல விஸ்வம், பொறுப்புன்றது தானே வந்துடற தில்லை. மாடுகளை ஓட்டி வண்ணடில பூட்டினாத்தான் பாரத்தை இழுக்கிறதே தவிர, தானா ஓடிவந்து தாங்கிக்கிறதில்லை. அந்த மாதிரிதான் நாமும்! சுமத்தினாத்தான் தாங்கிக்கிறோம்.''

''அதுலயும் ரெண்டுவிதம் இருக்கு, பரசு. சுமத்தினதை சந்தோஷமாகவே ஏத்துக்கறது ஒண்ணு. வெறுத்துண்டே சகிச்சுக்கிறது இன்னொண்ணு. நாங்க ரெண்டாவது விதம்.''

பரசு இருட்டைப் பார்த்துக் கொண்டு ஒரு நிமிஷம் பேசாமல் இருந்தான். பின், கனமாக ஒரு பெருமூச்சு வெளிப்பட்டது.

''உண்மைதான் விஸ்வம். உங்க ரெண்டு பேரின் கழுத்துலயும் இத்த மாதிரி நுகத்தடி எதையும் பூட்டிடக் கூடாதுன்னு நான் ரொம்ப ஜாக்கிரதையாயிருந்தேன். உங்க இஷ்டப்படியெல்லாம் விட்டுடணும்- உங்க மனசுல எந்தச் சிணுக்கமும் வராமப் பார்த்துக்கணும்- எல்லாத்தையும் நானே தாங்கிண்டுடணும்னு நினைச்சேன்!''

''இடிதாங்கியா இருந்துடணும்னு பாத்தியா?'' என்று மெதுவாகச் சிரித்தாள் விஸ்வம், அந்தச் சிரிப்பின் அடியில் சொல்ல முடியாத சோகம் ஒன்று தலை காட்டியது.

''இடிதாங்கியோ, என்னவோ... எதுவானாலும் நான் தோத்துப் போயிட்டேன்.''

சட்டென்று கை நீட்டி அவன் கையைப் பற்றி அழுத்தினாள் விஸ்வம். ''இப்போ என்ன ஆயிடுத்து, பரசு? எதுக்கு இப்படி மனசைப் போட்டு அலட்டிக்கறே?''

இவ்ல, விஸ்வம். நம்ம எல்லாருக்கும் எத்தனையோ ஆசை இருக்கு. எப்படியெல்லாமோ இருக்கணும்னு நினைக்கறோம். ஆனா எது எதுவோ நடந்து போயிடறது. இதையெல்லாம் பார்க்கறப்போ பலமான ஏதோ ஒண்ணு நம்மை நடத்திண்டு போறதுன்னு தெரியறது. அது வழியில நாம போய்த்தான் ஆகணும்னு புரியறது!''

''.....''

''நான் படிக்கணும்னு ஆசைப்பட்டேன். நடக்கலை. நிறையச் சம்பாதிக்கணும்னு நினைச்சேன். அதும் நடக்கலை, கல்யாணம் பண்ணிப்பேன்னு நினைக்கக்கூட இல்லை. ஆனா அது நடந்து போச்சு!''

''அதுக்காக இப்ப கஷ்டப்படறியா என்ன?''

''இல்லை ஆனா மத்தவங்களைக் கஷ்டப்படுத்த நாம்வோன்னு தோணறது.''

''மத்தவங்கன்னு யாரைச் சொல்றே?''

''உனக்கு நிஜமாகவே புரியலையா, விஸ்வம்?''

விஸ்வம் பதில் சொல்ல முடியாமல் மௌனமானான்.

''அவளைப் பார்க்கறியே விஸ்வம், அவ எனக்கு ஏத்தவதானா-சொல்லேன்?''

''என்ன பேசறே நீ! அதுக்காக வருத்தப்படற மாதிரி ருக்-மன்னி மூஞ்சி என்னிக்காவது மாறி இருக்கா...? அதாவசியமா எது எதையோ இழுத்துப் போட்டுண்டு ஏன் சங்கடப்படறே?''

பரசு வேதனையாகச் சிரித்தான். ''அவ மூஞ்சி எதுக்கும் மாறாது. அவ எங்கேயோ இருக்க வேண்டியவ. எப்படியோ இருக்க வேண்டியவ. அந்த அழகும், குணமும்... இந்த அளவு அதிர்ஷ்டத்துக்கு என்கிட்ட என்ன இருக்கு...?''

விஸ்வத்துக்குத் தொண்டையை அடைத்தது. மனசில் ஏதோ கரைந்து நழுவுகிற மாதிரி இருந்தது. உள்ளுக்குள்ளேயே இவ்வளவு மறுகுகிறானா இவன். இவனைப் பற்றி நினைத்ததெல்லாம் எவ்வளவு தவறு! இவனைவிட மனசில் உயர்ந்து ருக்மிணிக்கு வேறு யார் கிடைத்திருக்க முடியும்? பரசு, எப்படிப்பட்ட மனுஷன் நீ!... அவனை அப்படியே சேர்த்துக் கட்டிக் கொள்ள வேண்டும் என்று தோன்றியது.

''இந்த மனசு இருக்கே தங்கமான மனசு. இதைவிட வேற என்ன வேணும்? இது எத்தனை பேர்கிட்ட இருக்கு?'' என்று மறுபடியும் பரசுவின் கையைப் பற்றி அழுத்தினாள். அந்த ஸ்பரிசத்தின் வழியாக எது எதையோ உணர்த்திவிடத் தவித்தாள்.

அதைக் கேட்டுச் சங்கடப்பட்ட மாதிரி சிறிது நெளிந்தான் பரசு. ஒன்றுமே பேசாமல் உட்கார்ந்திருந்தான். எங்கோ வேகமாக ஒரு கார் ஹாரன் அடித்துக் கொண்டு போவது கேட்டது. பின்கட்டிலிருந்து பம்ப் அடிக்கிற சத்தம் வந்தது. அது ஓய்ந்ததும் சற்றுப் பொறுத்து மெதுவாகக் கேட்டான் விஸ்வம்:

''இப்பவே கூட்டிண்டு போகப் போறியா?''

''யாரை?'' என்று திரும்பினான் பரசு.

''மன்னியை.''

''இல்லே, முதல்ல நான் மட்டுத்தான் போறேன். வீடு பார்த்ததுக்கு அப்புறம்தான் அவளை அழைச்சிண்டு போகணும். அநேகமாக எனக்கு லீவு கிடைக்காது. நீங்க யாராவதுதான் அவளைக் கொண்டுவிட வேண்டியிருக்கும்!'' என்று சிறிது தயங்கின மாதிரி இருந்த பரசு, ''அப்பா உன்கிட்ட ஏதேதோ சொல்லச் சொன்னார். உனக்கு அத்தப் புத்திமதியெல்லாம் தேவை இல்லேங்கறது அப்பாவுக்குத் தெரியலை. அவர் அப்படித்தான் இருப்பார். ஒரு வேளை அவர் வயசுல நாமும் இப்படித்தான் இருப்பமோ என்னவோ...? நீதான் அவரைப் புரிஞ்சுக்கணும்,

விஸ்வம், எது சொன்னாலும் விட்டுக் கொடுத்து நடந்துக்கணும்...!''

''.....''

''நீ புத்திசாலி, உனக்கு நான் நிறையச் சொல்ல வேணாம். உனக்கே எல்லாம் தெரியும். இருந்தாலும் எனக்குத் தோணுறதைச் சொல்லலாம்னு நினைக்கிறேன்.''

''தாராளமா சொல்லு, பரசு தயங்காம சொல்லு...''

''வரதராஜன் நிச்சயமா உனக்கு இந்த வேலை கெடைச்சுடும்னு சொல்லி இருக்காராம். உனக்குப் பிடிக்கலைன்னாலும் வத்துண்டுதான் ஆகணும். வேற வழி இல்லே, விஸ்வம். என் ஒருத்தனோட சம்பளத்துல ரெண்டு இடத்துலயும் குடும்பம் நடத்த முடியாது. அதனால் எல்லாரையும் அழைச்சுண்டு அப்பாவை அங்கேயே வந்துடச் சொல்லிக் கூப்பிட்டேன். முடியாதுன்னு சொல்லிட்டார். அவரை வற்புறுத்த முடியாது. வற்புறுத்தறதுல எனக்கு இஷ்டமும் இல்லை. அவர் இங்கேயே இருக்கணும்னு நினைக்கறதுக்கு நிறையக் காரணம் இருக்கும். பரோடாவுக்குப் போன பின்னால எவ்வளவு பணம் என்னால அனுப்ப முடியும்னு தெரியலை.''

''பாரு!'' என்று குரல் நடுங்கக் கூப்பிட்டான் விஸ்வம். ''ப்ளீஸ், நீ எதுவும் அனுப்ப வேணாம். கொஞ்ச நாளாவது நிம்மதியா இரு. மன்னியைச் சந்தோஷமா வச்சுக்கோ. ரொம்ப நாளா உன்கிட்ட நான் ஒண்ணு சொல்லணும்னு நினைக்கிறேன்.''

''சொல்லு, விஸ்வம்.''

''ருக்... பரவாயில்லை. ருக்மிணின்னே சொல்றேன். அதுதான் எனக்கு சவுகரியமா வரது. நீ தப்பா எடுத்துக்க மாட்டேன்னு தெரியும். அவளை மாதிரி லட்சத்துல ஒருத்தி கூடக் கிடைக்க மாட்டா. அவளைச் சந்தோஷப்படுத்து, நம்ம வீட்டுக்கு வந்து வேலையைத் தவிர அவ ஒண்ணையும் பார்த்ததில்லை. அதற்காக அவ முகம் சுணுங்கினதுகூடக் கிடையாது. எப்பப் பார்த்தாலும் ஒரு சிரிப்பு. பரசு, ப்ளீஸ்! அவ மனசையும் கொஞ்சம் புரிஞ்சுக்கோ. இப்படித் தகுதி இல்லேன்னு நினைச்சுண்டு நீயா தள்ளி நிக்காதே. கொஞ்ச முன்னால நீதானே சொன்னே,

பலமா ஏதோ ஒரு சக்தி நம்மை நடத்திண்டு போறதுன்னு...? அந்தச் சக்திதான் அவளை உங்கிட்ட ஒப்படைச்சிருக்கு! அதுக்குத் தெரியும், யாரை யார் கிட்ட கொடுக்கறதுன்னு...? உன் விஷயத்துல மட்டும் அது தப்பு பண்ணியிருக்கும்னு நினைக்கறியா...?''

அவனையே பார்த்துக் கொண்டிருந்தான் பரசு. ஏதோ பளிச்சென்று புரிந்த மாதிரி இருந்தது. கண் ஓரம் நனைத்தது. வார்த்தை எழும்ப மறுத்தது.

''என்ன அப்படிப் பார்க்கறே?''

''ஒண்ணும் இல்லே, எவ்வளவு அழகாப் பேசற நீ!''

''இதுல அழகு ஒண்ணும் இல்ல. உண்மையைத்தான் சொல்றேன். ஒரு வேளை உண்மைக்கு இருக்கிற அழகு என் வார்த்தைக்கு வந்திருக்கும். நான் பெரிசா ஒண்ணும் சொல்லிடலே. உன்னைச் சந்தோஷமா இருக்கச் சொல்றேன். அவளையும் சந்தோஷப்படுத்தச் சொல்றேன். நாங்களெல்லாம் இரண்டாம் பட்சந்தான். எங்களைப்பத்திக் கவலைப்படாதே. நான் அந்த வேலையை உதறிவிட மாட்டேன்னு அப்பா கிட்ட சொல்லு. உன் ஸ்தானத்தக்கு எனக்கு முழுத்தகுதி இல்லேன்னாலும் ஓரளவாவது என்னை அதுல பொருத்திப்பேன். பொருத்திண்டே ஆகணும்; நீ சொன்ன மாதிரி வேற வழி இல்லே...'' அவன் முடித்த போது குரல் கம்மிப் போயிருந்தது; கண் ஓரம் பளபளத்தது. உதட்டைக் கடித்துக் கொண்டு பேசாமல் இருந்தான்.

மனசுக்கு அந்த ஆபீஸ் ஒரு தரம் வந்து போயிற்று. ஒரு சின்ன மேஜை, ஃபைல்கள், லெட்ஜர்கள், டெலிஃபோன் கால்கள், எண்கள், எண்கள், எண்கள்!...

உடம்பை ஒரு தரம் உதறிக்கொண்டான். மெதுவாக நிமிர்ந்து வானத்தைப் பார்த்தான். தூரத்தில் விமானம் ஒன்று கிளப்பு வினைக்கு பயிற்சிட வட்டமடித்தது. கொஞ்சம் கொஞ்சமாகக் கீழே இறங்கிக் கொண்டிருந்தது. சிறிது நேரத்தில் அது மீனம்பாக்கத்தில் தரையில் இறங்கிவிடும். பின், மூச்சு இரைக்கப் பிடிவாதமாகக் கொஞ்ச தூரம் ஓடும், கடைசியில் நின்று போய்விடும்...!

விஸ்வத்தின் அடி வயிற்றிலிருந்து ஒரு பெருமூச்சு எழும்பித் தணிந்தது.

20

இரண்டு பேருக்குமிடையில் பெரிய மௌனமாய் ஒன்று விழுந்து கிடந்தது. நெருவிலும் நிசப்தமாக இருந்தது. எப்போதாவது போகிற யாராவது ஒருவரின் செருப்புச் சத்தம், குழந்தை அழுகிற சத்தம், தூரத்துக் கார் ஹாரனின் சத்தம், சுவர்க் கோழியின் சத்தம் இப்படி ஒன்றுமே கேட்காத துல்லியமான ஒரு நிசப்தம். வானம் முழுதும் நட்சத்திரங்களாக இறைந்து கிடந்தன. முக்கால் நிலவின் குளிர்ச்சி பூமியைத் தொட்டது. காற்று மட்டும் இதமாக வீசிக் கொண்டிருந்தது.

தூரத்து இருட்டை வெறித்தபடி பேசாமல் இருந்தான் பரசு. அதன்பின் அவன் ஒன்றும் பேசவில்லை. பேச முடியவில்லை. மனசு அப்படித் தளர்ந்து போய் இருந்தது. 'எல்லாரும் எப்படியெல்லாம் மாற வேண்டியதாய் இருக்கு...!' என்று நினைத்துக் கொண்டான். வானத்தை அண்ணாந்து பார்த்தபடி முழங்காலைக் கட்டிக் கொண்டு அமைதியாக உட்கார்ந்திருக்கிற விஸ்வத்தைப் பார்த்த போது ஆழமான ஒரு வருத்தம் மனசை இறுகக் கவ்விக் கொண்டது. எப்போதோ பார்த்த சர்க்கஸின் ஒரு காட்சி சட்டென்று ஞாபகத்துக்கு வந்தது. கம்பீரமாய், பிரமிப்பை ஏற்படுத்துகிற மாதிரி தன் பெரிய உடம்போடு யானை ஒன்று வரும். சொடுக்கினால் சத்தத்தை எழுப்புகிற சாட்டையோடு ரிங் மாஸ்டரும் வருவார். அந்தச் சாட்டைக்குப் பயந்து அது அவர் சொல்கிறபடியெல்லாம் கேட்கும். ஒரு காலைத் தூக்கி ஸல்யூட் அடிக்கும். மண்டியிட்டு நமஸ்கரிக்கும். பெரிய உடம்பைக் குறுக்கிக் கொண்டு சின்ன முக்காலியின் மீது ஏறி நிற்கும். அதைப் பார்க்கிறபோது சொல்ல முடியாத சோகம் ஒன்று ஏற்படும். இவ்வளவு பெரிய மிருகத்தின் இயல்பான கம்பீரத்தை எப்படியெல்லாம் ஒடுக்கி விடுகிறார்கள் என்று வருத்தமாய் இருக்கும். அப்போது விஸ்வத்தைப் பார்த்ததும் அதே மாதிரி ஒரு வருத்தம் ஏற்பட்டது பரசுவுக்கு. எப்போதோ ஒரு நாள் தான் இதே போல் மொட்டை மாடியில் நின்று கொண்டிருந்தது நினைவுக்கு வந்தது. முருங்கை மரத்தின் இலைகளை உருவிக்

கீழே போட்டது. கோடி வீட்டுப் பெண் பேப்பரைச் சுருட்டி எடுத்துக் கொண்டு டைப்ரைட்டிங் இன்ஸ்டிட்யூட்டிற்குப் போவதைப் பார்த்தது, பின்பு, முழங்காலில் முகத்தைப் புதைத்துக் கொண்டு அழுதது... 'பாவம் விஸ்வம்' என்று சொல்லிக் கொண்டான். அவள் முதுகை அன்பாய்த் தடவி இன்னும் ஏதேதோ சொல்ல வேண்டும் போலிருந்தது. 'வேணாம், எதுக்கு? இந்த வார்த்தைகளுக்கெல்லாம் அர்த்தந்தான் என்ன? எதையும் பேசிவால்தாவா?' என்றும் தோன்றியது.

ஒன்றும் சொல்லாமல் மெதுவாக நகர்ந்து சுவரில் தன்றாகச் சரிந்து கொண்டான். கண் லேசாக அயர்ந்தியது. கொட்டாவி ஒன்றும் வந்தது.

அதைப் பார்த்த விஸ்வம், ''தூக்கம் வர்றதா?'' என்று கேட்டான்.

''உனக்கு வரலியா?''

''இல்லே, நீ வேணும்னா கீழ போய்ப் படுத்துக்கோயேன்!''

''ஏன் நீ வரலியா?''

''இல்ல, நான் இன்னும் கொஞ்ச நேரம் இங்கேயே இருந்துட்டு வர்றேன்.''

''இப்படி வெட்ட வெளியிலே எத்தனை நாழி உட்கார்ந்துண்டிருப்பே? இந்த ஜில்லிப்பு உடம்புக்கு ஒத்துக்காது.''

விஸ்வம் புன்னகை செய்தான்.

''எனக்குப் பழக்கந்தான். ஒண்ணும் பண்ணாது. நீ போய்த் தூங்கு. காலைல எழுந்து ஆபீசுக்கு வேற போயாகணும்.''

''நீ மட்டும் தனியா எத்தனை நாழிதான் இருப்பே?''

''கொஞ்ச நேரந்தான், தூக்கம் வரபோது இறங்கி வந்துடுவேன்.''

''அப்ப நான் போகட்டுமா?''

'சரி' என்று தலையாட்டினான் விஸ்வம். பரசு படிகளில் இறங்குவதை வெறுமனே பார்த்துக் கொண்டிருந்தான். பின், கவரைவிட்டு இறங்கி, கைகளை மடித்துத் தலைக்குக் கீழே வைத்துக் கொண்டு வானத்தைப் பார்த்தபடி மல்லாந்து படுத்தான்.

மேகங்களின் உருமாற்றத்தை, நட்சத்திரங்களின் மினுங்கலை, தென்னங் கீற்றின் பளபளப்பைக் கண் மட்டும் பார்த்துக் கொண்டிருந்தது. மனசு எதிலும் லயிக்கவில்லை. எது எதுவோ வந்து போயிற்று. கடைசியாக மீண்டும் பரசுவிடம் வந்து நிலைத்தது. இனிமேல் அவன் பிம்பத்தைத் தான் அணிந்து கொள்ள நேர்கிற நிர்பந்தத்தை நினைத்துப் பார்த்தாள். அகிலாவை வெளியே அனுப்ப, ராம்ஜியை கான்வோகேஷன் டிரஸ்ஸில் பார்க்க, எல்லாவற்றிற்கும் மேலாக அடுப்பில் வெண்கலப் பானை ஏற இவள் ஒரு பரசுவாக மாறியே ஆகவேண்டும்! வேறு வழியில்லை. இனிமேல் இவன்தன் ஆசைகளை எரித்துக் கொள்ள வேண்டும். அந்தக் கணப்பில் மற்றவர்கள் குளிர் காய்வதைச் சிரித்துக் கொண்டே பார்க்க வேண்டும். 'பரசு, உன்னால் இது எப்படி முடிந்தது? முகம் களிக்காமல் எந்த வருத்தத்தையும் காட்டாமல் இருக்க எப்படிக் கற்றுக் கொண்டாய்? எனக்கும் கொஞ்சம் கற்றுக் கொடேன். சிரித்துச் சிரித்து அந்தச் சிரிப்பில் எல்லாவற்றையும் கரைத்துக் கொள்கிற வழியைச் சொல்லிக் கொடேன்...' இல்லை, அதைப் பரசுவிடமிருந்து கற்றுக் கொள்ள முடியாது. அவன் சிரிக்க மாட்டான். அவனுக்குச் சிரிக்கத் தெரியாது. அது ருக்மிணியிடமிருந்து கற்றுக் கொள்ள வேண்டியது. எதற்கும் எப்போதும் உதட்டில் ஒரு சிரிப்பு. மத்தாப்பு எரிகிற மாதிரி...!

அவள் பரசுவோடு போகப் போவது இல்லை என்பது ஆறுதலாகத்தான் இருந்தது. ஆனாலும் அதன்பின் பத்து நாளோ, பதினைந்து நாளோ, ஒரு மாசமோ - வீடு கிடைத்ததும் அவளும் போய் விடுவாள். பின், அந்தச் சிரிப்பைப் பார்க்க முடியாது. அவனுக்கு அன்பாகச் சாதம் போட யாரும் இருக்க மாட்டார்கள். அவள் சொல்லாமலேயே மோர்ச் சாதம் மூலையில் மூடி வைக்கப்பட்டிருக்கும். காலையில் பக்கெட்டிற்குள் சோப்பில் முக்கிய சட்டை ராத்திரி அவன் திரும்பி வருகிறவரை அப்படியே கிடக்கும். அவள் அலமாரியிலிருந்து வா.ச.ரா.வும், ஜானகிராமனும் காணாமற் போக மாட்டார்கள். கொஞ்சுகிற மாதிரி இழைகிற வீணையில் 'சின்னஞ்சிறு கிளியே வாசியுங்களேன்...' என்று கேட்க முடியாது. இது என்ன பிரிவு?

எதற்காக இந்தப் பிரிவுகள்? மனசை ஒடித்துப் போடுவதற்கா இதெல்லாம்?

பக்கத்தில் காலடிச் சத்தம் கேட்டது. திடுக்கிட்ட மாதிரி திரும்பிப் பார்த்தாள். அப்பா நின்று கொண்டிருப்பது தெரிந்தது. நிலவு வெளிச்சம் தென்னங்கீற்றின் வழியாக அவர் முகத்தில் பாதியில் விழுந்தது. காலை மடக்கிச் சட்டென்று எழுந்து உட்கார்ந்து கொண்டாள்.

''இன்னும் இங்க என்ன பண்றே?'' என்று கேட்டுக் கொண்டே அவள் பக்கத்தில் உட்கார்ந்தார் அவர். பதிலை எதிர்பார்க்கிற கேள்வியாக அது இல்லாததால் பேசாமல் இருந்தாள் அவள்.

''தூக்கம் வரலியா?'' என்று மறுபடியும் கேட்டார்.

''இல்லை-'' என்று லேசான குரலில் சொன்னாள். பின் அவர் தரையைப் பார்த்துக் கொண்டு மௌனமாக இருந்தார். அப்படியே ஓர் அரை நிமிஷம் போயிற்று. பின் ''பரசு உன்கிட்ட எல்லாம் சொன்னானா?'' என்று கேட்டார்.

அவன் தலையாட்டினாள்.

''ஒரு தூண் மாதிரி தனியா நின்னு எல்லாப் பாரத்தையும் தாங்கிண்டிருந்தான். இப்ப இவன் போகப் போறேன்னு சொல்றதும் கஷ்டமா இருக்கு...!''

அதற்கும் அவன் ஒன்றும் சொல்லவில்லை.

''எனக்கு வர்ற பென்ஷன் பணம் எதுக்குப் போறும் சொல்லு? இந்தக் காலத்துல அதுல என்ன பண்ண முடியும்? வீட்டு வாடகைக்கே சரியாப் போயிடும். அப்புறம் சாப்பாட்டுக்கு என்ன பண்றது? இன்னும் கல்யாணத்துக்குப் பொண்ணு ஒருத்தி இருக்கா. அவளுக்கு என்ன பண்றது? இதையெல்லாம் நினைச்சா பயமா இருக்கு-''

விஸ்வம் நிமிர்ந்து அவரைப் பார்த்தாள். பரசு தங்களை விட்டுப் பிரிகிற வருத்தத்தைவிட இந்த வருத்தங்கள் எல்லாம்தான் அவருக்குப் பெரிதாக இருக்கிறது என்று உணர்ந்தபோது ஒரு விநாடி நேரத்துக்கு வெறுப்பாக இருந்தது. உடனே அவரை

அவனால் நியாயப் படுத்தியும் பார்க்க முடிந்தது. அவர் நிலைமையில் அப்படி நினைப்பது தப்பு ஒன்றும் இல்லை என்று தோன்றியது. அவரால் அப்படித்தான் நினைக்க முடியும். அவர் தன்னைப் பார்த்த பார்வையில் தெரிந்த கெஞ்சலை அவன் புரிந்து கொண்டான். ஏதாவது சொல்லேன், ஆறுதலாக ஒரு வார்த்தை பேசேன் என்று கேட்கிற மாதிரி அவன் அவருக்காகப் பரிதாபப்பட்டான். குழந்தைத்தனமாகத் தனக்குள் அவரிடம் ஏற்பட்ட கோபத்தை நினைத்து வெட்கப்பட்டான். இதற்கெல்லாம் இவர்தான் காரணம் மாதிரி இது என்ன கோபம்? யாரிடம் யார் கோபப்பட முடியும்? அப்படிப் பார்த்தால் அப்பாவுக்கும் தன் மீது கோபப்பட நிறையக் காரணங்கள் இருக்கும். பாவம், அப்பா! அவரிடம் மனசு விட்டுப் பேச வேண்டும். அன்பாகப் பேச வேண்டும். இதமாகப் பேச வேண்டும்.

''அப்பா...!'' என்று நிதானமாகக் கூப்பிட்டான்.

''ம்...!''

''நீங்க இந்த மாதிரி தளர்ந்து போயிடக் கூடாது. மனசைத் திடமா வச்சுக்கணும். பரசு ஒரு தூண் மாதிரி தனியா நின்னு எல்லாப் பாரத்தையும் தாங்கிண்டது உண்மைதான். எத்தனை நாளைக்குத்தான் அவனே தாங்கிண்டிருக்க முடியும்? கொஞ்ச நாழியாவது இறக்கி வைக்க வேணாமா? அதனாலதான் தானா இப்படி ஒண்ணு நேர்ந்திருக்கு! அவன் அருமையைப் புரிஞ்சுக்கோங்கன்னு காட்டி இருக்கு. அவள் மாதிரி - அவன் ஸ்தானத்துக்கு - எனக்கு முழுத் தகுதி இல்லேன்னாலும் ஓரளவாவது தகுதி இருக்கும்னு நினைக்கறேன்...!''

அவன் மேலே பேச முடியாமல் சற்று நிறுத்தினான். மீண்டும் ஆரம்பித்தபோது குரல் கரகரவென்று வந்தது.

''உங்களுக்குப் பரசு மேல இருக்கிற நம்பிக்கை என் மேல இடையாது. இதை நான் சுத்தமா சொல்லலே, அதுல தப்பு ஒண்ணும் இல்லேன்னுதான் சொல்ல வரேன். இனிமேல நம்பிக்கை வர மாதிரி நடந்துக்கணும்னு இப்பத்தான் நான் நினைச்சுண்டு இருந்தேன். அதையே தான் பரசு கிட்டயும் சொன்னேன். அப்பாவை கவலைப்படாம இருக்கச் சொல்லுன்னு சொன்னேன். வரதராஜன் அப்பாய்ன்மெண்ட் ஆர்டர் அனுப்பட்டும். உடனே போய்ச் சேர்ந்துடறேன்னு சொன்னேன். அவனைப் பணம் எதுவும் அனுப்ப வேணாம்னு சொன்னேன். 'நீயும் சந்தோஷமா இரு. மன்னியையும் சந்தோஷமா வச்சுக்கோ. வேற எதைப் பத்தியும் கவலைப் படாதே. இனிமேல மீதியெல்லாம் என் பொறுப்புன்னு' சொன்னேன்.

''அதையே உங்கிட்டயும் சொல்றேன். இதுக்கு மேல என்ன சொல்லி என்னை நிரூபிக்க முடியும்னு தெரியலை. இதற்கு மேல இன்னும் வேற என்ன செய்யணும்னு நீங்களே சொல்லுங்க...''

அவர் வாயடைத்துப் போய் அவனையே பார்த்தார். கண் ஓரத்தில் நீர் கட்டி நிலா வெளிச்சத்தில் பளிச்சிட்டது. 'விஸ்வமா இவன்! நேற்றுவரை வேலைக்குப் போக முரண்டு பிடித்த விஸ்வமா! அதே விஸ்வந்தானா இவன்!' மனசு வறண்டு போயிற்று. பரசு தன்னிடம் மேலே படிக்கக் கெஞ்சினது ஞாபகத்துக்கு வந்தது. 'இல்லேப்பா, படிக்கறேம்ப்பா!' என்று கண் கலங்கக் கேட்டது. ''பார்க்கலாம். பரசு. முதல்ல டைப்ரைட்டிங் இன்ஸ்ட்டிட்யூட்ல சேர்ந்திடு'' என்று தான் பதில் சொன்னது. எல்லாம் ஒவ்வொன்றாக நினைவுக்கு வந்தது. 'குப்'பென்று வயிற்றை ஏதோ சங்கடப்படுத்தியது. முதலில் பரசு! இப்போது இவன்...! ஒவ்வொருவரின் கனவுகளையும் நசுக்கி மிதிக்கிற குற்ற உணர்ச்சியில் உடைந்து போனார் அவர். பேச ஆரம்பித்த போது குரல் நடுங்கியது.

''இது போறும், விஸ்வம், வேற ஒண்ணும் செய்ய வேணாம் விஸ்வம். இதுக்கு மேல எது கேட்கவும் எனக்குத் தகுதி இல்லே. இதுக்கே தகுதியில்லை. உங்களையெல்லாம் இப்படிச் சிரமப்படுத்தறது ரொம்பக் கஷ்டமா இருக்கு. எனக்கு எதுவும் சொல்லத் தெரியலே. பலி ஆடு மாதிரி ஒவ்வொருத்தரா என் பேச்சுக்குப் பணிஞ்சு போறதைப் பார்க்கிறபோது ரொம்ப வேதனையா இருக்கு. நான் என்ன பண்ணுவேன் சொல்லு... விஸ்வம்!''

அவர் துண்டால் வாயைப் பொத்திக் கொண்டதும் பதறிப் போனான் விஸ்வம். அவர் இந்த மாதிரி உடைந்து அவன் பார்த்ததே இல்லை. அம்மா செத்துப் போன அன்று முதல் முதலாகப் பார்த்தான். இது இரண்டாவது தரம். அவன் பணிந்து போனது அவரை இவ்வளவு சங்கடப்படுத்தும் என்று நினைக்கக்கூட இல்லை. அவர் சந்தோஷப்படுவார், நிம்மதியாகக் கீழே இறங்கிப் போவார், 'எள்ளப்பா! சர்வேச்வரா!' என்று துண்டை உதறிப் போட்டுக் கொண்டு படுத்துக் கொள்வார் என்றுதான் நினைத்தான். ஆனால் ஒவ்வொருவருக்குள்ளேயும் எத்தனை ஒவ்வொருவர்கள்!

''அப்பா. என்ன இது?'' என்று அவர் தோளைத் தொட்டான். கையை எடுக்காமல் சில விநாடிகள் அப்படியே இருந்தான். அந்த ஸ்பரிசம் அவரை ஆசுவாசப்படுத்தி இருக்க வேண்டும். அவர் எதிர்பார்த்த ஆறுதலைத் தந்திருக்க வேண்டும். மெதுவாகத் தம்மைச் சமாளித்துக் கொண்டார். பின், ''ஒண்ணுமில்லே, வா போகலாம். ரொம்ப நாழியாயிடுத்து...!'' என்று துண்டால் முகத்தைத் துடைத்தபடி சரேலென்று எழுந்து கொண்டார். விஸ்வமும் எழுந்தான்.

படி இறங்கி அறைக்கு வந்தபோது பக்கத்து வீட்டில் வாசல் தெளித்துப் பெருக்குகிற சத்தம் கேட்டது.

21

பரசு புதன்கிழமை போவதாக ஏற்பாடாகி இருந்தது. அப்பா பஞ்சாங்கத்தை வைத்துக் கொண்டு புரட்டிப் பார்த்து நாள் குறித்துச் சொன்னார். விஸ்வம் டிக்கெட் வாங்கி ரிசர்வ் பண்ணிக் கொண்டு வந்தான். பரசுவை அழைத்துப் போய் நல்லதாக நாலு சட்டையும், பான்ட்டும் எடுத்துத் தைக்கக் கொடுத்தான். ஹோல்டால் ஒன்று வாங்கினான். கம்பளியில் போர்வையும், பெட்ஷீட்டும் எடுத்தான். ''இதெல்லாம் எதுக்கு?'' என்று பரசு தடுத்தபோது, ''நீ பேசாமல் இரு. இன்னும் நாலே நாள். எங்க இஷ்டப்படிதான் இருந்துட்டுப் போயேன்...'' என்று சிரித்தான்

விஸ்வம். அந்தச் சிரிப்பில் தெரிந்த வறட்சியைப் புரிந்து கொண்டு பேசாமல் இருந்து விட்டான் பரசு.

நாலு நாளும் வெறும் பேச்சில் போயிற்று. பரசுதான் நிறையப் பேசினான். எல்லாவற்றையும் பற்றிப் பேசினான். விஸ்வத்திடம் பேசின மாதிரி ராம்ஜியையும் தனியே அழைத்துப் போய்ப் பேசினான். ''நல்லாப் படி, ராம்ஜி. படிப்புதான் இப்போ முக்கியம், முக்கியம், வேறு எதுவும் முக்கியமில்ல. சினிமாவும் டிராமாவும் எப்பவேணும்னா பார்த்துக்கலாம். அதுக்காகப் போக வேணாம்னு உன்னைத் தடுக்கலை. எங்களை மாதிரி ஆயிட்டா நீயும் போகப் போறதில்லை. அந்த மாதிரியே படிப்பிலேயும் கவனம் இருக்கட்டும்னுதான் சொல்றேன்...'' என்றான். ராம்ஜி பதில் எதுவும் சொல்லாமல் தலையாட்டினான். அகிலாவிடமும் அப்பாவிடமும் அதே மாதிரி தனித்தனியாக ஏதோ சொல்வான். ருக்மிணியைக் கூட மாடிக்கு அழைத்துப் போய்ப் பேசிக் கொண்டிருந்தான். வாயைத் திறந்து எதையும் சொல்லத் தெரியாத அந்தப் பரசுவா இவன் என்று ஆச்சரியமாய் இருந்தது.

நாலாம் நாள் காலையில் எல்லாம் அடங்கிப் போய்விட்டது. மறுபடியும் பழைய பரசுவாக மாறிப் போனான். முகம் விழுந்து போயிற்று. மனம் வேதனையில் விழுந்து தத்தளிப்பதைக் காட்டியது. வீடே பேச்சற்ற மௌனத்தில் கனத்துக் கிடந்தது. அப்பா மட்டும் ஏதேதோ சொல்லிக் கொண்டிருந்தார்.

''அங்கெல்லாம் ரொம்பக் குளிரா இருக்குமோ, என்னமோ...? அதனால மறக்காம ஸ்வெட்டரை எடுத்துண்டு போ..''

''ஊர் பழகற வரைக்கும் ஜாக்கிறதையா இரு.''

''ராத்திரி நேரம் சூழிச்சு வராதே. பாஷை கூடத் தெரியாது. அதனால ரொம்ப ஜாக்கிரதையா இரு.''

''வேளைக்குச் சாப்பிடு, உடம்பைக் கெடுத்துண்டு டாதே...!''

இப்படி நினைத்து நினைத்துச் சொல்லிக் கொண்டிருந்தார். எல்லாவற்றிற்கும் தலையாட்டினான் அவன்.

இளம்பச் தயாரானதும் ராம்ஜி போய் டாக்ஸி கூட்டி வந்தான். ஹோல்டாலையும் சூட்கேஸையும் ஏற்றிவிட்டு வந்த

பரசு, அப்பாவை நிற்க வைத்து நமஸ்கரித்தான். அப்பாவுக்குக் கண் கலங்கிற்று.

''தீர்க்காயுசா நன்னா இருடா குழந்தே...!'' என்று ஆசீர்வதித்தபோது குரல் அடைத்துக் கொண்டது. பரசுவும் உதட்டைக் கடித்துக் கொண்டான்.

எல்லோரும் ஸ்டேஷனுக்குப் போயிருந்தார்கள். பிளாட்ஃபாரம் டிக்கெட் வாங்கிக் கொண்டு உள்ளே நுழைந்தபோது வண்டி பிளாட்ஃபாரத்திற்குள் நின்றிருந்தது. கூட்டம் தெரிசல் பட்டது. உருத் தெரியாமல் ஏதேதோ பேச்சு சத்தம். 'கடகட' வென்று ட்ராலி உருளுகிற சத்தம். வாழைப்பழமும், பிஸ்கட்டுகளும் விற்கிற சத்தம். குரலை இறுக்கி மாதிரி விட்டு விட்டுத் தொடருகிற அறிவிப்புச் சத்தம். ஒரு கம்பார்ட்மெண்ட் முழுவதையும் ஆக்கிரமித்துக் கொண்டு சிரிப்பும், பேச்சுமாய் இருந்த ராணுவ உடைகளைப் பார்த்துக் கொண்டு நின்றிருந்தான் விஸ்வம். தன் இடத்தைக் கண்டு பிடித்துச் சாமானை வைத்து விட்டு பரசு இறங்கி வந்தபோது, வண்டி இளம்பப் பத்து நிமிடங்களே இருந்தன.

''வரேம்ப்பா...''

''ஜாக்கிரதையாப் போ. போனதும் லெட்டர் போடு.''

''உடம்பைப் பாத்துக்கோண்ணா...!''

''நன்னாப் படி ரம்ஜி!''

''ஆகட்டும், நீ அடிக்கடி லெட்டர் போடு. இங்க இருந்த மாதிரி வேலை வேலைன்னு கெடக்காதே...!''

பரசு தலையாட்டிவிட்டு நகர்ந்தான். விஸ்வத்திடம் வந்து ஒன்றும் சொல்லாமல் நின்றான். கண் கலங்கிற்று. ''வரட்டுமா?'' என்று தலை மட்டும் ஆடியது. விஸ்வமும் எதுவும் பேசவில்லை. அவன் கையை மட்டும் பிடித்து ஒரு தரம் அழுத்தினான். அதில் எல்லாம் பேசிவிட்ட மாதிரி இருந்தது.

''நேரமாயிடுத்து. போ, ருக்மிணிகிட்ட சொல்லிக்கோ!''

கடைசியில் ருக்மிணியிடம் போனபோது ஒரு நிமிஷ நேரந்தான் இருந்தது. சட்டென்று அவள் கையைப் பற்றிக்

கொண்டு ஒரு விநாடி நேரம் அப்படியே நின்றாள். பின் சமாளித்துக் கொண்டு ''வாட்டுமா?'' என்று கேட்டாள். பேச்சு எழும்பாமல் அவள் தலை மட்டும் மெதுவாக ஆடியது. பின அவள் கையை விட்டுவிட்டு ஓடிப்போய் வண்டியில் ஏறிக்கொண்டான். வண்டி ஒரு தரம் அதிர்ந்து, மெதுவாக நகரவும் ஆரம்பித்தது. ஜன்னல் முழுதும் கைகளாக ஆடின. பிளாட்ஃபாரத்திலும் கைகள் தெரிந்தன. வாசலில் நின்ற தெரிசலில் ஒரு கையால் தொற்றிக் கொண்ட பரசு, மறு கையை ஆட்டினான்.

''ருக்... மிணி... வரே... ன்!''

கொஞ்சம் கொஞ்சமாய்ப் பின்னால் தெரிந்த சிவப்பு விளக்கு மங்கிப் பின்பு மறைந்து போயிற்று. கனமான ஒரு மூச்சோடு மெதுவாகத் திரும்பி ருக்மிணியைப் பார்த்தான் விஸ்வம். அவள் கண் மினுமினுத்தது. கோடியில் ஒரு முத்து பளிச்சிட்டது.

'...மனசைப் பிடிந்து உலுக்குகிற மாதிரி இது என்ன பிரிவு? இவளை இப்படி விட்டுப் போக உனக்கு எப்படி மனசு வந்தது, பரசு...?'

தலையைக் கவிழ்த்துக் கொண்டு பிளாட்பாரத்தை விட்டு மெதுவாக நடக்க ஆரம்பித்தான்.

ஞாயிற்றுக் கிழமை. காலையிலேயே வீட்டை விட்டுக் கிளம்பினான் விஸ்வம். நேராகப் பத்ரியின் வீட்டுக்குப் போனான். அவன் போனபோது பத்ரி குளித்துக் கொண்டிருந்தான். பத்ரியின் அம்மா அவனை உட்கார வைத்துக் காபி கொடுத்தாள். எல்லோரும் சௌக்கியமா என்று விசாரித்தாள்.

''அண்ணா போய் லெட்டர் போட்டானோ?''

''ம்... ஒரு லெட்டர் வந்தது'' என்று பதில் சொன்னான் விஸ்வம்.

''மன்னி எப்போ போகப் போறா?''

''தெரியலை. வீடு பார்த்ததுக்கு அப்புறந்தான்.''

''அகிலா என்ன பண்றா?''

''சும்மாத்தான் இருக்கா.''

''எப்படிப் போது போறது?''

''ம்...?''

''அவளுக்குப் பொழுது எப்படிப் போறதுன்னு கேட்டேன்...''

''எப்படியோ போயிடறது. ஏதோ தையல் கத்துக்கறா, மீதி நேரத்துக்கு டிரான்சிஸ்டர் இருக்கவே இருக்கு.''

சிறிது நேரம் பேசாமல் இருந்த பின்-

''இன்னிக்கா உங்க பத்திரிகை வர்றது?'' என்று மறுபடியும் ஆரம்பித்தாள்.

''ஆமாம்!'' என்று தலையாட்டினான் அவன்.

''நாங்கெல்லாம் வரலாமோ?''

''தாராளமா வரலாம் மாமி, நீங்கள்லாம் வரது மட்டுமில்லை, வாங்கிப் படிக்கவும் படிக்கணும்'' என்றான்.

அதற்குள் உள்ளேயிருந்து வந்த பத்மியின் தம்பி, ''எதை? உங்க பத்திரிகையையா? யார் படிக்கிறது?'' என்று சிரித்துக் கொண்டே கேட்டான். விஸ்வமும் சிரித்தான்.

''நிஜமாவே கேட்கிறேன். இதெல்லாம் என்ன பத்திரிகைன்னு ஆரம்பிக்கறீங்க? ஒரு எழுத்து புரியறதில்லை. எழுதறவங்கள்லாம் தங்களைப் பெரிய மேதாவின்னு நினைச்சுண்டு எழுதிடறது...!''

சட்டையைப் போட்டுக் கொண்டே வெளியில் வந்த பத்மி, ''அது சரி. அதையெல்லாம் உன்னால புரிஞ்சுக்க முடியாது. புரிஞ்சுக்கணும்னா கொஞ்சம் புத்திசாலித்தனம் வேணும்!'' என்றான்.

''ஆமாம், உன் மனசுல நீ பெரிய புத்திசாலின்னு நினைப்போ?'' என்று முறைத்தான் அவன்.

அது காதில் விழாத மாதிரி பத்மி விஸ்வத்தின் பக்கம் திரும்பினான். ''போகலாமா?'' என்று கேட்டான். விஸ்வம் எழுந்து கொண்டான். பத்மியின் அம்மாவைப் பார்த்து, ''சாயங்காலம் கட்டாயம் வாங்கோ...'' என்றான்.

''வேல்ட் ஆஃப் மடம்!'' என்று பத்மியின் தம்பி முணுமுணுத்தான். அதற்கும் சிரிப்பைப் பதிலாகத் தந்து விட்டு விஸ்வம் செருப்பைப் போட்டுக் கொண்டான். வெளியில் வந்ததும் பத்மி, தன் தம்பியை, 'சரியான மடையன்!' என்று திட்டினான். விஸ்வம் பேசாமல் நடந்தான்.

இரண்டு பேரும் நேராக ராமகிருஷ்ணனின் வீட்டுக்குப் போனார்கள். பத்திரிகை வெளியீட்டிற்கான வேலைகளைக் கவனிக்கத் தொடங்கினார்கள். தாங்கள் மிகவும் மதிக்கிற எழுத்தாளர் ஒருவரைப் பேசக் கூப்பிட்டிருந்தார்கள். உலகச் சிறுகதைகள் என்ற தலைப்பில் அவரும் பேச ஒப்புக் கொண்டிருந்தார். முதல் பிரதியை அவருக்கே அளிப்பது என்று முடிவு செய்து கொண்டார்கள். மாம்பலத்தில் இருந்த அவருடைய வீட்டுக்குப் போய் மாலை இலக்கியக் கூட்டத்தை ஞாபகப்படுத்தினார்கள். பின் பக்கத்தில் இருந்த இண்டியா காபி ஹவுஸில் உட்கார்ந்து சிறிது நேரம் பேசிவார்கள். தங்கள் கருத்துகளை சின்னத் தலைப்புரையாகப் பேசி வெளியிட முடிவு செய்தார்கள். அந்தப் பொறுப்பு விஸ்வத்திடம் விடப்பட்டது. அவன் சுருக்கமாய் ஒரு பேப்பரில் எழுதிப் படித்து விடுவதாகச் சொன்னான். பின்பு, மாலை ஐந்து மணிக்கு இலக்கியக் கூட்டத்தில் சந்திப்பதாகக் கூறி விடை பெற்றார்கள். விஸ்வம் வீட்டுக்குத் திரும்பியபோது மணி இரண்டாகி இருந்தது.

படியேறினதும் தாழ்வாரத்தில் நிறுத்தியிருந்த சைக்கிள் கண்ணில் பட்டது. உடனே பரசுவின் ஞாபகம் வந்தது. இந்த மாதிரி அவன் உபயோகித்த பொருட்களைப் பார்க்கும்போது சட்டென்று அவன் ஞாபகம் வரும். சங்கிலித் தொடராக, அவனோடு மாடியில் பேசினது- கடைக்குப் போனது- ரயில்வே ஸ்டேஷனில் நின்றிருந்தது என்று ஒவ்வொன்றாக மனசை நிறைக்கும். இன்றோடு அவன் ஊருக்குப் போய் ஐந்து நாளாகிவிட்டது என்ற நினைத்ததும் ஆச்சர்யமாய் இருந்தது. 'ஐந்து நாள்தானா ஆயிற்று...' என்று கேட்டுக் கொண்டான். முதல் இரண்டு நாட்கள் வீட்டின் வெறுமை அதிகமாய்த் தெரிந்தது. பரசு இல்லை என்பது ஒவ்வொரு நிமிடமும் மனசை நெருடுகிற விஷயமாக இருந்தது. இப்போது அப்படி இல்லை. கொஞ்சம்

பழகிப் போய் விட்டது. 'எந்த விஷயமும் பழகினால் எவ்வளவு சுலபமாகி விடுகிறது!' என்று நினைத்துக் கொண்டான்.

உள்ளே போனபோது அப்பா கூடத்துப் பெஞ்சில் தூங்கிக்கொண்டிருந்தார். அலோ, டிரான்ஸிஸ்டரை சின்னதாக்கிக் காதருகில் வைத்து ஏதோ கேட்டுக் கொண்டிருந்தாள். இவனைப் பார்த்ததும், ''எங்க போயிட்டே? சாப்பிட்டுட்டுப் போகக் கூடாதா? எங்களுக்கும் வேலை ஆகுமோல்லியோ...? மன்னிகூட இன்னும் சாப்பிடலை...!'' என்றாள்.

'இதோ வந்துட்டேன்' என்று முற்றத்தில் இறங்கிக் கைகால் அலம்பிக் கொண்டான் அவன். முகத்தில் தண்ணீர் வாரித் தெளித்துக் கொண்டான். சமையலறையில் நுழைந்தபோது தட்டுப் போட்டு வைத்திருந்தது. ருக்மிணி பரிமாறத் தயாராய் நின்று கொண்டிருந்தாள்.

''நீங்களும் உட்காருங்கோ. எல்லாத்தையும் எடுத்து வச்சுண்டு ரெண்டு பேரும் ஒண்ணாவே சாப்பிட்டுடலாம்!'' என்றான்.

''இல்லே; உங்களுக்குப் போட்டுட்டு அப்புறமே சாப்பிடறேன்.''

''வேணாம். ஏற்கனவே நேரம் ஆயிடுத்து. உட்காருங்க சொல்றேன்'' என்று வற்புறுத்திவிட்டும் ருக்மிணி தன் தட்டையும் எடுத்து அவனுக்கு எதிரில் போட்டுக் கொண்டாள்.

சாப்பிட்டுக் கொண்டே அன்று மாலை பத்திரிகை வெளியாகிற விஷயத்தைச் சொன்னான் விஸ்வம். அவள் ஒரு விவரம் விடாமல் கேட்டுத் தெரிந்து கொண்டாள். அந்த ஆர்வத்தைப் பார்த்ததும் சாயந்தரம் அவளையும் அழைத்துக் கொண்டு போனால் என்ன என்று தோன்றியது. வெகு நாட்களாகவே அவன் இந்த மாதிரிக் கூட்டங்களுக்குக் கிளம்புகிற போதெல்லாம், 'ஒரு தரம் என்னையுந்தான் அழைச்சுண்டு போங்களேன். எப்படி இருக்கிறது பார்க்கலாம்?' என்று கேட்டுக் கொண்டிருந்தாள் அவள். இன்று அழைத்துப் போனால் என்ன?

''சாயந்தரம் நீங்களும் வாங்களேன்'' என்று கூப்பிட்டான்.

உடனே 'சரி' என்று தலையாட்டினாள் அவள். சட்டென்று ஏதோ ஞாபகம் வந்தவளாக, ''அப்பா என்ன சொல்வாரோ?'' என்றாள்.

''அப்பா கிட்ட நான் கேக்கறேன்'' என்று சாப்பிட்டு முடித்துத் தட்டை எடுத்துக் கொண்டு எழுந்தான்.

''நீங்க என் தட்டை எடுக்கணும்? வச்சுட்டுப் போங்க...'' என்று ருக்மிணி சொன்னதைக் காதில் போட்டுக் கொள்ளாமல் கழுவிக் கொண்டு வந்து வைத்தான். பின், தன் அறைக்குப் போய்ப் போக வேண்டிய விஷயத்தைத் தயார் செய்தான்.

காலு மணி வாக்கில் காபி குடித்துக் கொண்டிருந்த போது, அப்பாவிடம் மெதுவாகக் கேட்டான்.

''இன்னிக்குச் சாயந்தரம் ஒரு லிட்ரரி மீட்டிங் இருக்கு. அதுக்கு மன்னியும் வரணும்னு ஆசைப்படறா...!''

''ஆசைப்பட்டா அழைச்சுண்டு போயேன். பாவம்! அவதான் எங்க போறா...?'' என்று உடனே அவளிடமிருந்து பதில் வந்தது.

விஸ்வம் அகிலாவையும் வரச்சொல்லிக் கூப்பிட்டான்.

''ஐயா! அங்கெல்லாம் நான் வரலை. ரொம்ப 'போர்' அடிக்கும். நீ மன்னியை அழைச்சுண்டு போ!'' என்று மறுத்துவிட்டாள் அவள்.

ருக்மிணியை அழைத்துக் கொண்டு பஸ் பிடித்து மௌண்ட்ரோடிலிருந்த அந்த லைப்ரரி மாடியை அடைந்தபோது மணி ஐந்தே காலாகி விட்டிருந்தது.

22

கூட்டம் முடிந்ததும் ருக்மிணியை ஓர் ஓரமாக நிற்கச் சொல்லி நண்பர்களோடு பேசப் போனான் விஸ்வம். பத்திரிகையைப் பற்றி ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாய் அபிப்ராயம் தெரிவித்தார்கள். கவிதைகள் அவ்வளவு திருப்தியாய் இல்லை என்றார்கள். புத்தக விமரிசனம் விமரிசகரின் குறுகிய

பார்வையைத்தான் காட்டுகிறது என்றார்கள். சிவிமா விமர்சனமும் இன்டர்வ்யூவும் நன்றாக இருப்பதைத் தெரிவித்தார்கள். ஏற்கனவே பத்திரிகை ஆரம்பித்து நிறுத்தின நண்பர்கள் அதன் சிரமங்களைப் பற்றிப் பேசினார்கள். எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டு நிதானமாய்ப் பதில் அளித்தான் விஸ்வம். பின்னர், அவர்களிடம் விடை பெற்று ராமகிருஷ்ணனிடம் போனான்.

''மீதியை நாளைக்குப் பார்த்துக்கலாம் கிருஷ்ணா; இப்ப கொஞ்சம் சீக்கிரமாய்ப் போகணும். மன்னி காத்துண்டிருக்கா-'' என்றான்.

''ஓ எஸ். நீ போ விஸ்வம். நாங்க பார்த்துக்கறோம்'' என்று சொல்லி அனுப்பினான் ராமகிருஷ்ணன்.

ருக்மிணியிடம் வந்து ''வாங்க, போகலாம்'' என்றான்.

இரண்டு பேரும் நடக்க ஆரம்பித்தார்கள். கட்டடத்தை விட்டு வெளியில் வந்ததும், ''இப்போ மணி என்ன ஆறது?'' என்று கேட்டாள் ருக்மிணி.

கைக் கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டே, ''எட்டு பத்து!'' என்றான்.

''அவ்வளவுதானா? அப்படின்னா பேசிண்டே, காத்தாட நடந்து போயிடலாமே?''

''ஓ. எஸ். நான் ரெடி. ஆனா உங்களால் அவ்வளவு தூரம் நடக்க முடியுமா?''

''என் முடியாது? பேசிண்டே போனா எந்தச் சிரமமும் தெரியாது.''

''சரி, அப்படின்னா நடக்கலாம்.''

இருவரும் பேசாமல் நடந்தார்கள். சிறிது தூரம் போனதும் ருக்மிணிதான் பேச்சை ஆரம்பித்தாள்.

''பத்திரிகை நன்னா வந்திருக்கு. சைஸ்கூடப் படிக்க வசதியா அழகா இருக்கு!'' என்றாள்.

விஸ்வம் ஒன்றும் சொல்லவில்லை.

''இன்டர்வ்யூ எனக்கு ரொம்பப் புடிச்சது. அதை யார் டிரான்ஸ்லேட் பண்ணினது?'' என்று கேட்டாள்.

''நான்தான்'' என்றான் விஸ்வம்.

''சிவிமா ரிவ்யூ?''

''பத்தி தெரியுமா உங்களுக்கு? கொஞ்சம் குள்ளமா அம்மைப் புள்ளி மூஞ்சியோட மீசை வச்சிண்டு வருவானே...? அவன்தான் பண்ணினான்.''

''ரிவ்யூ நன்னா வந்திருக்கு. ஆனா டெக்னிகல் வார்த்தைகள் தான் கொஞ்சம் அதிகமா இருக்கு. அதைக் குறைச்சிருக்கலாம்னு தோன்றது-''

''ஆகட்டும். பத்திரிகை நீங்க இப்படிச் சொன்னதா சொல்றேன்!'' என்று சிரித்தான் விஸ்வம். ருக்மிணியும் புன்னகை செய்தான்.

சாலையில் கார்கள் எண்ணி விடுகிற அளவில் போய்க் கொண்டிருந்தன. ஒன்று விட்டு ஒன்றாகத் தெரு விளக்குகள் எரிந்தன. கடைகளில் பெட்ரோமாக்ஸ் விளக்குள் தொங்கின. மௌண்ட் ரோடை அந்த அரை இருட்டில் பார்க்க அழகாக இருந்தது. ஜெமினி மேம்பாலத்தைக் கடந்து திரும்புகிறவரை பேச்சு எதுவும் இல்லை.

விளக்கு வெளிச்சத்தில் புடவைக்குள்ளிருந்து ருக்மிணியின் பாதம் பளிச்சிட்டு மறைவதைப் பார்த்துக் கொண்டே நடந்தான் விஸ்வம். டிரைவ் இன்னைத்தாண்டினதும் மெதுவாகக் கேட்டாள் ருக்மிணி.

''நான் பரோடா போயிட்டாக்கூட மறக்காம எனக்குப் பத்திரிகையை அனுப்புவீங்க, இல்லையா?''

அனுப்புவதாகத் தலையாட்டினான் அவன். பின், ஒரு விநாடி கழித்து, ''நீங்க பரோடா போறேன்னு சொல்றதைக் கேக்கறபோதே கஷ்டமா இருக்கு...!'' என்றான்.

ருக்மிணி பேசாமல் இருந்தாள்.

''பரசு போனதே வீடு வெறிச்சுனு ஆயிடுத்து. இன்னும் நீங்களும் போயிட்டா...'' என்று முடிக்காமல் நிறுத்தினான் மேலே பேச்ச வராமல் தவித்தான்.

அவன் முகத்தைப் பார்த்து வருத்தமாய்ச் சிரித்துக் கொண்டே, ''என்ன பண்றது?'' என்றாள் ருக்மிணி.

''எனக்குக்கூடக் கஷ்டமாத்தான் இருக்கு. ஆனா என்ன பண்ண முடியும்?''

''ஒண்ணும் பண்ண முடியாதுன்னு தெரியறது. ஆனாலும் ரொம்ப கஷ்டமா இருக்கு...''

''பரசுவை அங்கே தனியா விட்டுட்டு இங்கே இப்படி இருக்கிறதும் உங்களுக்குக் கஷ்டமாத்தான் இருக்கும்...''

அவள் அதற்கு உடனே பதில் சொல்லவில்லை. ஒரு நிமிஷம் இரண்டு நிமிஷம் என்று போயிற்று. பின் பேச ஆரம்பித்தபோது குரல் தழைந்து வந்தது.

''உண்மைதான். அன்னிக்கு அவர் ரயில்ல போன போதே ரொம்ப கஷ்டமா இருந்தது. மனசை என்னமோ பண்ணித்து. வயிற்றைச் சங்கடப்படுத்தித்து. சொல்லத் தெரியாமல் ஒரு அவஸ்தை. ரெண்டுநாள் வரைக்கும் அதே அவஸ்தை அரிச்சிண்டிருந்தாலும் கூடவே ஒரு தைரியமும் இருந்தது. பதினைஞ்சு நாளோ ஒரு மாசமோ அப்புறம் அவர் கூடத்தானே இருக்கப் போறம்ன்ற தைரியம். இப்ப இது அப்படியில்லை. உங்களையெல்லாம் விட்டுட்டுப் போனா திரும்பி வந்துட முடியப்போறதில்லை. இத்தோட அகிலா கல்யாணத்துக்குத்தான் வரணும். அது எப்போன்னு யாருக்குத் தெரியும்?''

அவள் குரல் கரகரப்பதை முதல் தடவையாகக் கேட்டான் விஸ்வம். உதட்டிலிருந்த அந்தப் புன்னகை மறைந்து போயிற்று. கண் பளபளப்பது தெரிந்தது. அவனாலும் பேச முடியவில்லை. மனசை ஏதோ இறுக்கிற்று. தலை குனிந்து மௌனமாகவே நடந்தான்.

''உங்கண்ணா ரயில்ல ஏறுகிற கடைசி நிமிஷம்வரை வருத்தப்பட்டுண்டேதான் போனார். இப்படி ஒரு டிரான்ஸ்ஃபர் இப்ப வந்திருக்க வேணாம்னு சொல்லிண்டே இருந்தார். முக்கியமா உங்க மேல எல்லாப் பொறுப்பையும் சுமத்துறதுலே அவருக்கு ரொம்பக் கஷ்டம்...'' என்று சொல்லிவிட்டு அவளை நிமிர்ந்து பார்த்தாள். அப்போதும் அவன் தலை நிமிரவில்லை.

மேலே பேச ஆரம்பித்தபோதும் அவள் குரல் இன்னும் தழைந்து வார்த்தைகள் எல்லாம் மிகவும் மென்மையாக வெளிப்பட்டன.

''உங்கண்ணா ரொம்ப உயர்ந்த மனுஷர். அவர் மாதிரி ஒருத்தரைப் பார்க்கவே முடியாதோன்னு சில சமயம் எனக்குத் தோணும். இந்த மாதிரி ஒரு மனசான்னு ஆச்சரியமாக்கூட இருக்கும். அந்த மனசுக்கு எனக்கு என்ன தகுதி இருக்குன்னு அடிக்கடி கேட்டுப்பேன்.''

சட்டென்று திரும்பி அவளைப் பார்த்தான் விஸ்வம். மனசை உலுக்கிவிட்ட மாதிரி இருந்தது. உடம்பு ஒரு தரம் சிலிர்த்தது. 'என்ன இது! இதில் யார் உயரம் அதிகம்! இந்த மாதிரி பொறுக்கிப் பார்த்து ஸ்வாமி எப்படி ஒன்றாய்ப் போட்டது!'

''என்ன அப்படிப் பார்க்கறீங்க? நான் உண்மையைத் தான் சொல்றேன். அந்த மாதிரி ஒரு மனசு உங்கண்ணாவுக்கு. தப்பா எதையும் நினைக்கத் தெரியாது. யாரையும் தப்பாப் பார்க்கத் தெரியாது. கோபப்படத் தெரியாது. பிறத்தியார் கஷ்டத்தைப் பார்த்துண்டிருக்கத் தெரியாது. தன் கஷ்டத்தை வெளியே சொல்லிக்கத் தெரியாது. கல்மிஷமில்லாமல் அப்படி ஒரு மனசு யாருக்கும் இருக்க முடியாது. அந்த மாதிரி ஆயிரத்துல ஒருத்தர் லட்சத்துல ஒருத்தராவது இருப்பாரான்றதுகூடச் சந்தேகந்தான்.

''ஆனா அவரென்னவோ நான் இடம் மாறி வந்துட்ட மாதிரி நினைச்சுக்கிறார். எங்கேயோ கோபுரத்துல இருக்க வேண்டியவள்ங்கிற மாதிரி பழகறார். அதுதான் எனக்குக் கஷ்டமா இருக்கு. நான் அழகா இருக்கறதுதான் கஷ்டமா இருக்கு. அழகா இருந்துட்டா அதுக்கு இன்னொரு அழகு தான் சொந்தமாகணும்னு தானா நினைச்சுண்டு அவஸ்தைப்பட்டா என்ன பண்றது?''

தலையைக் குனிந்து கொண்டான் விஸ்வம். ''ருக்மிணி, பேசாதேயேன். என்னால் தாங்க முடியலையே?'' என்று சொல்ல வேண்டும் போலிருந்தது. ஆனால், பேசாமல் இருந்தான்.

''உங்காத்லேர்ந்து பெண் பார்த்துட்டுப் போனதுக்கப்புறம் எங்கப்பா வந்து என்கிட்ட பேசினார். 'அம்மா, பையன் கொஞ்சம் கருப்புதான். எஸ்.எஸ்.எல்.ஸி. தான் படிச்சிருக்கான். சம்பளமும் அல்லவாவா இல்லே. ஆனா குணம் இருக்கே, அது ஒண்ணு போறும். நான் பார்த்து வளர்த்த பையன். நீ என்ன

சொல்றே?'ன்னு கேட்டார். 'ஏம்பா? நிறம், படிப்பு, சம்பளம் இதெல்லாந்தான் தகுதியா? மனுஷா-மனுஷாளா இருக்கிறது பெரிய தகுதி இல்லையான்?'ஸு கேட்டேன். ஒரு தரம் அசந்து போன மாதிரி என்னைப் பார்த்தார். அப்புறம் பேசாமல் போயிட்டார்.''

''என்ன சொன்னீங்க? திருப்பிச் சொல்லுங்க'' என்று குரல் நடுங்கக் கேட்டான் விஸ்வம்.

''ஆமாம் விஸ்வம், நமக்கு மனுஷத்தனம் மட்டும் இருந்தாப் போறும்னு நினைக்கிறேன். வேற என்ன தெரியணும்? மீதி எல்லாத்தையும் தெரிஞ்சுண்டு இது தெரியாமப் போனா என்ன பிரயோஜனம்? அன்னிக்கு ஒருநாள் நீங்க உங்க ஜமுனாவைப் பத்தி பேசினபோதே சொல்லணும்னு நினைச்சேன். 'என்னால அவகூடச் சந்தோஷமா இருக்க முடியாதோன்னு பயமா இருக்கு'ன்னு நீங்க சொன்னதைக் கேட்ட போதே சொல்லணும்னு நினைச்சேன். ஆனா அப்ப சொல்லியிருந்தா அது அவ்வளவு சரியா இருந்திருக்காது. இப்ப சொல்றேன். நமக்கு யார் கூடவும் சந்தோஷமா இருக்கத் தெரியணும். எப்பவும் சந்தோஷமா இருக்கத் தெரியணும். எங்கப்பா அடிக்கடி சொல்லுவார்; சந்தோஷமா இருக்கத்தான் நாமெல்லாம் பிறந்திருக்கோம்னு. சிரிச்சுண்டே இருந்துட்டா சந்தோஷமா இருந்துடலாம்பார். அந்தச் சிரிப்பு மூஞ்சிலேயும், மனசுலேயும் வந்துட்டா சந்தோஷத்துக்குக் குறைச்சலே இல்லேம்பார். அவர்தான் எனக்குச் சிரிக்கக் கத்துக் கொடுத்தார்; எதுக்கும் - எப்போதும் சிரிக்கணும்னு சொல்லிச் சொல்லிப் பயிற்சியாகவே மாத்திட்டார். உங்க ஃப்ட்ட அன்னிக்கி பேசிண்டிருந்த போது, இதையெல்லாம் சொல்லிடணும்னு தோணித்து. ஆனா ஒரு சந்தர்ப்பம் வரும். சொல்லிக்கலாம்னு இருந்துட்டேன்.

''இப்ப அந்தச் சந்தர்ப்பம் கிடைச்சிருக்கு. சொல்லிடறேன். நீங்களா ஒரு கனமான குண்டைத் தூக்கி வச்சுண்டு அவஸ்தைப் படறதைப் பார்த்தா கஷ்டமா இருக்கு. எதுக்கு இந்த அவஸ்தையெல்லாம்? கொஞ்சம் ஈஸியா இருந்துட்டுப் போனால்

தான் என்ன? சாதாரணமா இருக்கிறதிலே என்ன தப்பு சொல்லுங்கோ?'' என்று கேட்டு நிறுத்தினாள் ருக்மிணி.

அவன் பதில் சொல்லவில்லை. தலை குனிந்து மௌனமாய் நடந்து கொண்டிருந்தான். அவனிடமிருந்து பதில் வராது என்று புரிந்து கொண்ட ருக்மிணி, மீண்டும் தானே பேசினாள்:

''எல்லாத்தையும் தெரிஞ்சுக்கணும்னு நினைக்கிறது நல்ல நினைப்புதான். ஆனா தெரிஞ்சுண்டு என்ன பண்ணப் போறோம்? தெரிஞ்சுண்டவாள்ளாம் என்ன பண்றா? நாம பண்ணுறதைத்தான் பண்றா. அதுக்காக தெரிஞ்சுக்கறதே அவசியம் இல்லைன்னு சொல்லலை. தெரியாததனால தப்பு ஒண்ணுமில்லேன்னுதான் சொல்ல வரேன். 'அபத்தமா பேசறா'ன்னு அன்னிக்கு நீங்க ஜமுனாவைப் பத்தி சொன்னீங்களே, அதுக்குத்தான் சொல்றேன். அவளுக்கு உங்களை மாதிரி பேசத் தெரியாம இருக்கலாம். யோசிக்கத் தெரியாம இருக்கலாம். உங்களை மாதிரி அத்தனை படிச்சவளா இல்லாம இருக்கலாம். ஆனா அவளுக்கு உங்க மேல ஒரு பிரியம் இருக்கு. அளவு கடந்த பிரியம். அந்த அன்பைத் தவிர வேற என்ன வேணும் உங்களுக்கு? அது எவ்வளவு பெரிய விஷயம்? மனுஷ உறவுகளைவிட அதெல்லாம் பெரிசா என்ன? உங்க புத்திசாலித்தனத்தை நுழைச்சு எல்லாரையும் துருவிப் பார்க்கிறதை நீங்க விட்டுடணும். ஒவ்வொருத்தரையும் அப்படியே ஏத்துக்கணும். நிறை குறைகளோட ஏத்துக்கணும். ஏத்துண்டு சந்தோஷமா இருக்கத் தெரியணும். அவாளையும் சந்தோஷப்படுத்தத் தெரியணும்...''

விஸ்வம் மனசு உருக மேலே நடக்காமல் அப்படியே நின்றான். ஏது ஏதுவோ புரிந்த மாதிரி இருந்தது. திடீரென்று எல்லாமே சந்தோஷமாகத் தெரிந்தது. தாங்க முடியாமல் கண் கலங்கிற்று. பேச்சு வராமல் அடைத்துக் கொண்டது.

''மன்னி...'' என்ற ஒரே வார்த்தைதான் வெளியில் வந்தது.

23

அன்று கடற்கரையில் கூட்டம் இல்லை. சிலுசிலுவென்று காற்று வீசியது. மேற்கில் மறைகிற சூரியனின் சிவப்பு, பட்டை பட்டையாய் வானத்தில் கோடு முந்தது. மணலோரத்தில் ஓடி வருகிற அலைகளில் நுரை நுனி வெள்ளியாகச் சுருட்டிக் கொண்டது. ஒன்றன்பின் ஒன்றாக ஓயாமல் எத்தனை சுருள்கள். அவற்றில் காலை நனைத்துக் கொண்டு வெகுநேரம் நின்றிருந்தான் விஸ்வம். தூரத்தில் தெரிந்த பாய்மரப் படகை, வரிசையாய் நின்றிருந்த கப்பல்களை, வானத்தில் பளிச்சிடும் நீலத்தை, மூட்டையாக நகருகிற மேகங்களை மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருந்தான். மனசு எதிலும் நிலைக்கவில்லை. திரும்பி வந்து மணலில் உட்கார்ந்து கொண்டதும் ஜமுனாவின் ஞாபகம் வந்தது. பாக்கெட்டில் கையிட்டு அவள் எழுதியிருந்த கடிதத்தை எடுத்தான். தான்காம் முறையாகப் பிரித்துப் படிக்க ஆரம்பித்தான். கடிதம் பத்து வரிகளில் சுருக்கமாய் இருந்தாலும் அவன் மனசைத் தொட்டது. எந்த விதத்திலும் அவனைக் குறிப்பிடாமல் நேராக ஆரம்பித்திருந்தாள் அவள்.

'இதோடு எத்தனையோ தரம் பத்திரிகட்ட கொல்லியனுப்பிட்டேன். எதற்கும் பதில் இல்லாதிலிருந்து உங்கள் கோபம் இன்னும் குறையலைன்னு தெரியறது. கோபிச்சுக்க உங்களுக்கு நியாயம் இருக்கு; உரிமையும் இருக்கு. நான் பண்ணினது தப்புத்தான். அன்னிக்கு அப்படி நடந்துகொண்டது - பேசினது - எல்லாமே தப்புத்தான். நீங்கள் 'லாரி ஜமுனா!' என்று ஒரு வார்த்தையில் சொல்லிவிட்டுத் திரும்பிப் போனதற்கப் புறந்தான் என் தப்பு எனக்கு உறைச்சது. அது உங்களை எவ்வளவு தூரம் அவமதிச்சிருக்கும்னு புரிந்தது. அதற்காக உங்களிடம் ஆயிரம் தடவை மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன். இனிமேலும் இப்படித் தண்டித்தால் என்னால் தாங்க முடியாது. இதைப் பார்த்ததுக்கு அப்புறமாவது உங்க கோபம் கொஞ்சம் தணியுமா, விஸ்வம்? நேரில் பார்த்து உங்களிடம் பேசக் காத்துக் கொண்டிருக்கும்,

உங்கள்
ஜமுனா.

கடிதத்தை மடித்து மறுபடியும் பைக்குள் போட்டுக் கொண்டபோது ஆழமான பெருமூச்சொன்று வெளிப்பட்டது அவனிடமிருந்து. அவளை நினைத்துப் பரிதாபப்பட்டான். அந்தக் கடிதத்தை அவன் ஆபீஸ் அட்ரசுக்கு அனுப்பி இருந்தாள். அதிலிருந்து, தான் வேலையில் சேர்ந்த விஷயம் அவளுக்குத் தெரிந்திருக்க வேண்டும். பத்திதால் சொல்லியிருக்க வேண்டும். பத்ரி இரண்டு மூன்று தரம் அவனிடம் வந்து, ''ஜமுனா உன்னை ஃபோன் பண்ணச் சொன்னாள். இல்லாவிட்டால் நேரிலாவது வரச் சொன்னாள்'' என்று சொன்னான். அதற்கு அவன் பேசாமல் இருக்கவே, ''என்ன விஸ்வம், அவகிட்ட உனக்கு என்ன கோபம்?'' என்றுகூடக் கேட்டான். விஸ்வம் சிரித்துக் கொண்டே, ''கோபம் ஒன்றுமில்லை, பத்ரி!'' என்று பதில் சொல்லியிருந்தான். இப்போது யோசித்தபோது தன் அடிமனசில் இன்னுங்கூட ஜமுனாவின் மீது கோபமிருக்கிறதோ என்று தோன்றியது. உடனே இல்லை என்று மறுத்துக் கொண்டான். அவளைப் பார்க்க முடியாமல் - டெலிபோனில்கூடப் பேச முடியாமல் - போனதற்குத் தன்னை அழுத்திக் கொண்டிருக்கும் ஆபீஸ் வேலைதான் காரணம் என்று நினைத்துக் கொண்டான்.

அன்று ருக்மிணி பேசியதைக் கேட்ட நிலிருந்து யார் மீதும் கோபப்பட முடியாது என்று தோன்றியது. யாரையும் வெறுக்க முடியாது - எவ்வளவு அழகாகச் சொல்லிவிட்டுப் போனாள் அவள். மனசைத் துடைத்தது மட்டுமில்லை; அங்கு பளிச்சென்று ஒரு கோலமும் போட்டுவிட்டுப் போய்விட்டாள்.

''சந்தோஷமாக இருக்கத் தெரியணும். மிஞ்சிப் பேரைச் சந்தோஷப்படுத்தத் தெரியணும். சந்தோஷமாக இருக்கறதைத் தவிர வேற என்னவேணும்?''

எப்படிச் சொன்னாள் அவள் அதை? இந்த மாதிரியெல்லாம் யோசிக்க எப்படித் தோன்றியது? பரசு எவ்வளவு பெரிய அதிர்ஷ்டசாலி? பரசு மட்டுந்தான் அதிர்ஷ்டசாலியா? ருக்மிணி இல்லையா-?

இப்போது அவர்கள் என்ன பண்ணிக் கொண்டிருப்பார்கள் என்று யோசித்தான். பரோடா கடைத் தெரு ஒன்றில் நடந்து போய்க் கொண்டிருக்கலாம். வீட்டில் உட்கார்ந்து டிபன்

சாப்பிட்டுக் கொண்டிருக்கலாம். இல்லாவிட்டால், ருக்மிணி சமையல் அறையில் ஏதாவது வேலை பண்ணிக் கொண்டிருப்பாள். பரக கூடத்தில் உட்கார்ந்து பேப்பர் படித்துக் கொண்டிருப்பாள். அதுவும் இல்லை என்றால் ஆபீஸில் தன் மேஜையில் உட்கார்ந்து ஓவர் டைம் செய்து கொண்டிருக்கலாம்.

நாட்கள் ஓடுகிற வேகத்தை நினைத்துப் பிரமித்தான் விஸ்வம். ருக்மிணி ஊருக்குப் போய் ஒரு மாதம்தான் ஆகி இருக்கும். ஆனால், எவ்வளவோ நாட்களாகி விட்ட மாதிரி இருந்தது. அவளையும், அவளுடைய அப்பாவையும் ரயிலேற்றி விட்டு வந்தது நினைவுக்கு வந்தது. அப்போது தான் ஆபீஸில் சேர்ந்திருந்ததால் அவனால் லீவு எடுக்க முடியாமல் போய்விட்டது. ராம்ஜிக்கும் பரீட்சை வந்துவிட்டதால் அவனைக் கொண்டு போய்விட முடியவில்லை. கடைசியில் அவளுடைய அப்பா கொண்டு போய் விடுவதாக ஏற்பாடாகியது.

பெட்டி படுக்கையெல்லாம் ஏற்றின பின், அவள் வந்து ஒவ்வொருவரிடமாய்ச் சொல்லிக் கொண்டாள். வார்த்தையாக எதுவும் வரவில்லை. 'வரட்டுமா' என்று தலை மட்டும் ஆடியது. அந்த மௌனத்தின் கனம் கூடம் முழுதும் பரவியிருந்தது. மனசு இறுகிக் கிடந்தது. அவள் அப்பாவை நமஸ்கரித்தபோது அவர் உடல் குலுங்கியது.

''ராஜத்துக்கு அப்புறம் எங்களுக்கு எந்தக் குறையுமில்லாம பார்த்துண்டிருந்தியேம்மா...! வீட்ல மகாலட்சுமி நடமாட மாதிரி இருந்தது. இனிமேல் நாங்க என்ன செய்யப் போறாம்னு தெரியலை. கை உடைஞ்ச மாதிரியிருக்கும்!'' என்று சொல்லிவிட்டு சுவர்ப் பக்கம் முகத்தைத் திருப்பிக் கொண்டார் அவர். ருக்மிணியும் கலங்கிப் போவாள். ஸ்டேஷனுக்குப் போயும் அவளிடமிருந்து பேச்சு எதுவும் வரவில்லை. ஜன்னல் ஓரத்தில் தன் இடத்தில் உட்கார்ந்து ரயில் கிளம்பினபோது கண்கள் பனிக்கிட, உதடு சற்று இறுகக் கையாட்டினாள். அவள் உருவம் அவன் மனசில் அப்படியே தங்கிப் போயிற்று. ருக்மிணியை நினைத்தால் அந்த உருவந்தான் வருகிறது. அதற்கு முன்பிருந்த சிரித்துக் கொண்டே நடமாடும் ருக்மிணி- வீணை வாசிக்கிற ருக்மிணி- வேலை செய்கிற ருக்மிணி என்று எதுவும் நினைவுக்கு

வருவதில்லை. ரயிலில் போல அந்த ருக்மிணி தான் நினைவில் நின்று கொண்டிருந்தாள்.

அவள் போய்ச் சரியாக எத்தனை நாளாயிற்று என்று எண்ணத் தொடங்கினான். இருபத்தாறு நாட்கள். இருபத்தாறு நாட்கள்தானா ஆயிற்று என்று தோன்றியது. அதற்கு நாலு நாள் முன்னால்தான் வேலையில் சேர்ந்தது நினைவுக்கு வந்தது.

அந்த முதல் நாள் அனுபவத்தை ஞாபகப்படுத்திப் பார்த்தான். சரியாக ஒன்பதரை மணிக்கெல்லாம் ஆபீசுக்குப் போனது- மரங்களையும் செடிகளையும் ஓர் அதிகமான உரிமையுடன் பார்த்துக் கொண்டு, உள்ளே நுழைந்தது- மாடிப்படி ஏறினபோது மறுபடியும் அந்தக் நிரைப்படத்தை நினைத்துக் கொண்டது- வரதராஜனின் அறைவாசலில் ஒரு நிமிஷம் தயங்கி நின்று, பின் கதவைத் தட்டிவிட்டு உள்ளே போனது- குட்மார்னிங் சொன்னது...

வரதராஜன் இவனை உட்காரச் சொல்லிப் பத்து நிமிஷம் பேசினார். ஓர் ஆபீசில் எப்படியெல்லாம் நடந்து கொள்ளவேண்டும் என்பதைப் பற்றி உபதேசம் பண்ணினார்.

''உனக்கு ரொம்ப சிபாரிசு பண்ணி இந்த வேலையை வாங்கித் தந்திருக்கேன். உன் அப்பா இதற்காக என்னிடம் நடையாய் நடந்தார். நல்லபடியா நடந்துண்டு என் பேரைக் காப்பாத்து'' என்று சொன்னார்.

பொறுமையாகக் கேட்டுக் கொண்டான் விஸ்வம். பின் அவர், பெல்லை அழுத்தி ப்யூனை வரவழைத்தார்.

''அக்கௌண்ட் செக்ஷன் சுந்தராஜனை வரச்சொல்லு'' என்றார்.

உடனே ஒரு நிமிஷத்துக்கெல்லாம் குள்ளமாய்க் கண்ணாடி போட்டுக் கொண்டு ஒருவர் வந்து நின்றார்.

''குட்மார்னிங் சார்!'' என்று சொல்லி விட்டு விஸ்வத்தைப் பார்த்துப் புன்னகை செய்தார்.

''உங்க செக்ஷனுக்கு வந்திருக்கிற நியூ காண்டிடேட். அழைச்சுண்டு போய் எல்லாத்தையும் சொல்லிக் கொடுங்க...''

''எஸ் ஸார்!'' என்று மறுபடியும் விஸ்வத்தைப் பார்த்தார் அவர். உதட்டில் அதே சிரிப்பு ஒடிக் கொண்டிருந்து. எழுந்து நின்றான் அவன். 'போகட்டுமா?' என்று வரதராஜனைப் பார்த்தான்.

''எஸ், யூ கேன் கோ. சொன்னதெல்லாம் ஞாபகம் வச்சுக்கோ...''

வெளியில் வந்ததும் சுந்தராஜனுக்குத் தன்னை அவர் அறிமுகப்படுத்தாதது ஞாபகத்துக்கு வந்தது.

''ஐ'ம் விஸ்வம்!'' என்று கை குலுக்கினான்.

''நான் உங்க செக்ஷன் சூபர்வைசர்!'' என்று சொல்லி விட்டு, ''விஷ் யூ குட் லக்!'' என்றார்.

கீழே அழைத்துக் கொண்டு வந்து ஒவ்வொருவருக்காய் அறிமுகப்படுத்தினார்.

''எங்க படிச்சீங்க?''

''என்ன படிச்சிருக்கீங்க?''

''நம்ம கீஃப் உங்க ரிலேடிவ்வா?''

''வீடு எங்கே இருக்கு?''

''கன்க்ராஜுலேஷன்ஸ்!''

''ஆல் தி பெஸ்ட்!''

இப்படி அறிமுகத்தை முடித்துக் கொண்டு தன் ஸீட்டில் போய் உட்கார்ந்தான். வடிவச்சர் 'டாலி' பார்த்து எல்ட்ரி போடச் சொல்லிக் கொடுத்தார் சுந்தரராஜன்.

''லெட்ஜர்ல எழுதறதுக்கு முன்னால ஒரு தாத்துக்கு ரெண்டு தடவையா சரி பார்த்துடுங்க. அதுல தப்பு வரக்கூடாது'' என்றார்.

ஒரு புன்சிரிப்புடன் வேலையை ஆரம்பித்தான் அவன். உடனே பரசுவின் ஞாபகம் வந்தது. பரசுவும் இப்படித் தான் உட்கார்ந்து கொண்டிருந்திருப்பான் என்று தோன்றியது. அன்று முழுதும் என்டிரி போடுவதிலும் - டோட்டல் டாலி பார்ப்பதிலும் போய் விட்டது.

ஒவ்வொரு நாளும் அப்படித்தான் போய்க் கொண்டிருக்கிறது. இப்போது எல்லாம் பழகிவிட்டது. ஆபீஸ் சூழ்நிலை, அதன் மனிதர்கள், வேலை, ஓவர் டைம் எல்லாந்தான்- அதில்கூட ஒரு ரசனை இருப்பதாய்த் தெரிந்தது. அந்த அறை, நாற்காலி, மேஜை, டெலிபோன், டைப்ரைட்டர் சத்தம், பில், வவுச்சர், செக் பாலன்ஸ், லெட்ஜர் எல்லாவற்றோடும் வெகு காலமாக ஒரு தொடர்பு இருப்பதாகப்பட்டது. 'பழகிப் போனால் எல்லாவற்றோடும் எவ்வளவு சுலபமாகக் கை குலுக்க முடிகிறது...' என்று பெருமூச்சு விட்டான்.

சில நாட்கள் உட்கார்ந்து வேலை முடித்துவிட்டு வீட்டுக்குப் போகிற போது மணி பத்தாகிவிடும். உடம்பும், மனசும் அயர்ந்து கிடக்கும். கதவைத் தட்டுகிற போது பரசுதானா என்ற சந்தேகம் வரும். படித்துக் கொண்டிருக்கிற ராம்ஜி எழுந்து வந்து கதவைத் திறப்பான். தான் பரசுவைப் பார்த்த மாதிரியே பாவமாக ஒரு பார்வை பார்ப்பான். 'இதிலிருந்தெல்லாம் தப்பவே முடியாது ராம்ஜி' என்று சொல்ல வேண்டும் போல் இருக்கும். 'வேண்டாம், எதற்கு? தானாகத் தெரிகிற போது தெரியட்டும்' என்று ஒரு லேசான புன்னகையோடு பேசாமல் இருந்து விடுவான். கூடத்தில் படுத்துத் தூங்குகிற அகிலாவையும், அப்பாவையும் எழுப்பாமலிருக்க சத்தப்படுத்தாமல் முகத்தைக் கழுவிக் கொண்டு வருவான். சமையலறையின் மூலையில் அவனுக்காக ஒரு கிண்ணத்தில் சாதம் மூடி வைக்கப்பட்டிருக்கும்.

அதை எடுத்துக் கொண்டு சாப்பிட உட்காருகிறபோது நுக்மணியின் ஞாபகம் வரும். சட்டென்ற வெள்ளை முயல் ஒன்று குதித்து ஓடிவிட்ட மாதிரி அவள் பாதம் மின்னி மறைகிறார்போல் தெரியும். கொஞ்ச நாள் வரைக்கும் சாப்பிடப் பிடிக்காமல் அப்படியே மூடி வைத்து விட்டுக் கை கழுவிக் கொண்டிருந்தான். இப்போது அந்த வெறுமையும் பழகிவிட்டது. எல்லாமே ஒரு பழக்கத்துக்கு வந்தாகி விட்டது. காலையில் எட்டு மணிக்கெல்லாம் அவசரமாய்ச் சாப்பிட்டு விட்டு - பஸ் பிடித்து ஆபீசுக்குப் போய் - ஐந்து மணிக்கு மேலும் உட்கார்ந்து வேலை செய்து ராத்திரி ஒன்பது மணிக்கோ பத்து மணிக்கோ திரும்பி வந்து - ஒரு வாய் மோர்ச் சாதம் சாப்பிட்டுவிட்டு - பின், அடித்துப்

போட்ட மாதிரி படுத்துத் தூங்கி... தண்பர்களைப் பார்த்து, பார்க் பக்கம் போய் எத்தனையோ நாளாகிவிட்டது. மறுபடியும் அந்தச் சுவரின்மீது வரிசையாய் உட்கார்ந்து சாந்ரேயும்- ஹக்ஸ்லியும் பற்றிப் பேச முடியாது. ஜானகொமனையும், அசோக மித்திரனையும் அலச முடியாது. லோசாய் முணுமுணுப்பாய்ப் பாட முடியாது. இப்போது ஆபீசுக்குப்போவது ஒன்றுதான் தன் வாழ்க்கை. அதுதான் நிஜம்!...

மனலில் நெக்குவதை நிறுத்திவிட்டு ஆழமான ஒரு பெருமூச்சோடு நிமிர்ந்து பார்த்தான். கருநீலமாக வானம் இருண்டு கிடந்தது. தூரத்தில் ஒற்றை நட்சத்திரம் பிரகாசித்தது. லைட் ஹவுஸ் விளக்கு விதாடிக்கு ஒரு தரம் கண்ணைச் சிமிட்டியது. பானி பூரிக்காரன் தன் கடையைக் கட்டிக் கொண்டிருந்தான். பீச் அநேகமாய் வெறுமையாய் கிடந்தது. இரண்டு மூன்று கார்களைத் தவிர எதுவும் இல்லை.

மனலை உதரிவிட்டு எழுந்து நடந்தான் விஸ்வம். நிமிர்ந்து பார்த்தபோது அந்த ஒற்றை நட்சத்திரமும் கூடவே நகர்கிற மாதிரி தெரிந்தது.

24

விஸ்வம் வீட்டுக்கு வந்தபோது அப்பா வாசலில் உட்கார்ந்து கொண்டிருந்தார். அவனைப் பார்த்ததும் எழுந்து வந்து கதவைத் திறந்தார்.

''இன்னிக்கு ரொம்ப நேரமாயிட்டாப்ல இருக்கே...?'' என்று கேள்விக் குறியோடு பார்த்தார்.

அவன் பதில் சொல்லாமல் தலையாட்டினான். இத்தனை நேரத்துக்கும் தூங்காமல் உட்கார்ந்திருக்கிற அவரைப் பார்த்தபோது கஷ்டமாக இருந்தது. நிடையர் ஆகி ஒரு வேலையும் இல்லாமல் வீட்டில் உட்கார்ந்திருப்பது ரொம்ப ஹிம்சையான விஷயம் என்று நினைத்துக் கொண்டான். அவரை-அவர் மனசைப் பகிர்ந்து கொள்ள யாரும் இல்லை. அவர் வெளியில் எங்கும்

போவதில்லை. கறிகாய் வாங்க டி.டி.ஸி எல்.எல்லில் சாமான் வாங்க-என்று ஒரு பெரிய காக்கிப் பையைத் தூக்கிக் கொண்டு அலைவதோடு சரி. மீதி நேரத்தை யெல்லாம் இந்த மாதிரி வீட்டுத் திண்ணையில்தான் கழிக்கிறார். தெருவில் போகிறவர்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறார், படியில் நின்று போகிறவர்களோடு ஐந்து நிமிஷம் பேசுகிறார். அகிலா சாப்பிடக் கூப்பிடுகிறபோது எழுந்து போகிறார். ருக்மிணி மாதிரி அகிலாவின் சமையலுக்கு அத்தனை ருசி எதுவும் கிடையாது. புளி வாசனை தூக்கலாய் அடிக்கும். சில நாள் உப்பில் சிக்கனம் தெரியும். மறுநாள் அதுவே காராளமாகிவிடும். பரிவாய்-அன்பாய் - எது செய்யவும் தெரியாது அவளுக்கு. பரபரவென்று அலைவாள். பாத்திரச் சத்தம் அவள் முணுமுணுக்கிற சத்தம்- உருளியில் ஏதோ தீய்கிற நாற்றம் எல்லாம் சமையற் கட்டிலிருந்து ஒன்றாய்க் கலந்து வரும். ஏதோ ஆயிற்று என்று கதவை இழுத்து மூடிக் கொண்டு கூடத்தில் வந்து உட்கார்ந்து ரேடியோ கேட்பாள். இல்லாவிட்டால் ஏதாவது ஒரு துணியை விரித்துச் சிவப்புப் பென்சிலால் கோடுகள் இழுத்து வெட்டிக் கொண்டிருப்பாள். அதுவும் இல்லை என்றால், அரைத் தூக்கத்தில் கையில் ஏதாவது ஒரு பத்திரிகை நழுவிக் கொண்டிருக்கும்.

அப்பா அவளை எதுவும் சொல்வதில்லை. முன்பு ஒரு தரம் அவனுக்காக மோர் சாதத்தைப் பிசைந்து மூலையில் மூடி வைப்பதை மட்டும் கண்டித்தார்.

''ஆபீஸ் வேலையெல்லாம் முடிச்சுட்டு களைக்கப் பிரயாணம் வர்றவனுக்கு கொஞ்சம் முழிச்சிண்டிருந்து சாதம் போடக்கூடாதா. அகிலா? பாவம் வெறும் மோர்ச்சாதத்தை அவனே எடுத்து வச்சுண்டு சாப்பிட்டுக்கணுமா...?'' என்று கேட்டார்.

''அவனை ஆபீஸ்லேர்ந்து நேரத்தோட வந்து சாப்பிட்டுட்டுப் போகச் சொல்லுங்க. இப்படி பத்துக்கும் பதினொண்ணுக்கும் வந்தா எனக்குத் தூக்கம் வரதே...!''

''ஆமாம், நாளைக்கே உனக்குக் கல்யாணமாகி அவள் இந்த மாதிரி வர்றவளாக இருந்தால், அப்ப என்ன பண்ணுவே...?'' என்று அவர் சிரித்துக் கொண்டே கேட்டார்.

''அப்ப பார்த்துக்கலாம்...'' என்று அந்தப் பேச்சை முடித்து விட்டு, பெட்ஷீட்டை உதறிப் போட்டுக் கொண்டாள் அவள்.

மறுநாள் ராத்திரி அவன் தானாக எடுத்து வைத்துச் சாப்பிட்டுக் கொண்டு இருந்தபோது படுத்துக் கொண்டிருந்தவர் எழுந்து அவன் எதிரில் வந்து நின்றார்.

''ஊறுகாய் தொவது வேணுமா...!'' என்று கேட்டார்.

''வேணாம், இருக்கு'' என்று பதில் சொன்னாள் அவன்.

அவர் ஒரு விநாடி பேசாமல் நின்றார். பின்பு, ''தூக்கம் வராதாம்; தூங்கிட்டா. வயசு பதினெட்டு முடிஞ்சு போச்சு. ஆனா இன்னும் பொறுப்பே வரலை பாரு...!'' என்று சலித்துக் கொண்டார்.

அவன் சிரித்தான்.

''அதனால என்னப்பா? நானே எடுத்து வச்சுண்டு சாப்பிடுக்கறேன். இதற்காக அவளை ஏன் சிரமப்படுத்தணும்? இதுல எனக்குக் கஷ்டம் ஒண்ணும் இல்ல...''

''இருந்தாலும் ஒரு 'பொறுப்பு தெரிய வேணாமா? எல்லாத்துலயும் இப்படித்தான் இருக்கா அவ...''

அவன் முகத்தில் புன்னகை மாறாமலே அவரைப் பார்த்தான்.

''பொறுப்பு தெரியறபோது தானா தெரியும். அது வரைக்கும் அவள் தன் இஷ்டப்படிதான் இருக்கட்டுமே'' என்று பதில் சொன்னபோது, பரசுவின் நினைவு வந்தது.

அப்பா சிறிதுநேரம் பேசாமல் இருந்தார். பின்பு, ''நீ சொல்றதும் சரிதான்'' என்று சொல்லிக் கொண்டே திரும்பிப் போய்விட்டார்.

அதிலிருந்து அவர் யாரையும் ஒன்றும் சொல்வதில்லை. அதிகம் பேசுவதும் இல்லை. எப்போதாவது ருக்மிணியின் அப்பா வந்தால், அவரோடு மட்டும் மணிக் கணக்கில் பேசிக் கொண்டிருப்பார். மீதி நேரமெல்லாம் இப்படித்தான் தெருவை வெறித்துக் கொண்டு உட்கார்ந்திருப்பார். அவரோடு சிறிது நேரம் பேசிக் கொண்டிருக்க வேண்டும் என்று தோன்றியது

விஸ்வத்திற்கு. மனசை வருடுகிற மாதிரி இதமாகப் பேச வேண்டும்.

''ஏம்ப்பா... தூக்கம் வரலியா?'' என்று கேட்டான்.

''வரலை, சித்த இப்படி காத்தாட உட்கார்ந்துண்டிக்கலாமேன்னு இப்பத்தான் வந்தேன்...''

''தூங்காம இப்படி ஏம்ப்பா உடம்பைக் கெடுத்துக்கறீங்க? எப்பப் பார்த்தாலும் தெருவை வெறிச்சுண்டு அப்படி என்னதான் யோசனை பண்ணுவேள்?''

''ஒண்ணுமில்லே விஸ்வம், யோசனை என்ன இருக்கு? நீங்கள்லாம் இருக்கிறப்ப எனக்கு எதைப்பத்தித்தான் என்ன கவலை?''

''உங்களைப் பார்த்தா அப்படிக் கவலைப்படாம இருக்கிறவராத் தெரியலையே...?''

''போடா அசடு! எனக்கு ஒரு கவலையும் இல்ல, போ, போய்ச் சாப்பிட்டு வா. உன் கிட்ட கொஞ்சம் பேசணும்.''

'என்ன' என்கிறாற்போல் பார்த்தான் அவன்.

''சாப்பிட்டு வா, சொல்றேன்.''

சரி என்று உள்ளே போனால், ஐந்து நிமிஷத்துக்கெல்லாம் கையைத் துடைத்துக் கொண்டு வாசலுக்கு வந்தான். அவர் முகத்தைப் பார்க்கிற மாதிரி எதிர்ச்சுவரில் முதுகைச் சரித்துக் கொண்டு உட்கார்ந்தான். தினமும் கூடத்து விளக்கைப் போட்டுக் கொண்டு படிக்கிற ராம்ஜிகூட இன்று தூங்கிப் போய்விட்டதால் வீட்டில் வெளிச்சம் எதுவும் இல்லை. தெரு விளக்கின் வெளிச்சம் மட்டும் வராந்தாவில் லேசாக விழுந்தது. தெரு மிகவும் நிசப்தமாக இருந்தது. யார் வீட்டு ரேடியாவிலிருந்தோ தமிழ் சினிமாப் பாட்டு வருவது லேசாய்க் காதை எட்டியது. அதற்கு மெதுவாகக் காலால் தாளம் போட்டபடி உட்கார்ந்திருந்தான் அவன்.

''இன்னிக்கு ரங்கநாத ஜோஸ்யர் வந்திருந்தார்...'' என்று மெதுவாகத் தொண்டையைக் கனைத்துக் கொண்டே ஆரம்பித்தார் அவர்.

''ம்...?''

''நல்லதா ரெண்டு ஜாதகம் வந்திருக்காம். அகிலாவுக்குப் பார்க்கலாம்னு கொண்டு வந்தார்.''

''ம்...''

''அதுல ஒண்ணு ரொம்ப நன்னாப் பொருந்தி வரதுன்னார்.''

''பையன் பாங்குல வேலையா இருக்கானாம். எழுநூறோ என்னவோ சம்பாதிக்கிறானாம். நல்ல பையன். நல்ல இடம். உங்களால முடிஞ்சதைச் செஞ்சாப் போறும். இப்படி ஒரு நல்ல வரனா வரபோது சிரமத்தைப் பார்க்காம முடிச்சுடுங்கோன்னு சொல்தார்...''

விஸ்வம் பேசாமல் இருந்தான். அவரும் சிறிது நேரம் பேசவில்லை. பின்பு, ''என்ன விஸ்வம் பேசாம இருக்கே? என்ன சொல்றே நீ...?'' என்று அவரே மறுபடியும் கேட்டார்.

விஸ்வம் அவரை நிதானமாகப் பார்த்தான்.

''இதுல, நான் சொல்றதுக்கு என்ன இருக்குப்பா? அகிலாவைக் கேளுங்க. அவளுக்கு இஷ்டம்னா- உங்களுக்கும் பிடித்திருந்தா- முடிச்சுட வேண்டியதுதானே?''

அவர் நிதானமாய்ச் சிரித்தார்.

''இவ்வளவு கலபமா சொல்லிட்டியே விஸ்வம். ஒரு பொண் கல்யாணம்ன்றது லேசான விஷயமில்ல. பரசுவோட கல்யாணத்தை நடத்தின மாதிரி அவ்வளவு ஈஸியா முடிச்சுட முடியாது. இதுக்குத் தொட்டதுக்கெல்லாம் பணம் வேணும். அவ்வளவு பணத்துக்கு நாம் எங்கே போறது...?''

அவன் சில விநாடிகள் யோசித்தான். பின்பு, மெதுவாகப் பேச ஆரம்பித்தான்.

''சரிப்பா, நம்மகிட்ட பணம் இல்லைங்கறதுக்காக எத்தனை நாளைக்கு அவளை இப்படியே வச்சுண்டிருக்க முடியும்? நான் தப்பா சொல்றேன்னு நினைச்சுக்காதீங்க. அவளை மேல படிக்க வச்சிருக்கலாம். அதுக்கு வசதி இல்லேன்னா ஏதாவது வேலைக்காவது அனுப்பிச்சிருக்கணும். எதுவுமில்லாம இப்படி வீட்ல எத்தனை நாளைக்கு வெட்டியா பொழுதைப்

போக்கிண்டிருக்க முடியும்? அது எவ்வளவு கஷ்டமான விஷயம். இன்னும் கொஞ்ச நாள் அவ இப்படியே இருந்தா மனம் ரொம்பச் சலிக்கப் போயிடும். அதுக்கு முன்னால நீங்க அவளுக்கு ஏதாவது பண்ணித்தான் ஆகணும். இப்போது அவளுக்கு வேற எதுலயும் இன்ட்ரஸ்ட் இல்லை. கல்யாணத்துக்கு அவ மறுக்க மாட்டான்னு நினைக்கிறேன். இட மாற்றம், மனுஷா மாற்றம் எல்லாம் அவளை இன்னும் கொஞ்சம் ஆரோக்கியமா மாத்தலாம். நாம எப்பவா இருந்தாலும் பணத்தைக் கையிலே வச்சுண்டு கல்யாணம் பண்ணப் போறதில்லை. கடன் வாங்கித்தான் பண்ணியாகணும். அந்தக் கடனை வாங்கி இப்பவே பண்ணினால் என்ன...?''

''சரி, நீ சொல்ற மாதிரி அப்படியே பண்ணிடறோம்னு வச்சுக்கோ... அதுக்கப்புறம் இந்த வீட்டுப் பொறுப்பை யார் பார்த்துக்கறது? நாம காப்பாட்டுக்கு என்ன பண்றது...?''

''என்னப்பா, நீங்க...'' என்று சிரித்தான் அவன்.

''இதெல்லாம் ஒரு பெரிய கவலையாப்பா? நமக்குன்னு அவ எப்பவும் உட்கார்ந்துண்டிருக்க முடியுமா? இவ்லே, இந்தவீட்டுக்குன்னு ஒருத்தி வரவரைக்கும் அவ கல்யாணத்தைத் தள்ளிப் போடத்தான் முடியுமா? யாராவது ஒரு நல்ல ஆளாப் பார்த்து நாம ஏற்பாடு பண்ணிக்க வேண்டியது தான். வேற என்ன செய்ய முடியும்?''

அவர் பேசாமலே இருந்தார். அப்படியே ஐந்து நிமிஷம் போயிற்று. பின்பு, அவனை நிமிர்ந்து பார்த்தார்.

''அப்போ அவாளை வந்து பொண்ணைப் பார்த்துட்டுப் போகச் சொல்லட்டுமா?''

''ம்... அதுக்கு முன்னால பரசுவுக்கும் இதைப் பத்தி எழுதிப் போட்டு அவனோட அபிப்பிராயத்தையும் கேளுங்க.''

''நாளைக்கே எழுதிப் போட்டுடறேன். அவளுக்குத் தெரியப்படுத்தாம செய்ய முடியுமா என்ன?'' என்றார்.

அதற்குப் பின் இருவரும் பேசவில்லை. காற்று 'ஜிலு ஜிலு' வென்று வியது. எதிர்ப் பூவரசின் நிழல் தரையில் பெரிசாய் விழுந்தது. அதையே பார்த்துக் கொண்டு இருந்தான் விஸ்வம்.

''வா, விஸ்வம்- உள்ளே போய்ப் படுத்துக்கலாம். உனக்கு ரொம்ப அசதியாக இருக்கும். கார்த்தால எழுந்து உடனே ஆபீசுக்குப் பறந்துண்டு போயாகணும்'' என்று கூப்பிட்டார் அவர்.

''இல்லப்பா, எனக்குத் தூக்கம் வரலை. நீங்க போய்ப் படுத்துக்குங்க. நான் கொஞ்ச நாழி இங்கேயே இருந்துட்டு வரேன்...''

''இப்ப எதுக்கு இங்க உட்காரணும்? மணி பன்னிரண்டாகப் போறது. வந்து படுத்துக்கோ.''

''இல்லை. தூக்கம் வரபோது எழுந்து வரேன். நீங்க போங்க...''

''என்னப்பா! சர்வேச்வரா!'' என்று வலது கையைத் தரையில் ஊன்றி எழுந்து கொண்டார். கீழே கிடந்த துண்டை எடுத்துத் தோளில் போட்டுக் கொண்டார்.

''ம்...'' என்று தலையாட்டினான் அவன்.

அவர் போனதும் நிமிர்ந்து வானத்தைப் பார்த்தான். சரேலென்று மின்னிக் கொண்டு ஒரு நட்சத்திரம் கோடிழுத்துக் கொண்டு போயிற்று. அது விழுந்த திசையை வெறித்துக் கொண்டு பேசாமல் உட்கார்ந்திருந்தான். தூரத்தில் நாய் ஒன்று குரைத்தது. அது ஓய்ந்ததும் தெருவின் நிசப்தம் திடீரென்று அதிகமாயிற்று. அதைக் கலைக்கிற மாதிரி தெருக் கோடியில் மெலிசாய்ச் சலங்கைச் சத்தம் கேட்டது. மனசு பரபரக்கத் திரும்பிப் பார்த்தாள் விஸ்வம். ஒற்றைக் கண் மாதிரி கீழே தொங்கவிடப்பட்ட லாந்தர் அசைய வரிசையாக அந்தக் கட்டை வண்டிகள் வந்து கொண்டிருந்தன. உடனே அவனுக்கு ருக்மிணியின் ஞாபகம் வந்தது. அவள் எதிரில் உட்கார்ந்திருக்கிற மாதிரி தோன்றியது. 'இந்த வண்டி போற வரைக்கும் ஏதோ கிராமத்துல இருந்த மாதிரி இல்லே?' என்று குரல் கூடக் கேட்டது. உடம்பைச் சிலிர்த்துக் கொண்டான். கடைசி வண்டி பார்வையை விட்டு மறைகிறவரை அப்படியே உட்கார்ந்திருந்தான்.

அவை போனதும் சட்டென்று ஒரு சோகம் மனசை இறுகப் பற்றிக் கொண்டது. ஏதேதோ ஞாபகத்துக்கு வந்தது. ஒரு கேன்வாஸ் பையை மாட்டிக் கொண்டு மலை மீது ஏறுகிற

விஸ்வம், வயல் வரப்புகளில் நிதானமாய் நடக்கிற விஸ்வம், பாழ் மண்டபத்தில் உட்கார்ந்து பாசி பிடித்த குளத்தில் ஒவ்வொரு கல்லாய் எறிகிற விஸ்வம், கிராமத்துத் திருவிழாவில் சுற்றுகிற விஸ்வம், பஜனை ஜதை வாங்கி ஜதுகிற விஸ்வம், ப்ளூ மௌண்டில், டிரைவ் இன்னில், அமெரிக்கன் லைப்ரரியில், பீச்சில்- இவை எல்லாம் எத்தனை இதமான உணர்வுகள்! அந்த இதத்தில் எத்தனை நாட்களைக் கடத்தி இருக்கிறான் அவன். இப்போது... இந்த விஸ்வம்...?

ஒழுங்காக ஆபீசுக்குப் போகிற விஸ்வம். ராத்திரி ஒன்பது மணியை தன் காரினில் தவியாக உட்கார்ந்து லெட்ஜரைப் புரட்டுகிற விஸ்வம், சம்பளத்தைக் கொண்டு போய் அப்படியே அப்பாவிடம் கொடுக்கிற விஸ்வம், வீட்டு செலவைச் சரிக்கட்டுகிற விஸ்வம், அப்பாவிடம் பேசித் தங்கையின் கல்யாணத்தை ஏற்பாடு பண்ணுகிற விஸ்வம். அதற்காகக் கையெழுத்துப் போட்டுக் கடன் வாங்கப் போகிற விஸ்வம், மாசம் கொஞ்சமாய் அதை அடைக்கப் போகிற விஸ்வம்...

அவன் ஓர் ஆழமான பெருமூச்சோடு எழுந்து கதவை மூடிக்கொண்டு உள்ளே படுக்கப் போனான்.

25

தூக்கித்துப் போய் போனாலை மூடிலைத்தான் விஸ்வம். திறந்து வைத்த வெட்டிலிருந்து பார்வையை மீட்டு எதிர்க்கவரின் பக்கம் திரும்பினான். படம் எதுவுமில்லாமல் ஒவ்வொரு கட்டத்துக்கும் ஒவ்வொன்றாய்ப் பெரிசாகத் தேதிகள் மட்டும் அச்சிடப்பட்ட காலண்டர் ஒன்று கண்ணில் பட்டது. இந்த எண்களோடு தான் தினந்தோறும் ஜக்கியப் படுத்தப்பட்டு விட்டதுபோல் தோன்றியது. இப்போதெல்லாம் ராத்திரி கனவிலிகூட எண்களாக வருவதை நினைத்துக் கொண்டான். டெர்மினல் டாலி போடும்போது கணக்கில் வராமல் அலைக்கழித்த பத்து டாலரைக் கனவிலேயே கண்டுபிடித்திருக்கிறான்! அதே மாதிரி ட்ரையல் பேலன்ஸ் ஷீட்,

பாலாக வேண்டிய பில், டைப்பண்ண வேண்டிய மெமோ, என்ட்ரி போட வேண்டிய வவுச்சர்ஸ் - இப்படி ஒவ்வொரு நாளும் ஒவ்வொன்றாக வரும். இல்லாவிட்டால் எல்லாம் சேர்ந்து மொத்தமாக வரும். சுந்தரராஜனோடு பேசுகிற மாதிரி, ப்யூன் சங்கரலிங்கத்தை காபி வாங்கிக் கொண்டு வரச் சொல்கிற மாதிரி, வரதராஜன் கூப்பிட்டு எதற்கோ திட்டுகிற மாதிரி, ஆபீஸ் தன் லப்கான்ஷியஸ்னஸ்ஸில் அவ்வளவு தூரம் இறங்கிப் போயிருப்பதை நினைத்துக் கொண்டான்.

மெல்ல ஒரு பெருமூச்சு வெளிப்பட்டது. தலையை வலிக்கிற மாதிரி இருந்தது. ப்யூனைக் கூப்பிட்டுக் காப்பி வாங்கிக் கொண்டு வரச் சொன்னான்.

"காப்பியா சார், அப்படியே எனக்கும் ஒரு கப் வாங்கிண்டு வரச் சொல்லுங்க!" என்றான் டைப் அடித்துக் கொண்டிருந்த கிருஷ்ணமூர்த்தி. அவனுக்கும் சேர்த்துக் காசு கொடுத்தனுப்பிவிட்டு, மெதுவாக ஜன்னல் வழியாக வெளியே பார்த்தான்.

மரங்களுக்கிடையில் பளிச்சிட்ட வானத்தின் நீலம் மனசை லேசாக்கியது. கத்திக் கொண்டிருந்த காகம் ஒன்று விருட்டென்று பறந்து போயிற்று. மாமரத்தின் மேலிருந்து சரசரவென்று ஓர் அணில் இறங்கி வந்தது. பின்னாலேயே துரத்திக் கொண்டு இன்னோர் அணிலும் இறங்கியது. இரண்டும் ஒன்றன்பின் ஒன்றாகச் சருகுகளில் ஒடிச் சென்றன. அந்த விளையாட்டையே பார்த்துக் கொண்டிருந்த விஸ்வம் டெலிபோன் அடிப்பதைக் கேட்டுச் சட்டென்று திரும்பினான். ரிஸீவரை எடுத்து செக்ஷன் பெயரைச் சொன்னான்.

"சுந்தர்ராஜன்...?" கேட்ட குரலிலிருந்தே வரதராஜனைக் கண்டுபிடித்துக் கொண்டான்.

"குட் மார்னிங், சார்! ஹி ஈஸ் ஆன் லீவ் டுடே!" என்றான்.

"ஓ! அப்படீன்னா நீ கொஞ்சம் மேல வரியா?"

"எஸ் சார்."

ரிஸீவரை வைத்துவிட்டு ஸீட்டை விட்டு எழுந்த போது ப்யூன் காபி கொண்டு வந்தான்.

"அப்படியே மேஜை மேல வச்சு மூடிட்டுப் போ, வந்து சாப்பிட்டுக்கறேன்!" என்று சொல்லிட்டுப் போனான். இரண்டு படிகளை ஒன்றாய்க் கடந்து வரதராஜனின் அறைக் கதவை விரலின் முட்டியால் மெதுவாகத் தட்டினான். 'எஸ்' என்ற குரல் கனத்து வந்ததும் உள்ளே நுழைந்து மறுபடியும் 'குட்மார்னிங்' சொன்னான்.

"மார்னிங், அந்த இங் அண்ட் கம்பெனி பில்லை க்ளியர் பண்ணிடும்படி அவனைக்கே சொல்லேனே, ஏன் பண்ணலை? இன்னிக்குக்கூட அவன் ஃபோன் பண்ணிக் கேட்டான்."

"ஸாட்டர்டே வேற பண்ணியார்சு சார். இன்னிக்கு அவங்களுக்கு செக் போயிடும்."

"சரி, தாம்ஸன் அண்ட் வில்லியம்ஸுக்கு டூராப்ட் அனுப்பினீங்களே, அதெல்லாட அமௌண்ட் எவ்வளவு தெரியுமா?"

"த்ரீ தௌஸண்ட் அண்ட் ஆட்ட சார். இதோ சரியா பார்த்துண்டு வந்து சொல்றேன்."

"வரபோதே பார்த்துண்டு வரக்கூடாதா? அதுக்கு ஒரு தரம் கீழே போய் மேல வரணுமா? இந்த மாதிரி எல்லாம் டைம் வேஸ்ட் ஆறது தெரியுமா?"

"ஸாரி, ஸார்! நீங்க இதைப் பத்திதான் கேக்கப் போறீங்கன்னு தெரியலை."

அந்தப் பதிலைக் கேட்டு அவர் முகத்தைச் சுளித்தார்.

"ஓக். மிஸ்டர் விஸ்வம்! இந்த மாதிரி பதில் சொல்லிட்டா போறாது. நீங்க இந்த ஆபீஸுக்கு வந்து எத்தனை மாசமாச்சு? இன்னுங்கூட இதெல்லாம் பிடிபடலைன்னா எப்படி? சுந்தரராஜனைப் பார்க்கிறீங்களே, ஒரு தரம் கூப்பிட்டா எதைக் கேப்பேனோன்னு தானு சீனையையும் தூக்கிண்டு வரலை? அதையெல்லாம் பார்த்துக் கத்துக்க வேணாமா? ஒவ்வொண்ணையுமா சொல்லித் தரணும்?"

"ஐம் சாரி சார்!"

''ஓ, கே. டோண்ட் ரிபீட் இட் அகெய்ன். அந்த அமெளண்டைப் பார்த்து ஃபோன்ல சொல்லுங்க போறும். அப்படியே அவங்க இந்தத் தரம் எந்த மெடீரியல் சப்ளை பண்ணியிருக்காங்கன்னும் பாருங்க.''

''சரி சார்.''

''சுந்தர்ராஜன் இன்னும் எத்தனை நாள் வீவுல இருக்கார்?''

''நாளைக்கு வந்துடுவார், ஸார்.''

''எஸ். யூ கேன் கோ. இந்த மாதிரி சின்னச் சின்ன விஷயங்களையெல்லாம் யு ஷேவ் டு மிக் அப் யுவர்செல்ஃப். ஓ.கே.''

''ஓ.கே சார்.''

மாடியிலிருந்து இறங்கி மறுபடியும் செக்ஷனுக்குள் நுழைந்தபோது மிகவும் களைப்பாக உணர்ந்தான் விஸ்வம். ஃபைலைப் புரட்டி விவரங்களைக் குறித்துக்கொண்டு ஃபோனில் வரதராஜனிடம் தெரிவித்துவிட்டுக் காபி கோப்பையை எடுத்தபோது காபி ஆறிக் கிடந்தது. குடிக்கப் பிடிக்காமல் கோப்பையைத் திரும்பவும் அதே இடத்தில் வைத்து சாஸரால் மூடினான்.

டாய்லெட்டிலிருந்து திரும்பி செக்ஷனுக்குள் நுழைந்த கிருஷ்ணமூர்த்தி, ''சார், கொஞ்ச முன்னால உங்களுக்கு ஒரு ஃபோன் வந்தது'' என்றான்.

அவள் தலை நிமிர்த்து பார்த்தான்.

''யாரோ லேடீஸ் வாய்ஸ்!'' என்று சொல்லிவிட்டுச் சிரித்தான்.

''நீங்க மேல போயிருக்கீங்கன்னு சொல்லிப் பத்து நிமிஷத்துக்கப்புறம் திரும்ப ஃபோன் பண்ணச் சொல்லியிருக்கேன்...''

''ஐ ஸீ! யாருன்னு பேர் சொல்லலியா?''

''கேக்கறதுக்குள்ள வச்சுட்டாங்க.''

'லேடீஸ் வாய்ஸ்... யாராக இருக்கும் என்று யோசித்தான் அவள். அகிலாவாக இருக்குமோ...? அகிலா எதற்குப் ஃபோன் பண்ணப் போகிறாள்...?

அவள் யோசித்துக் கொண்டிருந்தபோதே டெலிபோன் அடித்தது. எடுத்துத் தன் பெயரைச் சொன்னான். ஒரு விநாடி மறு பக்கத்திலிருந்து பதில் இல்லை.

''ஹலோ...'' என்றாள் கொஞ்சம் அழுத்தமான குரலில்.

''நான்தான் ஜமுனா பேசறேன்.''

ஜமுனாவா!

நம்பியப்பைக் குரலில் காட்டாமல், ''ஹௌ ஆர் யூ?'' என்று கேட்டான்.

''பைன். நீங்க எப்படி இருக்கீங்க?''

''ஆல் யூஷுவல்.''

''வேலை இடைச்சதைக்கூட எனக்கிட்டச் சொல்லக் கூடாதா? அவ்வளவு கோபமா உங்களுக்கு?''

''கோபம் ஒண்ணுமில்ல ஜமுனா. பத்ரி சொல்லியிருப்பான்னு தெரியும். அதனாலதான் பேசாம இருந்துட்டேன்.''

''யாரோ சொல்றா. அப்புறம் எப்படியோ தெரியறது. ஆனா நீங்களா ஏன் சொல்லலைன்னுதான் வருத்தமா இருந்தது. என் லெட்டர் கிடைச்சுதா?''

''...ம்.. கிடைச்சது.''

''அதைப் படிச்சப்புறங்கூடக் கோபம் குறையலையா?''

''கோபம் ஒண்ணுமில்லேன்னு சொன்னேனே.''

''கோபமில்லாமதான் ரெண்டு மாசத்துக்கு மேல பார்க்காம, பேசாம இருந்தீங்களா...?''

''.....?''

''ஓ'ம் ஸாரி, விஸ்வம், ரியலி வெரி ஸாரி, அது அவ்வளவு நாளாம் உங்க மனசைப் புண்படுத்தும்னு நினைக்கலை.''

''அதை நான் கம்ப்ளீட்டா மறந்துட்டேன், ஜமுனா. இப்ப எனக்கு உன் மேல் ஒரு கோபமும் இல்ல...''

''ரியலி...?''

''ஐ மீன் இட்.''

''அப்படீன்னா சாயந்தரம் பார்க்கலாமா?''

''இன்னிக்குச் சாயந்தரமா?''

''ம்...''

அவன் யோசித்துக் கொண்டே சிறிது நேரம் பேசாமல் இருந்தான்.

''என்ன பதிலே இல்லை?''

''ஒண்ணுமில்லே, இன்னிக்கு வர முடியுமான்னுதான் பார்க்கறேன்.''

அதற்குள் ஆபரேட்டர் குறுக்கிட்டு நிறைய 'கால்'கள் காத்துக் கொண்டிருப்பதைத் தெரிவித்துச் சீக்கிரம் முடித்துக் கொள்ளச் சொன்னாள்.

''ஓ.கே. ஜ்முனா, வரேன்-'' என்றான் அவன் அவசரமாக.

''சரியா அஞ்சு மணிக்கு ஆபீஸ் வாசலுக்கு வந்துடணும்.''

''அஞ்சு மணிக்கு முடியாது. அஞ்சரைக்கு வரேன்.''

''ஓ.கே.''

ஃபோனை வைத்ததும் சட்டென்று ஏதோ இறுக்கம் தளர்ந்த மாதிரி இருந்தது. மனசு லேசாயிற்று. பரபரவென்று வேலை பார்க்கத் தொடங்கினான். இன்வாய்ஸ், பில், ஸ்டேட்மெண்ட் என்று நான்கு மணிவரை வேலையில் போயிற்று. பின் கான்டீனுக்குப் போய் டீ குடித்து விட்டு வந்தபோது ரிசப்ஷனில், ராமகிருஷ்ணன் உட்கார்ந்து கொண்டிருப்பதைப் பார்த்தான். ஆச்சரியமாக இருந்தது.

''எங்கே இப்படி?'' என்று சிரித்துக் கொண்டே கேட்டான்.

ராமகிருஷ்ணனும் சிரித்தபடி எழுந்து நின்றான்.

''தம்மை மாகளீனுக்காக மூர்த்தி சில டிராயிங்ஸ் தரேன்னு சொல்லியிருந்தான். அவன் வீட்டுக்குப் போய் வாங்கிண்டு உன்னைப் பார்க்கலாம்னு வந்தேன். உன்னால இப்ப என் கூட வெளியில வரமுடியுமா? உன்கிட்ட கொஞ்சம் பேசணும்...''

''இப்பவா...?'' என்று கைக்கடிகாரத்தைப் பார்த்தான் விஸ்வம். பின், சிறிது நேரம் யோசித்தான்.

''அஞ்சு நிமிஷம் இருக்கியா, வந்துடறேன்'' என்றான்.

''ஓ. எஸ்'' என்று சொல்லிவிட்டு மறுபடியும் சோபாவில் உட்கார்ந்து கொண்டான் ராமகிருஷ்ணன்.

விஸ்வம் உள்ளே போய் ஃபைல்களை எடுத்து டிராயரில் வைத்துப் பூட்டினான். இரண்டு மூன்று கடிதங்களை எடுத்துக்கொண்டு கிருஷ்ணமூர்த்தியிடம் போனான்.

''நான் கொஞ்சம் அவசரமாகப் போக வேண்டியிருக்கு, அதனால இதையெல்லாம் நீங்களே பார்த்துடறீங்களா?'' என்று கேட்டான். கிருஷ்ணமூர்த்தி பதில் ஒன்றும் சொல்லாமல் வாங்கிக் கொண்டான். செக்ஷனில் மேலும் இரண்டு பேர்களிடம் சொல்லிக் கொண்டு கிளம்பினான். ராமகிருஷ்ணனிடம் வந்து, ''வா, போகலாம்'' என்றான்.

இரண்டு பேரும் ஆபீஸை விட்டு வெளியில் வந்தார்கள். ''உங்க ஆபீஸில் பார்கிங் ரொம்ப நன்னா இருக்கு!'' என்றான் ராமகிருஷ்ணன்.

''அது ஒண்ணுதான் இங்கே ஆறுதலான விஷயம்!'' என்று சொல்லிச் சிரித்தான் விஸ்வம்.

சிறிது தூரம் போனதும், ''இப்ப எங்க போகலாம்?'' என்று ராமகிருஷ்ணனே கேட்டான்.

விஸ்வம், பக்கத்திலிருந்த ரெஸ்டாரெண்ட் ஒன்றின் பெயரைச் சொல்லி, அங்கு போகலாம் என்பதைத் தெரிவித்தான்.

இரண்டு பேரும் உள்ளே நுழைந்து ஒரு மூலையாகப் பார்த்து உட்கார்ந்து கொண்டார்கள். வெறும் காபி மட்டும் ஆர்டர் பண்ணினார்கள்.

''...ஸோ, நெக்ஸ்ட் இஷ்யூவுக்கு மேட்டர் எல்லாம் ரெடியாயிடுத்து, இல்லையா?'' என்று ஆரம்பித்தான் விஸ்வம்.

''ம்... இந்த இஷ்யூ வந்துடும். இதுக்கப்புறம்தான் என்ன பண்றதுன்னு தெரியலே-'' என்று இழுத்தான் ராமகிருஷ்ணன். அந்தக் குரல் எல்லாவற போல் இருக்கவே, ''என்ன கிருஷ்ணா?''

என்று கேட்டான் விஸ்வம். நெற்றியில் சின்னச் சுருக்கம் ஒன்று எட்டிப் பார்த்தது.

''ஒண்ணுமில்ல விஸ்வம். இனிமேல நம்ம பத்திரிகை வருமான்றதுதான் சந்தேகமா இருக்கு...''

''ஏன்...?''

''என்னால இனிமேல இந்த மாதிரி இதுல 'கமிட்' பண்ணிக்க முடியாது. அப்பாவுக்கு ரொம்ப உடம்பு சரியில்லை. டாக்டர் கம்ப்ளீட் ரெஸ்ட்ல இருக்கணும்னு சொல்லியிருக்கார். இனிமேல அவரால பிஸினஸைக் கவனிக்க முடியாது. அண்ணா ரெண்டு பேரும் ரெண்டு ஃபாக்டரியையும் கவனிச்சுக்குறா. ஆபீஸ் விஷயத்தைக் கவனிக்கப் பொறுப்பான ஒருத்தர் தேவையாயிருக்கு. யாரையும் நம்பி விட முடியாத நிலைமையில் இருக்கு...''

விஸ்வம் அவனையே பார்த்துக் கொண்டு நிதானமாகக் காபியை உறிஞ்சினான்.

''இன்னொரு யூனிட் போடணும்னு பாங்க்லே நிறைய ஓவர் ட்ரா பண்ணியிருக்கு. ஆனா அந்தப் பணம் முழுசும் வெறும் ரா மெடீரியல்லே முடங்கிக் கிடக்கு. இப்ப என்ன பண்ணறதுன்னு தெரியலை. எப்படிப் பணத்தைப் புரட்டறதுன்னு புரியலை. ரெண்டு நாளைக்கு முன்னால அப்பா என்னைக் கூப்பிட்டு வச்சுண்டு நிறையப் பேசினார். இனி மேல நீ பொறுப்பா இருக்கணும், ஆபீஸைக் கவனிச்சுக்கணும்னெல்லாம் சொன்னார். அவர் எப்பவும் அந்த மாதிரியெல்லாம் பேசினதே இல்லை, விஸ்வம். அவருக்கிருக்கிற கமிட்மெண்ட்ஸ், லயபிலிடீஸ் இதைப்பத்தி யெல்லாம் பேசினார். ஒரு சின்னக் குழந்தையைக் கவனிக்கிற மாதிரி இப்போ பிஸினஸைக் கவனிச்சாத்தான் உண்டு... இல்லேன்னா...ன்னு சொல்றபோதே அவர் கண்ணெல்லாம் கலங்கிடுத்து விஸ்வம்.

''அவரோட பதினெட்டாவது வயசிலேர்ந்து பிஸினஸ் பண்றார். இப்போ வயசு அவருக்கு அறுபத்து மூணு. இத்தனை வருஷமும் ஒருதாள் ஓய்ச்சல்கூட இல்லாம இதுக்காகப் பாடுபட்டிருக்கார். அவர் ஆரம்பத்துல முதலா போட்டது

மூவாயிரம் ரூபாதான். இப்போது அது மூணு பாக்டரியா வளர்ந்திருக்குன்னா அவரோட உழைப்பும் புத்திசாலித்தனமுந்தான் காரணம். அன்னைக்கு ராத்திரி பக்கத்தில் உட்கார வச்சுண்டு ஒவ்வொண்ணா அவர் சொல்றபோது மனசு கலங்கிப் போயிடுத்து. அவருக்காக எது வேணும்னாலும் செய்யலாம்னு தோணித்து. ஒரு நிமிஷம் நீ ஞாபகத்துக்கு வந்தே. உங்கண்ணா எங்கண்ணா எல்லார் ஞாபகம் வந்தது. அந்த மாதிரி ஆயிட வேண்டியதுதான்; வேற வழி இல்லேன்னு தோணித்து...''

விஸ்வம் தண்ணீர் குடிப்பதை நிறுத்திவிட்டு அவனைப் பார்த்தான். உதட்டில் வருத்தமாக ஒரு சிரிப்பு ஓடி மறைந்தது.

''என்ன விஸ்வம், சிரிக்கறே?''

''ஒண்ணுமில்லே... நீ வேற வழி இல்லேன்னு சொன்னதை நினைச்சுப் பார்த்தேன்.''

''வேற என்ன பண்றது சொல்லு? நீ என்ன பண்ணினே! உன்னால என்ன பண்ண முடிஞ்சது...? நேத்திக்கு எங்க ஆபீசுக்குப் போனேன். ஆபீசுக்கும் பாங்குக்குமா ஸ்டேட் மெண்ட்டைத் தூக்கிண்டு அலைஞ்சேன். வீட்டுக்கு வரபோது ராத்திரி மணி பத்தாயிடுத்து. நாள் தவறாம பத்துக்கும், பதி னொண்ணுக்கும் வர அண்ணாக்களை நினைத்துப் பார்த்தேன். ரெண்டு மன்னியோட ஞாபகமும் வந்தது. அவாள்லாம் மனசா லயும், உடம்பாலயும், குடும்பத்துக்காக அலையறபோது நான் மட்டும் இப்படி ஊர் சுத்திண்டிருக்கேன்னு கஷ்டமா இருந்தது. இனிமேல் என் பங்குக்குப் பொறுப்பை எத்துக்கறதுன்னு முடிவு செஞ்சுட்டேன். அதனால நான் வீட்டுக்கு வர ஒவ்வொரு நாளும் ராத்திரி மணி பத்தோ பதினொண்ணோகூட ஆகும். காலையிலும் எழு மணிக்கெல்லாம் வீட்டை விட்டுக் கிளம்பிடணும். அப்படி இருக்கிறபோது என்னால வேற எந்த வேலை செய்ய முடியும் சொல்லு, விஸ்வம்...?''

விஸ்வம் ஒன்றும் சொல்லவில்லை. அவனையே பரிவோடு பார்த்தான். கனமான ஒரு பெருமூச்சு மட்டும் வெளிப்பட்டது.

''இதுமட்டும் இல்லை, விஸ்வம். உன்னோட முடியாமை அப்புறம் என்னோட முடியாமைக்குப் பின்னால மீதிப்பேர்

முடியாமையும் வந்தின்டிருக்கு. மூர்த்திக்கு கல்யாணம் நிச்சயமாகி இருக்கு. லைஃப்ல அவனோட கமிட்மெண்ட்ஸும் அதிகமாறது. இனிமேல அவன்கிட்டே இருந்து அதிகமா எதிர் பார்க்க முடியாது. அதே மாதிரி பத்ரிக்கும் வேலை கிடைச்சிருக்கு...''

''எங்கே?'' என்று கண்கள் பளிச்சிடக் கேட்டான் விஸ்வம்.

''கல்கத்தாவிலே; அதைச் சொல்ல நாலு நாளா உங்க வீட்டுக்கு நடையா நடக்கிறான். நீ இன்னும் ஆபீஸ்லேர்ந்து வரலன்னு உங்கப்பாதான் பதில் சொல்லியனுப்பினாராம். இந்தப் பதினெட்டாம் தேதி இளம்பறான். அதுக்குள்ள ஒரு நாள் கட்டாயம் உன்னை வந்து பார்ப்பான். ராஜாராமும் டிரான்ஸ்ஃபர் ஆகி பவானிசாகர் போகப் போறான்.''

''அப்போ எல்லாரும் நம்மை விட்டுப் பிரியப் போறான்னு சொல்லு...''

ராமகிருஷ்ணன் பதில் சொல்லவில்லை. சொல்ல முடியவில்லை. அமைதியாக விஸ்வத்தின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தான். அப்படியே ஐந்து நிமிஷம் போயிற்று. பின்னர் மெதுவாக விஸ்வந்தான் பேச ஆரம்பித்தான்.

''இவ்வளவு சீக்கிரத்துல இப்படி பத்திரிகையை நிறுத்த வேண்டி நேரிடும்னு நினைக்கலை, என்ன பண்றது. கிருஷ்ணா? இந்தமாதிரி நாம் நினைக்காதது எத்தனையோ நடந்துண்டிருக்கு. அதுல இதுவும் ஒண்ணு. இந்த இஷ்யூ வரட்டும். அதுக்கப்புறம் வேற எப்படியாவது இதைக் கொண்டு வர முடியுமான்னு பார்க்க லாம். வேற வழியே இல்லாமப் போனா என்ன பண்ண முடியும்?''

சட்டென்று அவனை நிமிர்ந்து பார்த்தான் ராமகிருஷ்ணன்.

இதற்காக அவன் அதிகம் சங்கடப்படுவான் என்று நினைத்துக் கொண்டு வந்திருந்தான். சொல்வதற்குக் கூட மிகவும் தயங்கினான். ஆனால் அவன் இவ்வளவு சுலபமாக எடுத்துக் கொண்டது அவனை ஆச்சரியப்படுத்தியது.

''நீ இவ்வளவு ஈஸியா எடுத்துப்பேன்னு நினைக்கலை, விஸ்வம்!'' என்று தன் ஆச்சரியத்தைத் தெரியப்படுத்தினான்.

விஸ்வம் ஒன்றும் சொல்லாமல் புன்னகை செய்தான். மேலும் ஐந்து நிமிஷம் பேசிக் கொண்டிருந்துவிட்டு இருவரும் எழுந்து வெளியில் வந்தார்கள்.

''போ...?'' என்று அவன் முகத்தைப் பார்த்தான் ராமகிருஷ்ணன்.

''நீ எங்க போறே இப்ப?''

''ஒரு வேலையா பாரீஸ் வரைக்கும் போகணும், நீ...''

''நான் தருமாலையைப் பார்க்கப் போகலாம்னு இருக்கேன். அஞ்சரை மணிக்கா அலு ஆபீசுக்கு வரேன்னு சொல்லியிருக்கேன்.''

''ஓ. கே. அப்ப நான் வரட்டுமா? அப்புறமா பார்க்கலாம்.''

''சரி'' என்று தலையசைத்தான் விஸ்வம்.

ராமகிருஷ்ணன் எதிர்ப்பக்கம் நடந்து திரும்புகிறவரை பேசாமல் நின்று கொண்டிருந்தான். பின்பு, மெதுவாக நடக்க ஆரம்பித்தான். அவன் பேசிவிட்டுப் போனதெல்லாம் மனசில் வந்து பாரமாய் அழுத்தியது. 'பாவம், ராமகிருஷ்ணன்' என்று சொல்லிக் கொண்டான். தன்னைப் போலவே, 'ஆபீஸ்! ஆபீஸ்!' என்று அலையப் போவதை நினைத்தபோது கஷ்டமாக இருந்தது.

'நீ இவ்வளவு ஈஸியா எடுத்துப்பேன்னு நினைக்கலை...' என்று அவன் சொல்லிட்டுப் போனது நினைவுக்கு வந்தது. உடனே முகம் இனிமையில் ஒளிபாகம் வந்தது.

'உனக்கு சீதையாது கிருஷ்ணா, இப்படி எல்லாத்தையும் கலைமா எடுத்துண்டு சகஜமாப் போயிட முடியுமான்னு கற்றுக் கொடுத்ததே அவள்தான்...' என்று சொல்லிக் கொண்டான்.

அந்த நர்ஸரி ஸ்கூல் வந்தபோது ஒரு நிமிஷம் தயங்கி நின்றான். ஸ்கூல் விட்டு நேரமாகி இருக்க வேண்டும். யூனிஃபார்ம் அணிந்த உருவங்கள் எதுவும் கண்ணில் படவில்லை. உள்ளே ப்ளேகளும் யாரோ பெரியவர்களும் மட்டும் தான் நடமாடிக் கொண்டிருந்தார்கள். அவளைப் பரவசப்படுத்தக் கூடிய மழலை கலந்த அந்தக் கொச்சை ஆங்கிலத்தைக் கேட்க முடியவில்லை.

மௌனமாக மேலே நகர்ந்து ஜமுனாவின் ஆபீசுக்குப் போனான். அந்தச் ஷெவப்புக் கட்டடம் இப்போது த வெறுப்பையும் ஏற்படுத்தவில்லை. வாசலில் அதே கூர்க்கா நின்று கொண்டிருந்தான். உள்ளேயிருந்து சைக்கிள்களும் கார்களும் வெளியில் வந்தன. நிறையப் பேர் நடந்து வந்து கொண்டிருந்தார்கள். அவர்கள் பேச்சுகளில் இப்போது எந்த ஆர்வமும் இல்லை. எல்லாம் கேட்டுப் பழகிப் போய்விட்டது. எல்லா ஆபீஸிலிருந்தும் வெளியே வரும்போது பேசுகிற எல்லாப் பேச்சுகளும் அநேகமாக ஒன்றாகத்தான் இருக்கின்றன...

அவன் தலை நிமிர்ந்தபோது ஜமுனா தனியாகப் படிகளில் இறங்கி வருவது தெரிந்தது. நீலப் புடவையில் இருந்தாள். அவளைப் பார்த்தபோது முகம் பளிச்சிட்டது. லேசாக ஒரு புன்னகை எட்டிப் பார்த்தது. விஸ்வமும் மௌனமாகப் புன்சிரிப்பாகச் சிரித்தான். அவள் அருகில் வந்ததும், "ஹலோ!" என்றான்.